# வரலாறு

## தரம்
## 9

**கல்வி வெளியீட்டுத் திணைக்களம்**



சகல பாடநூல்களையும் இலத்திரனியல் ஊடாகப் பெற்றுக்கொள்வதற்கு
www.edupub.gov.lk வலைத்தளத்தை நாடுங்கள்.

| | | |
|---|---|---|
| முதலாம் பதிப்பு | - | 2017 |
| இரண்டாம் பதிப்பு | - | 2018 |
| மூன்றாம் பதிப்பு | - | 2019 |

**அனைத்து உரிமையும் இலங்கை அரசினருக்கே**

ISBN 978-955-25-0164-7

*இந்நூல் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்
இல 105 - 1 லேக் வீதி, அம்பன்தல, முல்லேரியா புதிய நகரத்தில்
அமைந்துள்ள பராமவுன்ட் சொலூசன்ஸ் பிரைவட் லிமிடெட் அச்ச
கத்தில் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.*

## தேசிய கீதம்

*ஸ்ரீ லங்கா தாயே - நம் ஸ்ரீ லங்கா*
*நமோ நமோ நமோ நமோ தாயே*

*நல்லெழில் பொலி சீரணி*
*நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா*
*ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்*
*நறுஞ்சோலை கொள் லங்கா*
*நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்*
*நமதுதி ஏல் தாயே*
*நம தலை நினதடி மேல் வைத்தோமே*
*நமதுயிரே தாயே - நம் ஸ்ரீ லங்கா*
*நமோ நமோ நமோ நமோ தாயே*

*நமதாரருள் ஆனாய்*
*நவை தவிர் உணர்வானாய்*
*நமதேர் வலியானாய்*
*நவில் சுதந்திரம் ஆனாய்*
*நமதிளமையை நாட்டே*
*நகு மடி தனையோட்டே*
*அமைவுறும் அறிவுடனே*
*அடல் செறி துணிவருளே - நம் ஸ்ரீ லங்கா*
*நமோ நமோ நமோ நமோ தாயே*

*நமதார் ஒளி வளமே*
*நறிய மலர் என நிலவும் தாயே*
*யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த*
*எழில்கொள் சேய்கள் எனவே*
*இயலுறு பிளவுகள் தமை அறவே*
*இழிவென நீக்கிடுவோம்*
*ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி*
*நமோ நமோ தாயே - நம் ஸ்ரீ லங்கா*
*நமோ நமோ நமோ நமோ தாயே*

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

**ஆனந்த சமரக்கோன்**
கவிதையின் பெயர்ப்பு.



''புதிதாகி, மாற்றமடைந்து சரியான அறிவின் மூலம்
நாட்டுக்குப் போன்றே முழு உலகிற்கும் அறிவுச் சுடராகுங்கள்''

## கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி

கடந்து சென்ற இரு தசாப்தங்களுக்கு அண்மிய காலமானது உலக வரலாற்றில் விசேட தொழினுட்ப மாற்றங்கள் நிகழ்ந்ததொரு காலமாகும். தகவல் தொழினுட்பம் மற்றும் ஊடகங்களை முன்னணியாகக் கொண்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் இணைந்து மாணவர் மத்தியில் பல்வேறு சவால்கள் தோன்றியுள்ளன. இன்று சமூகத்தில் காணப்படும் தொழில்வாய்ப்பின் இயல்பானது மிக விரைவில் சிறப்பான மாற்றங்களுக்கு உட்படலாம். இத்தகைய சூழலில் புதிய தொழினுட்ப அறிவையும் திறனையும் அடிப்படையாகக் கொண்டதொரு சமூகத்தில் வெவ்வேறு விதமான இலட்சக் கணக்கான தொழில்வாய்ப்புகள் உருவாகின்றன. எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் பொருட்டு நீங்கள் பலம்பெற வேண்டுமென்பது கல்வி அமைச்சரென்ற வகையில் எனதும் எமது அரசினதும் பிரதான நோக்கமாகும்.

இலவசக் கல்வியின் சிறப்புமிக்கதொரு பிரதிபலனாக உங்களுக்கு இலவசமாகக் கிடைத்துள்ள இந்நூலை சீராகப் பயன்படுத்துவதும் அதன்மூலம் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்வதுமே உங்கள் ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். அத்துடன் உங்கள் பெற்றோர்களுட்பட மூத்தோரின் சிரமத்தினதும் தியாகத்தினதும் பிரதிபலனாகவே இலவசப் பாடநூல்களை அரசினால் உங்களுக்குப் பெற்றுத்தர முடிகிறது என்பதையும் நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஓர் அரசாக நாம், மிக வேகமாக மாறி வரும் உலக மாற்றத்திற்குப் பொருந்தும் விதத்தில் புதிய பாடத்திட்டத்தை அமைப்பதும் கல்வித் துறையில் தீர்க்கமான மாற்றங்களை மேற்கொள்வதும் ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வி மூலமே சிறப்படையும் என்பதை மிக நன்றாகப் புரிந்து வைத்துள்ளதனாலேயேயாகும். இலவசக் கல்வியின் உச்சப் பயனை அனுபவித்து நாட்டிற்கு மாத்திரமன்றி உலகுக்கே செயற்றிறன்மிக்க ஓர் இலங்கைப் பிரசையாக நீங்களும் வளர்ந்து நிற்பதற்கு தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதற்காக இந்நூலைப் பயன்படுத்தி நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு உங்களுக்கு உதவுமென்பது எனது நம்பிக்கையாகும்.

அரசு உங்கள் கல்வியின் நிமித்தம் செலவிடுகின்ற மிகக் கூடிய நிதித்தொகைக்கு பெறுமதியொன்றைச் சேர்ப்பது உங்கள் கடமையாவதுடன் பாடசாலைக் கல்வியூடாக நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் போன்றவையே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நீங்கள் நன்கு கவனத்திற்கொள்ள வேண்டும். நீங்கள் சமூகத்தில் எந்த நிலையிலிருந்தபோதும் சகல தடைகளையும் தாண்டி சமூகத்தில் மிக உயர்ந்ததோர் இடத்திற்குப் பயணிக்கும் ஆற்றல் கல்வி மூலமாகவே உங்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே இலவசக் கல்வியின் சிறந்த பிரதிபலனைப் பெற்று, மதிப்பு மிக்கதொரு பிரசையாக நாளைய உலகை நீங்கள் வெற்றி கொள்வதற்கும் இந்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இலங்கையின் நாமத்தை இலங்கச் செய்வதற்கும் உங்களால் இயலுமாகட்டும் என கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் பிரார்த்திக்கின்றேன்.

**அகில விராஜ் காரியவசம்**
**கல்வி அமைச்சர்**

## முன்னுரை

உலகின் சமூக, பொருளாதார, தொழினுட்ப, கலாசார விருத்தியுடன் சேர்ந்து கல்வியின் நோக்கங்கள் மிக விரிந்த தோற்றமொன்றைப் பெற்றுள்ளன. மானிட அனுபவங்கள், தொழினுட்ப மாற்றங்கள் ஆராய்ச்சி மற்றும் புதிய குறிகாட்டிகளின்படி கற்றல் கற்பித்தல் செயற்பாடும் நவீன மயமாக்கப்பட்டுள்ளது. அதன்போது மாணவர் தேவைக்குப் பொருந்தும் விதமான கற்றல் அனுபவத்தை ஒழுங்கமைத்து கற்பித்தல் செயற்பாட்டை நடைமுறைப்படுத்திச் செல்வதற்கு பாடத்திட்டத்தில் காணப்படுகின்ற நோக்கங்களிற்கிணங்க பாடம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கிப் பாடநூல்களை ஆக்குவது அவசியமாகும். பாடநூல் என்பது மாணவரின் கற்றல் சாதனம் மாத்திரமல்ல. அது கற்றல் அனுபவங்களைப் பெறுவதற்கும் அறிவு, பண்பு விருத்திக்கும் நடத்தை மற்றும் மனப்பாங்கு வளர்ச்சியுடன் உயர்ந்த கல்வியொன்றை பெற்றுக் கொள்வதற்கும் மிகவும் உதவக்கூடியதுமாகும்.

இலவசக் கல்விக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கிலேயே தரம் 1 முதல் தரம் 11 வரையிலான சகல பாடநூல்களும் அரசினால் உங்களுக்கு வழங்கப்படுகின்றன. அந்நூல்களிலிருந்து உயர்ந்தபட்சப் பயன்களைப் பெற்றுக்கொள்வதுடன், அவற்றைப் பாதுகாப்பதும் உங்களது கடமையாகும் என்பதையும் நினைவூட்டுகின்றேன். பூரண ஆளுமைகொண்ட நாட்டிற்குப் பயனுள்ள சிறந்ததொரு பிரசையாகுவதற்கான பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்கு இப்பாடநூல் உங்களுக்குக் கைகொடுக்கும் என நான் எண்ணுகிறேன்.

இப்பாடநூலாக்கத்தில் பங்களிப்புச் செய்த எழுத்தாளர், பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல.
2019.04.10

**கண்காணிப்பும் மேற்பார்வையும்**

| | |
|---|---|
| டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க | ஆணையாளர் நாயகம்<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |

**வழிகாட்டல்**

| | |
|---|---|
| டபிள்யூ.ஏ. நிர்மலா பியசீலி | ஆணையாளர் (அபிவிருத்தி)<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |

**இணைப்பாக்கம்**

| | |
|---|---|
| அ. குலரத்தினம் | உதவி ஆணையாளர்<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |

**பதிப்பாசிரியர் குழு**

| | |
|---|---|
| சிரேஷ்ட பேராசிரியர் பீ. புஸ்பரத்தினம் | தொல்லியல் இணைப்பாளர்<br>யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் க. அருந்தவராஜா | சிரேஷ்ட விரிவுரையாளர்<br>வரலாற்றுத்துறை<br>யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் பத்மசிறி கன்னங்கர | சிரேஷ்ட விரிவுரையாளர்<br>வரலாற்றுக் கல்விப் பிரிவு<br>ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகம். |
| சந்திமா நிசானி தர்மபால | சிரேஷ்ட விரிவுரையாளர்<br>தேசிய கல்வி நிறுவகம். |

**எழுத்தாளர் குழு**

| | |
|---|---|
| அருட் சகோதரி மேரி டொனேட்டா | அதிபர் சேவை - II (ஓய்வு நிலை) |
| யு. எல். எம். பஸீர் | ஆசிரிய ஆலோசகர் (ஓய்வு நிலை). |
| து. துஷாந்தனி | ஆசிரிய சேவை<br>கே / தெஹி / யோகம த.வி<br>தெஹியோவிற்ற. |

| | |
|---|---|
| ஜீவன சுரங்க கமகே | ஆசிரிய சேவை<br>மே.மா / களு / வலல்லாவிட்ட ம.வி<br>வலல்லாவிட்ட. |
| நளீன் பண்டார | ஆசிரிய சேவை<br>குருவிட்ட ம.ம.வி<br>குருவிட்ட. |

**பதிப்பாசிரியர் (மொழி)**

| | |
|---|---|
| து. இராஜேந்திரம் | சிரேஷ்ட விரிவுரையாளர் (ஓய்வு நிலை).<br>திறந்த பல்கலைக்கழகம் |

**சரவைப்பார்ப்பு**

| | |
|---|---|
| எஸ். பாலசுந்தரம் | பிரதி ஆணையாளர் (ஓய்வு நிலை)<br>இலங்கை பரீட்சைத் திணைக்களம் |

**கணினி வடிவமைப்பு**

| | |
|---|---|
| நிரோஷனி தேவநாயகம் | கணினி வடிவமைப்பாளர்<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |

**சித்திரமும் அட்டைப்படமும்**

| | |
|---|---|
| இசுறீ மதுஷானி | கணினி வடிவமைப்பாளர்<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் ஒல்லாந்தரின் ஆட்சிக்குட்படுதல் | 1 - 22 |
| 2 | இலங்கையில் பிரித்தானியரின் ஆட்சி | 23 - 55 |
| 3 | இலங்கையின் சமய, தேசிய மறுமலர்ச்சி | 56 - 71 |
| 4 | இந்திய சுதந்திரப் போராட்ட இயக்கம் | 72 - 103 |
| 5 | இலங்கையின் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களும் தேசிய சுதந்திர இயக்கமும் | 104 - 122 |
| 6 | சுதந்திரத்தின் பின் இலங்கை | 123 - 146 |

# 1 இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் ஒல்லாந்தரின் ஆட்சிக்குட்படுதல்



## அறிமுகம்

இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டியிருந்த போர்த்துக்கேயரிடமிருந்து நாட்டை விடுவிக்க வேண்டுமாயின் பலம்வாய்ந்த கடற்படை அவசியம் என்பதை கண்டி இராசதானியின் அரசர்கள் உணர்ந்திருந்தனர். இதனால் இரண்டாம் இராஜசிங்க மன்னன் போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கு ஒல்லாந்தரின் துணையைப் பெற்றுக்கொண்டான். எனினும் மன்னனுடன் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு மாறாகச் செயற்பட்ட ஒல்லாந்தர், போர்த்துக்கேயரின் ஆதிக்கத்தில் இருந்த பிரதேசங்கள் பலவற்றில் தமது அதிகாரத்தை நிலைநாட்ட நடவடிக்கை எடுத்தனர். அதன் விளைவாக 1658 ஆம் ஆண்டில் தீவின் கரையோரப் பிரதேசங்களில் ஒல்லாந்தரது ஆட்சி நிறுவப்பட்டது. அது முதல் 1796 ஆம் ஆண்டு வரை ஒல்லாந்தர் அப்பிரதேசங்களை ஆட்சி செய்தனர். இந்த அத்தியாயத்தில் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் ஒல்லாந்தர் ஆட்சியை நிறுவியமை, கண்டி இராசதானியுடனான அவர்களது தொடர்பு, ஒல்லாந்தரது ஆட்சிக் காலத்தின் அரசியல், பொருளாதார, பண்பாட்டுத் துறைகளில் துல்லியமாகத் தெரியும் இயல்புகள் என்பவற்றில் உங்களது கவனம் செலுத்தப்படுகிறது.

## 1.1 இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் ஒல்லாந்தரின் ஆட்சிக்குட்படுதல்

### ஒல்லாந்தர் ஆசியாவுக்கு வருதல்

16 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் ஆசியாவிலிருந்து கொண்டுசென்ற வாசனைப் பொருள்கள் உட்பட வர்த்தகப் பொருள்களைப் போர்த்துக்கலில் லிஸ்பன் துறை முகத்தில் விலை கொடுத்து வாங்கிய ஒல்லாந்தர், அவற்றை ஐரோப்பிய நாடுகளுக்கு விற்கும் வர்த்தகமொன்றை மேற்கொண்டனர். ஒல்லாந்து அக்காலத்தில் ஸ்பானியரின் கீழ் இருந்தது. ஸ்பானியர்கள் உரோமன் கத்தோலிக்கர்களாக இருந்ததுடன் ஒல்லாந்தர் புரட்டஸ்தாந்து மதத்தினராக இருந்தனர். மத ரீதியாக இரு பிரிவினரிடையேயும் கருத்து முரண்பாடுகள் நிலவியதால், ஒல்லாந்தர் ஸ்பானியருக்கு எதிராகச் சுதந்திரப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். அத்தோடு ஸ்பானிய மன்னனான இரண்டாம் பிலிப் அரச உரிமையொன்றின் மூலம் போர்த்துக்கலின் அரசனானதால் ஒல்லாந்தருக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவனுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அதன் விளைவாக ஒல்லாந்தர் லிஸ்பன் துறைமுகத்திற்கு வருவதை இரண்டாம் பிலிப் மன்னன் தடைசெய்தான். இவ்வாறு ஒல்லாந்தரது கப்பல்கள் லிஸ்பன் துறைமுகத்திற்கு வரமுடியாத நிலை ஏற்பட்டதால் அவர்களது வர்த்தகத்திற்குத் தேவையான வாச னைப் பொருள்கள் உள்ளிட்ட வர்த்தகப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கு அவை உற்பத்தி செய்யப்படும் ஆசிய நாடுகளுக்கு வருவதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை.

போர்த்துக்கேயர் ஆசியாவுக்கு வந்து ஒரு நூற்றாண்டு காலம் வரை கடல்வழித் தொடர்பான விளக்கத்தை ஐரோப்பியர் தெரிந்து கொள்வதைத் தடைசெய்வதற்கான நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொண்டனர்.



உரு 1.1 கீழைத்தேச ஒல்லாந்த வர்த்தக சங்க (VOC) இலச்சினை

இக்காலகட்டத்தில் போத்துக்கேயர் தமக்கு நம்பிக்கையானவர்களைத் தவிர சந்தேகத் திற்குள்ளான ஒல்லாந்தர், ஆங்கிலேயர், பிரான்சியர் ஆகியோர் போர்த்துக்கேயக் கப்பலில் ஆசியாவுக்கு வருவதற்கு இடமளிக்கவில்லை. எனினும் ஒல்லாந்தர், ஒற்றர்கள் மூலமும் ஏனைய வழிகளிலும் 1595 ஆம் ஆண்டளவில் போர்த்துக்கேயர் ஆசியாவுக்கு வந்த கடல்வழியை அறிந்துகொண்டனர். இதற்கமைய 1602 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஒல்லாந்த வர்த்தக சங்கங்கள் பல ஆசியாவுக்கு வந்தபோதிலும், வர்த்தகப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதில் அவற்றிற்கிடையே போட்டி நிலவியது. மேலும் ஒரு வர்த்தக சங்கத்திற்கேனும் ஒல்லாந்திற்காக ஆசியாவில் செயற்படத் தேவையான முறையான அதிகாரம் இருக்கவில்லை. இதனைக் கருத்திற்கொண்ட ஒல்லாந்த ஆட்சியாளன் 1602 ஆம் ஆண்டு பல ஒல்லாந்த சங்கங்களை இணைத்து ஒல்லாந்தக் கீழைத்தேச வர்த்தக சங்கம் என்ற VOC*, சங்கத்தை நிறுவினான். அந்தச் சங்கத்தின் அனுமதிப்பத்திரத்திற்கு அமைய ஒல்லாந்த அரசின் சார்பாக ஆசியாவில் வர்த்தகத்தை மேற்கொள்ளவும் நாடுகளைக் கைப்பற்றவும் கோட்டைகளை அமைக் கவும் ஆளுநர்களை நியமிக்கவும் உரிய பிரதேசங்களை நிருவகிக்கவும் VOC சங்கத் திற்கு அனுமதி கிடைத்தது.

1602 ஆம் ஆண்டின் பின்னர் ஒல்லாந்த கீழைத்தேச வர்த்தக சங்கம் பலமடைந்ததுடன், முக்கிய கப்பற் குழுக்களை ஆசியாவுக்கு அனுப்பவும் ஒல்லாந்தரால் இயலுமானதாக இருந்தது. இவ்வாறு VOC சங்கத்தின் கீழ் வருகைதந்த ஒல்லாந்தர் ஜாவாத் தீவில் பத்தேவியா என்ற இடத்தில் தமது தலைமையகத்தை நிறுவியதுடன் தென்கிழக்கு ஆசியத் தீவுகள், சில இந்தியக் கடற்கரைப் பிரதேசங்கள் என்பவற்றில் தமது அதிகாரத்தைக் கட்டியெழுப்பினர். இந்துசமுத்திரத்தில் தமது வர்த்தகத்தைக் கட்டி யெழுப்பும்போது கட்டாயமாகப் போர்த்துக்கேயருடன் மோதவேண்டிய நிலை ஒல்லாந்தருக்கு ஏற்பட்டது.

### கண்டி அரசர்கள் ஒல்லாந்தரின் உதவியை நாடுதல்

ஒல்லாந்தர் ஆசியாவுக்கு வந்து நீண்ட காலம் செல்லும் முன்னர் 1602 ஆம் ஆண்டு ஜோரிஸ் வான் ஸ்பில்பேர்ஜன் எனும் ஒல்லாந்தத் தளபதி மூன்று கப்பல்களுடன் இலங்கையின் கிழக்குப் பகுதிக்கு வந்து மட்டக்களப்பில் தரையிறங்கினான். அவன் கண்டி இராசதானிக்குச் சென்று 1602 ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதலாம் விமலதர்ம சூரியனைச் சந்தித்தான். இக்காலகட்டத்தில் போர்த்துக்கேயரின் நடவடிக்கையால் விமலதர்மசூரியன் மிகவும் அதிருப்தி அடைந்திருந்தான். எனவே போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கு ஒல்லாந்தரின் துணையைப் பெற அவன் விருப்பம் தெரிவித்தான்.

ஸ்பில்பேர்ஜன் இங்கிருந்து சென்று மூன்று மாதங்களின் பின்னர் சிபெல் த வர்ட் என்பவனின் தலைமையில் தூதுக் குழு ஒன்று விமலதர்மசூரிய மன்னனைச் சந்திக்க வந்தது. புதிய தூதுவன் ஸ்பில்பேர்ஜனின் இனத்தவன் என்பதை அறிந்துகொண்ட மன்னன் கண்டியில் அவனைக் கோலாகலமாக வரவேற்றதுடன், போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் பேச்சுவார்த்தை நடாத்தினான்.

VOC* - Vereenigde Oost Indische Compagine என்னும் டச்சுச் சொல்லின் சுருக்கமாகும்.

எனினும் பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் அரசன் முன்னிலையில் மரியாதையின்றி சிபெல் த வர்ட் பேசியதால், அவனுக்கும் அரசனது குழுக்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. இதன் விளைவாகத் துரதிர்ஷ்டவசமாக சிபெல் த வர்ட் உயிரிழந்தான். இதன் காரணமாக போர்த்துக்கேயரை வெளியேற்றும் விடயத்தில் ஒல்லாந்தரின் உதவியைப் பெறும் மன்னனின் நோக்கம் தோல்வியடைந்தது.



உரு. 1.2 ஸ்பில்பேர்ஜன் முதலாம் விமலதர்மசூரியனைச் சந்தித்தமை

விமலதர்மசூரிய மன்னனின் பின்னர் அவனது சகோதரனான செனரத் அரசனானான். செனரத் மன்னனின் காலத்தில் ஒல்லாந்தத் தூதுக்குழுக்கள் இரண்டுடன் பேச்சு வார்த்தை நடத்திய போதிலும் மன்னன் எதிர்பார்த்த விதத்தில் சாதகமான விளைவு கள் கிடைக்கவில்லை.

### இரண்டாம் இராஜசிங்க மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையிலான உடன்படிக்கை

செனரத் மன்னனுக்குப் பின்னர் அவனது மகனான இரண்டாம் இராஜசிங்கன் அரசனானான். போர்த்துக்கேயரை இலங்கையில் இருந்து வெளியேற்ற அவன் உறுதியுடன் செயற்பட்டான். இதற்காகப் பலம்வாய்ந்த கடற்படையைக் கொண்ட ஒல்லாந்தரின் துணையை நாடினான். இதன்படி ஒல்லாந்தரின் கிழக்கிந்திய மத்திய நிலையமாகிய பத்தேவியாவின் தூதுவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தினான். போர்த்துக்கேயரை வெளியேற்றுவதற்குத் தமக்கு வழங்கும் உதவிக்குக் கைமாறாகக் கறுவா வர்த்தகத்தின் உரிமையையும் கிழக்குக் கடற்கரையில் ஒரு துறைமுகத்தையும் வழங்குவதற்கு மன்னன் இணக்கம் தெரிவித்தான். ஒரு ஐரோப்பிய இனத்தவருக்குப் பதிலாக வேறொரு ஐரோப்பிய இனத்தவரை இந்நாட்டிற்கு வரவழைத்தல் அரசனின் நோக்கமாக இருக்கவில்லை. மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் விளைவாக 1638 ஆம் ஆண்டு மே மாதம் மன்னனின் படையும் ஒல்லாந்தரும் இணைந்து மட்டக்களப்பில் போர்த்துக்கேயரது கோட்டையைத் தாக்கினர். சில தாக்குதல்களின் பின்னர் அங்கிருந்த போர்த்துக்கேயரை வெளியேற்ற அவர்களால் முடிந்தது. இதனால் மகிழ்ச்சியடைந்த இரண்டாம் இராஜசிங்க மன்னன் 1638 ஆம் ஆண்டு மே மாதம் ஒல்லாந்தருடன் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டான்.

### 1638 ஆம் ஆண்டு உடன்படிக்கையின் முக்கிய விடயங்கள்

- ❖ போர்த்துக்கேயரை இலங்கையில் இருந்து வெளியேற்றுவதற்கு கண்டி மன்னனுக்கு உதவி வழங்க ஒல்லாந்தர் உடன்படல்.
- ❖ போர்த்துக்கேயருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் போரில் ஒல்லாந்தருக்கு ஏற்படும் செலவை கறுவா, மிளகு, தேன்மெழுகு என்பவற்றை வழங்குவதன் மூலம் நிவர்த்தி செய்ய மன்னன் உடன்படல்.
- ❖ யானைகள் தவிர கண்டி இராசதானியின் ஏனைய வர்த்தகப் பொருள்களைப் பணம் கொடுத்துப் பெறும் ஏகபோக உரிமையை ஒல்லாந்தருக்கு வழங்குதல்.
- ❖ போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றப்படும் கோட்டைகளில் மன்னன் விரும்பினால் ஒல்லாந்தரது படையை நிறுத்துவதற்கு உடன்படல்.

### போர்த்துக்கேயரை வெளியேற்றும் போராட்டமும் கரையோரப் பிரதேசங்களில் ஒல்லாந்தரது அதிகாரம் நிறுவப்பட்டமையும்

1638 ஆம் ஆண்டு உடன்படிக்கையின் பின்னர் போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதற்கு மேலும் 20 ஆண்டுகள் சென்றன. அக்காலத்தில் போர்த்துக்கேயரின் கீழிருந்த திருகோணமலை, நீர்கொழும்பு, காலி, களுத்துறை, கொழும்பு, மன்னார், யாழ்ப்பாணம் உட்பட ஏனைய கோட்டைகளைக் கைப்பற்ற ஒல்லாந்தரும் கண்டி இராச தானிப் படையும் நடவடிக்கைகள் எடுத்தன. திருகோணமலை, நீர்கொழும்பு ஆகிய கோட்டைகளைக் கைப்பற்றிய பின்னர் மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. ஒல்லாந்தர் தமக்குச் சாதகமான பிரதேசங்களில் கோட்டைகளைக் கைப்பற்றிய பின்னர் 1638 ஆம் ஆண்டு உடன்படிக்கையின்படி மன்னனுக்கு அவற்றை ஒப்படைக்கத் தவறியமையே இதற்கான காரணமாகும்.


ஒல்லாந்தர் ஆரம்பத்திலிருந்து தந்திரமாகவே மன்னனுடன் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். 1638 ஆம் ஆண்டு உடன்படிக்கையின் ஒரு உறுப்புரைக்கு அமைய போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றப்படும் கோட்டைகளில் ''**மன்னன் விரும்பினால் மாத்திரமே ஒல்லாந்தப் படைகள் நிறுத்தி வைக்கப்படும்**'' என்ற கருத்து இருந்த பொழுதிலும், ஒல்லாந்தர் அதனை மறந்து செயற்பட்டனர். அவர்கள் தாம் கைப்பற்றிய கோட்டைகளில் அரசனைக் கலந்தாலோசியாது படை வீரர்களை நிறுத்திவைத்தனர். நீர்கொழும்பு, காலி ஆகிய பிரதேசங்களில் கறுவா பெருமளவு விளைந்ததால் அப்பிரதேசங்களில் உள்ள கோட்டைகளை மன்னனுக்குக் கையளிக்காது தாமே வைத்துக்கொள்ள ஒல்லாந்தர் நடவடிக்கை எடுத்தனர். இதனால் கோட்டைகளில் தங்கி இருந்த ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுப்பது மன்னனின் கடமையல்ல என மன்னன் கூறினான். போர்ச் செலவைக் கொடுக்கும் வரையில் கோட்டைகளை மன்னனுக்குக் கொடுப்பதில்லை என ஒல்லாந்தர் கூறினர். இவ்வாறு இரு சாராரிடையேயும் கருத்து வேறுபாடு படிப்படியாக வளர்ந்தது. எனினும் கொழும்பு உள்ளிட்ட கோட்டைகளில் இருந்து போர்த்துக்கேயரை வெளியேற்ற ஒல்லாந்தரின் உதவி தேவைப்பட்டதால் இரண்டாம் இராஜசிங்க மன்னன் மிகவும் பொறுமையுடன் நடந்துகொண்டதாகத் தெரிகிறது.



உரு 1.3 காலிக் கோட்டை

இதற்கிடையில் ஜெராட் ஹல்ப்ட் எனும் தளபதியின் கீழ் பெரிய ஒல்லாந்து கடற்படையொன்று இலங்கைக்கு வந்தது. இதனால் வலிமையடைந்த ஒல்லாந்தர், போர்த்துக்கேயரிடமிருந்து கொழும்பைக் கைப்பற்ற உயரமான இடங்களில் பீரங்கிகளைப் பொருத்திக் கோட்டையைத் தாக்கினர். தளபதி ஹல்ப்ட்டின் மீது பற்றுக் கொண்ட இராஜசிங்க மன்னன் அவனுக்கு உதவியாகப் பாரிய படையொன்றை அனுப்பிவைத்தான். இதனால் இன்னல்களுக்கு உள்ளான போர்த்துக்கேயர் அடிபணிந்து கொழும்புக் கோட்டையின் திறப்பினை ஒல்லாந்தரிடம் கையளித்தனர்.

அதுவரை காலிக் கோட்டையிலிருந்து செயற்பட்ட ஒல்லாந்தர், கொழும்புக் கோட்டையை மேலும் பலப்படுத்தி, அதனைத் தமது தலைமையகமாக்கினர். இது 1638 ஆம் ஆண்டு உடன்படிக்கையை மீண்டும் மீறுவதாக இருந்தது. இதனால் இராஜசிங்க மன்னன் கோபமடைந்தான். 1658 ஆம் ஆண்டு ஒல்லாந்தர் மன்னாரையும் அதன் பின்னர் யாழ்ப்பாணக் கோட்டையையும் கைப்பற்றியதுடன் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் அதுவரை நிலவிய போர்த்துக்கேயரது ஆட்சி முடிவுக்கு வந்தது. கைப்பற்றப்பட்ட கோட்டைகளை ஒல்லாந்தர் தாமே வைத்துக்கொண்டனர். போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிய பிரதேசங்களில் தமது அதிகாரத்தை நிலை நாட்டுவதே ஒல்லாந்தரின் நோக்கம் என்பதை விளங்கிக்கொண்ட மன்னன், ஒல்லாந்தரது ஆட்சிப் பிரதேசத்தைக் குறைப்பதற்கான உபாயமொன்றை மேற்கொண்டான். அதன்படி



உரு 1.4 யாழ்ப்பாணக் கோட்டை

போர்த்துக்கேயரின் கீழிருந்து, ஒல்லாந்தரால் கைப்பற்றக்கூடியதாக இருந்த பிரதேசங்கள் பலவற்றைக் கண்டி இராசதானியுடன் இணைத்துக்கொள்ள நடவடிக்கையை மேற்கொண்டான். மன்னனின் இந்த உபாயத்தினால் ஒல்லாந்தரால் போர்த்துக்கேயரை விடக் குறைந்த பிரதேசத்தையே கைப்பற்றக்கூடியதாக இருந்தது. ஒல்லாந்தர் கொழும்பு, மாத்தறை, நீர்கொழும்பு, கற்பிட்டி, மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களில் கோட்டைகளை நிறுவினர். அப்பிரதான கோட்டைகள் தவிர்ந்த ஆனையிறவு, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை போன்ற பிரதேசங்களிலும் கோட்டைகள் பல அவர்களால் நிர்மாணிக்கப்பட்டன. போர்த்துக்கேயருக்குப் பதிலாக வேறு ஐரோப்பிய இனத்தவரை வரவழைத்தமையால் ''**இஞ்சி கொடுத்து மிளகாய் வாங்கியது போல்**'' என்ற உவமைத்தொடர் உருவானது.

### ஒல்லாந்தர் கண்டி இராசதானியுடன் கொண்ட தொடர்பு

இந்நாட்டின் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய ஐரோப்பிய இனத்தவர்களில் கண்டி இராசதானியுடன் நீண்ட காலம் நல்லுறவு கொண்ட இனத்தவர் ஒல்லாந்தராவர். போர்த்துக்கேயர் கண்டி இராசதானி தொடர்பாகப் பின்பற்றியது ஆக்கிரமிப்புக் கொள்கையாகும். ஆங்கிலேயர் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றி இருபது ஆண்டுகள் செல்லும் முன்னர் கண்டி இராசதானியைக் கைப்பற்றினர். எனினும் ஒல்லாந்தர் 1658 - 1796 வரை கண்டி இராசதானியுடன் தூதுத் தொடர்பு, கடிதப் பரிமாற்றம் போன்ற தொடர்புகளை வைத்திருந்ததுடன், சந்தர்ப்பம் வாய்த்த பொழுது அந்த இராசதானியை ஆக்கிரமிக்கவும் தயங்கவில்லை. இதனால், ஒல்லாந்தருக்கும் கண்டி இராசதானிக்கும் இடையே ஒருவகையான மாறுபட்ட தொடர்பு நிலவியது.

### இரண்டாம் இராஜசிங்க மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையிலான தொடர்பு

போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து வெளியேற்ற இரண்டாம் இராஜசிங்க மன்னன் ஒல்லாந்தரை அழைத்த போதிலும் 1638 - 1658 இற்கு இடைப்பட்ட காலத்தில் போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிய பிரதேசங்களை ஒல்லாந்தர் மன்னனுக்குக் கையளிக்காமையால் இரு சாராரிடையேயும் கருத்து வேறுபாடு தோன்றியமை பற்றி முன்னர் கூறப்பட்டது. 1658 - 1675 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இந்நாட்டில் ஒல்லாந்தரது கொள்கைகளை முன்னெடுத்துச் சென்ற அதிகாரிகளுக்குக் கண்டி இராசதானியின் வலிமை பற்றி எவ்வித விளக்கமும் இருக்கவில்லை. இதனால் கடல் வழியாகவும் தரை வழியாகவும் அந்த இராசதானியைச் சுற்றிவளைக்கும் நோக்கில் 1659 - 1668 வரையிலான காலப்பகுதியில் அதுவரை கண்டி இராசதானியின் கீழிருந்த கிழக்கு, மேற்குக் கரையோரப் பகுதிகளில் சில ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்டன. ஒல்லாந்தரின் இந்த ஆக்கிரமிப்புச் செயற்பாடுகளால் அமைதியாக இருந்த இரண்டாம் இராஜசிங்க மன்னன் 1670 ஆம் ஆண்டு தொடக்கம் எல்லா வழிகளிலும் அவர்களைத் தாக்கத் தொடங்கினான். இராஜசிங்க மன்னனின் வழி நடத்துதலால் கண்டியர்கள் மேற்கொண்ட பலம் வாய்ந்த திடீர்த் தாக்குதல் காரணமாக 1658 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஒல்லாந்தர் கைப்பற்றிய அனைத்துப் பிரதேசங்களையும் அவர்கள் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இராஜசிங்க மன்னனின் இந்தத் தாக்குதல்கள் கண்டி இராசதானியின் யுத்த வலிமை தொடர்பாகச் சரியான விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளவும்

கண்டி இராசதானி தொடர்பாக ஒல்லாந்தரது எதிர்கால கொள்கையைத் திட்டமிட்டுக் கொள்ளவும் உதவியாக அமைந்தது. கரையோரப் பிரதேச மக்கள் ஒல்லாந்தருடன் தோளுடன்தோள் பொருதிப் போராடக்கூடியவர்கள் எனவும் கண்டிப் பிரதேசத்தைக் கைப்பற்ற முயன்றால் போர்த்துக்கேயரைப் போன்று முடிவில்லாத யுத்தத்தினை எதிர்நோக்கவேண்டிய நிலை தமக்கு உருவாகும் என்பதையும் இந்தத் தாக்குதல்கள் மூலம் ஒல்லாந்தர் புரிந்து கொண்டனர். இதன் விளைவாகக் கண்டி இராசதானி தொடர்பாக மரியாதையுடன்கூடிய பயத்துடன் கண்டி இராசதானி மன்னர்களுடன் சமாதானமாக ஒல்லாந்தர் செயற்பட்டனர்.

### கண்டி இராசதானியுடனான தூதுத் தொடர்பு

முதலாம் விமலதர்மசூரிய மன்னனது காலந்தொடக்கம் கண்டி இராசதானிக்கும் ஒல்லாந்தருக்கும் இடையே தூதுத் தொடர்பு நிலவியது. இரண்டாம் இராஜசிங்க மன்னனது காலத்தில் குறைந்தது எட்டுப் பேராவது இடையிடையே மன்னனைச் சந்தித்துள்ளனர். இரண்டாம் இராஜசிங்க மன்னனது காலத்தில் நடைபெற்ற தூதுப் பயணங்களில் 1656 ஆம் ஆண்டு ஜெனரல் ஜெராட் ஹல்ப்ட் மன்னனைச் சந்தித்தமை மிகவும் முக்கிய சந்தர்ப்பமாகும். இக்காலத்தில் போர்த்துக்கேயர் முற்றாக இலங்கையில் இருந்து அகற்றப்படாமல் இருந்ததுடன் ஒல்லாந்தருக்கும் மன்னனுக்குமிடையே கருத்து வேறுபாடும் நிலவியது. மன்னனின் அழைப்பின் பேரில் கண்டி இராசதானிக்குச் சென்ற ஒல்லாந்தத் தூதுவன் மன்னனால் மிகவும் மரியாதையாக வரவேற்கப்பட்டான். கண்டியர்கள் மிக அலங்கார ஊர்வலத்தில் ஜெனரலை அழைத்துச் சென்றதாக ஒல்லாந்த அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஹல்ப்ட்டின் பண்பட்ட செயல்களும் மரியாதையும் அரசனை மிகவும் கவர்ந்தன.


உரு 1.5 இரண்டாம் இராஜசிங்க மன்னன்

இரண்டாம் இராஜசிங்க மன்னனுக்குப் பின்னர் இரண்டாம் விமலதர்மசூரியன், ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திரசிங்கன், விஜயராஜசிங்கன் ஆகிய மன்னர்களின் காலத்திலும் இவ்வாறான தூதுப் பயணங்கள் இடம்பெற்றன. இக்காலத்தில் மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டபோது, கடவைகளை மூடுதல் என்பவற்றின் மூலம் இருசாராருக்கும் இடையிலான தொடர்பில் முறிவு ஏற்பட்டபோதும் தூதுப் பயணங்கள் தொடர்ந்தன. இவ்வாறான தூதுப் பயணங்களில் பெரும்பாலும் ஆளுநரின் கடிதங்கள் மன்னனிடம் முன்வைக்கப்பட்டன. மன்னனின் தூதுவர்கள் சில சந்தர்ப்பங்களில் கரையோரப் பிரதேசங்களுக்குச் சென்று ஒல்லாந்தரைச் சந்தித்தனர்.

தூதுப் பயணங்களின்போது இரு சாராரும் பரிசில்களைப் பரிமாறிக் கொள்ளுதல், நல்லுறவை வெளிப்படுத்தல், தூதுவர்களின் கோரிக்கைகளுக்கு

மறு பகுதியினர் செவிமடுத்தல், இரு சாராரிடையே ஏற்படும் சிக்கல்கள் பற்றிக் கலந்துரையாடல் என்பவற்றிற்கு முக்கிய இடம் வழங்கப்பட்டது. ஒல்லாந்த ஆளுநரும் மன்னனும் சந்திப்பது சாத்தியம் குறைவானதால் இரு சாராரதும் கருத்துக்களின் இணக்கப்பாட்டிற்கு இவ்வாறான தூதுப் பயணங்கள், கடிதப் பரிமாற்றம் என்பன உறுதுணையாக விளங்கின. இரண்டாம் இராஜசிங்க மன்னன் ஒல்லாந்தருக்குக் கடிதம் எழுதும்போது தான் இலங்கையின் பேரரசன் என்பதைக் குறிப்பிட்டான். ஒல்லாந்தரும் தமது கடிதங்களில் மன்னனை 'திரிசிங்களாதீஸ்வர' என்று குறிப்பிட்டனர். ஒல்லாந்தருக்கு மன்னன் கடிதம் எழுதும்போது **எனக்குப் பணி புரியும் அன்பான ஒல்லாந்த இனத்தவர்** போன்ற வாசகங்களை எழுதியதோடு ஒல்லாந்தர் மன்னனுக்குக் கடிதம் எழுதும்போது **தங்களது பணிவுள்ள சேவையாளர்** எனக் குறிப்பிட்டனர். ஒல்லாந்துத் தூதுவர் சிலர் கண்டி இராசதானி மன்னனைச் சந்தித்த முக்கிய விபரங்கள் சில கீழேயுள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 1.1 ஒல்லாந்தத் தூதுவர்கள் கண்டி மன்னர்களைச் சந்தித்த சில சந்தர்ப்பங்கள்

| வருடம் | கண்டி மன்னர் | ஒல்லாந்தத் தூதுவர் | தூதுப் பயணத்திற்கான காரணம் |
|---|---|---|---|
| 1602 | முதலாம் விமலதர்ம சூரிய மன்னன் | ஜோரிஸ் வான் ஸ்பில் பேர்ஜன் | வர்த்தக நடவடிக்கை தொடர்பாக மன்னனுடன் கலந்துரையாடுதல் |
| 1656 | இரண்டாம் இராஜ சிங்க மன்னன் | ஜெனரல் ஜெராட் ஹல்ப்ட் | மன்னனைச் சந்திக்கும்படி விடுத்த அழைப்பும் அப்போது நிலவிய பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடுதலும் |
| 1688 | இரண்டாம் விமல தர்மசூரிய மன்னன் | கலன் அல்பஸ் | மன்னுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையே புதிய உடன்படிக்கை ஏற்படுத்துதல் தொடர்பாகக் கலந்துரையாடுதல் |
| 1721 | ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திரசிங்க மன்னன் | கொர்னேலியஸ் டெகல் | மன்னனின் மனைவி இறந்தது தொடர்பாக ஒல்லாந்தர் தமது அனுதாபத்தைத் தெரிவித்தல் |

தூதுப் பயணங்களின்போது பரிசில்களைப் பரிமாறிக் கொள்ளல்
(1656 ஜெனரல் ஜெராட் ஹல்ப்ட்டின் தூதுப் பயணம்)

| ஒல்லாந்தத் தூதுவர் மன்னனுக்கு வழங்கிய பரிசில்கள் | மன்னன் ஒல்லாந்தருக்கு வழங்கிய பரிசில்கள் |
|---|---|
| போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிய கொடி, இரண்டு குதிரைகள், பாரசீக ஈட்டி வில்லு இரண்டு சோடி, சந்தனக் கட்டை, பாரசீக செம்மறி ஆடுகள் இரண்டும் ஏனைய சில மிருகங்களும் | தங்கச் சங்கிலி, மோதிரம், தங்கப் பாதணி |

## சமாதானக் கொள்கையும் மோதல்களைத் தவிர்த்தலும்

1687 ஆம் ஆண்டில் இரண்டாம் இராஜசிங்க மன்னன் மரணமடைந்ததும் அவனது மகன் இரண்டாம் விமலதர்மசூரியன் ஆட்சிக்கு வந்தான். தந்தையிடமிருந்து உரிமையாகப் பெற்ற அரசைப் பாதுகாக்க இவன் ஒல்லாந்தருடன் நட்புறவுடன் செயற்பட்டான். இருசாராரும் பின்பற்றிய செயற்பாடுகள் சில கீழே தரப்பட்டுள்ளன :

- பர்மாவிலிருந்து உபசம்பதா பிக்குகளை அழைத்து வர ஒல்லாந்தர் கப்பல்களை வழங்கியமை.
- பிட்டிகல் கோறளையில் கறுவா உரிப்பதற்கு ஒல்லாந்தருக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்குதல்.
- மன்னனின் கறுவா, பாக்கு, யானைகள் என்பவற்றை வர்த்தக சங்கத்தின் மூலம் பணம் கொடுத்துப் பெறுவதற்கு உடன்படல்.

இரண்டாம் விமலதர்மசூரிய மன்னனுக்குப் பின்னர் அவனது மகன் வீர பராக்கிரம நரேந்திரசிங்க மன்னன் ஆட்சிக்கு வந்தான். இவன் குண்டசாலை இளவரசன் எனப்பட்டான். இக்காலத்தில் ஒல்லாந்தருடனான சமாதானம் தொடர்பில் விரிசல்கள் ஏற்பட்டன. மேலும் இக்காலத்தில் கண்டி இராசதானி மன்னன் கற்பிட்டி, புத்தளம் போன்ற துறைமுகங்கள் வழியாகப் பாக்கு, யானைகள், யானைத்தந்தம் என்பவற்றை இந்தியாவுக்கு அனுப்பிக் கூடுதலான வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தான். இது தமக்குப் பெரும் நட்டம் எனக் கருதிய ஒல்லாந்தர் அனைத்துத் துறைமுகங்களையும் மூடி, கண்டி இராசதானியின் வர்த்தகத்திற்குத் தடையை ஏற்படுத்தினர். இதற்குப் பதிலாக மன்னனும் தனது ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசத்தின் வழியாக யானைகளைக் கொண்டு செல்வதைத் தடைசெய்து கறுவா உட்பட வாசனைப் பொருள்கள், கண்டி இராசதானியில் உற்பத்தி செய்யப்படும் உணவு வகைகள் என்பவற்றை ஒல்லாந்தருக்கு விற்பதை நிறுத்தினான்.

இக்காலகட்டத்தில் ஒல்லாந்தரது ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் ஒல்லாந்தரது செயல்களால் அதிருப்தியுற்றிருந்தனர். அவர்களால் விதிக்கப்பட்டிருந்த கடுமையான வரிகள், வரி வசூலிப்போரால் அளவுக்கு மீறிப் பணம் அறவிடப்பட்டமை, கறுவா உரிப்போர் முகங்கொடுத்த இக்கட்டான நிலை என்பன காரணமாக மக்களின் வெறுப்பு அதிகரித்தது. இதன் காரணமாக ஒல்லாந்த நிருவாகப் பிரதேசங்கள் சிலவற்றில் கலவரம் ஏற்பட்டது. ஒல்லாந்தர் தமது அதிகாரத்தைக் கொண்டு கலகத்தை அடக்கினர்.

ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திரசிங்க மன்னன் தமது முன்னோரின் பழக்கவழக்கங்களைப் பின்பற்றித் தென்னிந்திய நாயக்க வம்சப் பெண்ணை மணஞ்செய்து அவளைப் பட்டத் திற்குரிய அரசியாக்கினான். இதன் காரணமாக பல நாயக்கவம்சத்தினர் இலங்கைக்கு வந்ததுடன் ஆட்சியில் அவர்கள் உயர் பதவிகளைப் பெற்றுக் கண்டி இராசதானியில் வாழ்ந்து வந்தனர். அரச மாளிகையிலும் அவர்களது அதிகாரம் மேலோங்கி இருந்தது.

1739 ஆம் ஆண்டு வீர பராக்கிரம நரேந்திரசிங்க மன்னன் இறந்ததும் அவனுக்குப் பிள்ளைகள் இல்லாமையால் நாயக்கவம்ச பட்டத்தரசியின் சகோதரனொருவன் ஸ்ரீ விஜயராஜசிங்கன் என்ற பெயரில் அரசனானான். இதற்கமைய முதலாம் விமலதர்ம சூரிய மன்னனுடன் ஆரம்பமான அரச பரம்பரை முடிவுற்றது.

**ஒல்லாந்தர் கண்டி இராசதானியை ஆக்கிரமித்தல்**

ஸ்ரீ விஜயராஜ சிங்க மன்னனின் பின்னர் 1747 ஆம் ஆண்டு அவனது நாயக்கவம்ச பட்டத்தரசியின் சகோதரனான கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் சிங்காசனம் ஏறினான். இவன் அக்காலத்தில் வீழ்ச்சியுற்றிருந்த பௌத்த சமயத்தை வளர்ச்சியுறச்செய்யப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டான். வெலிவிற்ற சரணங்கர தேரர் இதற்காகத் தமது ஒத்துழைப்பை நல்கினார். மன்னன் ஒல்லாந்தரிடமிருந்து கப்பல்களைப் பெற்று உபசம்பதா பிக்குகளை அழைத்து வருவதற்குச் சீய தேசத்திற்குத் தூதுக்கு குழுவொன்றை அனுப்பி வைத்தான். உபாலி தேரரின் தலைமையில் பிக்குகள் சிலர் இங்கு வந்து 1753 ஆம் ஆண்டு இலங்கையில் உபசம்பதாவை நடத்தினர். அன்றிலிருந்து இலங்கையில் சீயம் நிக்காய ஆரம்பமானது.

கி.பி. 1762 ஆம் ஆண்டளவில் கண்டி இராசதானிக்கும் ஒல்லாந்தருக்கும் இடையே மீண்டும் மோதல்கள் ஏற்பட்டதாகத் தெரிகிறது. இதனால் ஒல்லாந்தருக்கு எதிராக வேறொரு இனத்தவரின் உதவியைப் பெறுவதில் மன்னன் ஆர்வம் காட்டினான். இதன் விளைவாக 1762 ஆம் ஆண்டு ஜோன் பைபஸ் என்ற ஆங்கிலேயன் கண்டி இராச தானிக்குத் தூதுவனாக வந்தான். இதனால் அச்சமடைந்த ஒல்லாந்தர் பெரன் வன் எக் என்ற ஆளுநரின் வழி நடத்தலின் கீழ் ஆறு படைப் பிரிவுகளை உருவாக்கி அவற்றை ஆறு பாதைகளால் அனுப்பி கண்டியை ஆக்கிரமித்தனர். இந்தப் படைப்பிரிவில் ஒன்றேனும் கண்டி நகருக்கு அருகில் வருவதற்கு கண்டி மக்கள் இடந்தரவில்லை. அவர்கள் தமக்கே உரித்தான பழக்கப்பட்ட போர் முறையைப் பயன்படுத்தித் தாக்குதல்களை மேற்கொண்டதால் ஒல்லாந்தரின் எதிர்பார்ப்பு சிதைந்ததுடன் அவர்கள் கரையோரப்

பிரதேசத்திற்கு மீண்டனர். இந்தத் தோல்வியின் பின்னர் அதிக நாட்கள் செல்வதற்குள் 1765 ஆம் ஆண்டு ஒல்லாந்தரால் மீண்டும் கண்டி இராசதானி ஆக்கிரமிக்கப்பட்டது. இந்த ஆக்கிரமிப்பில் இரு சாராருக்கும் பலத்த சேதங்கள் ஏற்பட்டன. 1765 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஒல்லாந்தர் கண்டி நகரை அடைந்ததால், மன்னன் பாதுகாப்பிற்காக ஹங்குரன்கெத்த என்ற இடத்திற்குத் தப்பிச் சென்றான். கண்டி நகரைக் கைப்பற்றிய ஒல்லாந்தர் முன்வைத்த நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள மன்னன் இணங்கவில்லை. மழைக்காலம் தொடங்கியதும் நோய்களால் பாதிக்கப்பட்டும் கண்டி மக்களின் தாக்குதலாலும் ஒல்லாந்தர் மீண்டும் திரும்பிச் சென்றனர்.



உரு. 1.6 ஒல்லாந்துப் படைவீரர்களின் தோற்றம்

பல ஆண்டுகளாகத் தொடர்ந்து ஏற்பட்ட மோதல்கள் காரணமாக மீண்டும் சமாதானத்தை ஏற்படுத்த மன்னன் விரும்பினான்.

அவ்வாறே நாயக்கர்களின் செயல்களினால் பிரதானிகளும் பௌத்த பிக்குகளும் வெறுப்படைந்தனர். இதனை அறிந்த மன்னன் சமாதானத்திற்காக ஒல்லாந்தருக்குத் தூது அனுப்பினான். இதனைப் பயன்படுத்தி, அக்காலகட்டத்தில் இருந்த ஒல்லாந்த ஆளுநரான விலெம் பெல்க் ஒல்லாந்தருக்குச் சார்பான நிபந்தனைகள் பலவற்றை முன் வைத்தான். மன்னர் அதற்கு இணங்க வேண்டிய நிலை ஏற்பட்டதுடன் கி.பி. 1766 ஆம் ஆண்டு 25 உறுப்புரைகளுடனான உடன்படிக்கையில் அவன் கைச்சாத்திட்டான். இந்த உடன்படிக்கையின் உறுப்புரைகளுள் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

**1766 ஆம் ஆண்டு உடன்படிக்கையின் சில சரத்துக்கள் (உறுப்புரைகள்)**

- ❖ யாழ்ப்பாணம், மன்னார், கற்பிட்டி, கொழும்பு திசாவை, காலி கோறளை, திருகோணமலையைச் சூழவுள்ள பிரதேசங்கள் என்பன ஒல்லாந்தருக்கு உரித்தாகும்.
- ❖ கரையோரம் தொடக்கம் நாட்டின் உட்பகுதியில் ஒரு கவ்வை (6 km) அளவு நிலம் ஒல்லாந்தருக்கு உரித்தாகும்.

இந்த உடன்படிக்கையின் மூலம் கண்டி இராசதானி தீவுக்குள் அமைந்துள்ள மற்றுமொரு தீவு என்ற நிலையை அடைந்தது. உடன்படிக்கையின் பின்னர் வெகு விரைவில் அதன் விளைவு மன்னனுக்கு விளங்கியது. கரையோரப் பிரதேசங்களை மீண்டும் தனக்குத் தருமாறு மன்னன் கேட்ட போதிலும் ஒல்லாந்தர் அதற்குச் செவி மடுக்கவில்லை. அவர்கள் கரையோரப் பிரதேசங்களில் தமது நிருவாகத்தை உறுதி செய்ததுடன் அப்பிரதேசங்களில் விவசாயத்தையும் கறுவாப் பயிர்ச் செய்கையையும் முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தனர்.

1766 ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை காரணமாக மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையிலான கருத்து வேறுபாடு அதிகரித்தது. ஒல்லாந்தர் உடன்படிக்கையின் சில நிபந்தனைகளை மீறி, மன்னனுக்கு உரித்தான பிரதே சங்களுக்கு உப்பு வழங்குவதைத் தடை செய்தனர். இதனால் கண்டி மக்கள் மிகவும் இக்கட்டான நிலைக்கு உள்ளாகினர்.

கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனின் பின்னர் 1782 ஆம் ஆண்டு அவனின் மனைவியின் சகோதரன் இராஜாதி ராஜசிங்கன் என்ற பெயரில் ஆட்சிக்கு வந்தான். 1796 அம் ஆண்டு ஆங்கிலேயர் இலங்கைக்கு வந்ததுடன் ஒல்லாந்தரைத் தாக்கி அவர்களுக்கு உரிய பிரதேசங்களைத் தமதாக்கிக் கொண்டதுடன் அவர்களது ஆட்சி முடிவுற்றது.

## 1.2 ஒல்லாந்தரது ஆட்சியில் பொருளாதார, சமூகப் பண்பாட்டு நடவடிக்கைகள்.

### ஒல்லாந்தரின் நிருவாகக் கட்டமைப்பு

ஒல்லாந்தர் வர்த்தக சங்கமாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்ததால் ஒல்லாந்தில் இருந்த VOC சங்கத்தின் அதிகாரிகள் குழு ஆசியாவில் ஒல்லாந்த நிருவாகப் பிரதேசம் தொடர்பாகத் தீர்மானத்தை மேற்கொண்ட உயர் குழுவாக விளங்கியது. ஒல்லாந்துக் கும் ஆசியாவுக்கும் இடையே காணப்பட்ட அதிக தூரம் காரணமாக அதுவரை ஒல்லாந்தரின் கீழிருந்த பிரதேசத்தை நிருவகிக்க 1609 ஆம் ஆண்டு வர்த்தக சங்கத்தால் பத்தேவியாவுக்கு ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் பத்தேவிய ஆளுநருக்கு உதவுவதற்கு ஆலோசனைச் சபையொன்றும் நியமிக்கப்பட்டது.

இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் ஒல்லாந்தரது ஆட்சி நிறுவப்பட்ட பின்னர் இந்நாட்டின் நிருவாக செயற்பாடுகளுக்காக ஒல்லாந்த வர்த்தக சங்கத்தால் தனியான ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அவ்வாறே அவருக்கு உதவியாக இந்நாட்டில் இருந்த ஒல்லாந்த அதிகாரிகளுடனான விசேட சபை ஒன்றும் நியமிக்கப்பட்டது. இலங்கையில் ஒல்லாந்த ஆளுநரும் உதவிச் சபையும் பத்தேவிய அதிகாரியின் கீழ் இருந்தபோதும், இந்நாட்டில் இருந்த ஆளுநரின் திறமை, ஆளுமை என்பவற்றிற்கேற்பத் தேவையான சந்தர்ப்பங்களில் நேரடியாக ஒல்லாந்திலிருந்த அதிகாரிகளின் குழுவிடமிருந்து தேவையான ஆலோசனைகளைப் பெறக்கூடியதாக

இருந்தது. அக்காலத்தில் இலங்கை, பத்தேவியா, ஒல்லாந்து என்பவற்றிற்றுக்கு இடையிலான போக்குவரத்துக்கு நீண்ட காலம் எடுப்பதும் தொடர்பாடல் நடவடிக் கைகளில் கஷ்டங்கள் நிலவியமையும் இந்நாட்டிலிருந்த ஆளுநருக்கு அவசர நடவடிக்கைகளின்போது சுதந்திரமாகத் தீர்மானம் எடுக்கக்கூடிய சந்தர்ப்பமாக இருந்தது.

இந்நாட்டிலிருந்த ஒல்லாந்த ஆளுநருக்கும் அவரது ஆலோசனைச் சபைக்கும் இலங்கையில் ஒல்லாந்தரின் கீழிருந்த பிரதேசங்களை நிருவகிக்க அதிகாரம் இருந்தது. அதன்படி குறிப்பிட்ட பிரதேசங்களின் நிருவாக நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு வரி அறவிடுதல், அதிகாரிகளை நியமித்தல், நிலம் வழங்குதல் என்பவற்றைச் செய்யக்கூடியதாக இருந்தது. ஆளுநர், ஆலோசனைச் சபையின் தீர்மானத்திற்கு அமைய செயற்பட்டார்.

நாட்டில் ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழிருந்த பிரதேசங்கள் முக்கிய மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவை கொமாண்டரிகள் எனப்பட்டன.

### கொழும்புக் கொமாண்டரி

ஒல்லாந்த ஆளுநரின் கீழ் இது நிருவகிக்கப்பட்டது. கொழும்பு, களுத்துறை, நீர்கொழும்பு உட்பட கரையோரப் பிரதேசம், ஹங்வல்ல, அங்குருவாதொட்ட, மல்வானை, கோட்டைகள் அமைந்த நாட்டின் உட்பிரதேசங்கள் இதன் கீழ் இருந்தன.

### காலிக் கொமாண்டரி


காலிக் கொமாண்டரியின் செயற்பாடுகளுக்கு, தனியான கொமாண்டர் ஒருவர் நியமிக்கப்பட்டார். பெந்தரை ஆறு முதல் மட்டக்களப்பு வரையான கரையோரப் பிரதேசம் மற்றும் அதற்குரித்தான நாட்டின் உட்பகுதிகள் என்பன இந்தக் கொமாண்டரியின் கீழ் இருந்தன.

### யாழ்ப்பாணக் கொமாண்டரி

யாழ்ப்பாணக் கொமாண்டரியும் தனியான கொமாண்டர் ஒருவரின் கீழ் இருந்தது. புத்தளத்திற்கு வடக்கிலிருந்து கரையோரமாக யாழ்ப்பாணம் வரையிலும், கிழக் குக் கரையில் மட்டக்களப்பு வரையிலும் ஒல்லாந்தரின் கீழிருந்த பிரதேசங்கள் யாழ்ப்பாணக் கொமாண்டரிக்கு உரித்தாயின.

காலி, யாழ்ப்பாணக் கொமாண்டரிகளின் கொமாண்டர்கள் இருவரும் கொழும்பு ஆளுநரின் கீழ் செயற்பட வேண்டுமென்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் நடைமுறையில் தமது செயற்பாடுகளில் சுதந்திரமாக இயங்க இவர்களுக்குச் சந்தர்ப்பம் இருந்தது.

ஆளுநருக்கும் கொமாண்டர்களுக்கும் கீழ் இருந்த நிருவாகம் சிவில் நிருவாகம், இராணுவ நிருவாகம், வர்த்தகப் பிரிவு என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. சிவில் நிருவாகத்திற்கு ஒவ்வொரு கொமாண்டரியின் கீழும் திசாவனி இருந்தது. திசாவனி கோறளைகளாகவும் கோறளைகள் பற்றுக்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. திசாவனிகளில் பல்வேறு சேவைகளுக்குப் பொறுப்பாக முதலியார்களும் விதானைகளும் இருந்தனர். திசாவனிகளின் செயற்பாடுகளை நடாத்தும் பொறுப்பு திசாவைக்கு இருந்தது. ஒல்லாந்தரின் படை ஒழுங்கமைப்பு இராணுவக் கப்பித்தான்களின் கீழ் செயற்பட்டது. வர்த்தகப் பிரிவு ஒபர் ஹூப்ட் ஏமன் (சிரேஷ்ட வர்த்தகர்) என்ற அதிகாரியின் கீழ் இருந்ததுடன் அவருக்குக் கீழே ஹூப்ட்மன் (நிலங்களின் வருமானத்திற்குப் பொறுப்பானவர்) எனப்படும் வேறு அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருந்தனர். இதற்கமைய ஒல்லாந்தரின் கீழ் நிருவாகச் செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த முறையைப் பின்வரும் அட்டவணையின் மூலம் அறியலாம்.



ஒல்லாந்த ஆளுநர்களின் கட்டுப்பாட்டில் கொழும்புக் கொமாண்டரியின் கீழ் இருந்த இந்த நிருவாகக் கட்டமைப்புக்குச் சமமான வகையில் ஏனைய கொமாண்டரிகளும் கொமாண்டர்களின் கீழ் செயற்பட்டன. ஒல்லாந்தரின் கீழான சிவில் நிருவாக நடவடிக்கை ஒழுங்கமைப்புக்களின்போது திசாவைகளுக்கும் முக்கிய அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. மூன்று கொமாண்டரிகளுக்கும் மூன்று திசாவைகள் இருந்தனர். திசாவைப் பதவிகளுக்கு ஒல்லாந்த இனத்தவர் நியமிக்கப்பட்டதுடன் சிவில் நிருவாகத்தின் கீழ்நிலைப் பதவிகளுக்கு சுதேச அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். கோறளை, முதலி, விதானை, கிராமப்பிரதானி போன்ற பதவிப் பெயர்களைப் போன்று யாழ்ப்பாண பிரதேசத்தில் புழக்கத்தில் இருந்த அதிகாரிகள், கங்காணி, உடையார் போன்ற பழைய பதவிப்பெயர்களும் இவ்வாறு ஈடுபடுத்தப்பட்ட பாரம்பரிய சுதேச உத்தியோகத்தர்களுக்கு சிறந்த உதாரணங்களாகும்.

**நீதிமன்ற நடவடிக்கைகள்**

இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள சட்ட அமைப்புக்களின் ஒரு பகுதியான உரோமன் டச்சுச் சட்டம் ஒல்லாந்தர்களிடமிருந்து நாம் பெற்றுக் கொண்ட கொடையாகும். இலங்கையில் இருந்த சுதேசச் சட்டங்கள், பழக்க வழக்கங்களுக்குப் பொருத்தமானதாக உரோமன் - டச்சுச் சட்டத்தைத் தொகுத்து ஒல்லாந்ததர் செயற்படுத்தினர். ஒல்லாந்தர் இங்கு காணப்பட்ட சட்டரீதியான நிறுவனங்களைப் பயன்படுத்தியதோடு புதிய நீதிமன்றத் தொகுதியையும் அறிமுகப்படுத்தினர். அவை பின்வருமாறு :

**ராத்வான் ஜஸ்டிட் மேல் நீதிமன்றம்**

இது ஒல்லாந்த நீதிமன்றத் தொகுதியின் உயர் நீதிமன்றமாகும். அதன் பிரதானி வுப்ட் அத்மினிஸ்தார் எனும் பெயரால் அழைக்கப்படுவார்.

குற்றச் செயல் தொடர்பான வழக்குகளுக்குத் தீர்ப்பு வழங்குதல் இங்கு நடைபெற்ற பிரதான செயலாகும். இந்த நீதிமன்றம் மூன்று கொமாண்டரிகளிலும் நிறுவப்பட்டிருந்தது.

**சிவில் ராத் / சிவில் நீதிமன்றம்**

சிவில் ராத் எனும் நீதிமன்றம் ஒல்லாந்தரது ஆட்சியின் ஆரம்பத்திலிருந்தே கொழும்பு, காலி, யாழ்ப்பாணம் ஆகிய கொமாண்டரிகளில் நிறுவப்பட்டிருந்தன. ரிக்ஸ் டொலர் 120 இற்குக் குறைந்த நட்டம் தொடர்பான சிவில் வழக்குகள், விவாகம் தொடர்பான வழக்குகள் என்பன இந்த நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டன.

### லான் ராத் / காணி நீதிமன்றம்

*லான் ராத் எனும் காணி நீதிமன்றம் கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, மாத்தறை ஆகிய மத்திய நிலையங்களில் அமைக்கப்படடிருந்தன. திசாவை இந்த நீதிமன்றங்களில் தலைவராக இருந்தார். சுதேச மக்களுக்குக் எளிமையான செலவு குறைந்த இலகுவான நீதிமன்ற முறை என இதனைச் சிலர் குறிப்பிடுவர்.*

### பிஸ்கல் நீதிமன்றம் / திசாவை நீதிமன்றம் / கிராம நீதிமன்றம்

*ஒல்லாந்த நீதிமன்றத் தொகுதியில் கீழ்நிலை நீதிமன்றமொன்றாக இந்த நீதிமன்றம் செயற்பட்டது. நிருவாகக் கட்டமைப்பில் கீழ் நிலை உத்தியோகத்தர்களான கிராமத் தலைவர், விதானை, முதலி, கோறளை போன்ற சுதேச அதிகாரிகளுக்குத் தமது பதவிகளுக்கு உரிய சிறு நீதிமன்ற அதிகாரங்கள் இருந்தன. யாழ்ப்பாணப் பிரதேச மக்கள் மத்தியில் காணப்பட்ட மரபு வழிச் சட்டதிட்டங்கள், சட்டமாகத் தயாரிக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டன.*

### ஒல்லாந்தரின் பொருளாதார நடவடிக்கைகள்

*இலங்கையில் தமக்குரிய பிரதேசத்தில் உச்ச இலாபத்தைப் பெறும் வகையில் ஒல்லாந்தர் தமது பொருளாதாரக் கொள்கைகளை செயற்படுத்தினர். ஒல்லாந்தரின் கீழிருந்த ஏனைய ஆசிய நாடுகளை விட இலங்கையில் சிறந்த கறுவா விளைவதை அவர்கள் அறிந்திருந்தனர். எனவே கறுவாப் பயிர்ச்செய்கை, கறுவா உரித்தல், கறுவா வியாபாரம் என்பவற்றில் அவர்கள் அதிக ஆர்வம் காட்டினர். ஆரம்பத்தில் இயற்கையாகக் காடுகளில் வளரும் கறுவாவை சுதேசிகளைக் கொண்டு உரித்தலில் ஈடுபட்ட ஒல்லாந்தர், பின்னர் கொழும்பு, களுத்துறை, அளுத்கம, மாத்தறை ஆகிய பிரதேசங்களில் கறுவாவைப் பயிரிட்டனர். போர்த்துக்கேயர் காலந் தொடக்கம் கறுவா சேகரித்தல், விற்றல் தொடர்பாகச் செயற்பட்ட மகா பத்தே திணைக்களம் ஒல்லாந்தரால் தனிப்பட்ட கப்பித்தான் ஒருவனின் கீழ்க் கொண்டுவரப்பட்டு மிகத்திறமையுடன் செயற்படுத்தப்பட்டது. கறுவா உரித்தலுக்கும் சேகரித்தலுக்கும் மரபு ரீதியான இராஜகாரிய முறை பயன்படுத்தப்பட்டது. கறுவா உரிப்போரின் பெயர்களைப் பதிவேட்டில் பதிந்து அவர்களிடமிருந்து உச்சப் பயனைப் பெறுவதற்கு ஒல்லாந்தர் நடவடிக்கை எடுத்தனர். வயதுவந்த கறுவா உரிப்போர் குறிப்பிட்ட கறுவாத் தொகையை சங்கத்திற்கு ஆண்டுதோறும் இலவசமாகக் கொடுக்கவேண்டியிருந்தது. இவ்வாறு கறுவா வர்த்தகத்தின் மூலம் ஒல்லாந்தர் பெருமளவு வருமானத்தைப் பெற்றனர்.*

*கறுவா தவிர பாக்கு, முத்து, யானைத்தந்தம், மிளகு, சாதிக்காய், ஏலம், யானை, தேன் மெழுகு என்பவற்றின் மூலமும் ஒல்லாந்தர் இலாபம் அடைந்தனர். இவை தவிர நிலங்களில் இருந்து அறவிடப்பட்ட வரியையும் அவர்கள் முக்கியமானதாகக் கருதினர். காணி உரிமை, அதிலிருந்து பெற வேண்டிய வரி போன்ற விபரங்கள் அடங்கிய* **தோம்பு** *எனப்பட்ட விசேட பதிவேட்டினைப் போர்த்துக்கேயர் தயாரித்திருந்தனர். ஒல்லாந்தர் அதனை மேலும் முறைமைப்படுத்திக் குடும்பம், காணி, பாடசாலை என மூன்று*

முறையான **தோம்பு** (Thombo) தயாரித்தனர். குடும்பத் தோம்பில் கிராமமொன்றில் வாழும் குடும்பங்களின் விபரம் அடங்கியிருந்தது. காணி தொடர்பான தோம்பில் கிராமங்களிலுள்ள குடும்பங்களுக்குச் சொந்தமான காணிகளின் விபரம், பயிர் வகைகள், சங்கத்திற்கு வர வேண்டிய வரி என்பன அடங்கியிருந்தன. பாடசாலை தோம்பில் கிராமத்திலுள்ள பெற்றோரின் பெயர்கள், பிள்ளைகளின் பிறந்த திகதி, பாடசாலையை விட்டு விலகிச் சென்ற திகதி, வேறு கிராமங்களுக்குக் குடிபெயர்ந்து சென்றால் அந்தத் திகதி என்பன குறிப்பிடப்பட்டிருந்தன.

**ஒல்லாந்தரின் நிலத் தோம்பில் அடங்கிய விடயமொன்று**

- இரத்மலானை, தொன் பஸ்தியன் அப்புகாமிக்குச் சொந்தமான நிலம் தென்னை மரங்கள் 195. அறவிட வேண்டிய வரி ரிக்ஸ் டொலர் 1 ஸ்டய்வர் 24.

தோம்பு தயாரிக்கப்பட்டதன் மூலம் கிராமத்திலுள்ள மக்கள் தொகை, நிலம் பயிர்ச்செய்கை தொடர்பான விபரம் போன்ற தகவல்களைப் பெறுவதன் மூலம் சங்கத்தால் அறவிடக்கூடிய வரி, பெறக்கூடிய சேவை பற்றிய விபரங்களை ஒல்லாந்தரால் பெறக்கூடியதாக இருந்தது.

நெல், புடைவை என்பனவற்றை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு வர்த்தக சங்கத்திற்கு செலவாகும் பணத்தைக் குறைப்பதற்கும் இந்நாட்டின் பாவனைக்கு அல்லது வர்த்தகத்திற்குப் பயன்படுத்தக்கூடியவற்றை இங்கே உற்பத்திசெய்வதன் மூலம் மேலதிக இலாபத்தைப் பெறுவதற்கும் ஒல்லாந்தர் நடவடிக்கை எடுத்தனர். அதற்கான உதாரணங்கள் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

- முத்துராஜவெலயை விளைநிலமாக்க நடவடிக்கை எடுத்தமை.
- யோத வாவி, கந்தளாய் குளம் என்பனவற்றைப் புனர்நிர்மாணம் செய்ததன் மூலம் உற்பத்தியை அதிகரிக்க முயன்றமை.
- கரும்பு, மிளகு, ஏலம், கோப்பி, முசுக்கட்டை (மல்பரி), அவுரிச் செடி (நீலச்சாயம் பெறல்) ஆகிய பயிர்ச்செய்கைகளை முன்னேற்றுதல்.
- நெசவுத் தொழில், துணிகளுக்கு சாயமிடுதல், ஓடு, செங்கல் தயாரித்தல் ஆகிய கைத்தொழில்களை ஊக்குவித்தல்.
- ஹமில்டன் கால்வாய் போன்ற கால்வாய்களை அமைத்து அவற்றைப் பொருள்களைக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்துதல்.
- யாழ்ப்பாண பிரதேசத்தில் புகையிலை உற்பத்தி மற்றும் பனைமரக் கட்டைகளை ஏற்றுமதி செய்தல்.



உரு 1.7 கொழும்பு ஹமில்டன் கால்வாய்

## சமூகப் பண்பாட்டு நடவடிக்கைகள்

### சமயக் கொள்கை

புரட்டஸ்தாந்து மதம் ஒல்லாந்தரது மதமாக விளங்கியது. கரையோரப் பிரதேங் களைக் கைப்பற்றிய பின்னர் அங்கு தமது சமயத்தைப் பரப்புவதற்கு அவர்கள் பல வழிமுறைகளைக் கையாண்டனர். மக்களைப் புரட்டஸ்தாந்து மதத்திற்கு மாற்றுவதற்கு ஒல்லாந்திலிருந்து பாதிரிமாரை வரவழைத்தனர். ஒல்லாந்தரின் கீழிருந்த கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், அச்சுவேலி மற்றும் மணற்காடு போன்ற பல பிரதேசங்களிலும் ஒல்லாந்தரால் நிர்மாணிக்கப்பட்ட கிறிஸ்தவ தேவாலயங்கள் அல்லது அவற்றின் சிதைவுகளைத் தற்போதும் நாம் காணக்கூடியதாயுள்ளது.

### கல்வி நடவடிக்கை

ஒல்லாந்தர் தமது சமயத்தைப் பரப்புவதற்கு இஸ்கோல் எனும் விஷேட நிறுவன மொன்றை ஆரம்பித்தனர். பல கிராமங்களுக்கென ஒரு பாடசாலையை நிறுவி அப்பிரதேசத்தின் பிள்ளைகளை அப்பாடசாலைக்குக் கட்டாயமாக வரும்படி கூறினர். பிள்ளைகளின் தாய் மொழியில் கல்வி கற்பிக்கப்பட்டது. புரட்டஸ்தாந்து சமயத்திற்குப் பாடசாலைக் கலைத்திட்டத்தில் பிரதான இடம் அளிக்கப்பட்டது. இது தவிர தாய்மொழி, சங்கீதம், இறையியல் போன்ற பாடங்கள் கற்பிக்கப்பட்டதுடன் முறையான பரீட்சை முறையும் ஆரம்பமானது. பாடசாலைகளை மேற்பார்வை செய்வதற்கு அவர்கள் அதிகாரிகளின் குழுவொன்றையும் நியமித்தனர்.

ஐரோப்பியரின் பிள்ளைகளின் கல்விக்கு தனியான பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. கொழும்பில் நிறுவப்பட்ட செமனேரி மூலம் ஒல்லாந்த மொழியில் உயர் கல்வி அளிக்கப்பட்டது. அதேபோன்று யாழ்ப்பாணம், மன்னார் போன்ற பிரதேசங்களிலும் ஒல்லாந்தரால் பாடசாலைகள் நிறுவப்பட்டன. இவ்வாறு பாடசாலைகள் மூலம் வழங்கப்பட்ட கல்வியின் மூலமும் அரச பதவிகள், கௌரவப் பெயர்கள் என்பன மூலமும் கூடுமானவரையில் மக்களைத் தமது சமயத்திற்கு மாற்றிட ஒல்லாந்தர் நடவடிக்கை எடுத்தனர்.

கி.பி. 1739 ஆம் ஆண்டு ஒல்லாந்தர் முதன்முதலாக அச்சியந்திரமொன்றை இந்நாட்டிற்குக் கொண்டுவந்ததுடன் அதன் மூலம் வேதாகமத்தின் சில பகுதிகளை அச்சிட்டு விநியோகித்தனர்.

### ஒல்லாந்தர் ஆட்சியின் சமூகப் பண்பாட்டுத் தாக்கங்கள்

ஒல்லாந்தர் 138 வருடங்கள் இலங்கையின் கரையோரப் பிரதேசத்தை ஆட்சி செய்தனர். ஒல்லாந்தரது ஆட்சியால் அவர்களது சமூகப் பண்பாடுகள் எமது நாட்டிலும் பல துறைகளில் தாக்கம் செலுத்தின. அவற்றைப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம் :

❖ உரோமக் கட்டடக் கலையைப் பின்பற்றி விறாந்தை, மேல்மாடி, தூண்கள், உயர்ந்த கூரை என்பனவற்றைக் கொண்ட வீடுகள் அமைத்தல்.

❖ பலவித உணவு வகைகள் அறிமுகமாதல்.
உதாரணம் - கேக், அச்சாறு, கொக்கிஸ்

❖ நீதிமன்ற முறை அறிமுகமாதல்.

❖ இந்நாட்டு சமுதாயத்தில் பறங்கியர் என்ற இனம் தோற்றம் பெறல்.

❖ சிங்கள, தமிழ் மொழிகளில் பல டச்சுச் சொற்கள் கலந்தமை. பின்வரும் சொற்கள் அதற்கு சில எடுத்துக்காட்டாகும்.

| கட்டடம், வீட்டுப் பயன்பாட்டுப் பொருள்கள் | சட்டம் நீதிமன்றம் | ஏனையவை |
|---|---|---|
| அலுமாரி | நொத்தாரிஸ் | வெந்தேசி |
| கேத்தில் | தோல்க்க | சாக்கு |
| ஜன்னல் | தோம்பு | இஸ்கோல் |
| இஸ்தோப்பு | | குவிதான்சி |
| சொல்தர | | கந்தோர் |
| தரப்பு | | ஒப்பு |
| பால்க்க | | இலாச்சி |
| காமர | | பூதல் |
| இஸ்குருப்பு | | மோல |
| | | பிசுக்கால் |
| | | தொம்பகர |
| | | உலாந்தை |



உரு. 1.8 இலங்கையில் ஒல்லாந்தரது கட்டடக் கலை




உரு 1.9 ஒல்லாந்தரின் பீங்கானும் நாணயமும்

**பயிற்சி**

கீழ்க்காணும் தலைப்புகளுக்கு அமைய குறு வினாக்கள் தயாரிக்கவும்

1. கரையோரப் பிரதேசங்கள் ஒல்லாந்தரின் ஆட்சிக்குட்படுதல்
2. ஒல்லாந்தர் கண்டி இராசதானியுடன் கொண்ட தொடர்புகள்
3. ஒல்லாந்தரது நிருவாக நடவடிக்கைகள்
4. ஒல்லாந்தரது சமூகப் பண்பாட்டு நடவடிக்கைகள்




### செயற்பாடு

1. இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் ஒல்லாந்தரின் ஆட்சிக்குட்படுதல் என்ற பாடத்தை ஆதாரமாகக் கொண்டு வினா - விடைப் போட்டியொன்று நடாத்துக.

2. ஒல்லாந்தரது ஆட்சிக் காலத்தில் இந்நாட்டின் பண்பாட்டுடன் இணைந்த புதிய அம்சங்கள் தொடர்பாகப் பின்வரும் தலைப்புகளுக்கு அமையப் பேச்சு ஒன்றை வகுப்பில் நிகழ்த்துக.
   சொற்கள் / உணவு, பான வகைகள்
   ஆடையணிகள் / பயன்படுத்திய பல்வகைப் பொருள்கள்

# 2 இலங்கையில் பிரித்தானியரின் ஆட்சி



## அறிமுகம்

மேலைத்தேயத்தவர்களான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகியோருக்குப் பின்னர் பிரித்தானியர் இலங்கைக்கு வருகைதந்தனர். ஆங்கிலேயரின் தாய்நாடு பிரித்தானியாவாகும். ஒல்லாந்தர் வசம் இருந்த இலங்கையின் கரையோரப் பிரதே சங்களை 1796 பெப்பிரவரி மாதத்தில் ஆங்கிலேயர் கைப்பற்றிக்கொண்டதுடன் இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி ஆரம்பமானது. அவர்கள் 1815 இல் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றிக் கொண்டதுடன் முழுநாட்டையும் பிரித்தானியாவின் குடியேற்ற நாடாக்கிக் கொண்டனர். அதிலிருந்து 1948 வரை 133 ஆண்டுகளாக இலங்கையை பிரித்தானியர் ஆட்சி புரிந்தமையால் இந்நாட்டின் வரலாற்றில் பெருஞ் செல்வாக்கைச் செலுத்தியுள்ளனர். பிரித்தானியர் இந்நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்ட விதம், அவர்களுக்கு எதிராக இந்நாட்டு மக்களால் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்கள், அக்காலகட்டப் பொருளாதாரமுறை ஆகியவற்றைப் பற்றி இந்த அத்தியாயத்தில் கவனம் செலுத்தப்படுகிறது.

## 2.1 பிரித்தானியரின் இலங்கை வருகையும் ஆட்சியதிகாரத்தை நிலைநாட்டுதலும்

### பிரித்தானியர் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொள்ளுதல்

1498 ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு வந்த போர்த்துக்கேயர் 1505 இல் இலங்கைக்கு வந்தனர். 17 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆசியாவுக்கு வந்த ஒல்லாந்தர், அந்நூற்றாண்டின் மத்திய பகுதியில் இலங்கைக்கு வந்து, போர்த்துக்கேயர் வசமிருந்த இந்நாட்டின் கரையோரப் பிரதேசங்களில் தமது ஆட்சியை நிலைநிறுத்திக் கொண்டனர். (1658 ஆம் ஆண்டு). பிரித்தானியர் இந்தியாவுக்கு வந்து ஒன்றரை நூற்றாண்டுகள் ஆகும் வரை இலங்கை மீது அவர்கள் கவனம் செலுத்தியதை அவதானிக்க முடியவில்லை. என்றாலும் 18 ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலப்பகுதியில் இந்நாட்டின்மீது தமது கவனத்தைச் செலுத்தினர். இவ்வாறு பிரித்தானியரது கவனம் இலங்கைமீது திரும்பியதற்கான காரணங்கள் வருமாறு :

- ❖ இலங்கையின் அமைவிட முக்கியத்துவம்
- ❖ திருகோணமலைத் துறைமுகத்தின் முக்கியத்துவம்
- ❖ வர்த்தக நடவடிக்கைகளில் இலங்கை பெற்றிருந்த முக்கியத்துவம்

### இலங்கையின் அமைவிட முக்கியத்துவம்

இலங்கை இந்துசமுத்திரத்தின் தீவொன்றாக அமைந்துள்ள நாடு என்பதை நீங்கள் கற்றுள்ளீர்கள். இந்நாட்டின் அமைவிடம் பிரித்தானியருக்கு முக்கியத்துவமானதில் செல்வாக்குச் செலுத்திய மூன்று காரணிகள் வருமாறு :

- ❖ 18 ஆம் நூற்றாண்டாகும்போது இந்தியாவின் கிழக்கு, மேற்கு கரையோரப் பிரதேசங்களில் தமது ஆட்சியதிகாரத்தைக் கொண்டிருந்த பிரித்தானியருக்கு, அப்பிரதேசங்களை ஏனைய ஐரோப்பியரிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு, இந்தியாவிற்குத் தெற்காகத் தனித் தீவாக அமைந்திருந்த இலங்கை விசேடமாக முக்கியத்துவம் பெற்றிருந்தமை.
- ❖ இலங்கையின் அமைவிடம், இந்தியாவின் பாதுகாப்புக்கு மட்டுமன்றி, இந்து சமுத்திரக் கடலாதிக்கத்தை மேற்கொள்வதற்கும் முக்கியமானதாக இருந்தமை.
- ❖ மேலைத்தேய - கீழைத்தேய கடற்பாதையின் மத்திய நிலையமாக இலங்கை அமைந்திருந்தமை.




உரு 2.1 திருகோணமலைத் துறைமுகத்தைப் பாதுகாப்பதற்காகப் பொருத்தப்பட்டிருந்த பீரங்கி

### திருகோணமலைத் துறைமுகத்தின் முக்கியத்துவம்

ஆங்கிலேயருக்கு திருகோணமலைத் துறைமுகம் முக்கியத்துவமாவதற்குக் கீழ்வரும் காரணங்கள் செல்வாக்குச் செலுத்தி இருக்கலாம் :

- ❖ வங்காள விரிகுடாவையும் தென்கிழக்கு ஆசியாவையும் நோக்கி அமைந்த இயற்கைத் துறைமுகமாக அது இருந்தமை.
- ❖ நாட்டின் உட்பகுதியை நோக்கி நீண்டு அமைந்துள்ள இயற்கைத் துறைமுகமான படியால் ஆபத்தான சூறாவளிகளிலிருந்து கப்பல்களைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடியதாயிருந்தமை.
- ❖ ஆங்கிலேயர் இந்துசமுத்திரத்தில் பிரான்சியருடன் மேற்கொண்ட கடற் சண் டைகளின்போது திருகோணமலைத் துறைமுகம் போர் நடவடிக்கைகளில் முக்கியமாயிருந்தமை.



உரு 2.2 திருகோணமலைத் துறைமுகம்


## வர்த்தக நடவடிக்கைகளில் இலங்கையின் முக்கியத்துவம்

ஆங்கிலேயர் ஆசியாவில் மேற்கொண்டிருந்த வர்த்தக நடவடிக்கைகளுக்கு இலங்கை முக்கியத்துவம்வாய்ந்ததாயிருந்தது. இதற்கான காரணிகள் வருமாறு :

- மிகவும் உயர்தரமான கறுவாவையும் ஏனைய வாசனைத் திரவியங்களையும் இந்நாட்டிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடியதாயிருந்தமை.
  (உதாரணம் : மிளகு, கராம்பு, ஏலம், சாதிக்காய்)
- வாசனைத் திரவியங்களைத் தவிர யானைகள், முத்து, மாணிக்கம் போன்ற வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த பல பொருள்களும் இந்நாட்டில் காணப்பட்டமை.
- பிரித்தானியரின் உற்பத்திப் பொருள்களுக்கான சந்தை ஒன்றை இந்நாட்டில் உருவாகிக் கொள்ளக்கூடியதாய் இருந்தமை.

## 1796 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஆங்கிலேயருக்கும் கண்டி இராச்சியத்திற்குமிடையில் காணப்பட்ட தொடர்புகள்

பிரித்தானியர் ஆசியாவுக்கு வரும்போது இந்நாட்டின் கரையோரப் பிரதேசம் ஒல்லாந்தரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததோடு, மலைநாட்டில் சுதந்திர அரசொன்றும் காணப்பட்டது. ஒல்லாந்தரால் மலைநாட்டு அரசுக்கு ஏற்பட்ட இடைஞ்சல்கள், அச்சுறுத்தல்களால் இவ்விரு சாராருக்குமிடையே கருத்துவேறுபாடுகள் உருவாகின. இதனால் ஒல்லாந்தரை இந்நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கு ஆங்கிலேயரின் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சியில் மலைநாட்டு ஆட்சியாளர்கள் ஈடுபட்டிருந்தனர்.



உரு 2.3 ஜோன் பைபஸ், கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனைச் சந்தித்தல்

இதன் விளைவாக கண்டி இராச்சிய மன்னருக்கும் பிரித்தானியருக்கும் இடையே முக்கியமான தூதுத் தொடர்புகள் பல இடம்பெற்றன. அவையாவன :

- ❖ 1762 இல் ஜோன் பைபஸ், கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனைச் சந்தித்தல்.
- ❖ 1782 ஆம் ஆண்டில் ஹியு போயிட், இராஜாதி இராஜசிங்க மன்னனைச் சந்தித்தல்.
- ❖ 1795 ஆம் ஆண்டில் றொபட் அன்ட்றூஸ், இராஜாதி இராஜசிங்க மன்னனைச் சந்தித்தல்.

ஆங்கிலேயத் தூதுவர்கள் இந்நாட்டிற்கு வந்த ஆரம்ப காலத்தில் ஒல்லாந்தருக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே நட்புறவு காணப்பட்டது. இதனால் ஒல்லாந்தருடன் மோதல்களை ஏற்படுத்திக்கொள்ள பிரித்தானியர் விரும்பவில்லை. ஆகையால் ஆரம்ப காலத் தூதுவர்களின் வருகையால் கண்டி இராச்சிய மன்னர்களின் நோக்கம் நிறைவேறவில்லை. றொபட் அன்ட்றூஸ் 1795 ஆம் ஆண்டில் இராஜாதி இராஜசிங்க மன்னனைச் சந்தித்த வேளையில் ஒல்லாந்தரின் கோட்டைகளைக் கைப்பற்றுவதில் அவரின் உதவியைக் கோரி நின்றார். அரசன் அதற்கு விரும்பிய போதிலும் கோட்டைகளைக் கைப்பற்றுவது பிரித்தானியர் எதிர்பார்த்த அளவு கஷ்டமானதாக இல்லாதிருந்தமையால் அரசனின் உதவியைப் பெற்றுக்கொள்ளும் தேவை அவர்களுக்கு ஏற்படவில்லை.

**பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி இந்நாட்டின் கரையோரப் பிரதேசங்களில் தமது அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்ளல்.**

ஆங்கிலேயருக்கு முன்னர் இந்நாட்டின் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொண்டிருந்த ஒல்லாந்தரின் தாய்நாடு ஒல்லாந்தாகும். பிரான்ஸில் ஏற்பட்ட புரட்சியைத் தொடர்ந்து அந்நாடு ஒல்லாந்தை ஆக்கிரமித்துக் கொண்டபோது ஒல்லாந்து இளவரசன் ஐந்தாம் வில்லியம் இங்கிலாந்திற்குத் தப்பி ஓடினான். இவ்வாறு ஒல்லாந்தில் பிரான்சிய ஆட்சி உருவானமையால், ஒல்லாந்தர் வசமிருந்த கரையோரப் பிரதேசங்கள் பிரான்சியர் வசமாகிவிடும் என்று பிரித்தானியர் அச்சங் கொண்டனர். இச்சம்பவத்தைத் தமது நலனுக்குப் பயன்படுத்திக் கொண்ட ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைத் தம்மிடம் ஒப்படைக்கும்படி வில்லியத்திடமிருந்து கடிதம் ஒன்றைப் பெற்றுக் கொண்டனர். அக்கடிதம் இங்கிலாந்தின் கியூ மாளிகையிலிருந்து எழுதப்பட்டமையால் அது ‘கியூ கடிதம்’ எனக் குறிப்பிடப்படுகிறது.

அக்கடிதம் அப்போதைய இலங்கையின் ஒல்லாந்த ஆளுநரான பன் எங்கள் பெக்கிடம் ஒப்படைக்கப்பட்டபோதிலும் அதற்கு அவர் இணங்கவில்லை. அதனால் ஆங்கிலேயர் யுத்த நடவடிக்கையை மேற்கொண்டு 1795 ஆகஸ்ட் 26 ஆம் திகதி திருகோணமலையில் இருந்த பெட்றிக் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டனர். தொடர்ந்து யாழ்ப்பாணம், மன்னார், கற்பிட்டி, கொழும்பு ஆகிய இடங்களில் காணப்பட்ட அனைத்துக் கோட்டைகளையும் தமதாக்கிக் கொள்ள ஆங்கிலேயரால் முடியுமாயிருந்தது. 1796 பெப்பிரவரி மாதமாகும்போது ஒல்லாந்தர் வசமிருந்த சகல கரையோரப் பிரதேசங்களும் ஆங்கிலக் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் வசமாயின.

1796 ஆம் ஆண்டிலிருந்து 1815 இல் கண்டியைக் கைப்பற்றிக் கொள்ளும்வரை கரையோரப் பிரதேசங்களில் நிலவிய பிரித்தானியரின் ஆட்சியின் முக்கிய சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- ❖ 1796 -1798 வரை கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் நிருவாகம்
- ❖ 1798 - 1802 வரை இரட்டை ஆட்சி
- ❖ 1802 தொடக்கம் முடிக்குரிய குடியேற்ற நாட்டு ஆட்சி

இந்நாட்டின் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொள்வதற்கான முழுச் செலவையும் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியே செய்தது. அந்த யுத்தச் செலவை ஈட்டிக் கொள்வதற்காகவும் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காகவும் கம்பனி அவசர நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதற்கமையக் கரையோரப் பிரதேசங்களில் இருந்து கூடியளவு வரியை வசூலித்துக் கொள்வதற்குக் கம்பனியின் உத்தியோகத்தர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அவ்வரியை வசூலிப்பதற்குச் சென்னையில் இருந்து வரவழைக்கப்பட்ட அவுமில்தார்கள் நியமிக்கப்பட்டனர். கம்பனியால் விதிக்கப்பட்ட வரிச்சுமையால் பாதிக்கப்பட்ட மக்கள் 1797 இல் ஆட்சியாளர்களுக்கு எதிராகப் பெரும் கலகம் ஒன்றை மேற்கொண்டனர்.

### 1797 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கரையோரக் கலகம்

1797 இல் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் ஆட்சிக்கு எதிராகக் கரையோரப் பிரதேசங்களில் ஏற்பட்ட கலகத்திற்கான காரணங்கள் வருமாறு :

- ❖ ஆங்கிலக் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி புதிய வரிகள் பலவற்றையும் விதித்தமை. (உ-ம் : தென்னை, உப்பு, மீன், புகையிலை)
- ❖ வரிவசூலிக்கும் உள்நாட்டு உத்தியோகத்தர்களை நீக்கிவிட்டு, சென்னையில் இருந்து அழைத்து வரப்பட்ட அவுமில்தார்கள் என்னும் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தியமையால் மக்களிடம் இருந்து எழுந்த எதிர்ப்பு.
- ❖ வழக்கமாக இருந்து வந்த பொருள்கள் மூலம் வரி செலுத்துவதற்குப் பதிலாக, பணத்தின் மூலம் வரி செலுத்த வேண்டியிருந்தமையால், பணப்புழக்கத்திற்கு போதியளவில் பழக்கப்படாத இந்நாட்டு மக்கள் பெரும் கஷ்டத்தை எதிர் கொண்டமை.

பெருஞ்சிரமங்களுக்கு மத்தியில் கிளர்ச்சியை ஆங்கிலேயர் அடக்கினர். பின்னர் கிளர்ச்சிக்கான காரணங்களை ஆராய்ந்து பார்ப்பதற்கு கேர்ணல் மியுரனின் தலைமையில் விசாரணைக்குழு ஒன்றை பிரித்தானிய அரசாங்கம் நியமித்தது. அது **''மியுரன் ஆணைக் குழு''** எனப்பட்டது. கரையோரப் பிரதேச மக்களின் வாழ்க்கையை வழமைக்குக் கொண்டு வருவதற்காக அக்குழுவால் பல ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

அதற்கமைய வியாபாரத்திற்குப் பழக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களை நிருவாகத்தில் ஈடுபடுத்தியமையால் இந்நிலை ஏற்பட்டதை விளங்கிக் கொள்ளக்கூடியதாய் இருந்தது. ஆகையால் வர்த்தக, நிருவாக நடவடிக்கைகள் என்பன வெவ்வேறு உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அக்குழு பரிந்துரை செய்தது.

## இரட்டை ஆட்சி (1798 - 1802)

கரையோரத்தில் ஆட்சியை மேற்கொள்ளும்போது, பொருளாதார நடவடிக்கைகள் ஆங்கிலக் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியாலும் அரசியல் நடவடிக்கைகள் பிரித்தானிய அரசாங்கத்தாலும் மேற்கொள்ளப்பட்டமையால் இது இரட்டை ஆட்சி எனப்பட்டது. இதற்கமைய வர்த்தகக் கம்பனிக்குத் தொடர்ந்து வர்த்தக, வரி வசூலிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள இடமளிக்கப்பட்டது. நிருவாக, பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 1798 இல் பிரட்றிக் நோர்த் ஆளுநராக நியமனம் செய்யப்பட்டார்.

இரட்டை ஆட்சி நிலவிய 1798 - 1802 காலகட்டத்தில் ஆளுநரின் உத்தியோகத்தர்கள், வர்த்தகக் கம்பனியின் உத்தியோகத்தர்கள் என இரு சாரார் உருவாகினர். வர்த்தக கம்பெனியின் உத்தியோகத்தர்களிடமிருந்து ஆளுநருக்குத் தேவையான ஒத்துழைப்புக் கிட்டவில்லை. இதனால் நிருவாகம் பலவீனமுற்று இரட்டை ஆட்சி முறை தோல்வியுற்றது.

## கரையோரப் பிரதேசங்கள் முடிக்குரிய குடியேற்ற நாடாதல்

இரட்டை ஆட்சி தோல்வியுற்றமையால் இந்நாட்டின் ஆட்சி முழுமையாகப் பிரித்தானிய அரசின்கீழ் கொண்டு வரப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது. அதற்கமைய 1802 இல் வர்த்தகக் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரத்தை முடிவுக்குக் கொண்டு வந்து கரையோரப் பிரதேசங்கள் முழுமையாகப் பிரித்தானிய அரசாங்கத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. பிரித்தானிய அரசின் தலைவர் மன்னரானபடியால் அரசரின் குறியீடான முடியின் கீழ்ப்பட்ட குடியேற்ற நாடாக பொருள் கொள்ளப்படுகிறது.

## பிரித்தானியர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுதல்

கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் நோக்குடன் பிரித்தானியர் 1803, 1815 ஆம் ஆண்டுகளில் இருமுறை ஆக்கிரமிப்புகளை மேற்கொண்டனர். 1803 இல் கண்டி மன்னனுக்கும் அதன் குடிமக்களுக்கும் இடையே நல்லுறவு நிலவியமையால், அவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு முழுமையாகத் தோல்வியுற்றது. என்றாலும் 1815 ஆம் ஆண்டளவில் கண்டி மன்னருக்கு மக்களின் ஒத்துழைப்புக் கிட்டாமையால் பிரித்தானியர் தமது நோக்கை அடைந்துகொள்ளக்கூடியதாயிருந்தது.

### 1803 ஆம் ஆண்டில் கண்டி இராச்சியம் மீதான ஆக்கிரமிப்பு

ஆங்கிலேயர் கரையோரப் பிரதேசங்களை ஆட்சிபுரிந்து கொண்டிருக்கையில், கண்டிப் பிரதேசத்தில் சுதந்திரமான தனி அரசொன்று இருப்பதை அவர்கள் விரும்பவில்லை. இதனால் ஆளுநர் பிரட்ரிக் நோர்த் கண்டியில் தமக்கு இணக்கமான அரசு ஒன்றை உருவாக்கிக் கொள்வதற்கோ அல்லது அதனைக் கைப்பற்றிக் கொள்வதற்கோ நாட்டம் கொண்டார். அதற்கான ஏனைய காரணங்கள் வருமாறு :

❖ ஆங்கிலேயரின் ஆட்சிப் பிரதேசங்களில் வாழும் மக்களும் கண்டி மன்னரையே தமது ஆட்சியாளராகக் கருதியமை.

❖ கரையோரத்தில் இடம்பெறும் கிளர்ச்சிகளுக்கு கண்டி இராச்சிய மன்னன் உதவுவதாக ஏற்பட்ட சந்தேகம்.

❖ கொழும்பு - திருகோணமலை தரைமார்க்கத் தொடர்புகளுக்குக் கண்டி இராச்சியம் தடையாக இருந்தமை.

❖ பிரித்தானியருக்கு எதிராக மன்னன் பிரான்சியரின் உதவியைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற அச்சம்.

1798 ஆம் ஆண்டில் இராஜாதி இராஜசிங்க மன்னனின் மரணத்தை அடுத்து, கண்ணு சாமி இளவரசன், ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் என்ற பெயருடன் மன்னனானபோது, முத்துசாமி எனும் இன்னொரு இளவரசனும் அரசுக்கு உரித்தாளியாக இருந்து வந்தான். இவ்விளவரசன் தப்பி ஓடி ஆங்கிலேயரிடம் தஞ்சமடைந்தான். எதிர்கால நோக்குடன் ஆங்கிலேயர் இவனுக்குத் தஞ்சமளித்தனர்.

1800 ஆம் ஆண்டில் தளபதி மெக்டோவல் தலைமையில் கண்டிக்குப் படை ஒன்றை அனுப்பி, ஆங்கிலேயருக்குச் சாதகமான நிபந்தனைகளுக்கு இராஜசிங்க மன்னனை இணங்கச் செய்வதற்கு ஆளுநர் நோர்த் முயற்சித்தாலும் அந்நிபந்தனைகளுக்கு மன்னன் இணங்காமையால் அப்பயணம் தோல்வியுற்றது. அதன் பின் ஆளுநர் நோர்த் 1803 இல் கண்டியை ஆக்கிரமிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். மெக்டோவலின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாக்கிரமிப்பின்போது கொழும்பிலிருந்தும் காலியிலிருந்தும் இரு இராணுவ படை அணிகளைக் கண்டிக்கு அனுப்புவதற்கு நோர்த் நடவடிக்கைகளை மேற்கொண்டார். இப்படை 1803 பெப்பிரவரி மாதத்தில் கண்டி நகரினுள் பிரவேசித்தது.

கண்டி நகரைக் கைப்பற்றிக் கொண்ட ஆங்கிலேயர் முத்துசாமி இளவரசனை மன்னனாகப் பிரகடப்படுத்தினர். ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன் தலைமறை வாயிருந்தமையால், ஆங்கிலேயருக்குச் சார்பான ஒருவனை மன்னனாக ஏற்றுக்கொள்ள கண்டி மக்கள் முன்வரவில்லை.

ஆங்கிலேயரைத் தாக்குவதற்குத் தயாரான மலைநாட்டினர், மழைக்காலம் தொடங்கும் வரை தந்திரமாக யுத்தத்தைத் தாமதப்படுத்தினர். மழைக்காலம் தொடங்கியவுடன் யுத்தத்தை ஆரம்பித்த கண்டியர், கண்டி - கொழும்பு நகரங்களுக்கிடையேயான பிரதான பாதைகள் அனைத்தையும் தடைசெய்து, ஆங்கிலேயப் படையினருக்குத் தேவையான உணவு, ஆயுத விநியோகங்களைத் தடுத்துவிட்டனர். இதனால் நகரத்தினுள் முடக்கப்பட்ட ஆங்கிலேயப் படை உணவுத் தட்டுப்பாட்டாலும் மலேரியா போன்ற நோய்களாலும் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்க நேரிட்டது. தாம் மரணத்தை அண்டிவிட்டதாகக் கருதிய ஆங்கிலேயப் படை பின்வாங்குவதற்கு முயற்சித்தாலும் கண்டியர் கண்டிக்குள் பிரவேசிக்கும் அனைத்துப் பாதைகளையும் தடைப்படுத்தியிருந்தமையால் பின்வாங்கிச் செல்வதற்கு இயலாமற் போய்விட்டது. இச்சந்தர்ப்பத்தில் கண்டியின் மன்னனாக ஆங்கிலேயரால் நியமிக்கப்பட்டிருந்த முத்துசாமி இளவரசனைத் தன்னிடம் ஒப்படைக்கும்படி ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன் கட்டளையிட்டான். மேஜர் டேவியினால் அக்கட்டளை நிறைவேற்றப்பட்டாலும் முத்துசாமி இளவரசன் உட்பட, ஆங்கிலேயப் படையைக் கண்டிய மக்கள் முழுமையாக அழித்தொழித்தனர். இதன்படி கண்டியைக் கைப்பற்றிக் கொள்வதற்கு ஆங்கிலேயர் மேற்கொண்ட முதலாவது முயற்சி படுதோல்வியில் முடிவடைந்தது.

**ஆளுநர் தோமஸ் மெயிட்லண்ட்**



ஆளுநர் பிரட்றிக்நோர்த்தின் பதவிக் காலம் முற்றுப் பெற்ற பின்னர் 1805 ஆம் ஆண்டில் தோமஸ் மெயிட்லண்ட் இந்நாட்டின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். நோர்த் ஆளுநரை விட தந்திரசாலியான மெயிட்லண்ட், கண்டி மன்னனுடனும் மக்களுடனும் நல்லுறவு கொள்ளும்வரை அவ்விராச்சியத்தை ஆக்கிரமிப்பதில் பிரித்தானியர் வெற்றிபெற முடியாது என்பதை உணர்ந்திருந்தார். இதனால் அவன் கண்டி இராச்சியத்துடன் தந்திரமான உறவை மேற்கொண்டார்.

கண்டி இராச்சியத்தில் அப்போது காணப்பட்ட உள்நாட்டு முரண்பாடுகளை வளரச் செய்வதும் அவ்விராச்சியம் பற்றிய அனைத்துத் தகவல்களையும் இரகசியமாகத் திரட்டிக் கொள்வதும் மெயிட்லண்டின் தந்திரமான செயற்பாடுகளாய் அமைந்தன. இக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக ஜோன் டொயிலி எனும் உத்தியோகத்தரை அவர் நியமித்துக் கொண்டார்.

### ஜோன் டொயிலி

1774 ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் பிறந்த ஜோன் டொயிலி, தமது கல்வி நடவடிக்கைகளின் பின்னர் அரச உத்தியோகத்தனாக இலங்கைக்கு வந்தான். அரச நிருவாக (சிவில்) சேவை உத்தியோகத்தனாகக் கடமையாற்றும்போது, சிங்கள மொழியைக் கற்றுக்கொள்வதிலும் அவன் ஆர்வம் செலுத்தினான். செயற்றிறன்மிக்க இளம் உத்தியோகத்தராக ஜோன் டொயிலி குறுகிய காலத்தினுள் சிங்கள மொழியைக் கற்று, இந்நாட்டு மக்களின் பழக்கவழக்கங்களையும் தெரிந்துகொண்டு அரசாங்க மொழிபெயர்ப்பாளன் ஆகவும் செயற்பட்டான். டொயிலியின் திறன்களைப் புரிந்துக்கொண்ட ஆளுநர் மெயிட்லண்ட் கண்டி இராச்சியத்தின் உள்ளகத் தகவல்களைத் தெரிந்துகொள்வதற்கு அவனைப் பயன்படுத்திக் கொண்டார்.

கரையோர மக்களுடன் தொடர்புகளைக் கொண்டிருந்த கண்டி இராச்சிய அதிகாரிகளுடன் பழகத் தொடங்கிய டொயிலி, அவர்களூடாகக் கண்டியின் முக்கியமான பிரபுக்களுடன் தொடர்புகளை உருவாக்கிக் கொண்டான். இவ்வாறு பிலிமத்தலாவ, மீகஸ்தென்ன, எஹலபொல, மொல்லிகொட போன்ற தலைவர்களுடன் அவன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டான். இதற்கு மேலாக பல்வேறு வேடந்தரித்த உளவாளிகள் மூலமும் அவன் தகவல்களைப் பெற்றுக்கொண்டான். டொயிலியின் இத்திறன்வாய்ந்த பணியினால் எந்தவொரு ஐரோப்பியருக்கும் வெளிக்கொணர்ந்துகொள்ள முடியாதுபோன கண்டியின் பாதுகாப்பு இரகசியங்களைக்கூடத் தெரிந்துகொள்வதற்கு ஆங்கிலேயரால் முடியுமாயிருந்தது. டொயிலிக்கும் மலைநாட்டுத் தலைவர்களுக்கும் இடையேயான தொடர்புகள் சம்பந்தப்பட்ட முக்கியத்துவம் மிக்க ஏராளமான தகவல்களை அவனுடைய தினக்குறிப்பேட்டில் இருந்து அறிந்துகொள்ளக்கூடியதாய் உள்ளது.

### கண்டி இராச்சியத்தினுள் காணப்பட்ட அதிகாரப் போட்டி

1803 ஆம் ஆண்டின் பின்னர் கண்டி இராச்சியத்தின் அரசியல் மிகவும் மோசமான நிலைக்குத் திரும்பிக்கொண்டிருந்தது. 1803 இல் பிரித்தானியர் மலைநாட்டை ஆக்கிரமித்துக்கொள்ள முற்பட்ட சந்தர்ப்பத்தில் அரசனுக்கும் மக்களுக்குமிடையே காணப்பட்ட நல்லுறவு 1815 ஆம் ஆண்டாகும்போது சீர்குலையத் தொடங்கியது.

ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னனின் ஆட்சிக் காலத்தில் கண்டி இராச்சியத்தினுள் உள்ளக அதிகாரப் போட்டி வளர்ச்சியுற்றமையால், அதுவரை நிலவிவந்த ஒற்றுமை வீழ்ச்சியுற அது காரணமானது. அவ்வதிகாரப் போட்டியைக் கீழ்வரும் தலைப்புக்கள் பலவற்றின் ஊடாக கலந்துரையாட முடியும்.

### அரசனுக்கும் பிரதானிகளுக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடுகள்

ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன் மலைநாட்டுப் பிரதானிகளின் அதிகாரத்தைப் பலவீனப்படுத்துவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளால் அரசனுக்கும் பிரபுக்களுக் கும் இடையே பிரச்சினைகள் ஏற்பட்டன. அவற்றுள் முக்கியத்துவம் பெறும் சந்தர்ப்பங்கள் வருமாறு :

- ❖ பிரபுக்கள் சிலருக்கு வழங்கப்பட்டிருந்த உத்தியோகப் பொறுப்புக்களை அரசன் தனது நாயக்கவம்ச உறவினர்களுக்கு வழங்கியமை.
- ❖ நாட்டு மக்களுக்குத் தீங்கிழைத்த பிரபுக்களுக்கு அரசன் தண்டனை வழங்கியமை.
- ❖ தன்னைப் பதவியில் அமர்த்துவதற்குப் பாடுபட்ட மகா அதிகாரம் பிலிமத்தலாவைக்கு மரண தண்டனை விதித்தமை.
- ❖ பிரபுக்களின் அதிகாரம் வளர்ச்சியுற்றிருந்த சில பிரதேசங்களை சிறிய நிருவாக அலகுகளாகப் பிரித்து, அதற்குப் புதிய உத்தியோகத்தர்களையும் பிரபுக்களையும் நியமித்தமை.
  (உதாரணமாக சபரகமுவ திசாவனியை இரண்டாகப் பிரித்தமை)
- ❖ பிரபுக்களிடையே பிரச்சினைகளை உருவாக்கும் வண்ணம் பதவிகளை வழங்கியமை.
  (உதாரணமாக பிலிமத்தலாவையின் மரணத்தின் பின்னர் அவனுடைய முதலமைச்சர் பதவிக்கு எஹலபொலவை நியமித்துவிட்டு, இரண்டாவது அமைச்சராக அவனது எதிரியான மொல்லிகொடையை நியமித்தமை)

### அரசனுக்கும் பௌத்த குருமாருக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடுகள்.

- ❖ பரணதல இளம் பிக்கு உட்பட பிக்குமார் பலருக்கும் இராசத் துரோகக் குற்றச் சாட்டின் பேரில் மரணதண்டனை விதித்தமை.
- ❖ தலதா மாளிகை அருகில் மேற்கொள்ளப்பட்ட நவீனமயப்படுத்தும் நடவடிக்கை களுக்குப் பிக்குமாரின் இணக்கத்தைப் பெற்றுக்கொள்ளாமை.
- ❖ போகம்பரை வாவியை விஸ்தரிக்கும் நடவடிக்கைகளின்போது போயமலு விஹாரையையும் நான்கு தேவாலயங்களையும் அகற்றுவதற்கு அரசன் எடுத்த தீர்மானத்தைப் பௌத்த விரோத நடவடிக்கையாகப் பிக்குமார் கருதியமை.

### பிரதானிகளிடையே ஏற்பட்ட முரண்பாடுகள்

- ❖ மொல்லிகொடைக்கும் எஹலைபொலைக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சினையால் கண்டி இராச்சியத்தின் அரசியல் ஒருமைப்பாடு பலவீனமடைந்தமை.
- ❖ மலைநாட்டு நிருவாகப் பிரிவுகளின் பிரதானிகள் ஒருவருக்கொருவர் எதிராகச் செயற்பட்டமையால் அரசனுக்கும் அவர்களுக்குமிடையே தொடர்புகள் சீர்குலைந்தமை.

### அரசனுக்கும் பொதுமக்களுக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடுகள்

கண்டி இராச்சிய பிரச்சினைகளின் உச்சக்கட்டமாகக் கருதக்கூடியது அரசனுக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான உறவில் ஏற்பட்ட விரிசலாகும். ஆரம்பத்தில் சிறந்த நற்குணங்களுடன் காணப்பட்ட மன்னன், பின்னர் மதுவிற்கு அடிமையாகி, மிகவும் கொடூரமாகச் செயற்படத் தொடங்கியமை, சபரகமுவ பிரதேசத்தில் ஏற்பட்ட கிளர்ச்சியை இலகுவாக அடக்கிய போதிலும் அதனுடன் சம்பந்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்பட்ட நூற்றுக்கு மேற்பட்டோருக்கு மரணதண்டனை விதித்தமை, தனக்கு எதிராகக் கிளர்ச்சி செய்த எஹலபொலயைக் கைதுசெய்ய முடியாமற்போகவே, அரசன் அவனது மனைவி, மக்களைக் கைதுசெய்து கொடூரமான முறையில் மரணதண்டனைக்கு உட்படுத்தியமை என்பன பொதுமக்களின் வெறுப்பிற்குக் காரணங்களாக அமைந்தன. கண்டி நகருக்கு அரசகரும சேவைக்கு வரும் சபரகமுவ, நான்கு கோரளை மக்களுக்குத் தலைநகரில் தங்குவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இது அப்பிரதேச மக்களுக்குப் பெரும் இன்னல்களைக் கொடுத்தது. கண்டிப் பிரதானிகள் மீதும் பௌத்த குருமார் மீதும் கண்டி மக்களுக்குப் பேரபிமானம் இருந்து வந்தது. மன்னன் பிக்குகளைக் கொன்றதும் பிரதானிகளைச் சந்தேகமுற்றதும் பொதுமக்களுடனான அரசனின் தொடர்புகள் அற்றுப் போவதற்குக் காரணமாயின.



உரு 2.4 1815 ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னனைக் கைதுசெய்தல்



உரு 2.5 ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னனின் மனைவியான அரசி ரங்கம்மா


1815 ஆம் ஆண்டாகும்போது கண்டி இராச்சியத்தில் ஏற்பட்டிருந்த குழப்பமான நிலையைத் தமக்குச் சார்பாகப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய நல்லதொரு சந்தர்ப்பமாக ஆளுநர் றொபட் பிரௌன்றிக் கருதினான்.

ஜோன் டொயிலியின் புத்திசாலித்தனமான உளவுத் தகவல்களாலும் ஆங்கிலேயரிடம் தஞ்சமடைந்திருந்த எஹலபொலவின் ஆலோசனைகளாலும் கண்டி இராச்சியத்தை கைப்பற்றுவதற்கான வேலைத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. கண்டி மக்கள் அரசன்மீது அதிருப்தியுற்றிருந்ததால், பொதுமக்களின் பாதுகாப்பிற்காகவே ஆங்கிலப் படை கண்டிக்கு வருவதாக அறிவித்துவிட்டு, தனது படையை அங்கு அனுப்புவதற்கு பிரௌன்றிக் தந்திரமான முறையில் செயற்பட்டான்.

கொழும்பு, காலி, நீர்கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு என்னும் இடங்களில் இருந்து எட்டு ஆங்கிலப் படையணிகள் கண்டியை நோக்கிப் புறப்பட்டன. ஆங்கிலப் படை எவ்வித இடையூறுகளும் இன்றி கண்டியினுள் பிரவேசித்தது. முன்பு தன்னுடைய பாதுகாவலர்களாக இருந்த பொதுமக்களும் பிரபுக்களும் இப்போது தன்னைச் சுற்றி இல்லை என்பதைத் தெரிந்து கொண்ட மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் மனைவியர் இருவருடனும் மெதமஹநுவரைக்குத் தப்பிச் சென்றான். அங்கு போமுரே என்னும் இடத்தில் மறைந்திருந்த மன்னனையும் மனைவியர் இருவரையும் கண்டியைச் சேர்ந்த ஒரு குழுவினரே கைதுசெய்தனர். பின்னர் டொயிலியின் பாதுகாப்பின் கீழ் அவர்கள் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டு 1816 இல் இந்தியாவின் வேலூருக்கு நாடுகடத்தப்பட்டனர். அங்கு சிறை வைக்கப்பட்டிருந்தபோது வயிற்றில் ஏற்பட்ட ஒரு நோயால் மன்னன் மரணமுற்றான். ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன் கைதுசெய்யப்பட்டதுடன் போர்த்துக்கேயராலும் ஒல்லாந்தராலும் கண்டிமீது அடையமுடியாதுபோன வெற்றியை ஆங்கிலேயரால் அடைந்துகொள்ள


முடியுமாயிருந்ததது. ஆங்கிலேயரின் தந்திரமான நடத்தையாலும் கண்டியில் நிலவிய உள்ளக அதிகாரப் போட்டிகளாலுமே இது ஆங்கிலேயருக்குச் சாத்தியமானது.

**கண்டி ஒப்பந்தம் (உடன்படிக்கை) கைச்சாத்திடப்படல்**



உரு 2.6 கண்டி ஒப்பந்தம் கைச்சாத்திடப்படல்.

ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன் ஆங்கிலேயரால் கைதுசெய்யப்பட்டதற்குப் பிரபுக்களின் ஒத்துழைப்பு அவர்களுக்குக் கிடைத்ததே முக்கிய காரணமாகும். இதனால் அவர்களுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்வதன் மூலம் தாம் பெற்ற வெற்றியை மேலும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். 1815 மார்ச் 2 ஆந் திகதி கண்டி அரச சபையில் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னர், ஆங்கிலேயப் படைவீரன் ஒருவன் சிங்கக் கொடியைக் கீழிறக்கி, ஆங்கிலேயரின் கொடியை ஏற்றுவதைக் கண்ட வாரியபொல ஸ்ரீ சுமங்கல தேரர், துணிவுடன் முன்வந்து, ''ஒப்பந்தம் கைச்சாத்தாக முன்னர் ஆங்கிலேயருக்கு இந்நாட்டின்மீது உரிமை இல்லை'' என்று கூறிக்கொண்டு ஆங்கிலேயரின் கொடியை இறக்கிவிட்டு, சிங்கக் கொடியை மீண்டும் ஏற்றியதாகக் கூறப்படுகின்றது. மார்ச் 2 ஆந் திகதி கையொப்பம் இடப்பட்ட ஒப்பந்தத்தில் பிரித்தானியாவின் மூன்றாம் ஜோர்ஜ் மன்னனுக்குப் பதிலாக ஆளுநர் றொபட் பிரௌன்றிக்கும் கண்டியினர் சார்பாகப் பிரதானிகளும் கையொப்பமிட்டனர். அது கண்டி ஒப்பந்தம் எனப்படுகின்றது. பிரதானிகளுள் சிலர் மார்ச் 10 ஆந் திகதி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதாக டொயிலியின் தினக்குறிப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வொப்பந்தம் 12 உறுப்புரைகளைக் கொண்டிருந்தது. அதில் சில முக்கிய உறுப்புரைகள் வருமாறு :



உரு 2.7 கண்டிப் பிரபுக்கள் கண்டிய ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டுள்ள விதம்

- ❖ 2 ஆம் உறுப்புரையில் ஸ்ரீவிக்கிரம இராஜ சிங்க மன்னன் அரியணையிலிருந்து அகற்றப்பட்டதாகவும் அவனுடைய அனைத்து உறவினர்களும் கண்டி அரியணை மீதான சகல உரிமை களிலிருந்தும் நீக்கப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

- ❖ 4 ஆம் உறுப்புரையில் கண்டியின் பாரம்பரிய உத்தியோகத்தர்களான மொஹட்டால, கோரளை, விதானை உட்பட பிரபுக்களிடம் இருந்துவந்த பதவிகளும் உரிமைகளும் பாதுகாக்கப் படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

- ❖ 5 ஆம் உறுப்புரையில் நாட்டு மக்கள் பின்பற்றுகின்ற பௌத்த மதமும் சமய குருமார்களும் தூபிகளும் விஹா ரைகளும் பாதுகாக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

- ❖ 6 ஆம் 7 ஆம் உறுப்புரையில் அங்க வீனப்படுத்தும் பழைய தண்டனை முறைகளை ஒழிப்பதாகவும் மரண தண்டனை விதித்தல் ஆளுநரின் உத்த ரவின் பேரில் இடம்பெற வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன.



உரு 2.8 கண்டி அரச சபை (மகுல் மடுவ)

**பயிற்சி 1**

''பிரித்தானியர்கள் இலங்கையை கைப்பற்றுதல்'' எனும் தலைப்பில் பத்திரிகைக்குக் கட்டுரை ஒன்று எழுதுக.

## 1818 சுதந்திரப் போர்

1815 இல் கண்டி இராச்சியம் பிரித்தானியர் வசமானதைத் தொடர்ந்து அதுவரை கண்டிய மக்கள் பழக்கப்பட்டிருந்த நிருவாக முறைகளில் சிற்சில மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. மரபு ரீதியான நிருவாகத்தின்கீழ் கண்டி மக்கள் தமது கஷ்ட நஷ்டங்களை முன்வைத்து நிவாரணம் பெற்றுக் கொள்வதற்கு மன்னன் ஒருவன் கண்டியில் இருந்தான். இராச்சியம் கைப்பற்றப்பட்ட பின்னர் பிரித்தானிய மன்னனே கண்டியினதும் ஆட்சியாளனானான். அவன் கண்டி மக்கள் ஒருபோதுமே கண்டிராத, இந்நாட்டில் வாழாத ஒருவனாவான். இதனால் தாம் அநாதரவானவர்கள் எனும் உணர்வு கண்டி மக்களிடையே ஏற்பட்டது.

கண்டி மக்கள் எப்போதுமே கண்டிராதவாறு பிரித்தானியப் படை வீரர் நகரெங்கும் நடமாடத் தொடங்கியிருந்தனர். அவர்களுடைய மொழி, பழக்கவழக்கங்கள், பண்பாடுகள் மக்களுக்குப் பழக்கமான ஒன்றாகக் காணப்படவில்லை. புதிய ஆட்சியின் கீழ் பிரபுக்களின் நிலையும் வீழ்ச்சியடைந்தது. கண்டிப் பிரசைகள், அவர்களுடைய சுதேச உத்தியோகத்தர்களுக்கு மரியாதை செலுத்தினராயினும் ஆங்கிலப் படை வீரர்களிடமிருந்து அத்தகைய மரியாதை அவர்களுக்குக் கிட்டவில்லை.

ஆங்கிலேயரின் வரிக்கொள்கையினால் பிரபுக்களின் மரபு ரீதியான வருமான வழிகளும் குறைந்து சென்றன. அந்நியராட்சியால் சுதேச சமய, கலாசாரங்களும் பாதிப்புறும் என்று கண்டியரிடையே ஓர் உணர்வு ஏற்பட்டது. இவ்வாறான காரணங்களால் இழந்த சுதந்திரத்தை மீளவும் பெற்றுக்கொள்வதற்கான போராட்டம் ஒன்றை நடத்துவதற்குத் துணிந்தனர்.

### 1818 போராட்டத்திற்கு வழிவகுத்த காரணிகள்.

- அரசன் ஒருவன் இல்லாமற் போனமையால் மக்களிடையே ஏற்பட்ட மனச் சஞ்சலம்.
- பிரித்தானியராட்சியின்கீழ் பௌத்த மதம் அழிவடைந்துவிடும் எனும் அச்சம்.
- தேசியப் பழக்கவழக்கங்களையும் சம்பிரதாயங்களையும் மதிக்காது பிரித் தானியரால் மேற்கொள்ளப்பட்ட நிருவாகத்தாலும் சட்டதிட்டங்களாலும் மக்களது வாழ்க்கை குழப்பமுற்றமை.

- ❖ பிரதானிகளின் அதிகாரங்களும் சலுகைகளும் வருமான வழிகளும் பாதிப்புற்றமை.
- ❖ இப்போராட்டத்திற்குக் கிட்டிய காரணியாக சிங்களவரைப் பெரும்பான்மையாகக் கொண்ட வெல்லஸ்ஸப் பிரதேச மடிகே முஹாந்திரம் பதவிக்கு ஹஜ்ஜி மரிக்கார் எனும் முஸ்லிம் ஒருவர் நியமிக்கப்பட்டதற்குச் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்ட எதிர்ப்பைக் குறிப்பிடலாம்.

## போராட்டத்தின் ஆரம்பமும் பரவலும்

ஆங்கிலேயர் ஆட்சிமீது அதிருப்தியுடன் இருந்த கண்டி மக்களிடையே, கண்டி மன்னனாகத் தோன்றிய துரைசாமி என்பவன், வெல்லஸ்ஸப் பிரதேசத்தில் இருந்து கொண்டு மக்களை அணிதிரட்டத் தொடங்கினான். இதை அறிந்த ஊவாவின் அரசாங்க அதிபர் துரைசாமியைக் கைதுசெய்வதற்காக ஹஜ்ஜி மரிக்கார் உட்பட ஒரு குழுவினரை வெல்லஸ்ஸவிற்கு அனுப்பினான். அப்போது ஹஜ்ஜி மரிக்கார் போராளிகளால் கொலை செய்யப்பட்டார். துரைசாமியைக் கைதுசெய்வதற்கு இன்னொரு முறை பதுளையின் உதவி அரச அதிபரான வில்சனும் லெப்டினன் நியுமனும் வெல்லஸவிற்குச் சென்றபோது, போராளிகளால் வில்சனும் கொலை செய்யப்பட்டான். இங்கு ஏற்பட்ட மோதலால் ஊவா - வெல்லஸ்ஸ போராட்டத்தை இலகுவானதாகக் கருதமுடியாது என்பதை ஆங்கிலேயர் விளங்கிக்கொண்டனர்.

போராட்டம் தீவிரமடைவதைக் கண்ணுற்ற ஆங்கிலேயர், ஊவாப் பிரதேசத்திற்குப் பொறுப்பாயிருந்த மொனரவில கெப்பட்டிபொலவை அதனை அடக்குவதற்கு அனுப்பி வைத்தனர். போராட்டத்திற்கு உதவும்படி வெல்லஸ்ஸ மக்கள் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அவன், ஆங்கிலேயருடைய ஆயுதங்களை அவர்களிடமே ஒப்படைத்துவிட்டு, போராட்டத்தில் கலந்துகொண்டது மட்டுமன்றி, அதற்குத் தலைமையையும் தாங்கினான். இதிலிருந்து கெப்பட்டிபொல சுதந்திரப் போராட்டத்தின் முன்னணித் தலைவனானான்.

வெல்லஸ்ஸ பிரதேசத்தில் தோன்றிய போராட்டம் மிகவும் குறுகிய காலத்தினுள் தும்பறை, ஹேவாஹெட்ட, ஹாரிஸ் பத்துவ, மாத்தளை, நுவரகலாவிய, ஏழு கோரளை, சபரகமுவ வரை பரவிச் சென்றது.

## சுதந்திரப் போராட்டத் தலைவர்களுள் சிலர்

- கெப்பட்டிபொல நிலமே
- மடுகல்லே திஸாவை
- கிவுலேகெதர மொஹட்டால
- பிலிமத்தலாவ இரண்டாவது பிரதானி
- பூட்டாவே ரட்டேரால
- கொஹூ கும்புரேரால
- உடகம்பஹா நிலமே

கெப்பட்டிபொல நிலமே ஊவா - வெல்லஸ்ஸ பிரதேசத்திற்கும் மடுகல்ல திஸாவை, உட கம்பஹா நிலமே ஆகியோர் தும்பரை, தும்பனைப் பிரதேசங்களுக்கும் பிலிமதலாவ ஏழு கோரளைப் பிரதேசத்திற்கும் தலைமை தாங்கிப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றனர்.



உரு 2.9 கெப்பட்டிபொல நிலமே

கண்டிப் படையினரிடம் காணப் பட்ட கெரில்லா போராட்ட முறை யால் பிரித்தானியருக்குப் பெருஞ் சேதம் ஏற்பட்டது. புனித தந்ததாது தலதா மாளிகையிலிருந்து எடுத்து வரப்பட்டுப் போராளிகள் வசமா னமையால் சிங்களப் படைகள் மேலும் மனத்தைரியம் அடைந்தன. 1818 மே மாதமளவில் கண்டியின் ஆட்சி, பிரித்தானியரிடமிருந்து பறிபோவதற்குக் கிட்டியதொரு நிலைமை ஏற்பட்டதால், ஆங்கிலே யர் தமது முழுச்சக்தியையும் பிரயோ கித்துப் போராட்டத்தை அடக்கு வதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டனர்.

### போராட்டம் தோல்வியுறல்

கண்டியின் ஆட்சியை இழந்து விடுவோமோ என அஞ்சிய பிரித்தானியர் போராட்டத்தை அடக்குவதற்கு மார்ஷல் லோ (martial law) எனும் இராணுவச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தினர். அத்தோடு 'பாழ்நிலக் கொள்கை' யைக் கையாண்டு பொதுமக்களின் வீடுகள், பயிர், உணவுப் பொருள்கள் என்பவற்றிற்குத் தீயிட்டு அழித்தொழித்து போராட்டத்தை முடக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதனால் போராளிகள் பெரும் இடர்பாடுகளுக்கு உள்ளானதோடு சிறிது காலம் செல்வதற்கிடையில் போராட்டம் தோல்வியை நோக்கி நகரத் தொடங்கியது.

### போராட்டம் தோல்வியுற்றமைக்கான காரணங்கள்

- ❖ போராட்டம் முறையாகத் திட்டமிடப்படாமை.
- ❖ ஆங்கிலேயரால் மேற்கொள்ளப்பட்ட கடுமையான அடக்குமுறைக்கு போராளிகளால் முகங்கொடுக்க முடியாமை.
- ❖ போராட்டத் தலைவர்களிடையே காணப்பட்ட தனிப்பட்ட மனத்தாங்கல்கள்.

- ஆங்கிலேயரின் ஆயுத பலத்திற்கு முகங்கொடுக்க போராளிகளால் இயலாமற் போனமை.
- அரசனாக முன்வந்த துரைசாமி போலியானவன் எனத் தெரியவந்ததால் போராளிகள் அதைரியமடைந்தமை.

### போராட்டத்தின் விளைவுகள்

- போராட்டத்திற்குத் தலைமை தாங்கிய கெப்பட்டிபொல, மடுகல்ல எனும் தலைவர்கள் இராணுவ நீதிமன்றத்தால் குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்பட்டு சிரச்சேதம் செய்யப்பட்டனர்.
- எஹலபொல உள்ளிட்ட இன்னொரு பிரிவினர் மொரீசியஸ் தீவுக்கு நாடு கடத்தப்பட்டனர்.
- 1815 ஆம் ஆண்டு கண்டி ஒப்பந்தம் கைவிடப்பட்டு 1818 கண்டிப் பிரகடனம் மூலம் ஆங்கிலேயர் அதிகாரம் உறுதிசெய்யப்பட்டது.
- கண்டிப் பிரதானிகளின் அதிகாரங்களும் சலுகைகளும் நீக்கப்பட்டு அவை பிரித்தானிய அதிகாரிகள் வசம் ஒப்படைக்கப்பட்டன.

### 1848 சுதந்திரப் போராட்டம்

பிரித்தானியர் ஆட்சியால் துன்புற்ற கண்டி மக்கள் தமக்கென அரசன் ஒருவனை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் இரண்டாவது போராட்டத்தை 1848 ஆம் ஆண்டில் ஆரம்பித்தனர். இது இரண்டாவது சுதந்திரப் போராட்டம் எனப்படுகின்றது. 1818 ஆம் ஆண்டுப் போராட்டம் கண்டியச் சிங்களப் பிரதானிகளின் தலைமையில் நடத்தப்பட்டாலும் இது பொதுமக்களிடையே இருந்து தோன்றிய தலைவர்களால் ஆரம்பிக்கப்பட்டமை வெளிப்படையான ஓரம்சமாகும்.

### 1848 போராட்டத்திற்கான காரணங்கள்

#### கோல்புறூக் அரசியல் சீர்திருத்தங்களின் செல்வாக்கு

1833 கோல்புறூக் சீர்திருத்தங்களால் பெருந்தோட்டச் செய்கை உருவானதோடு, அதற்காகக் காணிகளை விற்பதற்கான கொள்கையும் கையாளப்பட்டது. 1840 இல் பிறப்பிக்கப்பட்ட காணிச் சட்டப்படி தமது நில உரிமையை உறுதிப்படுத்த முடியாதோரின் காணிகளை அரசாங்கம் தமதுரிமையாக்கிக் கொண்டது. அதன் மூலம் பொதுமக்கள் தமது விவசாய நிலங்களையும் வாழ்விடங்களையும் பேரளவில் இழந்துவிட்டனர்.

பெருந்தோட்டச் செய்கையின்மீது பிரித்தானியர் கூடிய கவனம் செலுத்தியதால் கிராமிய விவசாயமும் மக்களின் வாழ்க்கை நிலைமையும் சீர்குலைந்தன.

- கிராமியப் பிரதேசங்களில் குளம், அணைக்கட்டுகள், கால்வாய்கள் என்பவற்றின் பராமரிப்பும் கிராமங்களில் சிறு பிரச்சினைகளைத் தீர்த்து வைத்த கிராம சபை களும் செயலிழந்தமையால் கிராமிய வாழ்க்கை முறை சீர்குலைந்தது.
- அரசிற்கும் பொதுமக்களுக்கும் இடையிலான தொடர்புகள் குறைந்து சென்ற மையால் மக்களின் தேவைகளை அறிந்துகொள்வதற்கு ஆட்சியாளர்களால் இயலாமற்போனது.
- பிரித்தானியர் ஆட்சியின்கீழ் பௌத்த சமயத்தைக் கவனியாது விட்டமையாலும் மதுபானச்சாலைகள் திறக்கப்பட்டமையாலும் சமூகத்தின் ஒழுக்க விழுமியங்கள் சீர்குலைந்தன.
- ஆளுநர் டொரிங்டனின் புதிய வரிக் கொள்கை : கோப்பி வர்த்தகத்தினால் அரசுக் குக் கிடைத்த வருமானம் குறைவடைந்ததால் போதியளவு பணத்தை ஈட்டிக் கொள்வதற்காக ஆளுநர் டொரிங்டனால் புதிய வரிகள் பலவும் விதிக்கப்பட்டன. இவ்வரி விதிப்பே கலவரத்திற்கான உடனடிக் காரணியாக அமைந்தது. அவ்வாறு விதிக்கப்பட்ட வரிகளாவன.

| | | |
|---|---|---|
| முத்திரை வரி | நாய் வரி | தோணி வரி |
| துப்பாக்கி வரி | வண்டி வரி | ஆள் வரி |
| கடை வரி | | |

### போராட்டம் ஆரம்பமாதல்

ஆளுநர் டொரிங்டனால் விதிக்கப்பட்ட புதிய வரி விதிப்புகளுக்கு எதிராக நாடெங்கும் பலத்த எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. துப்பாக்கி, நாய், ஆள் வரிகளுக்கு எதிராக மக்களிடையே பலத்த எதிர்ப்பு உருவானது. 1848 ஜுலை மாதம் தும்பரை பிரதேச ரட்டே மஹத்தயாவான, மடுகல்லையின் தலைமையில் கண்டியின் அரசாங்க அதிபரைச் சந்திப்பதற்குச் சென்ற வரி எதிர்ப்பாளரின் ஒரு பகுதியினரைக் கலைப்பதற்கு வந்த பொலிஸ் உத்தியோகத்தர் லொக்கு பண்டா துணுவில அவர்களை குதிரையில் இருந்து விழும்வரை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கினர். இவ்வாறு ஏற்பட்ட எதிர்ப்பு, பிரித்தானியர் ஆட்சிக்கு எதிரான போராட்டமாக மாற்றமுறுவதற்கு நீண்டகாலம் செல்லவில்லை. போராட்டத்தின் மத்திய நிலையமாக மாத்தளை திகழ்ந்தது. 1848 ஜுலை மாதமாகும்போது மாத்தளை, குருநாகல், நுவர கலாவிய, தமன்கடுவ, ஹாரியஸ்பத்துவ ஆகிய பிரதேசங்கள் போராளிகள் வசமாகி இருந்தன. போராளிகள் கண்டியைக் கைப்பற்றிக்கொள்ள முயற்சித்தாலும் அது சாத்தியமாக வில்லை.

## போராட்டத் தலைவர்களுள் சிலர்

- கொங்காலேகொட பண்டா அல்லது பேலியகொட டேவிட்
- புரன் அப்பு அல்லது பிரன்சிஸ்கோ
- டிங்கிரால

1848 ஜுலை மாதம் கொங்காலேகொட பண்டா, ஸ்ரீ விக்கிரம சர்வசித்தி என்ற பெயருடன் தம்புள்ளையில் முடிசூடிக்கொண்டான் எனவும் இதற்குப் பெருந்தொகையான மக்கள் சமுகமளித்ததாகவும் அக்காலத் தகவல்களிலிருந்து தெரியவந்துள்ளது.

## போராட்டம் தோல்வியுறல்

- அரசாங்கத்தின் புதிய வரிக்கொள்கைக்கு எதிராக மலை நாட்டிலும் தாழ்நிலப் பிரதேசங்களிலும் எதிர்ப்புக்கள் ஏற்பட்டாலும் 1848 இல் மலைநாட்டின் சில பிரதேசங்களிலேயே அது தீவிரமடைந்தது.
- ஆங்கிலேயர் போராட்டத்தின் ஆரம்பத்திலேயே இராணுவத்தைப் பயன்படுத்திக் கலவரம் பரவிச் செல்வதைத் தடுத்துக்கொண்டனர். இதனால் மாத்தளை, குருநாகல், கண்டி போன்ற சில பிரதேசங்களுக்கே அது வரையறுக்கப்பட்டிருந்தது.
- ஆளுநர் டொரிங்டன் மார்ஷல் லோ எனும் இராணுவச் சட்டத்தைப் பிறப்பித்து சில நாட்களுக்குள் போராட்டத்தை அடக்கி, தலைவர்களைக் கைதுசெய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டான்.
- கடஹபொல தேரர், புரன் அப்பு, டிங்கிரால ஆகியோர் இராணுவ நீதிமன்றத்தால் குற்றவாளிகளாகக் காணப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டனர். கொங்காலேகொட பண்டா கசையடியுடன் நாடுகடத்தப்பட்டான்.
- இவ்வாறு தலைவர்களைக் கைதுசெய்து அவர்கள் தண்டிக்கப்பட்டதோடு, பிரித்தானியருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது போராட்டமும் தோல்வியுடன் முற்றுப்பெற்றது.

## போராட்டத்தின் விளைவுகள்

- போராட்டத்தின் முடிவில் அதற்கான காரணங்களைக் கண்டறிவதற்காக பேலி என்பவரின் தலைமையில் விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது.
- குழுவினரின் சிபாரிசிற்கு அமைய ஆளுநர் டொரிங்டன், குடியேற்ற நாட்டுச் செயலாளர் எமர்ஸன் டெனன்ட் என்போர் பதவி நீக்கம் செய்யப்பட்டு இங்கிலாந்திற்குத் திருப்பி அழைத்துக் கொள்ளப்பட்டனர்.

- ❖ கடை வரி, நாய் வரி என்பவை நீக்கப்பட்டதோடு, முத்திரை வரி, துப்பாக்கி வரி, ஆள்வரி என்பவை மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டன.
- ❖ விவசாயத்தையும் நீர்ப்பாசன நடவடிக்கைகளையும் மேம்படுத்துவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டது.
- ❖ புனித தந்ததாதுவின் பொறுப்பு மீண்டும் ஒரு முறை பிரித்தானிய அரசாங்கத்தின் கீழே கொண்டுவரப்பட்டது.

**பயிற்சி 2**

கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

1. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனைச் சந்தித்த முதலாவது ஆங்கிலேயத் தூதுவர் யார்?
2. பிரித்தானியர் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொள்ளும்போது கண்டி இராச்சியத்தை ஆட்சிசெய்த நாயக்கவம்ச அரசர் யார்?
3. 1798 இல் இந்நாட்டை நிர்வகிக்க நியமிக்கப்பட்ட முதலாவது ஆங்கிலேய ஆளுநர் யார்?
4. மெயிட்லண்ட் ஆளுநருடன் சேர்ந்து கண்டி இராச்சியம் தொடர்பான தகவல்களைத் திரட்டிய ஆங்கிலேய உத்தியோகத்தர் யார்?
5. 1815 இல் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றிய ஆளுநர் யார்?
6. இலங்கை பிரித்தானியரின் ஆதிக்கத்திற்கு உட்படும்போது கண்டி இராச்சியத்தை ஆட்சிசெய்த மன்னன் யார்?
7. 1818 ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கியவர் யார்?
8. 1833 இல் இந்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட சீர்திருத்தத்தை முன் வைத்தவர் யார்?
9. 1848 - இரண்டாம் சுதந்திரப் போராட்டத்தின்போது இந்நாட்டின் ஆளுநராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தவர் யார்?
10. இரண்டாவது சுதந்திரப் போருக்குத் தலைமை தாங்கியவர் யார்?

## 2.2 பிரித்தானியர் காலப் பொருளாதார வளர்ச்சி

பிரித்தானியர் இந்நாட்டில் தமது ஆட்சியை நிலைநிறுத்திக்கொண்ட பின்னர் அதுவரை நிலவிய பொருளாதார முறையை வர்த்தகப் பொருளாதாரமாக மாற்றி அமைத்தனர். 1833 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்திய கோல்புறூக் சீர்திருத்தத்தின் மூலம் அவ்வகையான பொருளாதார முறை ஒன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். பிரித்தானியரால் அறிமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்தம் பொருளாதாரத் துறையில் மட்டுமன்றி சமூக விடயங்களிலும் முக்கியமான மாற்றங்களுக்கு வழிவகுத்தது.

### பிரித்தானியர் பெருந்தோட்டச் செய்கையை ஆரம்பிப்பதற்கு முன்னர் காணப்பட்ட பொருளாதார நிலை

பிரித்தானியர் இந்நாட்டிற்கு வரும்போது இராசரட்டை நாகரிகத்திலிருந்து விருத்தியுற்று வந்த கிராமிய விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறை ஒன்றே நிலவியது. கிராமிய சுயதேவைப் பூர்த்திப் பொருளாதார முறையென்று கருதத்தக்க அப்பொருளாதார முறையின்கீழ் கிராமிய மக்களுக்குத் தேவைப்பட்ட உணவு, பானங்கள் அங்கேயே உற்பத்தி செய்யப்பட்டன. அக்காலத்தில் கண்டியில் நிலவிய விவசாய முறையின்படி மேட்டுநிலப் பயிர்ச்செய்கையும் மந்தை வளர்ப்பும் விவசாயத்தின் பிரதான அங்கங்களாகக் காணப்பட்டன. தமது அன்றாடத் தேவைக்கானவற்றைத் தாமே உற்பத்திசெய்து கொண்டதோடு, வர்த்தகப் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை. விவசாயத்துடன் வியாபாரமும் கைத்தொழிலுடன் பல்வேறு சேவைகளை வழங்கும் செயற்பாடுகளும் கண்டியில் காணப்பட்டன. அவை பெருமளவிற்குச் சாதிகளை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டன. கண்டியில் காணப்பட்ட பொருளாதார முறையின்படி அரசாங்கத்திற்குத் தேவைப்பட்ட உழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கு இராசகாரிய முறை பயன்படுத்தப்பட்டது. நாட்டின் கரையோரப் பிரதேசங்கள் 16 ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து ஐரோப்பியரின் நிர்வாகத்தின்கீழ் வந்தன. கண்டியுடன் ஒப்பிடுகையில் தாழ்நாட்டுப் பிரதேசங்களில் பெருமளவுக்குப் பணப்புழக்கம் காணப்பட்டது. இதனால் ஐரோப்பியரின் செல்வாக்கால் தாழ்நாட்டு மக்கள் புதிய பொருளாதார மாற்றங்களுக்குப் பழக்கப்பட்டிருந்தமையைக் காணக்கூடியதாயிருந்தது.

**பயிற்சி 3**

பிரித்தானியர் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் இந்நாட்டில் நிலவிய பொருளாதார முறையைப் பற்றிய தகவல்களைத் திரட்டுக.

### பிரித்தானியர் பெருந்தோட்டச் செய்கையில் நாட்டம் செலுத்துதல்

தாம் கைப்பற்றிக் கொள்ளும் நாடுகளில் கிடைக்கும் வளங்களிலிருந்து உச்ச பயன்பாட்டைப் பெற்றுக் கூடிய இலாபத்தை ஈட்டிக்கொள்வது பிரித்தானியரின் குடியேற்றக் கொள்கையில் காணப்பட்ட துலக்கமான அம்சமாகும்.

1815 இல் கண்டி இராச்சியம் உட்பட முழு நாட்டினதும் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர், இந்நாட்டில் காணப்பட்ட மரபு முறையான விவசாயப் பொருளாதாரத் துறையினூடாகத் தாம் எதிர்பார்க்கும் நலன்களை அடைந்துகொள்ள முடியாது என்பதை ஆங்கிலேயர் விளங்கிக் கொண்டனர். அதற்கமைய தமது வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்காகப் பொருளாதாரச் சீர்திருத்தம் ஒன்றை மேற்கொண்டனர். அதன் விளைவாக வர்த்தகப் பயிர்ச்செய்கையில் கவனஞ் செலுத்தியதைக் காணக்கூடியதாயுள்ளது.

இந்நாட்டின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காகப் பொருளாதாரத் துறையில் ஏற்படுத்தப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் என்னவென்பதைக் கண்டறிவதற்காக 1829 இல் கோல்புறூக் ஆணைக் குழுவினர் இலங்கைக்கு வந்தனர். 1833 இலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட கோல்புறூக்கின் ஆலோசனைகளால் பெருந்தோட்டச் செய்கையின் வெற்றிக்குத் தேவையான பின்னணி இந்நாட்டில் ஏற்படுத்தப்பட்டது. பெருந்தோட்டச் செய்கையின் வளர்ச்சிக்குப் பங்களித்த கோல்புறூக்கின் ஆலோசனைகள் பலவும் கீழே தரப்பட்டுள்ளன. அந்த ஆலோசனைகள் மூலம் தனியார் துறையை ஊக்குவித்து பொருளாதாரத்தை வளர்ப்பதன் மூலம் நீண்ட காலகட்டத்தில் அரசாங்கத்தின் வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்குத் திட்டமிடப்பட்டது. அதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாவன :

- அரசாங்கக் காணிகளை விற்கும் கொள்கை ஒன்றைச் செயற்படுத்துதல்.
- உள்நாட்டு, வெளிநாட்டு தனியார் முதலீட்டாளர்களுக்குக் காணிகளை பணம் கொடுத்து வாங்குவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- தனியார் முதலீட்டாளரின் நோக்கங்களுக்குப் பொருத்தமான முறையில் கொள்கைகளை வகுத்தல்.

பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் 1820 - 1830 ஆம் ஆண்டு வரை இந்நாட்டிலிருந்து அவர்கள் எதிர்பார்த்த வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கு முடியாதிருந்தது. நாட்டில் அதுவரை கிடைத்து வந்த வருமானத்தைவிட நிருவாகச் செலவுகள் மிகவும் அதிகமாய் இருந்தன. ஆகையால் அரசாங்கத்தின் செலவுகளைக் குறைத்துக்கொள்வதற்காக கோல்புறூக் ஆணைக்குழுவால் மேல்வரும் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன :

- மலைநாட்டையும் தாழ்நாட்டையும் இணைத்து நிருவாகம் நடத்துதல்.
- நிருவாகச் செலவுகளைக் குறைத்துக் கொள்வதற்காக சில திணைக்களங்களை மூடுதலும் சிலவற்றை ஒன்றிணைத்தலும்.

❖ குடியியல் (சிவில்) சேவையாளர்களின் தொகையைக் குறைத்தலும் அவர்களின் சம்பளத்தைக் குறைத்தலும்.

மேலே குறிப்பிடப்பட்ட ஆலோசனைகளைச் செயற்படுத்துவதன் மூலம் அரசாங்கத்தின் செலவுகளைக் குறைத்துக்கொள்ள எதிர்பார்க்கப்பட்டது.

### அரசாங்கத்தின் காணிகளை விற்கும் கொள்கை

பெருந்தோட்டச் செய்கைக்குத் தேவையான காணிகளைப் பெற்றுக் கொள்வதற்காக 1840 இல் பிறப்பிக்கப்பட்ட காணிச் சட்டத்தின் மூலம் மலைநாட்டு விவசாயிகள் பரம்பரையாக அனுபவித்துவந்த சட்டரீதியான எழுத்தாவணங்கள் அற்ற காணிகளை அரசுடைமையாக்கிக் கொண்டது. அவ்வாறு சுவீகரிக்கப்பட்ட காணிகளை உள்நாட்டவர், வெளிநாட்டவர் எவராயினும் தேவையான அளவுக்கு வாங்கக்கூடிய முறையில் காணிகளை விற்கும் கொள்கையை நடைமுறைப்படுத்தினர்.

காணியை விற்கும் கொள்கையின்படி உள்நாட்டு வெளிநாட்டுப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு இயன்றளவு குறைந்த விலையில் காணியைக் கொள்வனவு செய்ய இயலுமாயிருந்தது. அவ்வாறே வெளிநாட்டவருக்கு, இந்நாட்டு காணியைப் பணம் கொடுத்து வாங்குவதற்கும் இங்கு வசிப்பதற்கும் வரையறுக்கப்பட்டிருந்த சட்ட திட்டங்கள் அகற்றப்பட்டன. இதற்கமைய வெளிநாட்டுப் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையாளர், இலங்கைக்கு வந்து பெருந்தோட்டச் செய்கையில் பணத்தை முதலீடு செய்தனர்.

### தனியார் முதலீட்டாளரின் நோக்கங்களுக்குப் பொருத்தமான முறையில் கொள்கைத் திட்டங்களை வகுத்தல்.

❖ சட்டவாக்கக் கழகத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக ஐரோப்பிய முதலீட்டாளர்களுக்குச் சந்தர்ப்பத்தை வழங்குதல்.

❖ கறுவா, உப்பு என்பவற்றை விற்பதற்கு அரசாங்கத்திடம் காணப்பட்ட ஏகபோக உரிமையை இரத்துச் செய்தல்.

❖ கமரனின் நீதிமன்றச் சீர்த்திருத்தங்கள்

❖ சேமிப்பு வங்கி ஒன்றை அமைத்தல்.

❖ கட்டாய இராஜகாரிய உழைப்பு முறையை இரத்துச் செய்தல்.

### பெருந்தோட்டச் செய்கையின் விருத்தி

மேலே குறிப்பிடப்பட்ட கோல்புறூக் சீர்திருத்தத்தை செயற்படுத்தியதன் மூலம் இந்நாட்டுப் பெருந்தோட்டச் செய்கையில் விரைவான அபிவிருத்தி ஏற்பட்டது.

மலைநாட்டிலும் தாழ்நாட்டிலும் இயற்கைத் தாவரங்களினால் மூடப்பட்டிருந்த காட்டு நிலங்களும் பாரம்பரிய சேனைச் செய்கை நிலங்களும் பயிர்ச்செய்கை நிலங்களும் குறுகிய காலத்தினுள் பெரும் தோட்டங்களாக மாறின. இதற்கமைய மேல்வரும் பிரதான பொருளாதாரப் பயிர்கள் இந்நாட்டுப் பெருந்தோட்டங்களில் பயிரிடப்பட்டன :

கோப்பி, சிங்கோனா, கொக்கோ, தேயிலை, தென்னை, இறப்பர்

**கோப்பிச் செய்கை**

பிரித்தானியரால் இந்நாட்டில் பயிரிடப்பட்ட முதலாவது வர்த்தகப் பயிர் கோப்பியாகும். பிரித்தானியர் இங்கு வருவதற்கு முன்னரேயே கோப்பி வீட்டுத் தோட்டப் பயிராக இருந்தாலும் அது வர்த்தகப் பயிராகப் பயிரிடப்படவில்லை. 1822ஆம் ஆண்டில் ஜோர்ஜ் பேர்ட் என்பவர் கம்பளை சிங்கபிட்டியவில் முதன்முறையாகக் கோப்பித் தோட்டம் ஒன்றை ஆரம்பித்தார். இதன் பிறகு 1824 இல் எட்வட் பாண்ஸ் ஆளுநர் கன்னொறுவையில் தமது சொந்தக் கோப்பித் தோட்டத்தை ஆரம்பித்தார்.



உரு 2.10 கோப்பித் தொழிற்சாலை

கோப்பிச் செய்கையில் தனி முதலீட்டாளர்களும் காணிகளை பணம் கொடுத்து வாங்கி பயிர்ச் செய்கையை மேற்கொண்டனர். இதனால் 1848 ஆம் ஆண்டாகும்போது இந்நாட்டில் 60 000 ஏக்கருக்கு மேற்பட்ட கோப்பித் தோட்டங்கள் காணப்பட்டன. இந்நாட்டில் கோப்பிச் செய்கை வெற்றி பெறுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் வருமாறு :

- ❖ ஐரோப்பிய நாடுகளில் கோப்பி பருகுவது பிரபல்யமடையவே, அதற்கான கேள்வி அதிகரித்துச் சென்றமையால் கோப்பிச் செய்கையால் அதிக இலாபத்தை ஈட்டிக் கொள்ள முடியுமாயிருந்தமை.

- ❖ குறைந்த செலவில் உயர்தரமான கோப்பியை இந்நாட்டில் உற்பத்திசெய்துகொள்ள முடிந்தமை.

- ❖ கோல்புறூக் சீர்திருத்தங்களின் பின்னர் பெருந்தொகையான பயிர்ச்செய்கை யாளர்கள் கோப்பித் தோட்டங்களை ஆரம்பித்தமை.

- ❖ இந்நாட்டிலிருந்து இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட கோப்பிக்குத் தீர்வை குறைக்கப்பட்டமை.

**வேகமாக வளர்ச்சியுற்று வந்த இந்நாட்டின் கோப்பிச் செய்கை 1848 இன் பின்னர் வீழ்ச்சியுறத் தொடங்கியமைக்கான காரணங்கள் வருமாறு :**

- ❖ ஜாவா போன்ற தென்கிழக்கு ஆசிய பிரதேசங்களிலிருந்து ஐரோப்பியச் சந்தைக்கு கோப்பி ஏற்றுமதி செய்யப்பட்டமையால் இலங்கைக் கோப்பிக்கான கேள்வி குறைந்தமை.

- ❖ 1848 ஆம் ஆண்டின் பின்னர் ஏற்பட்ட உலகப் பொருளாதார நெருக்கடியின் தாக்கம்.

- ❖ 1869 இலிருந்து ஹெமிலியா வெஸ்டார்ட்ரிக்ஸ் எனும் பங்கசு நோய்த் தொற்றால் கோப்பித் தோட்டங்கள் பலவும் அழிவுற்றமை.

**சிங்கோனா, கொக்கோச் செய்கைகள்**



**உரு 2.11 சிங்கோனா**



உரு 2.12 கொக்கோ

1848 ஆம் ஆண்டின் பின்னர் கோப்பிப் பயிர் அழிவுற்றமையால் இந்நாட்டுப் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையாளர்கள் வேறு பொருளாதாரப் பயிர்களைப் பயிரிடுவதில் கவனத்தைச் செலுத்தினர். அதன் பிரதிபலனாகச் சிங்கோனா, கொக்கோ பயிர்களில் கூடிய கவனத்தைச் செலுத்தினர். சிங்கோனா என்பது மருத்துவச் செடியாகும். அதன் மூலம் மலேரியா நோய்க்கான குயினைன் எனும் மருந்து உற்பத்திசெய்யப் பட்டது. என்றாலும் உலகச் சந்தையில் அதற்கு நிலவிய கேள்வி குறைந்தமையாலும் நீண்ட காலத்தில் இலாபமீட்ட முடியாமையாலும் அதனைப் பயிரிடுவதைக் கைவிட்டனர்.

கோப்பிக்கு மாற்றாக அரசாங்கத்தினால் கொக்கோ பயிர் அறிமுகப்படுத்தப்பட்டது. கொக்கோ பயிரிடலுக்கு அதிக செலவு ஏற்பட்டமையாலும் நாட்டில் மிகவும் குறைந்த பிரதேசத்திலேயே பயிரிட முடிந்தமையாலும் அது வர்த்தகப் பயிராகச் சாத்தியப்படவில்லை.

### தேயிலைச் செய்கை

கோப்பிச் செய்கை அழிவுற்றதன் பின்னர் அதற்கு மாற்றுப் பயிராக அறிமுகமான சிங்கோனா, கொக்கோச் செய்கைகள் சாத்தியமாகாமையால் இந்நாட்டிற்கு மிகப் பொருத்தமான பயிரைத் தேடி அறிவதற்கு அரசாங்கம் முயற்சித்தது. அதன் பலனாக மலைநாட்டின்காலநிலைத்தன்மைக்கு மிகவும் பொருத்தமானபயிராகத் தேயிலையைக் கண்டறிந்து பரிசோதனை செய்யப்பட்டது. 1873 ஆம் ஆண்டளவில் ஜேம்ஸ் டேலர் என்பவரால் லூல்கந்துர தோட்டத்தில் சில ஏக்கர்களில் அது பயிரிடப்பட்டது. இந்நாட்டிற்குப் பொருத்தமான தேயிலை இனங்களைக் கண்டறிவதில் மேலும் தீவிர கவனஞ்செலுத்தப்பட்டது.

10 ஏக்கரில் ஆரம்பிக்கப்பட்ட தேயிலைச் செய்கை 1890 ஆகும்போது பெருமளவுக்கு விருத்தி கண்டிருந்தது. 220 000 ஏக்கரளவில் அச்செய்கை பரந்து காணப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறு தேயிலைச் செய்கை இந்நாட்டின் முக்கியமான பொருளாதாரப் பயிராக மாற்றமடைவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் வருமாறு :



உரு 2.13 தேயிலைச் செய்கை

- தேயிலைச் செய்கைக்கு மிகவும் பொருத்தமாக இந்நாட்டின் ஈரவலயம் காணப்பட்டமை.
- இலங்கைத் தேயிலைக்கு இலண்டனிலும் உலகச் சந்தையிலும் அதிக கேள்வி நிலவியமை.
- பெருந்தெருக்களும் புகையிரதப் பாதைகளும் அமைக்கப்பட்டமை.
- இலகுவாகவும் இலாபகரமாகவும் தென்னிந்தியத் தொழிலாளர்களைப் பெற்றுக் கொள்ள முடிந்தமை.
- குறைந்த உற்பத்திச் செலவில் கூடிய இலாபத்தை ஈட்டிகொள்ள முடியுமா யிருந்தமை.

### தெங்குச் செய்கை

பிரித்தானியர் ஆட்சியில் விருத்தியுற்ற இன்னொரு வர்த்தகப் பயிர் தென்னை ஆகும். ஆதிகாலத்தில் இருந்தே தென்னை இந்நாட்டுப் பயிராக இருந்தாலும் அது ஏற்றுமதிப் பயிராகப் பயிரிடப்படவில்லை. தம்பதெனிய இராச்சிய காலத்திலிருந்து கோட்டை இராச்சிய காலம் வரை தென்னைப் பயிர்ச்செய்கையை விருத்தியடையச்செய்ய ஆட்சியாளர்கள் முயற்சித்ததாக இலக்கிய மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஏற்றுமதிப் பயிராக அது ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே பயிரிடப்பட்டது. 1910 ஆம் ஆண்டளவில் குருநாகல், கம்பஹா, சிலாபம் ஆகிய இடங்களை மையமாகக் கொண்டு 850 000 ஏக்கரளவில் அப்பயிர்ச்செய்கை பரவியிருந்தது. இப்பயிர்ச் செய்கை

யில் பெருமளவிற்கு எமது நாட்டவர்களே ஈடுபட்டனர். அதன் ஏற்றுமதி நடவடிக்கைகள் முழுமையாக வெளிநாட்டுக் கம்பனிகளாலேயே மேற்கொள்ளப்பட்டன. இந்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட தேங்காயால், தேங்காய் எண்ணெய், கொப்பரா, புண்ணாக்கு என்பன தயாரிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டன. தெங்குச் செய்கையின் விருத்திக்கும் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கும் லுணுவிலவில் தென்னை ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டது.

### இறப்பர் செய்கை

இலங்கையின் சூழலுக்குப் பொருத்தமான இன்னொரு பொருளாதாரப் பயிரான இறப்பர் செய்கையில் முதன்முதலில் ஆர்வம் செலுத்தியது இந்நாட்டிலிருந்த பிரித்தானிய கம்பனிகள் சிலவாகும். இங்கிலாந்தின் கியூ பூங்காவில் பயிரிடப்பட்டிருந்த இறப்பர் மரக்கன்றுகள் சிலவற்றை எமது நாட்டுக்கு கொண்டு வந்து, 1877 இல் பேராதனை, ஹெனரத் கொடை பூங்காக்களில் பயிரிடப்பட்டமை இச்செய்கையின் ஆரம்பமாகக் கொள்ளப்படுகின்றது. 1910 ஆம் ஆண்டின் பின்னர் இறப்பர் செய்கையில் உள்நாட்டுப் பயிர்ச்செய்கையாளரின் கவனம் வெகுவாக ஈர்க்கப்பட்டது. 1904 - 1906 ஆண்டுகளில் இறப்பர் பயிர்ச்செய்கை வேகமாகப் பரவியதோடு அதன் விலையும் ஒப்பீட்டளவில் உயர்வாயிருந்தது.

கறுவா பயிரிடப்பட்ட சிலரும் அதைக் கைவிட்டு இறப்பர் செய்கையில் இறங்கினர். இச்செய்கையின் விருத்தியில் பங்களிப்புச் செய்த காரணிகள் வருமாறு :

- இந்நாட்டில் உற்பத்தியான இறப்பருக்கு ஐக்கிய அமெரிக்க அரசில் அதிகளவு கேள்வி நிலவியமை.
- முதலாவது உலக மகாயுத்தத்தின் பின்னர் உலகச் சந்தையில் இறப்பரின் விலை அதிகரித்துச் சென்றமை.
- ஐரோப்பாவில் மோட்டார் வாகனக் கைத்தொழில் விருத்தியடைந்ததைத் தொடர்ந்து இறப்பருக்கான கேள்வி அதிகரித்தமை.
- இறப்பர் செய்கைக்கு மிகப் பொருத்தமான மண்ணும் காலநிலையும் இந்நாட்டில் காணப்பட்டமை.

**பயிற்சி 4**

பிரித்தானியர் ஆட்சியின்போது காணப்பட்ட பெருந்தோட்டச் செய்கை பற்றிய தகவல்களைச் சேகரிக்க.

### தேசிய விவசாயத்தை விருத்தி செய்தல்

1815 ஆம் ஆண்டில் முழு நாடும் பிரித்தானியர் ஆட்சிக்கு உட்பட்ட பின்னர் அதுவரை இந்நாட்டில் நிலவிய சமூக, பொருளாதாரக் கோலம் பெரு மாற்றங்களுக்கு

உள்ளானது. இந்நாட்டில் காணப்பட்ட பாரம்பரிய விவசாய முறையினால் வர்த்தகப் பொருளாதாரத்தை உருவாக்க முடியாது எனக் கண்டுகொண்ட பிரித்தானிய ஆட்சியினர், பெருந்தோட்டச் செய்கைக்கு முக்கியத்துவம் அளித்து தேசிய வேளாண்மையைப் புறக்கணிக்கும் கொள்கையைக் கையாளத் தொடங்கினர். வர்த்தகப் பொருளாதாரமாக பெருந்தோட்டச் செய்கையை இந்நாட்டில் நிலைநிறுத்துவதற்காக 1833 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கோல்புறுக்கின் சீர்திருத்தங்களால் சுதேசப் பயிர்ச்செய்கை சீர்குலைந்தது. இவ்வாறு அது வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் வருமாறு :

### 1840 ஆம் ஆண்டின் காணிச் சட்டம்

இச்சட்டத்தினால் 30 வருடங்கள் தொடர்ச்சியாக நிலவுரிமையைத் தாம் அனுபவித்து வந்தமையை நீதிமன்றத்தின் முன்னால் நிருபிக்க முடியாத காணிகளை அரசு தனதுடைமையாக்கிக் கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை. இந்நாட்டில் காணியை அனுபவிப்பதற்கான சட்ட ரீதியான எழுத்தாவணங்கள் பயன்பாட்டில் இருக்கவில்லை. இதனால் பெருமளவிலான பயிர்ச்செய்கை நிலங்களை அரசு தனது உடைமையாக்கிக் கொண்டமையால் வாழ்வாதாரப் பயிர்ச்செய்கை நலிவடைந்தது.

- ❖ இந்நாட்டின் பெரும்பாலானோரின் வாழ்வாதாரமான விவசாயத்திற்குத் தேவையான குளங்கள், அணைக்கட்டுக்களைப் பராமரிப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தாமை.

- ❖ காணியை விற்கும் அரசின் கொள்கையால் மலைநாட்டினதும் தாழ்நாட்டினதும் விவசாய நிலங்கள் உள்நாட்டு, வெளிநாட்டு முயற்சியாளர்களுக்கு விற்கப்பட்டு அங்கு பெருந்தோட்டப் பயிர்கள் விளைவிக்கப்பட்டமை.

- ❖ மலைநாட்டில் காணப்பட்ட இயற்கைக் காடுகளை அழித்து, அங்கு பெருந்தோட்டப் பயிர்களைப் பயிரிட்டமையால், நீரூற்றுக்கள் தூர்ந்துபோயின. அதனால் தாழ்நாட்டு விவசாய நிலங்கள் பயன்பாட்டிற்கு உதவாமல் போனமை.

- ❖ காலங்காலமாக கிராமிய நீர்ப்பாசன நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த கிராமிய சபை (கம்சபாக்) கள் பெற்றுக் கொண்டு வந்த இராஜகாரிய சேவை முறை ஒழிக்கப்பட்டமையால் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமற் போனமை.

**பயிற்சி 5**

பிரித்தானியர் ஆட்சியின்போது சுதேச விவசாயம் வீழ்ச்சியுற்றமை பற்றிய தகவல்களைச் சேகரிக்கவும்.

### பிரித்தானியர் சுதேச விவசாயத்தை மேம்படுத்துவதற்கு முயற்சித்தமை

1848 ஆம் ஆண்டில் பிரித்தானியர் ஆட்சிக்கு எதிராகப் பொதுமக்கள் எழுச்சி அடைந்தமைக்கான முக்கியமான காரணியாக அவர்கள் சுதேச விவசாயத்தைக் கவனியாது விட்டமையே என்பதை ஆட்சியாளர் விளங்கிக் கொண்டனர். இதற்கமைய 1850 இன் பின்னர் இந்நாட்டை ஆட்சிபுரிந்த பிரித்தானிய ஆளுநர்களில் சிலர் சுதேச விவசாயத்தை கவனத்திற்கொண்டு நீர்ப்பாசனத் திட்டங்களைப் புனரமைக்கவும் விவ சாயிகளின் நலன்களையிட்டுக் கவனம் செலுத்தவும் ஆரம்பித்தனர். இதற்கமைய அவர்களால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் முக்கியத்துவமானவையாகும்.

### குளங்களையும் அணைக்கட்டுக்களையும் புனரமைத்தல்

❖ ஆளுநர் ஹென்றி வாட் -

நீர்ப்பாசன நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கு 1855 இல் செயற்குழு ஒன்றை நியமித்தமை.

கிழக்குப் பிரதேசத்தில் இறக்காமம், அம்பாறை குளங்களைப் புனரமைத்தமை.

தென் மாகாணத்தில் கிருவாபற்றிலுள்ள கிரம, அம்பாறையில் உள்ள ஊருபொக்க ஆகிய குளங்களைப் புனரமைத்தமை.

❖ ஆளுநர் ஹர்கியூலிஸ் ரொபின்சன் - நீர்ப்பாசனம் தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்காக ஆணைக்குழு ஒன்றை நியமித்தமை.

திஸ்ஸமகாராமைக் குளத்தைப் புனரமைத்தமை.

❖ ஆளுநர் வில்லியம்ஸ் கிரகெரி - அநுராதபுரத்தில் பசவக்குளம், திசாவாவி, மதவாச்சியில் மஹவாவி, கலாவாவி, கந்தளாய்க் குளம் உட்பட குளங்கள் பலவற்றையும் புனரமைத்தமை.

❖ ஆளுநர் ஆதர் கோடன் - வளவ கங்கை, உடுகிரிவலவை அண்டிய பகுதிகளின் நீர்ப்பாசன அமைப்புகளையும் 42 குளங்களையும் புனரமைத்தமை.

### நீர்ப்பாசனத் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டமை

1900 ஆம் ஆண்டில் வெஸ்ட் றிஜ்வே ஆளுநரால் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டமை, இலங்கையின் விவசாய வரலாற்றில் ஒரு முக்கிய சம்பவமாகும். நீர்ப்பாசனம் தொடர்பான அனுபவம் வாய்ந்த உத்தியோகத்தர்களைத் திணைக்களத்தில் சேர்த்துக்கொண்டு செயற்றிறன் மிக்க முறையில் அதனை முன்னெடுத்துச் சென்றார். அதுவரை புனரமைக்கப்பட்டிருந்த நீர்ப்பாசனத் திட்டங்களைப் பேணிப்பராமரிப்பதும் சனத்தொகைக்கு ஒப்பாகப் புதிய நீர்ப்பாசனத் திட்டங்களை இனங்கண்டு அவற்றை உருவாக்குதலும் இவர்களது பொறுப்பாக இருந்தது. இதனால் இந்நாட்டு விவசா யிகளுக்குப் பெரும் நன்மை விளைந்தது.

**கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தமை**

விவசாயிகளின் நலன் கருதியும் அவர்களது மேம்பாட்டிற்காகவும் மக்கலம் ஆளுநரால் 1911 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்க இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. அதன்மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் வருமாறு :

- விவசாயிகளுக்குக் குறைந்த வட்டியில் கடன் வழங்கல்
- விவசாயிகளை கடன் சுமையில் இருந்து விடுவித்து அவர்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்தல்.
- விவசாயிகளின் சுகநலன்களை மேம்படுத்தல்.
- கூட்டுறவு இயக்கத்தைப் பலப்படுத்தி கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்தல்.

1914 - 1918 காலகட்டத்தில் இடம்பெற்ற முதலாம் உலக மகாயுத்தத்தால் கப்பற் போக்குவரத்துத் தடைப்பட்டு இந்நாட்டிற்குத் தேவையான உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதில் பிரச்சினைகள் தோன்றின. இதனால் உலக யுத்தம் முடிவடைந்த பின்னர் சுதேச விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்துவதின் தேவையை பிரித்தானிய ஆட்சியாளர்கள் உணர்ந்து கொண்டனர். 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்துடன் பெருகும் சனத்தொகைக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும் தேவையும் ஏற்பட்டது. அதற்குப் பொருத்தமானதாக விவசாயத் துறையைத் தெரிவுசெய்தனர். 1931 ஆம் ஆண்டில் டொனமூர் சீர்திருத்தத்தின்படி விவசாயம் உட்படப் பல்வேறு துறை நிருவாகத் தலைமைப் பதவிகளையும் இலங்கை அரசியல் தலைவர்கள் பொறுப்பேற்றனர். அத்தோடு டொனமூர் அரசியல் யாப்பு சர்வசனவாக்குரிமையை வழங்கியபடியால் கிராமிய மக்கள் மீது இந்நாட்டு அரசியல்வாதிகளுக்குக் கூடிய கரிசனை காட்ட வேண்டிய தேவையும் ஏற்பட்டது. அதன் விளைவாகவும் விவசாயத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. டீ.எஸ். சேனாநாயக்க அவர்களால் அரசுக்கழகக் காலகட்டத்தில் உலர்வலயத்தில் விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டமை இதற்கு உதாரணமாகும்.

**பயிற்சி 6**

பிரித்தானியரின்கீழ் தேசிய விவசாய அபிவிருத்தி தொடர்பான தகவல்களைச் சேகரிக்க.

# 3 இலங்கையின் சமய, தேசிய மறுமலர்ச்சி



## அறிமுகம்

இலங்கையில் நீண்ட காலமாக நிலைத்திருந்த சமூக அமைப்பும் கலாசாரமும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்களின் வருகையுடன் பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டன. போர்த்துக்கேயர் உரோமன் கத்தோலிக்க மதத்தையும் ஒல்லாந்தர் புரட்டஸ்தாந்து மதத்தையும் தமது ஆட்சிப்பிரதேசங்களில் பரப்பினர். 1815 ஆம் ஆண்டில் முழுநாடும் பிரித்தானியாவின் குடியேற்ற நாடானபோது அவ்வாட்சிக் காலத்தில் எமது நாட்டுக்கு வந்த பல்வேறு மிஷனரி இயக்கங்களும் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்கு முயன்றமையால் இந்நாட்டின் பாரம்பரிய, சமய, கலாசாரங்களுக்கு சிற்சில இடையூறுகள் ஏற்பட்டன.

தமது கலாசாரங்கள் எதிர்நோக்கிய ஆபத்தான நிலையால் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் இலங்கையின் பௌத்த, இந்து, இஸ்லாமிய மக்களிடையே சமய, தேசிய விடயங்களில் பெரும் எழுச்சி ஏற்பட்டது. அது இலங்கையின் சமய, தேசிய மறுமலர்ச்சியாக இந்த அத்தியாயத்தில் கவனம் செலுத்தப்படுகின்றது.

## 3.1 மிஷனரி இயக்கங்களும் அவற்றின் நடவடிக்கைகளும்

பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்காக வெளிநாடுகளிலிருந்து தொண்டர் அமைப்புகளைச் சேர்ந்த அங்கத்தவர்கள் பலரும் இந்நாட்டிற்கு வருகை தந்தனர். இந்நாட்டில் சமயம் பரப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட இந்த அமைப்புகள் மிஷனரிகள் எனக் குறிப்பிடப்பட்டன. 19 ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் இலங்கைக்கு வந்த மிஷனரி அமைப்புகளுள் சில வருமாறு :

- லண்டன் மிஷனரி இயக்கம்
- பெப்டிஸ்ட் மிஷனரி இயக்கம்
- அமெரிக்கன் மிஷனரி இயக்கம்
- வெஸ்லியன் மிஷனரி இயக்கம்
- சேர்ச் மிஷனரி இயக்கம்

இம்மிஷனரி இயக்கத்தினர், அரசாங்கத்தின் உதவியைப் பெற்றுக்கொண்டு, இலங்கை முழுவதும் தமது சமயத்தைப் பரப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். சமயத்தைப் பரப்புதலுக்கு அவர்கள் கல்வி, போதனை, சமூக சேவை நடவடிக்கைகள் என்பவற்றை ஊடகமாகக் கொண்டனர்.

**கல்வி**



உரு. 3.1 காலி றிச்மண்ட் கல்லூரி. (வெஸ்லியன் மிஷனரியால் கட்டப்பட்டது)

மிஷனரி இயக்கங்கள் பல்வேறு நடவடிக்கைகள் மூலம் கல்வியினூடாகக் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதில் ஈடுபட்டன. சிங்கள, தமிழ் மொழிகளைக் கற்றுக்கொண்ட இவர்கள் கிராமியப் பாடசாலைகளில் சுதேச மொழிகளிலும் நகர்ப்புறப் பாடசாலை களில் ஆங்கில மொழி மூலமும் கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டனர். மிஷனரிக் கல்வியை சமயத்தைப் பரப்புவதற்கும் மேலைத்தேய நாகரிகத்தை இந்நாட்டில் சமூகமயப்படுத்தவும் பயன்படுத்திக் கொண்டனர்.

பிரித்தானியர் ஆட்சியில் அரசாங்கத்தின் பதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஆங்கில மொழி அறிவு அவசியமாயிருந்தது. இதன் விளைவாக ஆங்கில மொழிமூலம் கற்ற சிங்கள, தமிழ் பிரபுத்துவக் குடும்பங்களைச் சேர்ந்த வாலிபர்களில் ஒரு பகுதியினர் தமது பரம்பரையான சமயத்தையும் பெயர்களையும் கைவிட்டுக் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிக்கொண்டு அரசாங்கத்தில் உயர் பதவிகளையும் பெற்றுக் கொண்டனர்.

மிஷனரி இயக்கத்தவர்கள் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களையும் தமக்குள் பங்கிட்டுக் கொண்டு கல்விப் போதனையில் ஈடுபட்டு வந்தனர். இதனால் இலங்கை எங்கும் பல்வேறு மிஷனரிப் பாடசாலைகள் தோற்றம் பெற்றன. அவற்றால் ஆங்கிலக் கல்வியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. இது மிஷனரிக் கல்வியால் விளைந்த நற்பயனாகும்.

**எழுத்தாக்கங்கள், போதனை ஊடகங்களைக் கையாளுதல்**

மிஷனரி இயக்கங்கள் இங்கு அச்சகங்களை உருவாக்கிக் கொண்டு, தமது சமயக் கருத்துக்களைக் கொண்ட புத்தகங்களையும் சஞ்சிகைகளையும் வெளியிட்டு, விநியோகிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டன. விவிலியத்தையும் (பைபிள்) கிறிஸ்தவ சமயம் சார்ந்த புத்தகங்களையும் சிங்கள, தமிழ் மொழிகளில் மொழி பெயர்த்தனர். பௌத்த, இந்து சமயத்தவர்கள் சிலைகளை வணங்கும் போலி நம்பிக்கையாளர் என்றும் அவர்களுடைய சமய வழிபாடுகள் பயனற்றவை என்னும் அபிப்பிராயங்களை இவற்றினூடாகப் பரப்பினர். மிஷனரிகள் தமது சமயத்தைப் பரப்புவதற்காக அச்சிட்ட சில வெளியீடுகள் வருமாறு:

- மாசிக்க தேக்க
- உரகல
- லங்கா நிதானய
- உதய தாரகை

மிஷனரிக் குருமார் சிங்கள, தமிழ் மொழிகளைக் கற்றுக் கொண்டு, பன்சல போன்ற பௌத்த வழிப்பாட்டிடங்களுக்கு அருகாமையிலும் மக்கள் கூடும் வேறு இடங்களிலும் போதனைகள் செய்து தமது மதக் கருத்துக்களை மக்களிடையே கொண்டு சேர்ப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

**சமூகசேவை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்**

ஏழை எளிய மக்களுக்குப் பரிசுப் பொருள்களை வழங்குதல், நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்தல் போன்ற சமூக சேவை நடவடிக்கைகளில் ஈடுபட்டு, மிஷனரிமார் பொதுமக்களை நெருங்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர்.

மேற்குறிப்பிட்டவாறு மிஷனரி இயக்கங்கள் தமது சமயத்தைப் பரப்புவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் கிராமிய மக்களிடையே பெருந்தாக்கத்தை ஏற்படுத்தாதபோதும் நகர்ப்புறத்தைச் சேர்ந்த செல்வந்தரான சிங்களவர், தமிழர் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிக்கொள்ள முன்வந்தமையைக் காணக்கூடியதாய் இருந்தது. மிஷனரி செயற்பாடுகள் அவ்வாறு வெற்றிபெறுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் வருமாறு :

- ❖ அரசாங்க உதவிகள் கிடைத்தல்.
- ❖ சமயத்தைப் பரப்புவதற்குக் கல்வியைப் பயன்படுத்திக்கொள்ளல்.
- ❖ அச்சகங்களை நிறுவுதல்.
- ❖ புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பவற்றை வெளியிடக்கூடிய நிதிவசதியைக் கொண்டிருந்தமை.
- ❖ மிஷனரிகளிடையே காணப்பட்ட கட்டமைப்பு ரீதியான பலம்.

**சமய எழுச்சி**

19 ஆம் நூற்றாண்டின் இறுதி அரைப்பகுதியாகும்போது இந்நாட்டு பௌத்த மக்கள் மட்டுமன்றி இந்து, இஸ்லாமிய மக்களிடையேயும் சமய எழுச்சி உருவானது. இலங்கையரிடையே இவ்வாறான எழுச்சி ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் வருமாறு :

- ❖ மிஷனரிமாரின் சமயப் பிரச்சாரத்தால் தேசிய சமயங்கள் தாக்கப்பட்டமை.
- ❖ சிங்கள, தமிழ் மொழிக் கல்வியை மேம்படுத்துவதற்கு அரசாங்கத்தால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை.
- ❖ பிரித்தானியர் ஆட்சியால் தமது சமய கலாசாரம் அழிவுறும் எனும் உணர்வு மக்களிடையே தோன்றியமை.

## 3.2 பௌத்த மறுமலர்ச்சி இயக்கம்

19 ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் இந்நாட்டு பிக்குகளாலேயே பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்துக்குத் தலைமைத்துவம் வழங்கப்பட்டது. பின்னர் கல்விமான்களும் இவ்விடயத்தில் உதவினர்.

**பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தில் வெளிப்படையாகத் தெரியும் பண்புகளில் சில :**

- ❖ பிரிவெனாக்கள் (பௌத்த சமயக் கல்வியைப் போதிப்பவை) ஆரம்பிக்கப்பட்டமை.
- ❖ அச்சகங்களை அமைத்தமையும் அச்சு ஊடகங்களைக் கையாண்டமையும்.
- ❖ விவாதங்களை மேற்கொண்டமை.

❖ பௌத்த பாடசாலைகளை நிறுவியமை.

❖ தேசிய கலாசாரத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தமை.

### பிரிவெனாக்கள் ஆரம்பிக்கப்பட்டமை

கல்விமான்களான பிக்குகள் சிலரின் வழிகாட்டுதலால் புதிய பிரிவெனாக்கள் நிர்மாணிக்கப்பட்டமையானது, பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் மிக முக்கிய நிகழ்வாகும். இப்பிரிவெனாக்களில் சிங்கள, பாளி, சமஸ்கிருத மொழிகளை முறையாகக் கற்றுக்கொண்ட கல்விமான்கள் தோன்றியதோடு பௌத்த மறுமலர்ச்சிக்கு அவர்களது உதவிகளும் கிட்டின.

| தலைமை வகித்த பிக்குமார் | ஆரம்பிக்கப்பட்ட பிரிவெனாக்கள் |
|---|---|
| வலானே சித்தார்த்த தேரர் | இரத்மலானை பரமதம்ம சேதிய பிரிவெனா |
| ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கள தேரர் | மாளிகாகந்த வித்தியோதய பிரிவெனா |
| இரத்மலானை ஸ்ரீ தர்மாலோக்க தேரர் | பேலியகொட வித்தியாலங்கார பிரிவெனா |

**ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கள தேரர்**

1827 ஆம் ஆண்டில் காலியில் ஹிக்கடுவையில் பிறந்த இவர் 1840 இல் ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கள எனும் பெயருடன் துறவு பூண்டார். வலானே சித்தார்த்த தேரரிடம் கற்ற இவர், அக்காலத்தில் சிறந்த கல்விமானாகத் திகழ்ந்தார். 1873 இல் மாளிகாகந்த வித்தியோதய பிரிவெனாவை நிறுவியமை இவர் ஆற்றிய மகத்தான பணியாகும். 19 ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் உருவான பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவராகச் செயற்பட்டார். சிதத்சங்கரா சன்னஸ, காவிய சேகர சன்னஸ போன்ற நூல்கள் பலவற்றையும் இவர் எழுதினார். அத்தோடு 19 ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலகட்டத்தில் இந்நாட்டின் கல்வி மேம்பாட்டிற்காகவும் இவர் பெருஞ் சேவையாற்றியுள்ளார்.



### அச்சகங்களை அமைத்தமையும் அச்சு ஊடகங்களைப் பயன்படுத்தியமையும்

19 ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் மிஷனரி இயக்கங்களிடம் அச்சகங்கள் பலவும் காணப்பட்டன. பௌத்தர்களிடம் ஒன்றுமே இருக்கவில்லை. இதனால் புளத்கம தம்மாலங்கார ஸ்ரீ சுமணதிஸ்ஸ தேரர் மிகச் சிரமத்துடன் நிதி திரட்டி, பௌத்தர்களுக்கென அச்சகம் ஒன்றை நிறுவ நடவடிக்கைகளை மேற்கொண்டார். இவர் 1862 இல் காலியில் லங்கோபகார என்னும் அச்சகத்தை நிறுவினார். இதனைத் தொடர்ந்து பௌத்தர்களால் அச்சகங்கள் பலவும் நிறுவப்பட்டன.

அச்சகங்களை ஆரம்பித்தமையால் சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்ற, பல்வேறு வெளியீடுகளைப் பிரசுரிக்கச் சந்தர்ப்பம் கிட்டியது. அவ்வாறான வெளியீடுகள் சில வருமாறு :

- லக்மினி பஹன
- சரசவி சந்தரெஸ
- சிங்ஹள ஜாதிய
- சிங்ஹள பௌத்தயா




உரு 3.2 பழைய அச்சியந்திரம் ஒன்றும் சரசவிசந்தரெஸ பத்திரிகையின் முகப்பும்

மிஷனரிகளுடன் போட்டியிட பௌத்தர்களால் வெளியிடப்பட்ட இப்பத்திரிகைகள், சஞ்சிகைகள், வேறு வெளியீடுகள் என்பன மூலம் மக்களிடையே எழுச்சியை ஏற்படுத்துவதற்கும் எதிரிகளின் விமர்சனங்களுக்குப் பதிலளிக்கவும் முடியுமாயிருந்தது.

### விவாதங்களை மேற்கொண்டமை.

மேலே குறிப்பிட்டவிதமாக அச்சு வெளியீடுகளுக்கு மேலதிகமாக பிக்குமாரில் சிலர் மிஷனரி குருமாருடன் பகிரங்க விவாதங்களை மேற்கொள்ளவும் முன்வந்தனர். மீகெட்டுவத்த குணானந்த தேரர் இவ்விவாதங்களுக்குத் தலைமை தாங்கினார். ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கள தேரர், வஸ்கடுவே சுபுதி தேரர், இரத்மலானை தர்மாலோக தேரர் என்போரும் இதில் பங்கெடுத்துக் கொண்டனர். இலங்கையில் ஐந்து இடங்களில் இடம்பெற்ற இவ்வாறான பொது விவாதங்கள் **'ஐம்பெரும் விவாதங்கள்'**


எனப்பட்டன. இதனைப் பார்ப்பதற்குப் பெருந்தொகையினர் ஈடுபாட்டுடன் முன்வந்தனர். இவ்விவாதங்களில் பௌத்தர்கள் வெற்றிபெற்றமையால் மக்களிடையே பேரெழுச்சி ஒன்று உருவானது.

**ஐம்பெரும் விவாதங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. பத்தேகம | 1865 | 2. வராகொட | 1865 |
| 3. உதம்விட | 1866 | 4. கம்பளை | 1871 |
| 5. பாணந்துறை | 1873 | | |

இவ்விவாதங்களுள் பாணந்துறை விவாதம் சர்வதேச அளவில் பிரசித்தி பெற்றது. இவ்விவாதம் தொடர்பாக எழுதப்பட்ட சிறிய நூல் ஒன்றைப் படித்ததனால் பௌத்த சமயம் தொடர்பாக விளக்கம்பெற்ற அமெரிக்கரான ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் அவர்களும் பிளவஸ்கி அம்மையாரும் இலங்கைக்கு வந்தனர்.

**மீகெட்டுவத்த குணானந்த தேரர்**



தென் மகாணத்தில் பலப்பிட்டியில் மீகெட்டுவத்த கிராமத்தில் பிறந்த இவர், பிற்காலத்தில் மீகெட்டுவத்தே குணானந்த எனும் பெயருடன் துறவு பூண்டார். சமய, தேசிய மறுமலர்ச்சி இயக்கத்தின்போது இவரால் பௌத்தத்தின் மேன்மைக்காகப் பெருஞ்சேவை புரியப்பட்டது. மிஷனரி குருமாருடன் விவாதங்களில் ஈடுபட்டமை இவரது வாழ்வில் தெட்டத் தெளிவாகத் தெரியும் ஒன்றாகும். 1873 ஆம் ஆண்டில் இவரது தலைமையில் இடம்பெற்ற பாணந்துறை விவாதம் சர்வதேசப் புகழைப் பெற்றுக் கொண்டது. இத்தேரரால் புரியப்பட்ட ஐம்பெரும் விவாதங்களும் முக்கியத்துவமான வையாகும். கொழும்பில் பிரம்மஞான சங்கத்தைத் தோற்றுவித் தலிலும் பௌத்த பாடசாலைகளை அமைத்தலிலும் அன்னார் பெரும் பங்களிப்புச் செய்துள்ளார்.

**பௌத்த பாடசாலைகளை நிறுவுதல்**

1880 ஆம் ஆண்டில் அமெரிக்கரான ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் அவர்களும் ஹெலேனா பிளவஸ்கி அம்மையாரும் இலங்கைக்கு வந்து பௌத்தத்தைத் தழுவிக் கொண்டனர். ஒல்கொட் அவர்களின் வழிகாட்டுதலில் பிரம்மஞான சங்கம் இங்கு நிறுவப்பட்டது. இது துறவறத்தாரும் இல்லறத்தாரும் இணைந்து பணியாற்றக்கூடிய ஓர் அமைப்பாகும்.

போதிய நிதி வசதியின்மையாலும் அமைப்பு ரீதியான பலமின்மையாலும் அதுவரை பௌத்தர்களால் பாடசாலைகளை உருவாக்கிக்கொள்ள இயலவில்லை. ஒல்கொட் அவர்கள், பௌத்த பாடசாலைகளை அமைப்பதில் முன்னின்று செயற்பட்டார். துறவிகளும் இல்லறத்தாருமான கல்விமான்கள் பலரும் இதில் ஈடுபட்டனர். அவ்வாறான தலைவர்களில் சிலர் :

★ ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கள தேரர் ★ இரத்மலானை தர்மாலோக்க தேரர்

★ மீக்கெட்டுவத்த குணானந்த தேரர் ★ அநகாரிக தர்மபால அவர்கள்



உரு 3.3 ஒல்கொட் அவர்களும் ஹெலேனா பிளவஸ்கி அம்மையாரும்

பௌத்த மறுமலர்ச்சியுடன், பௌத்த பாடசாலைகளை ஆரம்பிக்கும் இயக்கம் தொடங்கப்பட்டமையால் இந்நாட்டின் நகரங்கள் பலவற்றிலும் பிரம்மஞான சங்கத் தால் பாடசாலைகள் பலவும் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றுள் சில வருமாறு :

- கொழும்பு ஆனந்தா வித்தியாலயம்
- காலி மஹிந்த வித்தியாலயம்
- கண்டி தர்மராஜ வித்தியாலயம்
- நாவலப்பிட்டி அநுருத்த வித்தியாலயம்
- கொழும்பு மியூசியஸ் வித்தியாலயம்

பௌத்த பாடசாலைகள் தொடங்கப்பட்டதுடன் புதிய பாடநூல்களை அச் சிட்டு வழங்குதல், பௌத்த மாணவர்களுக்கு ஆங்கில மொழியைப் போதித்தல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. ஞாயிறு சமயப் பாடசாலைகளைத் தொடங்கியமை, வெசாக் பௌர்ணமி தினத்தை விடுமுறையாக்கிக் கொண்டமை பௌத்த கொடியை உருவாக்கியமை என்பனவும் மறுமலர்ச்சி இயக்கத்தினால் மேற் கொள்ளப்பட்ட முக்கிய பணிகளாகும்.

**ஹென்றி ஸ்டீல் ஒல்கொட்**



கேணல் ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் அவர்கள் 1832 ஆகஸ்ட் 2 இல் ஐக்கிய அமெரிக்காவின் நியூ ஜேர்ஸி எனும் பிராந்தியத்தில் பிறந்தார். நியூயோர்க் பாடசாலை ஒன்றில் ஆரம்பக் கல்வியைக் கற்ற அவர், பின்னர் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றார். இவர் ஆரம்ப காலத்தில் ஐக்கிய அமெரிக்கா கடற்படையில் கேணல் பதவியில் பணியாற்றியுள்ளார். பிற்காலத்தில் ஹெலேனா பிளவஸ்கி அம்மையாருடன் சேர்ந்து நியூயோர்க் பிரதேசத்தில் சமய ரீதியான பிரம்மஞான சங்கத்தை ஆரம்பிப்பதில் முன்னோடியாகச் செயற்பட்டுள்ளார். பாணந்துறை விவாதம் தொடர்பான சிறுநூல் ஒன்றைப் படித்ததன் மூலம் பௌத்த சமயம் தொடர்பாக விளக்கம்பெற்ற அவர் ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கள தேரருடனும் மீக்கெட்டுவத்த குணானந்த தேரருடனும் கடிதத் தொடர்புகளைக் கொண்டிருந்தார். இதன் மூலம் 1880 ஆம் ஆண்டு இலங்கை வந்தார்.

அவரால் ஆற்றப்பட்ட சேவைகள் :

- ❖ பௌத்த பாடசாலைகளுக்கான நிதியம் ஒன்றை ஏற்படுத்துவதில் முன்னோடியாகச் செயற்பட்டமை.
- ❖ ஞாயிறு சமயப் பாடசாலைகளை ஆரம்பித்தமை.
- ❖ வெசாக் தினத்தை அரசாங்க விடுமுறையாக்குவதற்குப் பாடுபட்டமை.
- ❖ பௌத்த கொடியை நிர்மாணிப்பதில் பிக்குமாருடனும் தலைவர்களுடனும் சேர்ந்து பங்களிப்புச் செய்தமை.
- ❖ சரசவி சந்தரெஸ பத்திரிகையின் மூலம் பௌத்த மக்களை அறிவூட்டியமை.

**தேசிய கலாசாரத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள்**

பிரித்தானியர் ஆட்சியின்போது தேசிய கலாசாரத்திற்கு ஏற்பட்ட சவால்களால் உருவான துர்ப்பாக்கியநிலை தொடர்பாக அநகாரிக தர்மபால உட்பட பௌத்தத் தலைவர்கள் கவனம் செலுத்தினர். அதற்காக தேசாபிமானத்தைக் கட்டியெழுப்பித் தேசியக் கலாசாரத்தின் மேன்மையை உணர்த்துவதற்கு அநகாரிக தர்மபால தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். அவரோடு வலிசிங்ஹ ஹரிச்சந்திர, பியதாஸ சிரிசேன,

ஜோன் த சில்வா போன்றவர்களும் தேசியக் கலாசாரத்தின் மேன்மையை மக்களுக்கு உணர்த்துவதில் முன்னிலையில் நின்று செயற்பட்ட சிலராவர்.

டீ. பீ. ஜயதிலக அவர்கள் கொழும்பு பௌத்த இளைஞர் சங்கத்தை அமைப்பதில் முன்னோடியாகச் செயற்பட்டு இளைஞர்களிடையே தேசிய உணர்வை ஏற்படுத்துவதற்குப் பாடுபட்டார். அத்தோடு ஆங்கிலேய ஆட்சியாளர்களால் நாடெங்கும் மதுபான சாலைகள் திறக்கப்பட்டதற்கு எதிராக பௌத்த பிக்குகளும் பிரமுகர்களும் மதுவிலக்கு இயக்கத்தை ஆரம்பித்ததன் மூலம் பொதுமக்களை மது பாவனையிலிருந்து ஓரளவுக்கேனும் தடுத்துக்கொள்ளக்கூடியதாயிருந்நதது.

இவற்றிற்கு மேலாக நாடெங்கும் அழிவுற்றிருந்த தாதுகோபங்கள், சிலைகள் என்பவற்றைச் சீரமைத்து மீண்டும் அவற்றைப் பழைய நிலைக்குக் கொண்டுவர இயக்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இதனிடையே வலிசிங்ஹ ஹரிச்சந்திர அவர்கள் அநுராதபுரத்தில் சிதைவடைந்திருந்த பௌத்த வழிபாட்டு இடங்களைப் பாதுகாக்கும் இயக்கம் ஒன்றை ஆரம்பித்தார். அநகாரிக தர்மபால அவர்கள் இந்தியாவுக்குச் சென்று அங்குள்ள பௌத்த வழிபாட்டு இடங்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டார். மேலும் ஜோன் த சில்வா எனும் புகழ்பெற்ற நாடகாசிரியர், வரலாற்று நிகழ்வுகளையும் பௌத்த போதனைகளையும் கருவாகக் கொண்ட நாடகங்களை எழுதி மேடையேற்றினார். பியதாச சிறிசேன அவர்கள் நாவல்களை எழுதியும் பத்திரிகைகளைப் பயன்படுத்தியும் தேசிய கலாசாரத்தின் மேன்மையை வெளிக்கொணரப் பாடுபட்டார்.

**அநகாரிக தர்மபால**



உரு. 3.4 அநகாரிக தர்மபால அவர்களும் அவர் பயன்படுத்திய வாகனமும்

அநகாரிக தர்மபால அவர்கள் 1864 ஆம் ஆண்டு கொழும்பில் பிறந்தார். தொன் டேவிட் ஹேவாவிதாரண என்பது அவரது ஆரம்பகாலப் பெயராகும். இவர் புனித தோமஸ் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைக் கற்றுப் புனித பெனடிக்ட் கல்லூரி, றோயல் கல்லூரி என்பவற்றில் மேற்படிப்பைத் தொடர்ந்தார்.

ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கள தேரரிடமும் ஏனைய பிக்குகளிடமும் பாளி மொழியையும் திரிபிட கத்தையும் கற்றார். பின்னர் பௌத்த பிரம்மஞான சங்கத்தில் சேர்ந்து தமது பெயரைத் தர்மபால என்று மாற்றிக்கொண்டு பிரம்மச்சரிய வாழ்க்கையை மேற்கொண்டார். பௌத்த சமயத்திற்காகத் தமது வாழ்க்கையை அர்ப்பணித்த அவர் இலங்கையின் மொழி, கலாசாரம் உட்பட பாரம்பரியங்களின் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்தினார். தமது இறுதிக் காலத்தில் ஸ்ரீ தேவமித்த எனும் பெயருடன் இந்தியாவில் வைத்துத் துறவு பூண்டார். 1933 இல் இந்தியாவின் சாரணாத்தில் அவர் காலமானார்.


**அநகாரிக தர்மபால அவர்களின் சேவைகள்**

- ❖ பௌத்த பாடசாலைகளை அமைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டமை.
- ❖ தேசிய கலாசாரத்தைப் பாதுகாப்பதற்குப் பாடுபட்டமை.
- ❖ இலங்கையர்களை மதுபாவனையில் இருந்து விடுவிப்பதற்காக மதுவிலக்கு இயக்கத் தலைவர்களில் ஒருவராகச் செயற்பட்டமை
- ❖ புத்தகயா உட்பட இந்தியாவின் வழிபாட்டு இடங்களைப் பாதுகாத்துக் கொள்ளப் பாடுபட்டமை.
- ❖ 'சிங்ஹள பௌத்தயா' எனும் பத்திரிகையையும் 'மஹாபோதி' எனும் சஞ்சிகையையும் வெளியிட்டமை.

## 3.3 இந்து சமய மறுமலர்ச்சி இயக்கம்

மிஷனரி இயக்கங்களின் செயற்பாடு காரணமாக இந்நாட்டின் இந்து சமயமும் தாக்கத்திற்குட்பட்டது. விசேடமாக யாழ்ப்பாணப் பிரதேசத்தில் தீவிரமாக மிஷனரி இயக்கங்கள் பரவிச் சென்றமையால் இந்து சமயம் சவாலுக்கு முகங்கொடுத்தது. இதற்கு எதிர் நடவடிக்கையாக இந்து சமயத் தலைவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளால் இந்து சமய, கலாசாரத்தில் ஓர் எழுச்சி ஏற்பட்டது. அச்சகங்கள் அமைக்கப்பட்டு, புத்தகங்களை அச்சிட்டும், பகிரங்கச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் இந்து சமய மக்களுக்கு அறிவூட்டுதலுடன், இந்து சமய மாணவர்களுக்காகப் பாடசாலைகளை நிறுவுதலிலும் இவ்வியக்கத்தினர் ஈடுபட்டனர். இந்து சமய மறுமலர்ச்சி இயக்கத்துக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் தலைமைத்துவத்தை வழங்கினார். அவர் ''உதயபானு'' எனும் பத்திரிகையை ஆரம்பித்து இந்து சமயத்தினதும் கலாசாரத்தினதும் பெருமையைத் தமிழ் மக்களுக்கு உணர்த்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாலயத்தை உருவாக்கி இந்து மாணவர்களுக்கு சமயச் சார்பான கல்வியை வழங்கினார். இந்து

சமயப் பாடசாலைகளை ஆரம்பிக்கும் இயக்கத்தைத் தொடக்கிவைத்தார். அவரின் மறைவைத் தொடர்ந்து பொன்னம்பலம் அருணாசலம், பொன்னம்பலம் இராமநாதன் எனும் தலைவர்கள் இந்துப் பாடசாலைகளை ஆரம்பிக்கும் இயக்கத்தை மேலும் முன்னெடுத்தனர்.



**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்**

1822 இல் பிறந்த ஆறுமுக நாவலர் மிஷனரி பாடசாலையில் கல்வியைக் கற்றார். பின்னர் மெதடிஸ்ட் சபையின் மத குரு ஒருவரின் கீழ் சேவையாற்றினார். இதனால் மிஷனரி இயக்கம் தொடர்பான அனுபவம் அவருக்கு இருந்தது. இந்து சமய மாணவர்களுக்கு சிறு வயதிலிருந்தே சமயத்தை அனுஷ்டிப்பதற்கும் சமய வழிபாடுகளை கற்பிப்பதற்கும் இந்துப் பாடசாலைகளை உருவாக்கினார். அச்சகம் ஒன்றை நிறுவுவதிலும் அவர் அயராது ஈடுபட்டிருந்தார். கொடையாளிகளின் உதவியுடன் யாழ்ப்பாணத்தில் சைவப்பிரகாச வித்தியாசாலை எனும் பாடசாலையை நிறுவினார்.

மிஷனரிப் பாடசாலைகளில் பெற்ற அனுபவத்தால் அவர் காலத்திற்குப் பொருத்தமான பாடத்திட்டத்தைத் தயாரித்தார். பிற்காலத்தில் யாழ்ப்பாணம் முழுவதிலும் இந்துப் பாடசாலைகள் பல உருவாவதற்கு முன்னோடியாகச் செயற்பட்டார். சைவ பரிபாலன சபை, இந்துக் கல்விச் சபை என்பவற்றை ஆரம்பித்து, இந்துப் பாடசாலைகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளுக்கு வழிகோலினார். தமிழ் மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்வியைப் பெற்றுக் கொடுப்பதற்காக 1872 இல் யாழ்ப்பாணத்தில் சைவ ஆங்கிலப் பாடசாலை ஒன்றை ஆரம்பித்தார். அது மூடப்பட்டாலும் பிற்காலத்தில் அவரது சீடர்களால் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உருவானது. இவ்வாறு இந்து மக்களுக்குப் பெருந்தொண்டாற்றிய அவர் 1879 ஆம் ஆண்டில் மறைந்தார்.

அவரது பணிகளாவன :

- இலங்கையில் இந்து மத மறுமலர்ச்சிக்குத் தலைமைத்துவத்தை வழங்கியமை.
- இந்து சமயப் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாகச் செயற்பட்டமை.
- இந்து சமய, கலாசாரத்தையும் தமிழ் மொழியையும் இலக்கியத்தையும் வளர்ப்பதற்குப் பாடுபட்டமை.
- ‘பால பாடம்’ போன்ற பெயரில் பாடநூல்களை எழுதியதோடு கந்தபுராணம், பெரிய புராணம் எனும் நூல்களையும் பதிப்பித்தமை.



உரு. 3.5 நாவலரின் சீடர்களால் ஆரம்பிக்கப்பட்ட  இந்துசாதனம் பத்திரிகையின் முகப்பு



உரு. 3.6 யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் முகப்பு

**சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள்**



1851 ஆம் ஆண்டில் பிறந்த பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் கொழும்பு றோயல் கல்லூரியில் கற்று, பின்னர் வழக்கறிஞராகத் தொழில் புரிந்தார். இந்து சமய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காகப் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்காகத் தனது சொந்தப் பணத்தையே செலவிட்ட வள்ளல் தன்மை மிக்க தலைவராவார். பரமேஸ்வரா வித்தியாலயம், இராமநாதன் வித்தியாலயம் எனும் பாடசாலைகளை நிறுவி இந்து சமய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார்.

1879 இல் சட்டவாக்கக் கழகத்திற்கு அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். 1910 இல் குறு - மக்கலம் அரசியல் சீர்திருத்தத்தின்படி 1912 இல் படித்த இலங்கையரின் முதலாவது பிரதிநிதியாக சட்டவாக்கக் கழகத்திற்குத் தெரிவானார்.

1915 இல் சிங்கள - முஸ்லிம் கலவரத்தின் போது அரசாங்கத்தால் பௌத்தர்களுக்கு நேர்ந்த அநீதிக்கு எதிராக அவர் குரல் கொடுத்தார்.

**சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள்**

1853 ஆம் ஆண்டில் பிறந்த இவர் சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் சகோதரராவார். கொழும்பு றோயல் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைப் பெற்ற இவர் பிரித்தானியாவின் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் தனது பட்டத்தைப் பெற்றார். தனது பட்டத்திற்காகச் சட்டத்தையும் வரலாற்றையும் கற்றார். இவர் ஒரு சிறந்த அரசியல் வாதியாகவும் சமுக சேவையாளராகவும் பிரபல்யமடைந்தார்.

## 3.4 இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கம்


இலங்கையின் பௌத்த, இந்து சமய மறுமலர்ச்சி இயக்கங்களைப் போலவே இஸ்லாமிய மக்களிடையேயும் ஓர் இயக்கம் ஆரம்பமானது. தமது சமய நம்பிக்கை களுக்குப் பாதகம் ஏற்படும் எனக் கருதிய இஸ்லாமியர், மிஷனரி பாடசாலைகளுக்குச் செல்வதிலிருந்து இயன்றவரை தவிர்த்துக் கொண்டனர். இதனால் கல்வித்துறையில் முஸ்லிம்கள் பின்தங்கும் நிலை ஏற்பட்டது. இதன் பின்னணியிலேயே இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கம் அறிஞர் எம். சி. சித்திலெப்பை அவர்களால் தொடங்கப்பட்டது.



உரு 3.7 மருதானை சாஹிராக் கல்லூரி

**அறிஞர் எம்.சி. சித்திலெப்பை அவர்கள்**

1838 இல் கண்டி கலகெதரையில் பிறந்த வழக்கறிஞர் எம். சி. சித்திலெப்பை இஸ்லாமிய மறுமலர்ச்சிக்குத் தலைமை தாங்கினார். முஸ்லிம்களை அறிவூட்டுவதற்காக **'முஸ்லிம் நேசன்'** எனும் சஞ்சிகையையும் முஸ்லிம் கல்விச் சபையையும் ஆரம்பித்தார். ஆங்கிலேயரால் எகிப்து (ஐக்கிய அரபுக் குடியரசு) நாட்டிலிருந்து நாடு கடத்தப்பட்ட அரபி பாஷா என்பவர் 1883 ஆம் ஆண்டு இந்நாட்டிற்கு வந்தார். இவர் சித்திலெப்பையின் நடவடிக்கைகளுக்குப் பக்கபலமாகச் செயற்பட்டார். மருதானை சாஹிராக் கல்லூரியின் மூலம் இஸ்லாமிய மாணவர்களுக்குச் சமயம் சார்ந்த பொதுக் கல்வியை வழங்க அறிஞர் சித்திலெப்பையே காரண கர்த்தாவாக விளங்கினார். கண்டியிலுள்ள சித்திலெப்பை வித்தியாலயம் இன்றும் இவரது பெயரை நினைவுகூருகிறது. 1898 ஆம் ஆண்டு இவர் மறைந்தார்.



உரு. 3.7 அறிஞர் எம்.சி. சித்திலெப்பை அவர்கள்


The Muslim Friend
முஸ்லிம் நேசன்

உரு. 3.8 அறிஞர் எம்.சி. சித்திலெப்பை அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட முஸ்லிம் நேசன் பத்திரிகையின் முகப்பு


### டி. பீ. ஜாயா

1890 ஜனவரி மாதத்தில் கலகெதரையில் பிறந்தார். வேல்ஸ் இளவரசர் கல்லூரியிலும் கொழும்பு ஆனந்தா கல்லூரியிலும் ஆசிரியராகப் பணியாற்றிய இவர், அங்கு பெற்ற அனுபவங்களைக் கொண்டு கொழும்பு சாஹிராக் கல்லூரியின் அதிபராகக் கடமை யாற்றினார். பிற்காலத்தில் நாடெங்கும் சாஹிராக் கல்லூரிகள் உருவாகுவதற்காக செயற்பட்டார். ‘சிலோன் முஸ்லிம் ரிவிவ்’ சஞ்சிகையில் தொடர்ச்சியாக எழுதியதன் மூலம் சமூக முன்னேற்றத்திற்குப் பாடுபட் டார். இலங்கை சட்டவாக்கக் கழக உறுப்பினரா கவும் பின்னர் முதலாவது பாராளுமன்றத்தில் அமைச்சராகவும் பணியாற்றினார். சிங்கள, தமிழ் தலைவர்களுடன் சேர்ந்து சுதந்திரப் போராட்டத்திலும் முன்னணியில் திகழ்ந்தார்.


உரு 3.9 டி.பீ ஜாயா அவர்கள்

**செயற்பாடு**

தேசிய, சமய மறுமலர்ச்சிக்குத் தலைமை தாங்கிய ஒருவரைப்பற்றி வகுப்பில் சொற் பொழிவு ஒன்றை நிகழ்த்துக.



# 4 இந்திய சுதந்திரப் போராட்ட இயக்கம்



## அறிமுகம்

நாடுகாண் பயணங்களின் விளைவாக 1498 ஆம் ஆண்டு போர்த்துக்கேய இனத்தவரான வஸ்கொடகாமா உள்ளிட்ட குழுவினர் இந்தியாவை வந்தடைந்தமை ஆசிய வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாகும். இப்பயணத்தின் பின்னர் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், பிரான்சியர் போன்றோர் வெவ்வேறு காலகட்டங்களில் இந்தியாவுக்கு வருகை தந்து அங்கு கரையோரப் பிரதேசங்களில் தமது ஆதிக்க முகாம்களைக் கட்டியெழுப்பினர். மேற்குறிப்பிட்ட ஐரோப்பியர்களுள் இந்தியாவில் நிலையான அரசியல் அதிகாரத்தை நிலைநாட்டியவர்கள் ஆங்கிலேயர் ஆவர். இவர்கள் பல்வேறு உத்திகளைக் கையாண்டதன் மூலம் முழு இந்தியாவிலும் தமது அதிகாரத்தைப் பரப்பி அதனை பிரித்தானியாவின் குடியேற்ற நாடாக்கிக் கொண்டனர். இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆட்சிக்கு எதிராக 19 ஆம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதியில் தேசிய சுதந்திர இயக்கமொன்று ஆரம்பிக்கப்பட்டதோடு அடுத்த நூற்றாண்டின் முன்னரைப்பகுதியில் அது தீவிர தேசியவாத இயக்கமொன்றாக வளர்ச்சியடைந்தது. பல்வேறு மொழிகளைப் பேசும், பல்வேறு இனங்களைச் சேர்ந்த இந்தியர்கள் தமது தாய் நாட்டின் விடுதலைக்காகத் தேசிய உணர்வுடன் ஒன்றுபட்டு எழுந்து நின்றமை இந்திய சுதந்திரப் போராட்டத்தின் விசேட பண்பொன்றாகும். இக்காரணங்களால் அது ஏனைய ஆசியக் குடியேற்ற நாடுகளின் சுதந்திர இயக்கங்களுக்கு முன்மாதிரியாய் அமைந்தது. இந்த அத்தியாயத்தில் இந்தியா மீதான ஐரோப்பியரின் தாக்கம், ஆங்கிலேயர் இந்தியாவில் ஆதிக்கத்தை நிலைநாட்டுதல், இந்திய சுதந்திரப் போராட்டத்தின் இயல்புகள் மற்றும் அப்போராட்டத்தில் முன்னின்று உழைத்த தலைவர்கள் பற்றிக் கூடிய கவனம் செலுத்தப்படுகின்றது.

## 4.1 இந்தியாவில் ஐரோப்பியரின் செல்வாக்கு

போர்த்துக்கேயரின் இந்திய வருகையின் பின்னர் இந்து சமுத்திரத்தை அண்டி அதுவரையில் இடம்பெற்று வந்த அராபியரின் வர்த்தக நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. போர்த்துக்கேயருக்குப் பின் ஒல்லாந்தர், ஆங்கிலேயர் மற்றும் பிரான்சிய இனத்தவர்கள் இந்தியாவுக்கு வருகை தந்ததன் காரணமாக வியாபார நடவடிக்கைகள் மற்றும் அரசியல் அதிகாரத்தைப் பரவலாக்குதல் தொடர்பில் ஐரோப்பியர் மத்தியில் மோதல்கள் எழுந்தன. அச்சந்தர்ப்பத்தில் ஐரோப்பிய இனத்தவர்கள் சிலர் இந்தியாவின் கரையோரப் பிரதேசங்களில் வர்த்தகக் களஞ்சியசாலைகளை அல்லது கோட்டைகளை நிறுவியிருந்தமையால் அவரவர்களுக்கிடையே ஏற்பட்ட மோதல்கள் இந்தியா மீதும் பாதிப்பை ஏற்படுத்தின. ஆசியாவிற்கு வந்த ஆரம்ப காலப்பகுதியில் வர்த்தகத்தால் இலாபமீட்டுதல், மதத்தைப் பரப்புதல் போன்றவற்றில் ஐரோப்பியரின் முக்கிய கவனம் இருந்திருந்தாலும் ஐரோப்பியர் மத்தியில் மோதல்கள் ஏற்பட்டதோடு அரசியல் அதிகாரத்தைப் பரவலாக்குவதில் அவரவர்களுக்கிடையே தீவிர ஆர்வமொன்று ஏற்பட்டது. இந்தியாவில் அரசியல் அதிகாரத்தை நிலைநாட்டுவதில் ஆங்கிலேயர் ஏனைய ஐரோப்பியர்களை விடவும் முன்னணியில் திகழ்ந்தனர். அதன் விளைவாக இந்தியா பிரித்தானியாவின் குடியேற்ற நாடானது.

### போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், பிரான்சியர் ஆகியோரின் இந்திய வருகை

வஸ்கொடகாமா இந்தியாவுக்கு வந்த காலப்பகுதியில் அந்நாட்டில் அரசியல் ஒருமைப்பாடொன்று காணப்படவில்லை. தெற்கில் நிலவிய விஜயநகரப் பேரரசைத் தவிர நாட்டுக்குள் பல பிரதேசங்களில் சிற்றரசுகள் காணப்பட்டன. அதேபோன்று இந்தியாவின் கரையோரப் பிரதேசங்களிலும் கள்ளிக்கோட்டை, கோவா போன்ற சிற்றரசுகள் சிலவற்றைக் காணமுடிந்தது. இவ்வரசுகளுக்கிடையே ஒருமைப் பாடொன்று காணப்படாமை போர்த்துக்கேயர் இந்தியாவின் கரையோரப் பிரதேசங்கள் பலவற்றில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்வதற்கு உதவியாய் அமைந்தது.

1509 ஆம் ஆண்டில் கீழைத்தேய போர்த்துக்கேய அரசப் பிரதிநிதியாக நியமனம் பெற்றுவந்த அல்போன்ஸ் டி அல்பகூர்க் இந்தியாவிலும் மற்றும் இந்து சமுத்திர வலயத்திலும் போர்த்துக்கேய ஆதிக்கம் பரவலடைவதற்கு பாரிய சேவையாற்றியுள்ளார். 1510 இல் கோவாவைக் கைப்பற்றி அதனைக் கீழைத்தேய போர்த்துக்கேய மத்திய நிலையமாக்கிக் கொண்டதுடன் இந்து சமுத்திரத்தில் போர்த்துக்கேய வர்த்தக ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டார். அடுத்து வந்த காலப்பகுதிகளில் இந்தியாவின் பல பிரதேசங்களில் போர்த்துக்கேயர் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டினர். எவ்வாறாயினும் கரையோரப் பிரதேசங்கள் தவிர்ந்த நாட்டின் உள்ளகப் பகுதிகளில் ஆட்சியை நிலைநிறுத்துவதற்கு அவர்களால் இயலவில்லை. எனினும் கோவாவை மத்திய நிலையமாகக் கொண்டு நூற்றாண்டுக்கு மேலான காலம் இந்து சமுத்திரத்தில் வர்த்தக ஏகாதிபத்தியத்தைத் தமதாக்கிக் கொண்டனர்.

இந்தியக் கரையோரப் பிரதேசங்களில் நிலவிய போர்த்துக்கேயரின் ஆதிக்கத்திற்கு எதிராக முதல் தடவையாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது ஒல்லாந்தர்களாலேயாகும். 1602 ஆம் ஆண்டு ஒல்லாந்து கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியை உருவாக்கிக் கொண்டு **(VOC)** இந்து சமுத்திரத்திற்கு பலம் வாய்ந்த கப்பற் படையொன்றை அனுப்புவதற்கு ஒல்லாந்தர் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ஒல்லாந்தரின் வருகையோடு வர்த்தகம் மற்றும் அரசியல் அதிகாரத்தைப் பரப்புவதில் போர்த்துக்கேயருடன் மோதல்கள் ஏற்பட்டன. ஒல்லாந்தரின் கவனம் முதலில் வாசனைத் திரவியங்கள் அதிகம் விளையும் தென்கிழக்காசியப் பிரதேசங்கள் மீது திரும்பியது. அந்நாடுகளிலிருந்து போர்த்துக்கேயரை விரட்டியதன் பின் அவர்களின் கவனம் இந்தியா மீது திரும்பியது. போர்த்துக்கேயரின் ஆதிக்கத்தைப் பரவலாக்குவதற்கு அல்பகூர்க் நடவடிக்கை மேற்கொண்டதுபோல, ஆசியாவில் ஒல்லாந்தரின் ஆதிக்கத்தைப் பரப்புவதில் பீட்டர் சேர் கூன் எனும் ஒல்லாந்த இனத்தவனின் பாரிய உதவி கிட்டியது. இதற்கமைய இந்தியாவில் குஜராத், வங்காளம், ஒரிஸா, பீகார் போன்ற பிரதேசங்களில் ஒல்லாந்தர் ஆதிக்கம் பரவியது.

பிரித்தானியாவைத் தமது தாயகமாகக் கொண்ட ஆங்கிலேயர், பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியை நிறுவிக் கொண்டு 17 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆசியா வுக்கு வருகை தந்தனர். ஆரம்ப காலப்பகுதியில் ஜாவா, சுமாத்ரா போன்ற பிரதேசங்கள் மீது ஆங்கிலேயரின் கவனம் திரும்பினாலும் ஒல்லாந்தருடன் ஏற்பட்ட மோதல்களை அடுத்து அவர்களது கவனம் இந்தியா மீது திரும்பியது. ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வரும்போது அங்கு பலம் வாய்ந்த பேரரசாக மொகலாயப் பேரரசு விளங்கியது. இதன் காரணமாக மொகலாயப் பேரரசனான ஜஹாங்கீரின் அனுமதியுடன் 1613 ஆம் ஆண்டு அவர்கள் சூரத்தில் வர்த்தகக் களஞ்சியசாலையொன்றை நிறுவினர். இவ்வாறு அடுத்த டுத்த காலப்பகுதிகளில் இந்தியாவில் அகமதாபாத், ஆக்ரா, சென்னை போன்ற பல பிர தேசங்களில் அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்வதில் ஆங்கிலேயர் வெற்றியீட்டினர். இங்கிலாந்தின் மன்னன் 2 ஆம் சார்ள்ஸ் போர்த்துக்கேய இளவரசியான கத்தரினை திருமணம் செய்து கொண்டதன் விளைவாக போர்த்துக்கேயர் தம்வசமிருந்த மும்பாயை நன்கொடையாக ஆங்கிலேயரிடம் கையளித்தனர்.


பிரான்சியரின் கவனம் இந்தியா மீது திரும்பியது ஏனைய ஐரோப்பியரின் வருகையின் பின்னராகும். 1664 ஆம் ஆண்டு பிரான்சிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியை நிறுவிக் கொண்ட பிரான்சியர், 1668 ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு வருகை தந்து சூரத்தில் வர்த்தகக் களஞ்சியசாலையொன்றை நிறுவிக் கொண்டனர். அதன்பின் பாண்டிச்சேரி, காரைக்கால், சந்திரநாகூர் போன்ற பல பிரதேசங்களில் பிரான்சியக் கோட்டைகள் நிறுவப்பட்டன.

### மொகலாயப் பேரரசு



உரு 4.1 தாஜ்மஹால்

மொகலாயப் பேரரசுக்கான அத்திபாரம் பாபர் எனும் ஆட்சியாளனால் இடப்பட்டது. 1526 ஆம் ஆண்டில் வட இந்தியப் பிரதேசங்கள் பல கைப்பற்றப்பட்டபின் அங்கு தனியானதொரு ஆட்சி நிறுவப் பட்டது. பாபரின் பேரனான மகா அக்பர் மொகலாய அரசை பேரரசொன்றாக மாற்றினான். 1556 - 1605 வரையான காலப் பகுதியில் ஆட்சியாளனாக விளங்கிய அவன் வட இந்தியாவின் பாரிய பிரதேசமொன்றுக்கு தனது அதிகாரத்தைப் பரவலாக்கினான். அக்பரின் பின் ஆட்சிக்கு வந்த ஜஹாங்கிர் மற்றும் சாஜஹான் போன்ற அரசர்களும் சிறந்த மொகலாயப் பேரரசர்கள் ஆவர். மன்னன் சாஜஹான் தாஜ்மஹால் என்னும் சிறப்பு வாய்ந்த கட்டடத்தைக் கட்டுவித்தான். அவனுக்குப் பின் ஆட்சிக்கு வந்த ஔரங்கசீப்பின் ஆட்சிக்காலத்தில் மொகலாயப் பேரரசு வீழ்ச்சியடையத் தொடங்கியது.




தேசப்படம் 4.1 இந்தியாவில் ஐரோப்பியர் ஆதிக்கம் பரவுதல்

### இந்தியா பிரித்தானியாவின் குடியேற்ற நாடாக்கப்பட்டமை

ஆங்கிலேயரும் பிரான்சியரும் ஐரோப்பாவில் பல்வேறு சந்தர்ப்பங்களில் மோதல்களை ஏற்படுத்திக் கொண்ட இரு தரப்பினர் ஆவர். இதனால் பிரான்சியர் இந்தியாவுக்கு வந்தமை அங்கிருந்த ஆங்கிலேயராட்சிக்கு ஒரு சவாலாக அமைந்தது. 18 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியளவில் கீழைத்தேசங்களில் ஒல்லாந்தரினதும் போர்த்துக்கேயரினதும் ஆதிக்கம் வீழ்ச்சி கண்டிருந்தது. இதன் காரணமாக இந்தியாவில் உள்நாட்டு ஆதிக்கத்தை நிலைநிறுத்திக்கொள்வது தொடர்பில் ஆங்கிலேயருக்கும் பிரான்சியருக்குமிடையே மோதலொன்று ஏற்பட்டது.

இந்தியாவின் இறுதி மொகலாயப் பேரரசனான ஔரங்கசீப் 1707 ஆம் ஆண்டு மரணமடைந்ததைத் தொடர்ந்து அதுவரை இந்தியாவில் பாரிய பிரதேசமொன்றில் அதிகாரத்தை நிலைநாட்டியிருந்த மொகலாயப் பேரரசு வீழ்ச்சியடைவதற்கான பின்னணி உருவானது. அதன் விளைவாக அதுவரை காலமும் மொகலாய ஆதிக்கத்தைப் பொறுத்துக் கொண்டிருந்த இந்தியாவின் பல்வேறு இனத்தவரும் சுயாதீன இராச்சியங்களை உருவாக்கிக் கொண்டமையால் இந்தியாவில் பிரதேச அரசுகள் பல தோற்றம் பெற்றன. இச்சிற்றரசர்களுக்கிடையில் ஒருமைப்பாடு காணப்படாமை ஆங்கிலேயருக்கு மிகவும் சாதகமாய் அமைந்தது. ஆங்கிலேயரிடமிருந்த கடற்படைப் பலமும் ஆங்கில அரசு பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனிக்குத் தேவையான ஆதரவை வழங்கியமையும் பிரான்சியருக்கு எதிராகப் போராடுவதில் ஆங்கிலேயருக்கு உதவியாய் அமைந்தது.

இதன்படி சென்னையை மையமாகக் கொண்டு பிரித்தானியரும், பாண்டிச்சேரியை மையமாகக் கொண்டு பிரான்சியரும் இந்தியாவின் கரையோரப் பிரதேசங்களில் ஆட்சியை நிலைநிறுத்திக் கொள்வதில் போராட்டங்களில் ஈடுபட்டனர். 1761 இல் பாண்டிச்சேரி ஆங்கிலேயர் வசமானதோடு ஆங்கிலேயருக்கும் பிரான்சியருக்கும் மத்தியில் எற்பட்ட மோதல்கள் முடிவுக்கு வந்தன. அதைத் தொடர்ந்து இந்தியாவில் பிரான்சியரின் ஆதிக்கம் வீழ்ச்சியுறத் தொடங்கியது.

இந்தியாவின் உள்ளகப் பிரதேசங்களில் பிரித்தானியரின் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ளும் செயற்பாடு வங்காளத்தில் ஆரம்பமானது. வங்காளம் மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்கள் மத்தியில் நிலவிய ஒற்றுமையின்மை மற்றும் அதிகாரப் போட்டி என்பவற்றைப் பயன்படுத்தி பிரித்தானியர் 18 ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் வங்காளத்தைப் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர். அதன்பின் இந்தியாவுக்கு நியமனம் பெற்றுவந்த ஆங்கிலேய ஆளுநர்கள் யுத்தங்கள் மூலமாகவும் வேறு தந்திரோபாயங்கள் மூலமாகவும் இந்தியாவில் தமது ஆதிக்கத்தைப் பரப்ப நடவடிக்கைகள் மேற்கொண்டனர். இங்கு யுத்தங்கள் மூலம் பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொள்வதற்கு மேலாக உதவி ஒப்பந்தங்கள் மற்றும் விடுதலைப் பத்திரங்கள் போன்ற உத்திகளையும் கையாண்டமை தெரியவருகின்றது.

உதவி ஒப்பந்த முறையின் கீழ் உள்ளக அதிகாரப் போட்டி மற்றும் வெளிவாரியான எதிரிகளின் அச்சுறுத்தல்கள் காணப்பட்ட சுதேச ஆட்சியாளர்களுடன் ஆங்கில கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி ஒப்பந்தங்களை மேற்கொண்டு மேற்குறிப்பிட்ட அரசுகளின் பாதுகாப்பிற்கென பிரித்தானிய இராணுவத்தை நிலைகொள்ளச் செய்தது. ஒப்பந்தப் பிரகாரம் பிரித்தானியரின் சேவைக்காக, சேவையைப் பெற்றுக்கொண்ட அரசுகள் குறிப்பிட்ட தொகைப் பணத்தைச் செலுத்தத் தவறுகின்றபோது அவ்வரசின் ஒரு பகுதி பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனிக்கு உரித்தாகிவிடும். இந்த உத்தியின் மூலம் பிரித்தானியர் ஹைதராபாத், மைசூர் உட்பட இந்தியப் பிரதேசங்கள் பலவற்றைக் கைப்பற்றிக் கொண்டனர்.

விடுதலைப் பத்திரங்கள் மூலமாக சட்டரீதியாக அரச பரம்பரையைச் சேர்ந்த, அரச வாரிசின்றி மரணிக்கும் ஆட்சியாளர்களுடைய அரசுகள் வர்த்தகக் கம்பனிக்கு உரித்துடையவை என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. இம்முறையின்கீழ் ஜெய்ப்பூர், நாக்பூர் போன்ற பல சிற்றரசுகளை ஆங்கிலேயர் கைப்பற்றிக் கொண்டனர். இவ்வாறு போர்களினாலும் வெவ்வேறு உத்திகள் மூலமாகவும் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியளவில் முழு இந்தியாவையும் அடிமைப்படுத்திக் கொள்வதில் பிரித்தானியர் வெற்றி கண்டனர்.

### 1857 சிப்பாய்க் கலகம்



உரு 4.2 சிப்பாய் வீரர்கள்

ஆங்கிலேயரின் கீழ் இராணுவ சேவையில் இணைக்கப்பட்டிருந்த இந்தியப் படை வீரர்கள் சிப்பாய் இராணுவம் அல்லது சிப்பாய் வீரர்கள் என அழைக்கப்பட்டனர். இந்தியா மிகப்பெரிய நாடானபடியால் அந்நாட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் ஆங்கிலப் படை மாத்திரம் போதுமானதாக இருக்கவில்லை. இதன் காரணமாக இந்தியாவிலிருந்த ஆங்கிலப் படையைப் போன்று மும்மடங்களவிலான இந்தியர்கள் அந்நாட்டுப் படையுடன் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.




தேசப்படம் 4.2 சிப்பாய்க் கலகம் பரவிய பிரதேசங்கள்

சிப்பாய்கள் என அழைக்கப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட இந்தியர்களில் பெரும்பாலானோர் இந்துக்களும் முஸ்லிம்களும் ஆவர். இச்சிப்பாய்களால் 1857 ஆம் ஆண்டு ஆங்கிலேயரின் ஆட்சிக்கு எதிராகப் பாரிய கிளர்ச்சியொன்று ஆரம்பிக்கப்பட்டது. இது சிப்பாய்க் கலகம் என அழைக்கப்பட்டது.

கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி முன்னெடுத்துச் சென்ற ஆட்சி தொடர்பில் ஆரம்பம் முதலே இந்தியர்கள் மத்தியில் எதிர்ப்புக் கிளம்பியிருந்தது. இதனால் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் ஆட்சிக்கெதிராக இந்தியாவில் இடையிடையே கிளர்ச்சிகள் ஏற்பட்டன. 1763 - 1856 வரையான காலப்பகுதியில் அவ்வாறான கிளர்ச்சிகள் இருபத்தைந்திற்கும் அதிகமாக ஏற்பட்டுள்ளன. இந்தியாவில் வெவ்வேறு பிரதேசங்களில் இடையிடையே தோன்றிய இக்கிளர்ச்சிகள் பரவலடையும் முன்பே ஆங்கிலேயரால் அடக்கப்பட்டுவிட்டன. எனினும் 1857 ஆம் ஆண்டு சிப்பாய்களால் ஆரம்பிக்கப்பட்ட கிளர்ச்சி படை வீரர்களுக்குள் மாத்திரம் மட்டுப்படுத்தப்படாது பொதுமக்களிடையேயும் பரவியது. இக்கிளர்ச்சியை அடக்குவதற்கு ஆங்கிலேயர் பெருஞ் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பெரும்பாலான பிரதேசங்களில் சிப்பாய்கள் பொதுமக்களுடன் இணைந்து ஆங்கிலேயரை வெளியேற்றி சுதேசிகளின் ஆட்சியொன்றைத் தாபித்துக்கொள்ள முயன்றனர்.



உரு 4.3 சித்திரக் கலைஞனின் பார்வையில் சிப்பாய் கலக நிலவரமொன்று

இதனால் 1857 ஆம் ஆண்டில் நடைபெற்ற கலகம் இந்தியர்கள் மத்தியில் சுதந்திர உணர்வு மேலோங்குவதற்குக் காரணமாக அமைந்ததோடு அது இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முக்கிய மைல்கல்லாகவும் கருதப்படுகின்றது. 1857 ஆம் ஆண்டு சிப்பாய் கலகம் ஏற்படுவதற்கு ஏதுவாய் அமைந்த காரணிகள் பலவாகும்.

**கலகம் ஏற்படுவதற்கு ஏதுவாயமைந்த சில காரணிகள்**

- ❖ ஆங்கிலேயர் இந்தியாவில் பிரதேசங்களைக் கைப்பற்றியபோது பின்பற்றிய கொள்கைகள் தொடர்பில் இந்தியர்கள் மத்தியில் நிலவிய எதிர்ப்பு.
- ❖ பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் இலாபம் கருதி முன்னெடுக் கப்பட்ட ஆட்சி தொடர்பில் இந்தியர்கள் மத்தியில் நிலவிய வெறுப்பு.
- ❖ வர்த்தகக் கம்பனியின் பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக தேசிய கைத்தொழில்கள் வீழ்ச்சி கண்டமை மற்றும் வேலையின்மை.
- ❖ சுதேசிகளின் பாரம்பரியம், நம்பிக்கைகளைக் கவனத்திற் கொள்ளாது கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்கு பிரித்தானியரின் ஆதரவு கிடைத்தமை.
- ❖ சிப்பாய்கள் மத்தியில் ஆங்கிலேயர் தொடர்பில் நிலவிய வெறுப்பு.

### கலகத்தின் இயல்புகள்


உரு 4.4 மங்கல் பாண்டே

சிப்பாய் கலகம் ஏற்படுவதற்கான உடனடிக் காரணம் படையணிக் குள்ளேயே உருவானது. புதிதாகத் தயாரிக்கப்பட்ட என்பீல்ட் வகைத் துப்பாக்கிகள் சிப்பாய்களின் பயன் பாட்டிற்காக ஆங்கிலேயரால் அறி முகப்படுத்தப்பட்டன. அத்துப் பாக்கிகளுக்கான தோட்டாக்கள் உறைகளில் போடப்பட்டிருந்த தோடு அவ்வுறைகளை வாயினால் கடித்து திறப்பதன் மூலமே அத் தோட்டாக்களை வெளியில் எடுக்கக்கூடியதாயிருந்தது. அதே வேளை அத்தோட்டாக்களில் பன்றியினதும் பசுவினதும் கொழுப்பு பூசப்பட்டிருப்பதாகச் சிப்பாய்கள் மத்தியில் சந்தேகம் நிலவியது. இந்துக்கள் பசுவைப் புனிதமாகவும் முஸ்லிம்கள் பன்றியை அசுத்த விலங்காகவும் கருதினர். அவ்வாறான விலங்குகளின் கொழுப்புப் பூசப்பட்ட தோட்டாக்களுள்ள உறையினை வாயினால் திறக்கச் செய்வது தம்மை அவமானப்படுத்தும் செயலாகும் எனப் படைவீரர்கள் நம்பினர். இதன் காரணமாக சிப்பாய்கள் அப்புதிய துப்பாக்கிகளைப் பயன்படுத்த மறுப்புத் தெரிவித்தனர். எனவே ஆங்கிலேயப் படையதிகாரிகள் அச்சிப்பாய்களுக்கெதிராக தண்டனை பிறப்பித்ததன் காரணமாக கலகம் மேலும் தீவிரமடைந்தது. இதுவே சிப்பாய்க் கலகத்திற்கான உடனடிக் காரணமாகும். இதற்கிடையில் **மங்கல் பாண்டே** எனும் சிப்பாய் ஆங்கிலப் படையதிகாரி ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டான். ஆங்கிலேயர் மங்கல் பாண்டேவுக்கு மரண தண்டனை வழங்கியதன் காரணமாக சிப்பாய் வீரர்களின் வெறுப்பு மேலும் தீவிரமடைந்தமை தெரிகின்றது. அதன் விளைவாக 1857மே மாதம் 10 ஆம் திகதி மீரட் படை முகாமிலிருந்த சிப்பாய்கள் ஆங்கிலப் படையதிகாரிகள்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு, கைதிகளாக இருந்த ஏனைய சிப்பாய் வீரர்களை விடுவித்துக் கொண்டு கிளர்ச்சியை ஆரம்பித்தனர்.

ஆங்கிலேயப் படை வீரர்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த சிப்பாய்கள் டில்லிமீது படையெடுத்துக் குறுகிய காலத்திற்குள் அந்நகரைக் கைப்பற்றிக் கொண்டதால் படைவீரர் மத்தியில் தோன்றிய இக்கலகம் பொதுமக்கள் மத்தியிலும் பரவியது. அப்போது டில்லியிலிருந்த மொகலாய ஆட்சியாளனான **பகதுர்ஷாவை** இந்தியாவின்

பேரரசனாகப் பிரகடனப்படுத்திய கலகக்காரர்கள் ஆங்கிலேய ஆட்சிக்கெதிராகக் கிளர்ந்தெழுந்தனர். டில்லியில் ஏற்பட்ட இவ்வரசியல் போராட்டம் பற்றி இந்தியா முழுவதும் பேசப்பட்டமையால் வட இந்தியாவின் பல பிரதேசங்களுக்கும் இது பரவியது. அப்பிரதேசங்களில் இருந்த சுதேச ஆட்சியாளர்களும் கலகக்காரர்களுடன் இணைந்து ஆங்கிலேய ஆட்சிக்கெதிராகப் போராட்டத்தை முன்னெடுத்ததன் காரணமாக ஆங்கிலேயர் பெருஞ் சிரமங்களுக்கு முகங்கொடுத்தனர். இவ்வாறு ஏறக்குறைய ஒரு வருட காலமளவில் வட இந்தியாவின் பல பிரதேசங்கள் கலகக்காரர் களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்தன.

டில்லி போன்ற நகரொன்று கலகக்காரர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தமையை ஆங்கிலேயர் அவமானமாகக் கருதினர். இதனால் முழுப் பலத்தையும் பிரயோகித்து போரிட்ட ஆங்கிலப் படை வீரர்கள் மீண்டும் டில்லியைக் கைப்பற்றிக் கொண்டனர். அப்போது கலகக்காரர்களுக்குப் பாரிய சேதம் ஏற்பட்டது. அதன்பின்பு ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து விடுபட்டுச் சென்றிருந்த ஒவ்வொரு பிரதேசத்திலும் கலகத்தை அடக்கி அப்பிரதேசங்களை மீண்டும் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வருவதில் பிரித்தானியர் வெற்றி கண்டனர். இவ்வாறு 1858 ஆம் ஆண்டு ஜூலை மாதமளவில் கலகம் தோல்வியுற்று மீண்டும் வட இந்தியப் பிரதேசங்களில் ஆங்கிலேயர் தமது அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொண்டனர்.

**கலகம் தோல்வியுற்றமைக்கான காரணங்கள்**

ஆங்கிலேயர் ஆட்சிக்கெதிராக இந்தியர் மத்தியில் நிலவிய வெறுப்புக் காரணமாகக் கலகம் வேகமாகப் பரவினாலும் தாம் கைப்பற்றிக்கொண்ட பிரதேசங்களைத் தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்வதில் கலகக்காரர்கள் தோல்வி கண்டனர். கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் நிலையான ஆட்சியொன்றை நிறுவிக்கொள்வதற்குத் தேவையான முன்னனுபவமோ நீண்டகால வேலைத்திட்டமொன்றோ கலகக்காரர்களிடத்தில் காணப்படவில்லை. ஆங்கிலேயரின் ஆயுதக் களஞ்சியங்களிலிருந்து கைப்பற்றிய துப்பாக்கிகள் தவிர தேவையான யுத்த உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வழிமுறைகள் எதுவும் கலகக்காரரிடத்தில் காணப்படவில்லை. இதன் காரணமாக கலகக்காரர்களுக்கு ஆங்கிலப்படை வீரர்களுடன் மிகவும் இக்கட்டான சூழ்நிலையின் கீழ் போராடவேண்டியேற்பட்டது. இந்தியப் படைவீரர்களில் அரைப்பகுதியினர் தொடர்ந்தும் ஆங்கிலேயருக்கு ஆதரவாக இருந்தமையும் இந்திய மக்களில் ஒரு சாரார் கலகத்தில் இணைந்து கொள்ளாமையும் கலகம் தோல்வியடைவதற்கு ஏதுவாக அமைந்தது. கலகத்தில் பங்குகொண்ட இந்தியர் மத்தியில் ஆங்கில எதிர்ப்பு, அர்ப்பணிப்பு மற்றும் போராட்ட சுபாவம் போன்றன குறைவின்றிக் காணப்பட்டாலும் அவர்களின் வீரத்தால் மாத்திரம் ஆங்கிலேயர்களின் தாக்குதல்களை முறியடிக்க முடியாதிருந்தது. இந்நிலையில் கலகம் தோல்வியடைவதற்கு ஏதுவாய் அமைந்த காரணங்களைச் சுருக்கமாகக் கீழ்வருமாறு குறிப்பிட முடியும் :

- ❖ பொதுத் திட்டமிடலோ எதிர்கால வேலைத்திட்டமோ கலகக்காரரிடத்தில் காணப்படாமை.
- ❖ ஒருங்கிணைந்த தலைமைத்துவம் இன்மை
- ❖ ஆங்கிலப் படையை எதிர்கொள்ளத் தேவையான போராயுதங்கள் இல்லாதிருந்தமை.
- ❖ போராளிகள் மத்தியில் தகவல் பரிமாற்றத் தொடர்பாடல் வலுவின்றி இருந்தமை.
- ❖ இந்தியர்களில் ஒரு சாரார் ஆங்கிலேயருக்கு ஆதரவாயிருந்தமை.

### கலகத்தின் விளைவுகள்

1857 ஆம் ஆண்டு கலகம் தோல்வியுற்றாலும் இந்தியாவின் எதிர்காலம் தொடர்பில் செல்வாக்குச் செலுத்தும் பல பெறுபேறுகள் அதன்மூலம் கிடைக்கப்பெற்றன. அவ்வாறான பெறுபேறுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- ❖ பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் ஆட்சி முடிவுற்று இந்தியா பிரித்தானிய அரசின் நேரடியான ஆட்சியின்கீழ் வந்தமை.
- ❖ மேலும் இந்தியப் பிரதேசங்களைக் கைப்பற்றாதிருக்கவும் பேரரசர்களின் உரிமைகளை ஏற்றுக்கொள்ளவும் பிரித்தானியா இணங்கியமை.
- ❖ இந்தியர்களுக்கு சமய சுதந்திரத்தை வழங்கியமை.
- ❖ இந்தியர்கள் ஒழுங்கமைக்கப்பட்ட தேசிய இயக்கத்தை முன்னெடுத்துச் செல்ல முன்வந்தமை.

## 4.2 இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முக்கிய அம்சங்கள்

### தேசிய சங்கம் தோற்றுவிக்கப்பட்டமைக்கான பின்னணி

சிப்பாய் கலகம் தோல்வியுற்றதன் பின்னரான அரை நூற்றாண்டு காலப்பகுதியில் பல்வேறு இனத்தவரும் தமது தனித்துவத்தை மறந்து இந்தியர் என்ற வகையில் தேசிய உணர்வினை வளர்த்துக் கொண்டனர். ஆங்கிலேயரின் கீழ் இந்தியாவினுள் மேலைத்தேயக் கலாசாரம் பரவியதன் காரணமாகத் தேசிய கலாசாரத்தைப் பாதுகாப்பது தொடர்பில் இக்காலப்பகுதியில் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளமை தெரிய வருகின்றது. இதனால் சமயம் மற்றும் சமூக சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் நோக்குடன் இயக்கங்கள் பல தோற்றம் பெற்ற விதத்தையும் இக்காலப்பகுதியில் காணக்கூடியதாய் இருந்தது. ஒரு வகையில் இது இந்தியாவில் ஏற்பட்ட சமய கலாசார மறுமலர்ச்சியாகவும் அமைந்தது.

கீழைத்தேய, மேலைத்தேய மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்த பண்டிதரான ராம் மோகன் ரோய் என்பவரே 19 ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் ஆவார். இவரால் தோற்றுவிக்கப்பட்ட **''பிரம்ம சமாஜம்''** எனும் இயக்கம் இந்து சமயத்தவர் மத்தியில் சமய கலாசார எழுச்சி ஏற்பட வழிவகுத்தது. இதன் காரணமாக ராம் மோகன் ரோய் அவர்கள் இந்து சமய மறுமலர்ச்சி இயக்கத்தின் முன்னோடியாகக் கருதப்படுகின்றார். அதேபோன்று இந்து சமய, சமூக சீர்திருத்தங்கள் தொடர்பில் கவனம் செலுத்திய இயக்கங்களுள் **''பிரார்த்தனை சமாஜம்''**, **''ஆரிய சமாஜம்''** என்பனவும் சிறப்பிடம் பெறுகின்றன. இவை தவிர **அகமதியா** மற்றும் **அலிகார்** போன்ற இயக்கங்கள் முஸ்லிம் மக்கள் மத்தியிலும் **சிங் சபை** போன்ற அமைப்புக்கள் சீக்கியர் மத்தியிலும் கலாசார எழுச்சியினை ஏற்படுத்துவதற்கான பங்களிப்பை வழங்கின. மேற்குறிப்பிட்ட இயக்கங்கள் மனித நேயத்துடன் செயற்பட்டதோடு 19 ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் காலத்திற்குப் பொருந்தும் வகையிலான இந்தியச் சிந்தனைகளை உருவாக்குவதிலும் முன்னின்று செயற்பட்டன. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் பெருந்தெருக்கள் மற்றும் தகவல் தொடர்பாடல்துறை வளர்ச்சியடைந்து நிருவாக ரீதியில் நாடு ஒருங்கிணைக்கப்பட்டு இருந்தது. இந்நிலைமை அதுவரை நிலவிய இந்து, முஸ்லிம், வங்காளம், பஞ்சாபி போன்ற மத - இனத் தனித்துவத்தையும் விஞ்சிய விதத்தில் இந்தியத் தேசியவாதத்தைக் கட்டியெழுப்புவதில் துணைநின்றது. சமய மறுமலர்ச்சியின்போது பல்வேறு இன மக்களையும் ஒன்று திரட்டி சொற்பொழிவுகள் நிகழ்த்துதல், பத்திரிகைகள் உள்ளிட்ட அச்சு ஊடகங்களைப் பயன்படுத்தி மக்களை அறிவூட்டுதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் காரணமாக சமய மறுமலர்ச்சியுடன் இணைந்து கல்வி எழுச்சியும் ஏற்பட்டது. இந்தியாவில் புதிய பாடசாலைகளை நிறுவுதல், பெண்களுக்குக் கல்வியினை வழங்குதல், இந்தியப் பெண்களின் சமூக நிலையை மேம்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளில் இக்காலப்பகுதியில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது.

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் ஏற்பட்ட கல்வி வாய்ப்புக் காரணமாக பெரும்பாலான இந்தியர்கள் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று கல்வியைப் பெற்றனர். அதன் மூலமாக ஜனநாயகம், மனித உரிமைகள் என்பன தொடர்பான மேலைத்தேய சிந்தனைகள் பற்றி இந்தியக் கல்விமான்களுக்கு விளக்கம் கிடைத்தது. இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளில் கல்வியைப் பெற்ற இந்தியக் கல்விமான்கள் ஐரோப்பிய நாடுகளில் மக்கள் அனுபவிக்கும் சுதந்திரத்தை மேலாகக் கருதினர். எனினும் இந்தியாவில் பிரித்தானியர் ஆட்சி காரணமாக தாயக மக்களுக்கு அச்சுதந்திரம் கிடைக்கப் பெறாமையையிட்டுக் கவலையடைந்தனர். இந்தியர்கள் எந்தளவு உயர் கல்வியைப் பெற்றிருப்பினும் இதுவரையில் அவர்களுக்கு இந்தியாவில் சிவில் சேவையிலேனும் நுழைவதற்கு ஆங்கிலேயர் இடமளிக்கவில்லை. இதனால் அக்கல்விமான்கள் சுயஉரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகப் பல்வேறு இயக்கங்களைத் தோற்றுவித்து மக்களை அமைப்பு ரீதியாக ஒன்றுபடுத்துவதில் ஈடுபட்டனர். மேலே கலந்துரையாடப்பட்ட காரணிகளின் அடிப்படையில் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்திய மக்கள் மத்தியில் தேசிய உணர்வு வளர்ச்சியடைவதில் செல்வாக்குச் செலுத்திய காரணங்கள் பலவற்றை இனங்காண முடியும்.

**இந்தியர்கள் மத்தியில் தேசிய உணர்வு வளர்ச்சியடைவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் :**

- ❖ பிரித்தானியரின் ஆட்சியின்கீழ் இந்தியா அரசியல் ரீதியில் ஒன்றுபட்டமை, பெருந்தெருக்கள், தகவல் தொடர்பாடல் வசதிகள் வளர்ச்சியடைந்தமை என்பன காரணமாக ஒற்றுமையுணர்வு வளர்ச்சியடைந்தமை.
- ❖ ஆங்கிலேயர் இந்தியர்களை அடிமைகளாக நடத்தியமை.
- ❖ மேலைத்தேயக் கல்வியைப் பெற்ற இந்தியக் கல்விமான்கள் ஊடாக சுதந்திரம், சமத்துவம், ஜனநாயகம் பற்றிய மேலைத்தேய அறிவு இந்தியாவுக்குக் கிடைத்தமை.
- ❖ இந்தியாவின் கல்விகற்ற மத்தியதர வர்க்கத்தினர் பல்வேறு இயக்கங்களைத் தோற்றுவித்து, பொதுசன ஊடகங்களைப் பயன்படுத்தி மக்கள் மத்தியில் தேசிய உணர்வினை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டமை.

### இந்திய தேசிய சங்கம் தோற்றுவிக்கப்பட்டமை

19ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் இந்தியக் கல்விமான்கள், வணிகத் தரப்பினர் ஆகியோர் மத்தியில் எழுந்த அரசியல் ஈடுபாடு காரணமாக இயக்கங்கள் பல தோற்றம் பெற்றன. எனினும் இந்தியா மிகப் பெரிய நாடொன்றானபடியால் இந்தியா முழுவதிலும் அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான பலம் இவ்வியக்கங்கள் எதனிடத்திலும் காணப்படாததோடு, இந்தியா முழுதும் பரவி யிருந்த கல்விமான்களின் அரசியல் எண்ணங்களை ஒரே மேடைக்குக் கொண்டு வரும் இயலுமையும் இல்லாதிருந்தது. இதன் காரணமாக எவ்வித பேதங்களுமின்றி சகல இந்தியர்களும் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடிய இந்தியா முழுவதிலுமாக அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லுமளவிற்குச் சக்தி வாய்ந்த இயக்கமொன்றினைத் தோற்றுவிப்பதன் தேவையொன்று எழுந்திருந்தது.

1885 ஆண்டாகும்போது இந்தியக் கல்விமான்களின் மத்தியில் தேசிய சங்கமொன் றினைத் தோற்றுவித்துக்கொள்வதற்குத் தேவையான பரஸ்பர புரிந்துணர்வையும் ஒற்றுமையையும் வளர்த்துக்கொள்ள முடியுமாயிருந்தது. இதன்படி முழு இந்தியா வையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அவ்வாறன சங்கமொன்றினைத் தோற்றுவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டவர் சிவில் சேவையிலிருந்து ஓய்வு பெற்றிருந்த ஹெலன் ஒக்டேவியன் ஹியும் என்பவராவார். இந்திய தேசிய சங்கத்தின் தோற்றுவிப்பாளரான ஹியுமிற்கு அதற்குத் தேவையான உதவிகள் பிரித்தானிய அரசிடமிருந்து கிடைக்கப்பெற்றன. இந்தியக் கல்விமான்கள் அனைவரும் ஒரே அமைப்பின்கீழ் ஒன்றுபட்டால் அவர்களின் எண்ணங்களை இலகுவாக அரசி னால் அறிந்துகொள்ள முடியும் என ஆங்கிலேயர் எண்ணினர். இதன்படி ஹியுமின்



உரு 4.5 ஹெலன் ஒக்டேவியன் ஹியும்

வழிகாட்டலின்கீழ் 1885 டிசெம்பர் மாதம் இந்தியாவில் பல்வேறு இயக்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய பிரதிநிதிகள் பலர் மும்பையில் ஒன்றுகூடி இந்திய தேசிய சங்கத்தினைத் தோற்றுவித்தனர். இது இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முக்கிய சந்தர்ப்பமொன்றாகும். வங்காள இன சட்டத்தரணியான டபிள்யூ. சீ. பெனர்ஜி இந்திய தேசிய சங்கத்தின் தலைவர் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்ட முதலாவது நபராவார். அன்று முதல் இச்சங்கம் இந்திய அரசியல் போராட்டங்களை முன்னெடுக்கும் பிரதான அரசியல் சங்கமாக உருவெடுத்தது.



உரு 4.6 இந்திய தேசிய சங்கம்

### இந்திய தேசிய சங்கத்தின் நோக்கங்கள்

இந்திய தேசிய சங்கம் அக்காலப் பகுதியில் இந்தியாவில் நிலவிய இன, மத, சாதி பேதங்கள் போன்றவற்றைக் கருத்திற்கொள்ளாது செயலாற்றிய ஓர் இயக்கமாகும். ஆரம்பகாலப்பகுதியில் கல்விமான்கள் மற்றும் வணிகத் தரப்பினருக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்த இவ்வியக்கம் பின்னர் முழு இந்தியாவிலும் பரந்துபட்ட மக்களின் ஆதரவை வென்ற ஒரு பலம் வாய்ந்த சங்கமாக மாறியது. அதேபோன்று இச்சங்கம் 1885 தொடக்கம் 1947 இல் இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைக்கும் வரை அந்நாட்டின் சுதந்திரப் போராட்ட நடவடிக்கைகளுக்குத் தலைமை வகித்த ஒரு அமைப்பாக விளங்கியது. இவ்வாறு ஆறு தசாப்தங்களுக்கு மேலாக அரசியல் போராட்டங்களை முன்னெடுத்த இவ்வியக்கத்தின் நோக்கங்கள் காலத்திற்குக் காலம் விரிவடைந்தன. இறுதிக் காலப்பகுதியில் இவ்வியக்கத்தின் பிரதான நோக்கம் இந்தியாவிற்குப் பூரண சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதாகும். தேசிய சங்கம் தோற்றுவிக்கப்பட்ட ஆரம்ப காலப்பகுதியில் அதன் நோக்கம் சுதந்திரத்தை வெற்றி கொள்ளுதல் வரை பரந்துபட்டிருக்கவில்லை.

மேற்குறிப்பிடப்பட்ட ஆரம்ப காலப்பகுதியில் இந்தியத் தேசிய சங்கத்தின் பிரதான நோக்கங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன :

- ❖ சகல இந்தியர் மத்தியிலும் நட்புறவையும் ஒத்துழைப்பையும் வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- ❖ சாதி, மதம், இனம், பிரதேசம் ஆகிய பேதங்களைக் கருத்திற்கொள்ளாது இந்தியர் மத்தியில் தேசிய உணர்வினை மேம்படுத்துதல்.
- ❖ இந்தியக் கல்விமான்கள் மத்தியில் நிலவுகின்ற கருத்துக்களையும் ஆலோசனைகளையும் ஒன்று திரட்டி சமூக முரண்பாடுகளைக் கண்டறிவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- ❖ இந்திய மக்களின் பொதுநலனிற்காகச் செயலாற்றத் தேவையான எதிர்காலத் திட்டங்களையும் ஆலோசனைகளையும் முன்வைத்தல்.

### இந்தியத் தேசிய சங்கத்தின் செயற்பாடுகள்

இந்தியத் தேசிய சங்கம் தோற்றுவிக்கப்பட்ட ஆரம்ப காலப்பகுதியில் அது சட்டத் தரணிகள், பொறியியலாளர்கள், வைத்தியர்கள் போன்ற படித்த புத்திஜீவிகளுக்கு மாத்திரமே வரையறுக்கப்பட்டிருந்தது. அவ்வேளை சங்கத்தின் உறுப்பினர்களும் கிராமங்களிலன்றி நகரங்களிலிருந்து வந்தோராகவே இருந்தனர். ஆங்கிலேயர் இந்தியாவிற்கு நியாயத்தையும் நீதியையும் பெற்றுத் தருவர் என எண்ணிய அவர்கள் முடிந்தவரை அரசுடன் இணைந்து ஒத்துழைப்புடன் செயலாற்றவே முயன்றனர். இவர்கள் தேசிய சங்கத்தின் மிதவாதிகள் என அழைக்கப்பட்டனர். தேசிய சங்கத்தின் முதல் தலைவரான W.C பெனர்ஜி, அதன் இரண்டாவது தலைவரான தாதாபாய்

நவ்ரோஜி, சுரேந்திரநாத் பெனர்ஜி போன்றோரை மிதவாதிகளுக்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். 1885 - 1905 இடைப்பட்ட காலப்பகுதியில் தேசிய சங்கம் மேற்குறிப்பிட்ட மிதவாதிகளின் செல்வாக்கிற்குட்பட்டிருந்தது. சங்கம் தோற்றுவிக்கப்பட்ட ஆரம்ப காலப்பகுதியில் அரசிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன :

- ❖ சட்டவாக்க சபையை விஸ்தரித்து அதன் அதிகாரங்களைப் பரவலாக்குதல்.
- ❖ சட்ட நிர்வாகசபையில் இந்தியர்களும் பிரதிநிதித்துவம் பெறச் சந்தர்ப்பமளித்தல்
- ❖ சிவில் சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்படும் இந்தியர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
- ❖ சிவில் சேவைக்கான ஆட்சேர்ப்புப் பரீட்சையைப் பிரித்தானியாவில் மட்டுமல்லாது இந்தியாவிலும் நடத்துதல்.
- ❖ இராணுவ நடவடிக்கைகளுக்கான அரச செலவினத்தைக் குறைத்தல்.

தேசிய சங்கத்தின் இக்கோரிக்கைகளை நோக்குமிடத்து ஆட்சி நடவடிக்கைகளில் பங்குகொள்வதற்கு இந்தியர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பினை விரிவாக்கிக் கொள்வதனை இலக்காகக் கொண்டு அவை அமைந்திருந்தமை தெரிகின்றது. கோரிக் கைகளை வென்றெடுக்கும் நடவடிக்கைகளின்போது இச்சங்கம் அதிகாரிகளிடம் மனுத்தாக்கல் செய்தல், அவர்களுடன் கலந்துரையாடுதல், கூட்டங்களை நடத்து தல், எழுத்தூடகங்கள் மூலமாகப் பிரசாரங்களை மேற்கொள்ளுதல் போன்ற அரசை சிரமத்துக்குள்ளாக்காத நடவடிக்கைகளைப் பின்பற்றியது. எனினும் சங்கத்தின் கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையிலான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளா மையின் காரணமாக கோரிக்கைகளை வென்றெடுக்க இவ்வாறான வரையறுக்கப்பட்ட வழிமுறைகள் போதுமானதாக இல்லாமை தெளிவாகத் தெரிகின்றது.

1905 - 1919 காலப்பகுதியில் தேசிய சங்கத்தின் கொள்கைகளில் மட்டுமல்லாது நடவடிக் கைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. இக்காலப்பகுதியில் சங்கத்தின் மிதவாதிகளின் அதிகாரம் வீழ்ச்சியடைந்து தீவிரவாத கொள்கையைப் பின்பற்றிய இளைஞர் கூட்டமொன்று அங்கு அதிகாரத்தைத் தமதாக்கிக் கொண்டமை இம்மாற்றத்திற்குக் காரணமாக அமைந்தது. மிதவாதிகளின் கொள்கைகளை நிராகரித்த இவர்கள் தீவிரவாதிகள் என அழைக்கப்பட்டனர். அரசுடன் இணைந்து ஒத்துழைப்புடன் செயலாற்றுவதை விட சுயாட்சிக்கான கோரிக்கைகளை வென்றெடுக்க வேண்டுமாயின் போராட்டப் பாதையில் செல்வதே சிறந்தது எனத் தீவிரவாதிகள் கருதினர்.

ஆங்கில அரசிடம் கோரிக்கைகளை முன்வைத்தல், கலந்துரையாடலுக்காகப் பிரதி நிதிகளை அனுப்புதல் போன்றன அதிகாரிகள் முன்னிலையில் பணிந்து போகும் ''அரசியல் பிச்சையேந்தல்'' போன்றது என விமர்சித்த இத்தீவிரவாதிகள் தேசிய சங்கத்தைப் போராட்டப் பாதையில் இட்டுச் செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இந்திய சுதந்திரப் போராட்டம் பற்றிய நூல்களை எழுதிய அதிக எழுத்தாளர்களுள் தீவிரவாதச் சிந்தனைகளை வளப்படுத்தியோர் லால், பால் மற்றும்

பால் போன்றோராவர். இதனால் லால் லஜ்பதிராய், பால கங்காதர திலகர், பிபின் சந்திரபோல் போன்றோர் தீவிரவாதத் தரப்பிற்குத் தலைமைத்துவம் வகித்தனர்.

தேசிய சங்கம் தீவிரவாதிகளின் செல்வாக்கிற்குட்பட்டிருந்த வேளையில் பொதுமக்களுடன் இணைந்து போராட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொண்டது. வங்காளத்தைப் பிரித்து வேறாக்குவதற்கு எதிராக எதிர்ப்பு நிலவிய காலப்பகுதியில் பிரித்தானியப் பொருள்களை பகிஷ்கரிக்கும் இயக்கமொன்று ஆரம்பிக்கப்பட்டது. பிரித்தானிய உற்பத்திகளை பகிஷ்கரித்து இந்திய உற்பத்திகளின் பயன்பாட்டை ஊக்குவித்த இவ்வமைப்பு சுதேசி இயக்கம் என அழைக்கப்பட்டது. வங்காளத்தில் ஆரம்பமான இவ்வியக்கத்தை நாடு பூராகவும் விஸ்தரிக்க தேசிய சங்கத் தலைவர்கள் நடவடிக்கைகள் மேற்கொண்டனர்.

இந்திய உற்பத்திகளின் பயன்பாடு ஊக்குவிக்கப்பட்டதன் காரணமாகத் தேசிய கைத்தொழில்களை முன்னேற்றுதல் தொடர்பிலும் ஆர்வமொன்று ஏற்பட்டது. இதனால் சுதேசி இயக்கத்தின் ஊடாக பொருளாதார சுதந்திரம் தொடர்பான சிந்தனையும் வளர்ச்சியடைந்தது. இந்தியர்கள் இந்திய பொருள்களின் பாவனைக்கு பழக்கப்பட்டமையானது சுதந்திரம் பெற்றுகொள்ளப்பட்ட பின்னரும் இந்திய கைத்தொழில்கள் மற்றும் வர்த்தகத்துறை வளர்ச்சியடைவதற்கு ஏதுவாக அமைந்தது.

இந்தியா சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்தவேளை ஆங்கிலேயர்களால் சீர்திருத்தங்கள் சில வழங்கப்பட்டன. 1909 இல் மோர்லி - மின்டோ சீர்திருத்தம், 1919 இல் மொன்டேகு - செம்ஸ்பர்ட் சீர்திருத்தம் போன்றன இதற்கு உதாரணங்களாகும். இவ்வரசியல் யாப்பு சீர்திருத்தங்கள் ஊடாக நிருவாக நடவடிக்கைகளுக்குச் சுதேசிகள் இணைத்துக்கொள்ளப்பட்டமை படிப்படியாக அதிகரிக்கப்பட்டது. எனினும் இச்சீர்திருத்தங்களால் தேசிய சங்கம் திருப்தி கொள்ளவில்லை. 1920 ஆம் ஆண்டளவில் சிறு சீர்திருத்தங்களைப் பெற்றுக்கொள்வதை விட, சுயாட்சியைப் பெற்றுக்கொள்வதே சங்கத்தின் நோக்கமாக அமைந்தது. சுயாட்சி என்பது இந்தியா, பிரித்தானியப் பேரரசின் கீழ் இருப்பதோடு நாட்டின் நிருவாக அதிகாரங்கள் இந்தியர்களுக்குக் கையளிக்கப்படும் ஆட்சிமுறையொன்றாகும். இது ஒரு வகையில் டொமினியன் அந்தஸ்திற்குச் சமனானதாகும். பால கங்காதர திலகர் மற்றும் அனீ பெசன்ட் போன்ற தலைவர்கள் சுயாட்சி எண்ணக்கருவை ஊக்குவித்தவர்களுக்குச் சிறந்த உதாரணமாவர்.

1919 ஆம் ஆண்டளவில் ''ரோலட் சட்டம்'' (ரௌலத் சட்டம்) எனும் பெயரில் விசேட சட்டமொன்றைப் பிறப்பித்து ஆங்கிலேய அரசு இந்தியர்களின் சுதந்திரத்தை மட்டுப்படுத்துவதற்கு முயன்றது. ரோலட் சட்டத்தின்படி எந்தவொரு நபரையும் விசாரணையின்றி இரண்டு வருடங்கள் சிறைப்படுத்தும் அதிகாரம் அரசுக்குக் கிடைத்தது. அதற்கு எதிராக தேசிய சங்கத்தினால் மகாத்மா காந்தியின் ஒத்துழைப்புடன் சத்தியாக்கிரக இயக்கமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. சத்தியத்தையும் சத்தியத்தின் பலத்தையும் காண்பிப்பதன் ஊடாக எதிராளிக்கு சத்தியத்தை உணர

வைத்தல் சத்தியாக்கிரகம் என விவரிக்கப்படுகின்றது. இது மகாத்மா காந்தியால் அறிமுகப்படுத்தப்பட்ட அகிம்சைவாதப் போராட்ட முறைகளிலொன்றாகும். ரோலட் சட்டத்திற்கு எதிராக சத்தியாக்கிரகம் நாடு பூராகவும் பரவியதைத் தொடர்ந்து பாரிய மக்கள் எதிர்ப்பொன்று அதற்குக் கிளம்பியது. இதற்கிடையில் 1919 ஏப்ரல் மாதம் ''அமிர்த் சாகி ஜூலியன்வாலா பாக்'' கில் கூட்டமொன்றிற்கு வருகை தந்த ஆயிரக்கணக்கான நிராயுதபாணிகளான இந்தியர்கள் மீது ஆங்கிலேயப் படை வீரர்களால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இத்துப்பாக்கிச் சூட்டு சம்பவம் காரணமாக 400 பேர் வரையிலான இந்தியர்கள் உயிரிழந்ததோடு, மேலும் பெருந்தொகையானோர் காயமடைந்தனர். இது ''ஜூலியன் வாலா பாக்'' படுகொலை எனப்படுகின்றது.



படம் 4.7 ஜூலியன்வாலா பாக் படுகொலை

1920 ஆம் ஆண்டளவில் ரோலட் சட்டம், ஜூலியன்வாலாபாக் படுகொலை, வங்காளத்தில் இராணுவச் சட்டத்தைப் பிறப்பித்தல் போன்றவை காரணமாக இந்திய மக்கள் மத்தியில் அரச விரோத எண்ணம் தீவிரமடைந்திருந்தது. சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடும் மக்களைப் புறக்கணிப்பதற்கும் அவமானப்படுத்துவதற்கும் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்காது மேலும் அவமானங்களைத் தாங்கிக் கொள்ளுதல் பயந்த கோழைத்தனமாகும் எனப் பெரும்பாலான இந்தியர்கள் கருதினர். அவ்வேளை நிலவிய அரசியல் நிலைமையைப் புரிந்துகொண்ட தேசியச் சங்கம் 1920 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்காமைக்கான வேலைத்திட்டமெனும் ஒத்துழையாமை போராட்டமொன்றை நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டது. 1921 ஜனவரி மாதமளவில் மேற்குறித்த ஒத்துழையாமைப் போராட்டம்

நாடு பூராகவும் பரவியது. ஆங்கிலேயரால் வழங்கப்பட்ட பதவிப் பெயர்கள் மற்றும் பட்டங்களைத் திருப்பிக் கொடுத்தல், வெளிநாட்டுப் பொருள்களைப் பகிஷ்கரித்தல், நீதிமன்றம் உட்பட அரச நிறுவனங்களைப் பகிஷ்கரித்தல், சட்டமன்றத்தைப் பகிஷ்கரித்தல் உட்பட நடவடிக்கைகள் பல இங்கு நடைமுறைப்படுத்தப்பட்டன. மகாத்மா காந்தி, C. R. தாஸ் உட்பட தலைவர்கள் பலர் நாடு பூராகவும் பயணம் மேற்கொண்டு இதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். தேசிய சங்கம் பின்பற்றிய இவ்வாறான அகிம்சைவாதப் போராட்ட உத்திகளால் அரசு பாரிய சிரமங்களை எதிர்கொண்டது. அப்போராட்டங்கள் காரணமாக பொதுமக்களுக்கு மேன்மேலும் சங்கத்துடன் நெருங்கிச் செயலாற்றுவதற்கான வாய்ப்புக் கிட்டியது. இவ்வாறு 1920 இன் பின்னர் தேசிய சங்கம் பின்பற்றிய நடைமுறைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- ❖ 1921 ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கத்தை நடைமுறைப்படுத்தியமை.
- ❖ 1928 ஆம் ஆண்டு இந்திய அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக அதிகாரிகளால் நியமிக்கப்பட்ட சைமன் ஆணைக்குழுவுக்கு எதிராக ஹர்த்தால் இயக்கமொன்றினை நடைமுறைப் படுத்தியமை.
- ❖ 1928 ஆம் ஆண்டு இந்தியாவின் சகல கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலான சர்வகட்சி மாநாடு ஒன்றினை நடத்தி இந்தியாவுக்குப் பொருந்தும் வகையிலான அரசியல் யாப்புச் சட்டமூலமொன்றினை உருவாக்கிக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டமை.
- ❖ 1929 ஆம் ஆண்டு பூரண சுயாட்சி எனும் இந்தியாவுக்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதை தேசிய சங்கத்தின் இலக்காகக் கொண்டு அதற்கான நடவடிக்கை களை மேற்கொண்டமை.
- ❖ 1930 ஆம் ஆண்டு அரசுக்கு எதிராகச் சிவில் சட்டத்தை மீறும் இயக்கமொன்றினை முன்னெடுத்தமை.
- ❖ 1942 ஆம் ஆண்டளவில் ''வெள்ளையனே வெளியேறு'' எனும் போராட்ட வாசகத்தை மையமாகக் கொண்டு சத்தியாக்கிரகமொன்றினை மேற்கொண்டமை.

1920 - 1947 வரையான காலம் இந்திய தேசிய சங்கம் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த காலமாகும். இக்காலப்பகுதியில் இந்திய தேசிய சங்கம் மட்டுமன்றி முழு இந்திய சுதந்திரப் போராட்டமும் மகாத்மா காந்தியின் தலைமைத்துவத்தின்கீழ் வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மகாத்மா காந்தியின் வழிகாட்டலின்கீழ் இக்காலகட்டத்தில் சத்தியாக்கிரகம் மேற்கொள்ளல், அரசுக்கு ஒத்துழைப்பு வழங்காமை, எதிர்ப்பாக பாத யாத்திரைகளை ஏற்பாடு செய்தல், சிவில் சட்டத்தை மீறுதல் போன்ற அகிம்சைவாதப் போராட்ட உத்திகள் தொடர்பில் தேசிய சங்கமும் முன்னின்று உழைத்தமையைக் காணமுடிந்தது. இதன் காரணமாக இச்சங்கம் மேன்மேலும் இந்தியப் பொதுமக்களோடு நெருக்கமாகி இந்தியாவுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுகொள்ளும் இலக்கை நோக்கி அண்மித்தமையையும் காணமுடிகின்றது.

### முஸ்லிம் லீக் தோற்றுவிக்கப்பட்டமை

ஆங்கிலேயர் தமது குடியேற்ற நாடுகளில் மக்கள் தமது ஆட்சிக்கு எதிராக ஒன்றிணைவதைத் தடுப்பதற்காக மக்கள் மத்தியில் பிரித்தாளும் கொள்கையைப் பின்பற்றினர். அந்தந்த நாடுகளில் நிலவும் பிரதேச மற்றும் இன அடிப்படையில் மக்களைப் பிளவுபடுத்தும்போது பெரும்பான்மையினர் அரசுக்கு விரோதமாகும்போது சிறுபான்மையினரின் ஆதரவைத் தமக்குப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை ஆங்கிலேயர் அறிந்திருந்தனர்.

இந்தியாவில் பெரும்பான்மையாக இந்துக்கள் இருந்ததோடு குறிப்பிடத்தக்க அளவுக்கு இஸ்லாம் மதத்தைப் பின்பற்றிய முஸ்லிம்களும் அந்நாட்டில் வாழ்ந்தனர். இந்திய தேசிய சங்கம் தோற்றுவிக்கப்பட்ட காலப்பகுதியில் அந்நாட்டின் இந்து, முஸ்லிம் கல்விமான்கள் பொதுப் பிரச்சினைகள் சிலவற்றிற்கு முகங்கொடுத்தாலும் தேசிய இயக்கத்தினுள் ஒன்றுபட்டு செயலாற்றியமையைக் காணக்கூடியதாக இருந்தது. எனினும் தேசிய சங்கம் செயற்பட்டுக் கொண்டிருந்தவேளை இந்துக்களுக்குப் போன்று முஸ்லிம் உரிமைகள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படவில்லையென முஸ்லிம் தலைவர்கள் சிலர் எண்ணினர். தேசிய சங்கத்தில் பின்னர் இணைந்துகொண்ட இளைஞர்கள் மத்தியில் நவீன மேலைத்தேய கலாசாரத்திலும் பார்க்கப் புராதன இந்து சமயத் தத்துவங்கள் ஆன்மீக ரீதியில் மேலானவை என்பதை ஏற்றுக்கொண்டவர்களும் இருந்தனர். இவ்வாறான காரணங்களால் முஸ்லிம் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கத் தனியானதொரு அமைப்பு அவசியமென்பது முஸ்லிம் தலைவர்கள் பலரினது அபிப்பிராயமாகும். அதன் விளைவாக ஆகாகானின் தலைமையில் 1906 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் அகில இந்திய முஸ்லிம் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் இந்தியாவில் மத்தியதர வர்க்க முஸ்லிம் கல்விமான்களின் ஆதரவு முஸ்லிம் லீக்கிற்கு கிடைத்தது. முஸ்லிம்களை மதரீதியில் ஒன்றுபடுத்தி ஒரே குரலாக ஒலிக்கச் செய்தல், சிவில் சேவையில் இணைவதற்கு முஸ்லிம்களுக்கான வாய்ப்பை விஸ்தரித்தல், சட்டமன்றத்தில் முஸ்லிம்களுக்குப் போதுமான பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொடுத்தல் போன்றன ஆரம்ப காலப்பகுதியில் இச்சங்கத்தின் நோக்கமாக அமைந்தன.

### ஆங்கிலேயர் கையாண்ட உத்திகள்

பிரித்தானியர் இந்தியாவைத் தமது ஆளுகைக்கு உட்படுத்திக் கொள்ளும்போது தந்திரமாகச் செயற்பட்டது மட்டுமல்லாது சுதந்திரப் போராட்டத்தை முடக்குவதற்கு கையாளத்தக்க சகல உத்திகளையும் கையாண்டனர். மக்களை அச்சமடையச் செய்யவும் சுதந்திரப் போராட்டத்தை முறியடிக்கவும் பிரித்தானியர் பெரும்பாலும் கையாண்ட உத்தியாக அமைந்தது மக்களை விசாரணையின்றி கைதுசெய்து சிறையிலடைப்பதாகும். இதன் காரணமாக ஆயிரக்கணக்கான இந்தியர்கள் கைதானதோடு தேசிய சங்கத் தலைவர்களும் இதற்கு முகங்கொடுக்கவேண்டி நேரிட்டது. பால கங்காதர திலகர், மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு போன்ற முன்னணித் தலைவர்களும்

அடிக்கடி ஆங்கிலேயர்களால் கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். பிரித்தானியரின் இவ்வாறான செயல்கள் போராட்டத்தை முடக்குவதற்குப் பதிலாக எதிர்ப்பைத் தீவிரமடையச் செய்தன. 1921 ஆம் ஆண்டு ஒத்துழையாமைப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை அதற்குத் தலைமை வகித்த தலைவர்களுள் ஒருவரான C.R. தாஸ் கைதுசெய்யப்பட்டபோது கொதித்தெழுந்த வங்காள இளைஞர்கள் தங்களையும் கைதுசெய்யுமாறு கோரியிருந்தனர். எனினும் போராட்டத்தை முடக்கும் உத்தி என்ற வகையில் விசாரணையின்றிக் கைதுசெய்யும் செயற்பாடு பிரித்தானியர்களுக்கு வெற்றியளிக்கவில்லை.

**வங்காளம் பிரிக்கப்படல்**

இந்தியாவின் வடகிழக்குப் பிராந்தியத்தில் அமைந்துள்ள வங்காளம் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியாவின் பரந்த நிலப்பரப்பைக் கொண்ட பாரிய பிரதேசமாக இருந்தது. வங்காளத்தில் இந்துக்களைப் போன்று முஸ்லிம்களும் சிறுபான்மை மக்கள் குழுக்கள் சிலவும் வாழ்ந்து வந்தன. நிலப்பரப்பில் பரந்த பிரதேசமொன்றான வங்காளத்தில் மில்லியன்கணக்கான மக்கள் வாழ்ந்தமையினால் நிருவாக வசதி கருதி அப்பிரதேசம் இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டுமென ஆங்கில அரசு தீர்மானித்தது. இவ்வேளையில் இந்திய சுதந்திரப் போராட்ட நடவடிக்கைகள் வங்காளத்தில் தீவிரமடைந்த நிலையில் காணப்பட்டமையால் இனங்களுக்கிடையில் பேதங்களை உருவாக்கிச் சுதந்திரப் போராட்டத்தை முடக்கும் நோக்கில் ஆங்கிலேயர் வங்காளத்தைப் பிரிப்பதற்கு எதிராகப் பாரிய போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. எனினும் இந்தியர்களின் கருத்துக்களை கவனத்திற்கொள்ளாத அரசு 1905 இல் வங்காளத்தைப் பிரித்து வேறாக்கியது.




தேசப்படம் 4.3 வங்காளம்

கைதுசெய்தலைத் தவிர பொலிஸ் மற்றும் இராணுவத்தை ஈடுபடுத்தி போராட்டங்களையும் கூட்டங்களையும் இடைநிறுத்தல், துப்பாக்கிச் சூட்டுப் பிரயோகம் மேற்கொள்ளல், பத்திரிகைகளைத் தடை செய்தல், அச்சகங்களை தடை செய்தல், இராணுவச் சட்டத்தை பிரகடனம் செய்தல் போன்ற உத்திகளையும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பின்பற்றினர். ஆங்கிலேயருக்கு எதிராகச் சுதேசிகள் ஒற்றுமையாகக் கைகோர்த்து எழுந்து நின்றமையைத் தடுப்பதற்காக இனமோதல்களை அவிழ்த்துவிட ஆட்சியாளர்கள் நடவடிக்கைகள் மேற்கொண்டனர்.

1905 ஆம் ஆண்டு வங்காளம் பிரிக்கப்பட்டமை இதற்குச் சிறந்த உதாரணமாகும். இந்துக்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையாகக் கைகோர்த்து எழுந்தால் அது தமக்குப் பாரிய இழப்பாக அமையும் எனக் கருதிய ஆங்கிலேயர் முஸ்லிம்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக அவர்களைத் தனிப்பட்ட இயக்கமாக ஒன்றுபட ஊக்கமளித்தனர். அதன் விளைவாகவே 1906 ஆம் ஆண்டு முஸ்லிம் லீக் தோற்றுவிக்கப்பட்டது.

தேசியப் போராட்டத்தை முடக்கும் மற்றுமொரு உபாயம் யாப்புச் சீர்திருத்தங்களை வழங்கியமையாகும். அதிகாரிகளால் பல்வேறு ஆணைக்குழுக்கள் நியமிக்கப் படல், சீர்திருத்தம் தொடர்பான கருத்துக்களைக் கேட்டறிதல், கலந்துரையாடல்களை மேற்கொள்ளுதல் போன்றவற்றை அடிக்கடி நடைமுறைப்படுத்தினர். எனினும் சுதந்திரப் போராட்டத் தலைவர்கள் அவ்வாறன அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களால் திருப்தியடையவில்லை. தேசிய சங்கம் எப்போதும் தனது இலக்கான சுயாட்சி அல்லது பூரண சுயாட்சி எனும் எண்ணக்கருவை மையமாகக் கொண்டு அதற்காக மக்களை ஒன்றுதிரட்டுவதில் ஈடுபட்டிருந்தது. பால கங்காதர திலகர் ஒரு தடவை சுயாட்சி என்பது எனது பிறப்புரிமையாகும். அதை நான் பெற்றே தீருவேன் எனக் குறிப்பிட்டிருந்தார். சுதந்திரம் பற்றி இந்தியர் மத்தியில் நிலவிய எண்ணங்கள் இவ்வாறான கூற்றுக்கள் மூலம் தெளிவாகின்றன.

### மகாத்மா காந்தியின் செயற்பாடுகள்



உரு 4.8 மகாத்மா காந்தி கூட்டமொன்றில் உரையாற்றிய சந்தர்ப்பம்

மகாத்மா காந்தி இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்ற சிரேஷ்ட தலைவராவார். இன, மத, சாதி பேதங்களைக் கருத்திற் கொள்ளாது செயலாற்றிய இவர் அகிம்சை வாதத்தைப் பெரிதும் போற்றிய நபராவார். அதேபோன்று இந்திய சுதந்திரப் போராட்டத்தை அகிம்சைவாதப் போராட்டமொன்றாக மாற்றியவரும் மகாத்மா காந்தியே ஆவார். கல்வியை நிறைவுசெய்த பின் சட்டத்தரணியாக நியமனம் பெற்று, தென்னாபிரிக்காவில் பணியாற்றி 1915 ஆம் ஆண்டு மீண்டும் தாயகம் திரும்பினார். இந்தியாவுக்கு வந்து முதல் சில வருடங்களிலேயே அந்நாட்டு விவசாயிகள் எதிர்கொண்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முன்வந்தார்.



உரு 4.9 தண்டி பாத யாத்திரை

பீகார் மாநில சம்பரன் மாவட்டத்தில் இண்டிகோ (அவுரிச் செடி) பயிரிடும் விவசாயிகளின் துயரங்களில் பங்கெடுத்து அவற்றைத் தீர்ப்பதற்கு மகாத்மா காந்தி முன்னெடுத்த போராட்டம்'' சாம்பரட் இயக்கம்'' என அழைக்கப்பட்டது. அதேபோன்று குஜராத்தின் கேடா பிரதேசத்தில் ஏற்பட்ட தொற்றுநோய், வரட்சி என்பன காரணமாக வரிசெலுத்த முடியாதிருந்த மக்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுப்பதற்காக அவர் முன்னெடுத்த போராட்டம் '**கேடா இயக்கம்**' எனப்பட்டது. மகாத்மா காந்தியின் வாழ்க்கை இவ்வாறான அகிம்சைவாதப் போராட்டங்கள் பலவற்றால் ஆனது.

1920 - 1947 வரையான காலப்பகுதியில் மகாத்மா காந்தி இந்திய சுதந்திரப் போராட்டத்தின் தலைவராகக் கடமையாற்றினார். அக்காலப் பகுதியில் சத்தியாக்கிரகம் மேற்கொள்ளல், அரசுக்கு ஒத்துழைப்பு வழங்காமை, சிவில் சட்டத்தை மீறுதல், பாத யாத்திரை மேற்கொள்ளல், உண்ணாவிரதம் இருத்தல் போன்ற அகிம்சைவாதப் போராட்ட உத்திகள் பல மகாத்மா காந்தியால் இந்தியா சுதந்திரம் பெறுவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டன. இப்போராட்ட உத்திகள் இரத்தம் சிந்துதல், வன்முறை நடவடிக்கைகள் என்பன தவிர்ந்தனவாய் அமைந்தன. இந்தியாவில் செல்வந்தத் தரப்பினரைப் போன்று வறிய விவசாயிகளுக்கும் மிக எளிதாக இப்போராட்டங்களில் இணைவதற்கான வாய்ப்புக் கிடைத்தது.



உரு 4.10 மகாத்மா காந்தி உப்பு சேகரித்தல்

இதன் காரணமாக மகாத்மா காந்தியின் போராட்டங்களில் இலட்சக்கணக்கான இந்தியர்கள் எவ்வித பேதங்களுமின்றி பங்கு கொண்டனர். இதன்படி இந்திய தேசிய சங்கத்துக்கும் சாதாரண மக்களுக்குமிடையேயான தொடர்புகள் கட்டியெழுப்பப்பட்டதும் மகாத்மா காந்தியாலேயே ஆகும்.


மகாத்மா காந்தியின் தலைமையில் 1921 ஆம் ஆண்டு அரசிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஒத்துழையாமைப் போராட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்ட விதம் பற்றி மேலே விளக்கப்பட்டிருந்தது. அதன் அடுத்த கட்டமாக 1930 இல் மகாத்மா காந்தியின் தலைமையில் சிவில் சட்டத்தை மீறும் இயக்கமொன்று ஆரம்பிக்கப்பட்டது. இந்தியாவில் உப்பு உற்பத்திக்காக மிகக் குறைந்தளவு பணமே செலவிடப்பட்டாலும் அரசு அதிக வரியினைப் பிறப்பித்து உப்பு விற்பனையின் மூலம் அதிக இலாபமடைந்தது. சிவில் சட்டத்தை மீறும் இயக்கத்தினூடாக உப்பு தொடர்பான அரசின் சட்டங்களைத் தகர்த்து எதிர்ப்பினைக் காண்பிக்க மகாத்மா காந்தியால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இது தண்டி பாதயாத்திரை என அழைக்கப்பட்டது.

1930 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் சபர்மதி ஆச்சிரமத்திலிருந்து தண்டி கடற்கரை வரை சுமார் 400 மைல் தூர பாதயாத்திரையொன்றை ஆரம்பித்தனர். ஆங்கிலேயருக்கு வரி செலுத்தாது இந்தியர்களால் உப்பினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதைக் காண்பித்த இப்பாதயாத்திரை முழுமையாக வெற்றியளித்ததோடு இவ்வாறான பாத யாத்திரைகள் இந்தியா முழுவதிலும் மேற்கொள்ளப்பட்டன. சிவில் சட்டத்தை மீறுதலுடன் பிரித்தானிய ஆடையணிகளையும் மற்றும் மதுபானத்தையும் பகிஷ்கரிக்கும் போராட்டமொன்றும் முன்னெடுக்கப்பட்டது. எதிர்ப்புப் போராட்டங்கள் காரணமாக ஆங்கிலேயர் பாரிய சிரமத்துக்குள்ளாயினர். இதன் காரணமாக மகாத்மா காந்தி உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோரைக் கைதுசெய்ய ஆங்கிலேயர் நடவடிக்கை எடுத்தனர். நாடு பூராகவும் பரவலடைந்த எதிர்ப்புப் போராட்டங்கள் மகாத்மா காந்திக்கும் இந்திய ஆளுநருக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் பின்னரே முடிவுக்கு வந்தது. இது 1931 ஆம் ஆண்டு காந்தி - இர்வின் ஒப்பந்தம் எனப்படுகின்றது.

மகாத்மா காந்தியின் தலைமையின்கீழ் தேசிய சங்கத்தின் ஆதரவுடன் நடைமுறைப் படுத்தப்பட்ட இவ்வகிம்சைவாதப் போராட்டங்கள் இந்தியா முழுவதிலும் பரவலடைந்தமையால் பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினரை ஈடுபடுத்தி அவற்றை ஒழிப்பது ஆங்கிலேயருக்குச் சிரமமாயிருந்தது. அதேவேளை இவ்வாறான


போராட்டங்களினாலும் எதிர்ப்புகளினாலும் சகல இந்தியர்களினதும் பொதுசன அபிப்பிராயங்களைச் சுதந்திரம் எனும் உயரிய இலக்கை நோக்கிய கோரிக்கைக்குள் உள்ளடக்க மகாத்மா காந்தியால் முடியுமாய் இருந்தது.

### இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்தல்



உரு 4.11 ஜவகர்லால் நேருவும் மகாத்மா காந்தியும்

1930 ஆம் ஆண்டு இந்தியர்கள் நடைமுறைப்படுத்திய சிவில் சட்டத்தை மீறும் இயக்கம் காரணமாக அரசும் சிரமங் களை எதிர்கொண்டது. இத னால் அரசுக்கும் சுதந்திரப் போராட்ட தலைவர்களுக்கு மிடையில் பல வட்ட மேசை மாநாடுகள் நடைபெற்றன. அதன் பின்பு 1935 ஆம் ஆண்டு ஆங்கிலேயரால் இந்தியாவுக்குப் புதிய அரசியல் யாப்புச் சட்ட மூலமொன்று அறிமுகப் படுத்தப்பட்டது. அச்சட்ட மூலத்தின்படி இந்திய பிரதிநிதிகளையும் இணைத்துக் கொள்ளும் வகையிலான கூட் டாட்சி (சமஷ்டி ஆட்சி) முறையொன்று இந்தியாவுக்குக் கிடைத்தது. இவ்வாட்சி முறைக்குத் தேசிய சங்கத்தின் பூரண ஆதரவு கிடைக்கவில்லையெனினும் அதன்கீழ் நடைபெற்ற தேர்தலில் பங்குகொள்ள இச் சங்கமும் முஸ்லிம் லீக்கும் முன்வந்தன. 1937 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தேசிய சங்கம் பிராந்தியங்கள் பலவற்றின் ஆட்சியதிகாரத்தைப் பெற்றதோடு அவ்வப் பிராந்தியங்களுக்கான அமைச்சரவையும் நியமிக்கப்பட்டது. இவ்வாட்சி நடை முறைப்படுத்தப்பட்டு இரண்டு வருட காலப்பகுதிக்குள் 1939 இல் இரண்டாம் உலகப் போர் ஆரம்பமானது. ஆங்கி லேயர் இந்தியர்களின் கருத்துக்களைக் கேட்டறியாது தாமாகவே இந்தியாவை யுத்தத்திற்கு ஈர்த்துக்கொண்டமை தொடர் பில் தேசிய சங்கம் எதிர்ப்புத் தெரிவித் தமையால் அதன் அமைச்சர்கள் பதவி விலகினர்.



உரு 4.12 மொகம்மட் அலி ஜின்னா

உலகப்போரின்போது ஆங்கிலேயருக்கு இந்தியாவின் உதவி தேவைப்பட்டமையால் யுத்தம் முடிவடைந்த பின்னர் உள்நாட்டு ஆட்சியதிகாரத்தை இந்தியர்களிடம் கையளிக்கும் வகையிலான ஆட்சி முறையொன்றினை உருவாக்கித் தருவதாக ஆங்கிலேயர் உறுதியளித்தனர். நாட்டுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்குப் பதிலாக உருவாக்கித் தரப்படும் எந்தவொரு ஆட்சி முறை தொடர்பாகவும் தேசிய சங்கம் எதிர்ப்புத் தெரிவித்தமையால் மீண்டும் எதிர்ப்புகள் கிளம்பின. 1941 இல் ஜப்பான் யுத்தத்தில் பிரவேசித்ததும் அது இந்தியாவை ஆக்கிரமித்தால் இந்தியர்கள் பிரித்தானியருக்கு எதிராக ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஆதரவு வழங்க வாய்ப்பு இருப்பதாக ஆங்கிலேயர் சந்தேகங்கொண்டனர். இதன் காரணமாக பிரித்தானியப் பிரதமர் வின்சன்ட் சேர்ச்சில் இந்தியர்களின் கோரிக்கைகளைக் கவனத்திற் கொள்ள விருப்பம் தெரிவித்ததோடு விசேட பிரதிநிதியாக ஸ்டெட்பர்ட் கிரிப்ஸ் என்பவரை இந்தியாவுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார். இந்தியத் தலைவர்கள் கிரிப்சின் தூதுப் பயணத்தை நிராகரித்தமையால் அதனூடாகப் பிரித்தானியா எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை. இவ்வாறிருக்க மொகம்மட் அலி ஜின்னாவின் தலைமையின்கீழ் முஸ்லிம் லீக் முஸ்லிம் மக்களுக்காக பாகிஸ்தான் எனும் தனியொரு நாட்டை உருவாக்கிக் கொள்வதற்கான பாரிய போராட்டமொன்றை முன்னெடுத்துச் சென்றது. மகாத்மா காந்தியின் தலைமையில் தேசிய சங்கத் தலைவர்கள் **''வெள்ளையனே வெளியேறு''** எனும் கோஷத்துடன் தீவிர எதிர்ப்பு ஆர்ப்பட்டமொன்றினை ஆரம்பித்தனர். அதற்குப் பதிலடியாக அரசு இந்திய தேசிய சங்கத்தை சட்ட விரோத இயக்கமொன்றாகப் பிரகடனப்படுத்தி அதன் தலைவர்களைக் கைதுசெய்தது.

1945 ஆம் ஆண்டளவில் இரண்டாம் உலகப்போர் முடிவுக்கு வந்தது. பிரித்தானியா வில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் சர்ச்சிலின் அரசு தோல்வியடைந்து தொழிலாளர் கட்சி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது. இரண்டாம் உலகப் போரின் ஆரம்பம் முதல் இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைக்கும் வரையிலான காலப்பகுதியினை நோக்கும்போது இந்திய அரசியல் வரலாற்றில் வெளிப்படையாகத் தெரியும் பண்புகள் சிலவற்றை காணமுடிகின்றது.

- இந்தியாவுக்குச் சுதந்திரம் கோரி நடைபெற்ற போராட்டங்கள் மிகவும் தீவிர நிலையை அடைந்தமை.
- இந்தியாவை மேலும் குடியேற்ற நாடொன்றாக வைத்திருக்க முடியாதென்பதைப் பிரித்தானியர் உணர்ந்து கொண்டமை.
- பிரித்தானிய அரசு இந்தியத் தலைவர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு சுதந்திரத்தை வழங்குவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டமை.
- முகம்மது அலி ஜின்னா தலைமையில் முஸ்லிம் லீக் பாகிஸ்தான் எனும் வேறொரு நாட்டை உருவாக்கிக் கொள்வதற்கான இயக்கமொன்றை முன்னெடுத்துச் சென்றமை.

1945 ஆண்டு முதல் பிரித்தானிய அதிகாரிகளுக்கும் இந்தியத் தலைவர்களுக்கும் இடையே நடைபெற்ற நீண்ட கலந்துரையாடல்களின் பிரதிபலனாக 1946 டிசெம்பர் மாதம் தற்காலிக அரசாங்கம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. இந்தியாவின் இறுதி ஆளுநரான மவுன்பேட்டன் பிரபு இந்தியர்களுக்கு அதிகாரங்களை ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தினார். அதன்படி 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் திகதி முதல் இந்தியா, பிரித்தானியர் ஆட்சியிலிருந்து விடுபட்டு பூரணமாக சுதந்திரத்தைப் பெற்ற சுயாதீன அரசொன்றாக மாறியது. இந்தியா சுதந்திரம் பெறும் வேளையில் அங்கு நிலவிய இந்து முஸ்லிம் பேதங்கள் காரணமாக இந்தியா மற்றும் பாகிஸ்தான் என நாட்டைப் இரண்டாகப் பிரிக்க நேரிட்டது. இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முன்னணித் தலைவர்களுள் ஒருவரான மௌலானா அபுல் கலாம் அசாத் குறிப்பிட்டுள்ளதன்படி நாடு பிளவுபட்டமையால் மாத்திரம் இந்து - முஸ்லிம் மக்கள் மத்தியில் நிலவிய இனபேதங்கள் தீர்ந்துவிடவில்லை. இந்திய சுதந்திரப் போராட்டத்தை நோக்கும்போது பாரிய பேரரசொன்றைக் கட்டியெழுப்பியிருந்த பிரித்தானியா ஏனைய நட்பு நாடுகளின் ஆதரவுடன் இரண்டாம் உலகப் போரில் ஜேர்மனியில் ஹிட்லரின் சர்வாதிகாரத்தைத் தோற்கடிப்பதில் வெற்றி கண்டாலும் இந்தியாவில் மகாத்மா காந்தியின் அகிம்சைவாதத்தைத் தோற்கடிப்பதில் வெற்றி காணவில்லை என்பது தெரிகின்றது.


## 4.4 இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முன்னணித் தலைவர்கள்

### தாதாபாய் நவ்ரோஜி



1825 ஆம் ஆண்டு மும்பாயில் பிறந்த தாதாபாய் நவ்ரோஜி கல்வி நடவடிக்கைகளின் பின் மும்பாயில் எல்பின்ஸ்டன் நிறுவனத்தில் கணித விரிவுரையாளராகக் கடமையாற்றினார். பின்னர் இலண்டன் நகரை நோக்கிச் சென்ற அவர் இந்திய அரசியல், பொருளாதார நிலைமைகள் பற்றி இங்கிலாந்து மக்களுக்கு, தெளிவுபடுத்துவதில் அர்ப்பணிப்புடன் செயலாற்றினார். இந்தியத் தேசிய சங்கத்தைத் தோற்றுவிப்பதில் முன்னோடியாக நின்று செயலாற்றிய நவ்ரோஜி பல சந்தர்ப்பங்களில் அதன் தலைமைப் பதவியையும் வகித்தார். மிதவாதியான இவர் இந்தியாவின் பொருளாதார சுதந்திரம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தியுள்ளார். ஆங்கிலேயரின் பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக இந்தியா நாளுக்கு நாள் வறிய நாடொன்றாக மாறிவரும் விதத்தை ஆரம்பத்திலேயே தெளிவுபடுத்திய தலைவராக நவ்ரோஜி புகழ் பெற்றார். இந்திய சுதந்திர இயக்கத்தில் இருந்த மூத்த தலைவர் மட்டுமல்லாது சிறந்த புத்திஜீவியுமான இவர் இந்தியாவின் மேன்மையாளர் எனும் சிறப்புப் பெயரால் பிரபல்யமடைந்தார்.

**சுரேந்திரநாத் பெனர்ஜி**



1848 ஆம் ஆண்டு கல்கத்தாவில் பிறந்த சுரேந்திரநாத் பெனர்ஜி வங்காள இனத்தவராவார். இந்தியாவில் பட்டப்படிப்பை நிறைவுசெய்து உயர் கல்விக்காக இங்கிலாந்து சென்ற அவர் அப்போதைய உயர் தேர்வுகளுள் ஒன்றாகக் கருதப்பட்ட சிவில் சேவைப் பரீட்சையில் சித்தியடைந்தார். இவ்வாறு சேவையில் இணைந்துகொண்ட முதல் இந்தியரான பெனர்ஜியின் சிவில் சேவை பதவி குறுகிய காலத்தினுள் முடிவடைந்தது. எனினும் தைரியத்தை இழக்காத அவர் சகல இந்தியர்களின் உரிமைகளுக்காகவும் துணிந்து போராடினார். கல்வியியலாளராகப் பிரபல்யமடைந்த பெனர்ஜி ரிப்பன் கல்லூரி எனும் பெயரில் புதிய பாடசாலையொன்றை ஆரம்பிப்பதற்கான நடவடிக் கைகளை மேற்கொண்டார். வங்காளம் எனும் பெயரில் புதிய பத்திரிகையொன்றை வெளியிட்ட இவர் அதன் மூலம் இந்தியர்களை அறிவூட்டுவதற்கான நடவடிக்கை களை மேற்கொண்டார்.

பெனர்ஜியால் 1876 ஆம் ஆண்டு இந்தியத் தேசிய இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. இந்தியத் தேசிய சங்கம் தோற்றம் பெறுவதற்கான பின்னணி இதன் மூலம் உருவானது. மிதவாதியான பெனர்ஜி இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முன்னணித் தலைவர்களுள் ஒருவராவார். இவர் இந்தியத் தேசிய சங்கத்தின் தலைவராக இருமுறை தெரிவானார்.

**பால கங்காதர திலகர்**




1856 ஆம் ஆண்டு மகாராஷ்டிரா மாநிலத்தை பிறப்பிடமாகக் கொண்ட இவர் பள்ளிப் பருவத்தில் மிகவும் புத்திசாலி மாணவனாக விளங்கினார். கணித பாடத்தில் அதிவிசேட சித்தியுடன் ஆரம்பப் பட்டப்படிப்பை முடித்துப் பின்னர் உயர் கல்வியைப் பெற்று முன்னணிக் கல்விமான்களுள் ஒருவரா கத் திகழ்ந்தார். நற்பிரசையாவதற்குச் சிறந்த கல்வியே அவசியமென்பதில் அதீத நம்பிக்கை கொண்டிருந்த அவர் ''டெக்கான் (தக்கண) கல்விச் சமூகம்'' என்னும் அமைப்பைத் தோற்றுவித்ததோடு பாடசாலைகள் பலவற்றை உருவாக்குவதிலும் முன்னோடியாகத் திகழ்ந்தார். பிரித்தானிய ஆட்சியாளர்களால் இந்தியர்களுக்கு விளையும் கொடுமைகளைத் துணிவுடன் விமர்சித்த இவர் மக்களை அறிவூட் டுவதற்காக கேசரி, மருதம் எனும் இரு பத்திரிகைகளை ஆரம்பித்தார்.

'உலக அபிமானி' எனும் பட்டப் பெயரால் அழைக்கப்பட்ட பால கங்காதர திலகர் இந்திய சுதந்திர இயக்கத்தைப் போராட்டப் பாதையில் இட்டுச் சென்றதில் முன்னோடியாக விளங்கினார். ''சுயாட்சி என்பது எனது பிறப்புரிமையாகும்'' எனக் குறிப்பிட்ட அவர் சுயாட்சியைப் பெற்றுக் கொள்வதற்காக மக்களை அறிவூட்டுவதில் அர்ப்பணிப்புடன் செயலாற்றினார்.

இதன் காரணமாக பல சந்தர்ப்பங்களில் சிறைவாசம் அனுபவிக்கவும் அவருக்கு நேரிட்டது. அரசுக்கு விண்ணப்பங்களை அனுப்புதல், அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்துதல், ஆங்கிலேயர் முன்னிலையில் பணிந்து போதல் போன்றவைகள் கோரிக்கைகளை வென்றெடுக்கப் போதுமானவையல்ல என உலகாபிமானி திலகர் நம்பினார். சுதந்திரத்தை வெற்றிகொள்ளவேண்டுமாயின் இந்தியர்கள் ஒன்றுபட்டு தொடர்ச்சியான போராட்டமொன்றில் ஈடுபடுதல் அவசியம் என்பது அவரது கருத்தாகும். போராட்டப் பண்பைப் பெரிதும் போற்றிய அவர் வன்முறைகளை வெறுத்தார். பால கங்காதர திலகர் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது ஏற்பட்ட பல இடையூறுகள் மத்தியிலும் மலையொன்றினைப் போல உறுதியாக அசையாது நின்ற தலைவராவார்.

**மகாத்மா காந்தி**



1869 ஆம் ஆண்டு பிறந்த மோகன்தாஸ் கரம்சாந் காந்தி எனும் மாகாத்மா காந்தி தனது பள்ளிப் படிப்பை நிறைவுசெய்த பின் உயர்கல்விக்காக இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கு சட்டத் தேர்வினைப் பூர்த்திசெய்த அவர் தென்னாபிரிக்கா சென்று சட்டத்தரணியாகக் கடமையாற்றினார். தென்னாபிரிக்காவுக்கு வந்திருந்த ஐரோப்பியர் அங்கு அதிகாரம் நாடி நிறபேதத்தைத் தோற்றுவித்து கறுப்பினத்தவரை அடிமைகளாக நடத்திய விதத்தை மகாத்மா காந்தியால் காண முடிந்தது. அவ்வேளை சில வகுப்புகளுக்கான புகையிரதப் பெட்டிகளில் பயணம் செய்வதற்குக் கறுப்பினத்தவருக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. மகாத்மா காந்தியும் அவ்வாறான பெட்டியொன்றில் பயணம் செய்துகொண்டிருந்தபோது அதிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார். மகாத்மா காந்தி தென்னாபிரிக்காவில் இருந்த காலப்பகுதியில் இவ்வாறான கொடுமைகளுக்கு எதிராக மக்கள் ஒன்றுபடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார். 1915 இல் மீண்டும் இந்தியாவுக்கு வந்து மகாத்மா காந்தி அந்நாட்டின் சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் இணைந்து கொண்டார். இவர் இந்தியாவுக்கு வந்த ஆரம்ப காலப்பகுதியில் அந்நாட்டு விவசாயிகள் எதிர்கொண்ட பிரச்சினைகளில் பங்குகொண்டு செயலாற்றினார். இந்தியாவில் சாதாரண மக்களும்

சுதந்திர இயக்கத்தில் ஒன்றுபட இச்செயற்பாடு வழிவகுத்தது. மகாத்மா காந்தி சுதந்திரப் போராட்டத்தில் இணைந்துகொண்டதன் பின் ஆங்கிலேயரையோ அவர்களைச் சார்ந்தவர்களையோ துன்புறுத்துவதை விடுத்து அகிம்சைவாதத்தின் மூலம் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுக்கும் விதம் பற்றி மக்களுக்குத் தெளிவுபடுத்தினார்.

சத்தியாக்கிரகம், அரசிற்கு ஒத்துழைப்பு வழங்காமை, சிவில் சட்டத்தை மீறல், பாத யாத்திரைகளை மேற்கொள்ளல் போன்றவை அவர் பின்பற்றிய அகிம்சைவாதப் போராட்ட உத்திகளாகும். இன, மத, சாதி, ஏழை, பணக்காரன் போன்ற பேதங்களின்றி சகல இந்தியர்களாலும் இப்போராட்டங்களில் கலந்துகொள்ள முடிந்தது. இந்திய சுதந்திரப் போராட்டத்தை பொதுமக்களின் போராட்டமொன்றாக மாற்றிய தலைவர் மகாத்மா காந்தி ஆவார்.

இக்காலப்பகுதியில் இந்தியாவில் நிலவிய இன பேதங்கள், சாதிபேதங்கள் ஆகியவற்றைக் கருத்திற்கொள்ளாது செயற்பட்ட மகாத்மா காந்தி சகல இந்தியர்களும் சமமான உரிமைகள் கிடைக்கப்பெற வேண்டுமெனக் கருதினார். மிகவும் நேர்மையா னவராக அதேபோன்று மிகவும் எளிமையாகவும் முன்மாதிரியான வாழ்க்கை வாழ்ந்தார். இந்தியர்கள் அந்நாட்டு உற்பத்திகளையிட்டு பெருமிதம் கொள்ள வேண்டும் எனக் கூறிய மகாத்மா காந்தி தானே பருத்தித் துணியை நெய்து கதர் ஆடைகளைப் பயன் படுத்தி இந்தியர்களுக்கு முன்மாதிரியாக விளங்கினார். பருத்தி நெய்தல், சாதி,பேத புறக்கணிப்பு, மதுபான பகிஷ்கரிப்பு, இந்து - முஸ்லிம் ஒற்றுமை, பெண்களுக்கு சம உரிமையைப் பெற்றுக்கொடுத்தல் போன்றன மகாத்மா காந்தியின் கொள்கைகளில் காணக்கூடிய விசேட அம்சங்களாகும். இவை இந்தியாவின் வளர்ச்சிக்கு ஏதுவாய் அமையும் என மகாத்மாகாந்தி கருதினார்.

பிரித்தானிய ஏகாதிபத்தியத்திலிருந்து இந்தியாவை விடுவித்துக்கொள்ளும் போராட்டத்தில் தலைவராகச் செயற்பட்ட அவர் இந்தியர்களின் அன்பிற்கும் கௌரவத்திற்கும் பாத்திரமானார். அகிம்சைவாதப் போராட்டம் காரணமாக மகாத்மா காந்தி முழு உலக மக்கள் மத்தியிலும் பிரபலமானார். இந்தியாவில் எந்தளவு வேலைப்பளுமிக்க வாழ்க்கை வாழ்ந்தபோதும் 1927 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி இலங்கைக்கு வருகை தந்தார். மூன்று வார காலம் இந்நாட்டில் தங்கியிருந்த அவர் கொழும்பு, களுத்துறை, காலி, கண்டி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்குச் சென்று பொதுமக்கள் மத்தியில் உரையாற்றினார். அவர் சென்ற சகல இடங்களிலும் இந்நாட்டில் அவருக்குச் சிறந்த வரவேற்புக் கிடைத்தது.

**மௌலானா அப்துல் கலாம் அசாத்**



1888 ஆம் ஆண்டு பிறந்த மௌலானா அப்துல் கலாம் அசாத் பிள்ளைப் பருவத்தில் வயதிலும் விஞ்சிய ஆற்றல்மிக்க மாணவராய் விளங்கினார். இந்திய தேசிய சங்கத்தில் இருந்த முன்னணி முஸ்லிம் தலைவரான இவர் இந்து, முஸ்லிம் ஒற்றுமை மூலம் ஐக்கிய இந்தியாவொன்றை உருவாக்குவதில் தன்னை அர்ப்பணித்தார். இளம்பராயத்தில் பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கு ஆக்கங்களை எழுதுவதன் மூலம் திறமை வாய்ந்த எழுத்தாளராக விளங்கினார். பின்னர் அவர் 'அல் ஹிலால்' எனும் பெயரில் பத்திரிகையொன்றை ஆரம்பித்தார். அது முஸ்லிம் மக்கள் மத்தியில் மிகவும் பிரபல்யமடைந்தது.

மௌலானா அப்துல் கலாம் அசாத் இந்திய தேசிய சங்கத்தில் இணைந்து கொண்டதன் பின் சுதந்திரப் போராட்டத்திற்காக முழு அர்ப்பணிப்புடன் செயலாற்றினார். இதன் காரணமாக எட்டு வருட காலம் அச்சங்கத்தின் தலைவராகச் செயலாற்றக் கூடிய அரிய சந்தர்ப்பமொன்றும் அவருக்குக் கிடைத்தது. தேசிய சங்கத்தில் அனைத்துத் தலைவர்களினதும் கௌரவத்திற்குப் பாத்திரமான அவர் மகாத்மா காந்தியின் நெருங்கிய நண்பராவார். மகாத்மா காந்தி முன்னெடுத்த அனைத்துப் போராட்டங்களுக்கும் இவருடைய ஒத்துழைப்புக் கிடைத்தது. தேசிய சங்கத்தின் தலைவர்கள் மத்தியில் பல்வேறு முரண்பாடுகள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களிலும் கூட அவற்றைச் சுமுகமாகத் தீர்த்து, சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல பல நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைப்பதற்கு அண்மிய காலப்பகுதியில் அதிகாரிகளுடன் பல்வேறு கலந்துரையாடல்களில் பங்குகொண்டு இந்தியாவின் பல்வேறு பிரதேசங்களுக்கும் விஜயம் செய்து மக்களை அமைதிப்படுத்தி இந்திய சுதந்திரப் போராட்டத்திற்குப் பாரிய சேவையாற்றியுள்ளார்.

**ஜவகர்லால் நேரு**



1889 ஆம் ஆண்டு அலகாபாத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜவகர்லால் நேரு ஆரம்பக் கல்வியின் பின்னர் இங்கிலாந்து சென்று உயர் கல்வியைப் பெற்று சட்டத்தரணியானார். மறுபடியும் இந்தியாவுக்கு வந்து அவர் இந்திய தேசிய சங்கத்துடன் இணைந்து சுதந்திரப் போராட்டத் தலைவராகச் செயலாற்றினார். சிறந்த கல்விமானாக விளங்கிய நேரு தேசிய சங்கத்தில் இருந்த திறமைவாய்ந்த ஒன்றிணைப்பாளரும் ஆவார். இந்தியா சுதந்திரம் பெற்றதன் பின் பிரதமராகக் கடமையாற்றிய அதேவேளை புதிய இந்தியாவைக் கட்டியெழுப்புவதிலும் பாரிய சேவையாற்றியுள்ளார். அவர் பல நூல்களின் ஆசிரியராவார். அவர் எழுதிய ''நேருவின் உலக வரலாறு'' எனும் நூல் பல மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. இந்தியாவின் பெண் பிரதமராக விளங்கிய இந்திரா காந்தி அவர்கள் ஜவகர்லால் நேருவின் புதல்வியாவார்.



**செயற்பாடு**

மகாத்மா காந்தி, தாதாபாய் நவ்ரோஜி, மௌலானா அப்துல் கலாம் அசாத், சுரேந்திரநாத் பெனர்ஜி, ஜவகர்லால் நேரு போன்ற தலைவர்கள் பற்றிய தகவல்களைச் சேகரிக்க.



**செயற்பாடு**

இந்திய தேசிய சுதந்திரப் போராட்டத்தின் சந்தர்ப்பங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. அச்சந்தர்ப்பங்களையும் அவற்றால் பெறக்கூடிய முன் மாதிரிகளையும் பற்றி உமது அப்பியாசக் புத்தகத்தில் சிறு குறிப்பெழுதுக.

1. ஒற்றுமையின் தேவைப்பாடும் தேசிய சங்கம் தோற்றுவிக்கப்படலும்.
2. சுதேச இயக்கம்
3. அகிம்சைவாதப் போராட்டம்
4. பின்வாங்காது இலக்கை நோக்கி முன்னேறுதல்.
5. ஒத்துழைப்புடன் செயற்பட்டு சுதந்திரத்தைப் பெறுதல்.

# 5 இலங்கையின் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களும் தேசிய சுதந்திர இயக்கமும்



## அறிமுகம்

பிரித்தானியர் 1815 ஆம் ஆண்டு கண்டி இராசதானியைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து அதுவரை இந்நாட்டில் நிலவி வந்த மன்னராட்சி முடிவுக்கு வந்தது. அதனைத் தொடர்ந்து 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்றுக்கொள்ளும் வரையிலான 133 ஆண்டுகள் பிரித்தானியர் இந்நாட்டை ஆட்சி செய்தனர்.

இலங்கையர் இடைவிடாது முன்னெடுத்துச்சென்ற போராட்டங்களின் காரணமாக காலத்துக்குக் காலம் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களை வழங்கவேண்டிய தேவை பிரித்தானிய ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டது. அவ்வரசியல் யாப்புச் சீர்திருத்தங்களின் மூலம் சுதேசிகளுக்குக் கையளிக்கப்பட்ட அதிகாரங்கள் தொடர்பில் திருப்தியடையாத இலங்கையர் தொடர்ந்தும் எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்தனர். இப்போராட்டங்களின் விளைவாகவே 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்தது. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இந்நாட்டில் இடம்பெற்ற அரசியல் போராட்டங்கள் மற்றும் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் போன்றன தொடர்பாக இந்த அத்தியாயத்தில் கவனம் செலுத்தப்படுகின்றது.

## 5.1 கோல்புறூக் - கமரன் அரசியல் திட்டம்

1815 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் கண்டி இராசதானியைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து முழு நாடும் பிரித்தானியர் ஆதிக்கத்துக்குட்பட்டது. அன்று முதல் பிரித்தானியர் இந்நாட்டின் ஆட்சி நடவடிக்கைகளை முன்னெடுக்கும்போது, மலையகத்தையும் கரையோரப் பிரதேசங்களையும் வெவ்வேறாக ஆட்சிசெய்தல், பிரித்தானியாவிலிருந்து வருகை தந்த அதிகாரிகளின் சம்பளம் மற்றும் வசதிகள் ஆகியவற்றிற்கு பாரிய செலவுச் சுமையைச் சுமக்கவேண்டி ஏற்பட்டது. இக்காரணங்களால் 1828 ஆம் ஆண்டளவில் அரச வருவாயை விடச் செலவினங்கள் துரிதமாக அதிகரித்துச் சென்றன. இதனால் இந்நாட்டின் அரச செலவுகளை ஈடுசெய்ய பிரித்தானிய அரசின் நிதியைச் செலவிட வேண்டிய நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது. ஆயினும் குடியேற்ற நாடுகளின் நடவடிக்கைகளுக்காகத் தாய் நாட்டின் நிதியைச் செலவிடுவது இதுவரை பிரித்தானியாவின் கொள்கையாக இருக்கவில்லை. ஆகையால் இலங்கைக்கு வந்து இந்நாட்டின் வருமானம், செலவினங்கள் தொடர்பாக ஆராய்ந்து ஆட்சி முறையின் பலவீனங்களைத் தேடியறிந்து தேவையான சீர்திருத்த ஆலோசனைகளை முன்வைப்பதற்காக குடியேற்ற நாட்டுச் செயலாளரால் விசேட ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. W. M. G. கோல்புறூக் அவர்களின் தலைமையில் நியமிக்கப்பட்ட அவ்வாணைக்குழு கோல்புறூக் ஆணைக்குழு என அழைக்கப்படுகின்றது. கோல்புறூக்கிற்குப் பொருளாதார மற்றும் நிருவாக நடவடிக்கைகள் தொடர்பாகத் தேடியறியும் பொறுப்பு வழங்கப்பட்டது, இந்நாட்டின் நீதிசார் நடவடிக்கைகளை ஆராய்ந்து அவசியமான ஆலோசனைகளை முன்வைப்பதற்காக சார்ள்ஸ் கே கமரன் என்பவர் பின்னர் நியமிக்கப்பட்டார்.

### கோல்புறூக் அரசியல் திட்டத்தின் விசாரணைக்குட்பட்ட துறைகள்

*அரச வருமான வழிகளும் மற்றும் செலவின நடவடிக்கைகளும்-W. M. G. கோல்புறூக்*

*நீதித்துறை - சார்ள்ஸ் கே கமரன்*

கோல்புறூக் மற்றும் கமரன் ஆகிய இருவரும் இந்நாட்டிற்கு வருகை தந்து இலங்கையின் நிருவாக நடவடிக்கைகள் மற்றும் நீதித்துறை பற்றிய விடயங்களை ஆராய்ந்து பெரும்பாலான இலங்கையரின் கருத்துக்களைக் கேட்டிறிந்து தமது சிபாரிசுகள் அடங்கிய ஆலோசனைகளை முன்வைத்தனர். 1833 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்த அது கோல்புறூக் கமரன் சீர்திருத்தம் என அழைக்கப்பட்டது.

### கோல்புறூக் சீர்திருத்தங்களின் விசேட பண்புகள்

- சட்டவாக்க, சட்ட நிருவாக சபைகள் தோற்றுவிக்கப்பட்டமை.
- கண்டி, கரையோரப் பிரதேசங்களை ஒன்றிணைக்கும் வகையிலான ஆட்சி முறையொன்று தோற்றுவிக்கப்பட்டமை.
- நிருவாக நடவடிக்கைகளுக்காக இலங்கை ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப் பட்டமை.
- கட்டாய இராஜகாரிய முறைமை நீக்கப்பட்டமை.

❖ ஆங்கிலக் கல்வி பரவலாக்கப்பட்டமை

❖ அடுத்ததாக நாம் மேலே குறிப்பிட்ட பண்புகளை விரிவாகப் பார்ப்போம்.


**சட்டவாக்க, சட்ட நிருவாக சபைகள் தோற்றுவிக்கப்பட்டமை.**

கோல்புறூக் ஆணைக்குழு இந்நாட்டிற்கு வரும்போது சட்டவாக்க, சட்ட நிருவாக, நீதித்துறை அதிகாரங்கள் அனைத்தும் ஆளுநரிடம் குவிந்து கிடந்தன. இந்நிலைமை கோல்புறூக்கின் விமர்சனத்திற்கு உள்ளானதோடு ஆளுநரின் அதிகாரங்களைக் குறைப்பதற்காகச் சட்டவாக்க மற்றும் சட்ட நிருவாக சபைகளைத் தோற்றுவிப்பதற்கான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

**சட்டவாக்க சபை**

கோல்புறூக்கின் ஆலோசனைப்படி சட்ட உருவாக்கத்திற்காகத் தோற்றுவிக்கப்பட்ட சட்டவாக்கசபை 15 அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது. அவர்கள் உத்தியோக சார்புள்ள, உத்தியோக சார்பற்ற எனும் அடிப்படையில் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். அதன்படி உத்தியோக சார்புள்ள அங்கத்தவர்கள் 9 பேர் இருந்ததோடு அவர்கள் அதிகாரபூர்வமாகத் தெரிவான அரசின் உயர் அதிகாரிகள் ஆவர். உத்தியோக சார்பற்ற அங்கத்தவர்கள் 6 பேர் இருந்ததோடு அவர்கள் இன அடிப்படையில் ஆளுநரின் நியமனம் மூலம் தெரிவுசெய்யப்பட்டனர். உத்தியோக சார்பற்ற அங்கத்தவர்களுள் ஐரோப்பியர் மூவரும் சிங்களவர் , தமிழர் , பறங்கியர் என வெவ்வேறு இனங்கள் சார்பாகத் தெரிவான அங்கத்தவர்கள் மூவரும் உள்ளடங்குவர். சட்டவாக்க சபையில் ஆளுநருக்கே பிரதான இடம் வழங்கப்பட்டிருந்தது. கோல்புறூக் சீர்திருத்தத்தின் கீழ் ஒவ்வொரு இனத்தையும் அடிப்படையாகக் கொண்டு சட்டவாக்க சபைக்கு உறுப்பினர்களைத் தெரிவுசெய்ய அறிமுகப்படுத்தப்பட்ட இனவாரிப் பிரதிநிதித்துவ முறையானது எதிர்காலத்தில் இந்நாட்டினுள் வெவ்வேறு இனத்தவர் மத்தியில் பேதங்கள் ஏற்படக் காரணமாய் அமைந்தமை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

**சட்டவாக்க சபை** 1833




1833 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சட்டவாக்க சபை காலத்திற்குக் காலம் சீர்திருத்தத்திற்கு உள்ளானதன் காரணமாக இலங்கையரின் கைகளுக்குக் கிடைத்த அதிகாரங்களின் அளவும் அதிகரித்து அதனூடாக இலங்கை எதிர்காலத்தில் பாராளுமன்ற ஆட்சி முறையை நோக்கிச் செல்வதற்கான அத்திவாரமும் இடப்பட்டது. இதன் காரணமாக கோல்புறூக் சீர்திருத்தத்தின் கீழ் சட்டவாக்க சபை அறிமுகப்படுத்தப்பட்டமையானது இந்நாட்டு அரசியல் வரலாற்றில் முக்கிய மைல் கல்லாகக் கருத முடியும்.

சட்ட நிருவாக சபை

கோல்புறூக்கின் ஆலோசனையின் பேரில் உருவாக்கப்பட்ட சட்ட நிருவாக சபை ஆளுநர் மற்றும் அரச அளவையாளர் போன்ற அரசின் உயர் அதிகாரிகள் சிலரை உள்ளடக்கியிருந்தது. இங்கு ஆளுநருக்கு பிரதான இடம் வழங்கப்பட்டிருந்தது. நாட்டின் சகல நிருவாக நடவடிக்கைகள் மற்றும் முக்கிய விடயங்கள் தொடர்பாக ஆளுநர் இச்சபையின் கருத்துக்களைக் கேட்டறிவது அவசியமாகும்.

- **கரையோரத்தையும் கண்டியையும் ஒன்றிணைத்து ஒரே ஆட்சியின் கீழ் கொண்டு வந்தமை**

1815 ஆம் ஆண்டு பிரித்தானியர் கண்டி இராசதானியைக் கைப்பற்றியதன் பின் கண்டியையும் கரையோரத்தையும் வெவ்வேறாக ஆட்சி செய்யும் முறையொன்றினையே பின்பற்றினர். இம்முறை அரச செலவினங்கள் அதிகரித்துச் செல்வதற்குக் காரணமாய் அமைந்தமை சுட்டிக்காட்டப்பட்டு அவ்விரு பிரதேசங்களையும் இணைக்கும் வகையிலான ஒன்றிணைந்த ஆட்சி முறையொன்றினைக் கொண்டு வர கோல்புறூக் ஆலோசனையை முன்வைத்தார்.

- **நிருவாக நடவடிக்கைகளுக்காக முழு நாட்டையும் ஐந்து மாகாணங்களாகப் பிரித்தமை**

1833 ஆம் ஆண்டு வரை நிருவாக நடவடிக்கைகளுக்காக இலங்கை 16 பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு நிருவாகப் பிரிவுகள் எண்ணிக்கையளவில் அதிகரித்திருந்தமையால் அதன் நிர்வாகிகளுக்காகப் பாரியளவு பணத்தைச் செலவிட வேண்டியிருந்தமையால் அரச செலவினங்கள் அதிகரித்துச் செல்வதாகச் சுட்டிக் காட்டிய கோல்புறூக், செலவினங்களைக் குறைப்பதற்காக ஆட்சிப் பிரதேசங்களை ஐந்தாகப் பிரித்து அந்த மாகாணங்களுக்கு ஐந்து நிருவாக மையங்களையும் நிறுவுவதற்கான ஆலோசனையை முன்வைத்தார். அம்மாகாண நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக ஒவ்வொரு அரசாங்க அதிபரை நியமிப்பதற்கும் தீர்மானம் மேற்கொண்டார்.

**கோல்புறூக்கின் ஆலோசனையின் பேரில் உருவாக்கப்பட்ட மாகாணங்களும் அவற்றின் நிருவாக மையங்களும்**

| மாகாணங்கள் | நிருவாக மையங்கள் |
|---|---|
| வட மாகாணம் | யாழ்ப்பாணம் |
| தென் மாகாணம் | காலி |
| கிழக்கு மாகாணம் | திருகோணமலை |
| மேல் மாகாணம் | கொழும்பு |
| மத்திய மாகாணம் | கண்டி |

### ❖ கட்டாய சேவை இராஜகாரிய முறை நீக்கப்பட்டமை

நாட்டில் இருந்த வயதுவந்த ஆண்கள் அனைவரும் வருடத்தில் குறிப்பிட்ட சில நாட்களுக்கு அரசுக்கு இலவசமாகச் சேவையாற்றுதல் கட்டாய சேவை இராஜகாரிய முறை எனப்பட்டது. முற்காலத்தல் அரசின் பொதுவேலைகளுக்காக நாட்டுப் பிரசைகளிடமிருந்து உழைப்பினைப் பெற்றுக்கொள்ள இராஜகாரிய முறை பயன்படுத்தப்பட்டது. அவர்கள் வாழ்ந்த கிராமங்களில் குளக்கட்டு, கால்வாய், பாதைகள் புனரமைப்பது போன்ற பொது வேலைகள் இதன் கீழ் மேற்கொள்ளப் பட்டன. பணம் செலுத்தாது பெற்றுக்கொள்ளப்பட்ட இச்சேவை பிரசைகளின் சுதந்திரத்திற்கு மட்டுமல்லாது முன்னேற்றத்திற்கும் தடையாக இருப்பதாகச் சுட்டிக் காட்டி அம்முறையை நீக்குமாறு கோல்புறுக் ஆலோசனையை முன்வைத்தார்.

**ஆங்கிலக் கல்வி பரவலாக்கப்பட்டமை**

கோல்புறுக் வருகைதந்த காலப் பகுதியில் அரச செலவினங்கள் அதிகரிப்பதற்கு ஏதுவான பிரதான காரணி இந்நாட்டின் ஆட்சி நடவடிக்கைகளுக்கென அதிகாரிகள் ஐரோப்பாவிலிருந்து வரவழைக்கப்பட்டமையாகும். அவர்களின் சம்பளம், தங்குமிட வசதிகள் மற்றும் ஏனைய சேவைகளை வழங்குவதற்கு அரசு அதிக தொகைப் பணத்தைச் செலவிடவேண்டியிருந்தது. எனவே அரச செலவினங்களைக் குறைத்துக் கொள்ள வேண்டுமாயின் வெளிநாட்டு அதிகாரிகளுக்குப் பதிலாக உள்நாட்டு அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும் எனும் ஆலோசனையை கோல்புறுக் முன்வைத்தார். அதற்காக ஆங்கில மொழியைப் பரவலடையச் செய்யவேண்டிய தேவையொன்றும் எழுந்தது.

சுதேசிகள் மத்தியில் பணம் செலுத்திக் கல்வியைப் பெறக்கூடியவர்களுக்கு ஆங்கில மொழியில் சிறந்த கல்வியைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் நிருவாக நடவடிக் கைகளுக்குத் தேவையான உத்தியோகத்தர்களைப் பெற முடியுமென கோல்புறுக் கருதினார்.

## 5.2 இலங்கையரின் போராட்டங்கள்

1833 ஆம் ஆண்டு கோல்புறுக் சீர்திருத்தங்கள் நடைமுறைக்கு வந்ததன் பின் அவ்வாட்சி முறையில் சிற்சில மாற்றங்களை வேண்டி முதன் முதலில் போராட்டமொன்றை முன்னெடுத்தவர்கள் இந்நாட்டில் இருந்த ஐரோப்பியர்களேயாவர். இவர்கள் பெருந் தோட்டத்துறை நடவடிக்கைகளுக்கென இலங்கைக்கு வந்து மலைநாட்டுப் பிரதே சங்களில் பெருந்தோட்டச் செய்கையில் ஈடுபட்டிருந்த செல்வந்தர்களாவர். அவர்களது தோட்டங்கள் அமைந்திருந்த பிரதேசங்களுக்கான பாதை வசதிகளை விருத்திசெய்து கொள்ளுதல், தபால், தகவல் தொடர்பாடல் வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளுதல், மேலும் பெருந்தோட்டத்துறைக்குத் தேவையான ஏனைய வசதிகளை விருத்தி செய்து கொள்ளல் போன்றவற்றுக்கான பணத்தை சீர்திருத்தத்தின் ஊடாக ஒதுக்கீடு செய்துகொள்ளும் தேவையொன்று அச்சமயத்தில் எழுந்திருந்தது. இந்த ஐரோப்பிய பிரசைகளை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காகச் சட்டவாக்க சபையில் உத்தியோக

சார்பற்ற பிரதிநிதிகள் மூவர் நியமிக்கப்பட்டிருந்தமை தொடர்பில் முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இச்சீர்திருத்தத்தில் உத்தியோக சார்பற்றோரை விட உத்தியோக சார்புள்ளோர் பெரும்பான்மையாக இருந்தமையாலும் அவர்களுக்குக் கிடைத்திருந்த அதிகாரங்கள் போதுமானவையாக இல்லாமையாலும் அவர்கள் போராட்டங்களை முன்னெடுத்தனர். இப்போராட்டங்களை முன்னெடுத்துச் செல் வதற்கு 1865 ஆம் ஆண்டு இலங்கையர் சங்கம் எனும் பெயரிலான அமைப்பொன்று தோற்றுவிக்கப்பட்டது. வில்லியம் டிக்பி, ஜோர்ஜ் வோல் போன்றோர் அப்போராட் டங்களில் முன்னணி வகித்த தலைவர்களாவர்.

கோல்புறூக் சீர்திருத்தங்களின் பின் இந்நாட்டில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை வளர்ச்சியடைந்தமையாலும் ஏற்றுமதி, இறக்குமதிப் பொருளாதார முறைமையொன்று தோற்றம் பெற்றமையாலும் இலங்கையருக்குப் பல்வேறு வியாபார நடவடிக்கை களில் ஈடுபட்டதன் மூலம் பணம் சம்பாதித்துக்கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தது. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் பெருந்தோட்டத்துறை நடவடிக்கைகள், மொத்த மற்றும் சில்லறை வியாபாரம், காரீயக் கைத்தொழில் போன்ற வியாபார நடவடிக்கை களில் ஈடுபட்டதன் மூலம் பணம் சம்பாதித்துக்கொண்ட இலங்கையர் குழு ஒன்று உருவானது. அவ்வாறு உருவான இலங்கைச் செல்வந்தர்கள் தமது பிள்ளைகளுக்கு இந்நாட்டில் மட்டுமல்லாது வெளிநாடுகளில் உயர் கல்வியைப் பெற்றுக்கொடுத்ததன் விளைவாக ஆங்கிலம் கற்ற மத்தியதர வர்க்கமொன்று தோற்றம் பெற்றது. 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதியில் இம்மத்தியதர வர்க்கத்தினர் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களைக் கோரி போராட்டங்களை முன்னெடுத்தனர். இது இலங்கையரின் அரசியல் போராட்டங்களின் ஆரம்பமாகக் கருதப்படுகின்றது.

ஆரம்ப காலப்பகுதியில் அரசியல் போராட்டங்களுக்குத் தலைமை வகித்த மத்தியதர வர்க்கத்தினர் மத்தியில் சேர் பொன்னம்பலம் இராமநாதன், சேர் பொன்னம்பலம் அருணாசலம், சேர் ஜேம்ஸ் பீரிஸ், H. G. C பெரேரா போன்ற தலைவர்கள் முன்ன ணியில் இடம் வகிக்கின்றனர். இவ்வகையில் கல்விகற்ற இலங்கையர் தலைமையில் போராட்டங்களை முன்னெடுப்பதற்காக ஆரம்ப காலப்பகுதியில் தோற்றுவிக்கப்பட்ட இயக்கங்களுள் கரையோர உற்பத்தியாளர் சங்கம், சிலாபச் சங்கம், யாழ்ப்பாணச் சங்கம் போன்றன முக்கிய இடம்பெறுகின்றன.


கல்விகற்ற இலங்கையர் மத்தியில் அரசியல் யாப்புச் சீர்திருத்தமொன்றின் தேவை தொடர்பாக விரிவான காரணங்கள் அடங்கிய கோரிக்கையொன்றினை 1908 ஆம் ஆண்டு முதன்முதலாகக் குடியேற்ற நாட்டுச் செயலாளரிடம் கையளித்தவர் சேர் ஜேம்ஸ் பீரிஸ் ஆவார். அதன்பிறகு பல்வேறுபட்ட அமைப்புக்களாலும் நபர்களாலும் மேலும் அவ்வாறான கோரிக்கைகள் பல முன்வைக்கப்பட்டன. அக்கோரிக்கைகள் ஊடாக இலங்கையர் முன்வைத்த ஆலோசனைகள் சில பின்வருமாறு,

- சட்டவாக்க சபையில் உத்தியோக சார்பற்றோர் தொகையை அதிகரித்தல்
- சட்டவாக்க சபைக்கு வாக்குரிமை மூலம் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்தல்
- இனவாரிப் பிரதிநிதித்துவ முறையை நீக்குதல்

## 5.3 குறூ - மக்கலம் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் 1910

1910 ஆம் ஆண்டு இலங்கையின் ஆளுநரான ஹென்றி மக்கலம் என்பவரின் ஆலோசனையின் பேரில் குடியேற்ற நாட்டுச் செயலாளர் குறூ பிரபுவினால் 1910 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் புதிய அரசியல் யாப்புச் சீர்திருத்தமொன்று இந்நாட்டிற்கு வழங்கப்பட்டது. இதுவே குறூ - மக்கலம் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் எனப் பட்டது. இவ்வரசியல்யாப்புச் சீர்திருத்தத்தின்கீழ் சட்டவாக்க சபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை 21 ஆக அதிகரிக்கப்பட்டது. அதில் உத்தியோக சார்புள்ளோர் 11 பேரும் உத்தியோக சார்பற்றோர் 10 பேரும் உள்ளடங்குவர். இவ்வுத்தியோக சார்பற்ற அங்கத்தவர் 10 பேரில் இனவாரிப் பிரதிநிதித்துவ முறையின் அடிப்படையில் 6 பேரும் வரையறுக்கப்பட்ட வாக்குரிமை மூலம் 4 பேரும் (ஐரோப்பியர் 2, பறங்கியர் 1 கல்வி கற்ற இலங்கையர் ஒருவர்) எனும் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டனர்.

**குறூ - மக்கலம் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் 1910**




மேலே குறிப்பிடப்பட்டுள்ளதன்படி சட்டவாக்க சபைக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்கையில் வாக்குரிமை மூலம் தெரிவுசெய்வதற்கான வாய்ப்பு கிடைக்கப்பெற்றமை, கல்வி கற்ற இலங்கையர் சார்பாக ஒருவருக்கு அங்கத்துவம் கிடைத்தமை போன்றன இவ்வரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் சிறப்பம்சங்களாகும்.

கல்வி கற்ற இலங்கையர் சார்பாக ஒருவருக்கு அங்கத்துவம் கிடைக்கப்பெற்றமை இந்நாட்டு மத்தியதர வர்க்கத்தினருக்கு சட்டவாக்க சபையில் பிரதிநிதித்துவம் பெறுவதற்கான ஒரு வாய்ப்பாக அமைந்தது. இலங்கையர் சார்பில் இந்நியமனத்திற்காக முதன்முதல் தெரிவுசெய்யப்பட்டவர் சேர் பொன்னம்பலம் இராமநாதன் ஆவார்.


## 5.4 இலங்கை தேசிய சங்கம்



உரு 5.1 சேர் பொன்னம்பலம் அருணாசலம்

குறா - மக்கலம் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்திற்கு முன் பல்வேறு இயக்கங்களாலும் மற்றும் நபர்களாலும் தனித் தனியே குடியேற்ற நாட்டு செயலாளரிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டமைபற்றி மேலே குறிப்பிடப்பட்டது. சிற்சிறு அமைப்புகள் ஊடாகக் கோரிக்கைகளை முன்வைப்பதன் மூலம் குடியேற்ற நாட்டு செயலாளருக்கு அச்சுறுத்தல் விடுக்க முடியாதென்பதையும் இலங்கையரனைவரும் ஒன்றுபட்டுக் குரலெழுப்ப வேண்டுமாயின் அனைவரினதும் ஆதரவைப் பெற்ற பொது அமைப்பொன்றினைத் தோற்றுவிப்பது அவசியம் என்பதனையும் மத்தியதர வர்க்கத்தினர் உணர்ந்து கொண்டனர். இந்தியர்கள் இந்திய தேசிய சங்கத்தினை தோற்றுவித்து ஒன்றுபட்டு செயலாற்றிய விதம் இங்குள்ள இலங்கை புத்திஜீவிகளுக்கு முன்னுதாரணமாக அமைந்தது. இதன் விளைவாகவே 1919 ஆம் ஆண்டு இலங்கை தேசிய சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. அக்காலப்பகுதியில் அரசியல் சீர்திருத்தப் போராட்ட இயக்கத்தின் முன்னணித் தலைவர்களுள் ஒருவராக விளங்கிய சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் இலங்கை தேசிய சங்கத்தின் முதல் தலைவர் பதவிக்குத் தெரிவானார்.

இலங்கை தேசிய சங்கத்தில் இணைந்துகொண்ட சிறு அமைப்புக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.



சிங்கள, தமிழ், முஸ்லிம் என இந்நாட்டு மக்களை இனரீதியாகப் பிரதிநிதித்துவப் படுத்திய அமைப்புக்கள் பல இலங்கை தேசிய சங்கம் எனும் பெயரில் பொது இலக்கொன்றை நோக்கி ஒன்றுபட்டமை இந்நாட்டின் அரசியல் வரலாற்றில் முக்கிய சந்தர்ப்பமொன்றாகக் குறிப்பிட முடியும்.

இலங்கையர் கைகளுக்கு அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் சக்திமிக்க போராட்டங்களை முன்னெடுப்பதே இலங்கை தேசிய சங்கத்தின் பிரதான குறிக்கோளாய் அமைந்தது. இதனடிப்படையில் அடுத்துவரும் அரசியல் சீர்திருத்தங்களின்போது சட்டவாக்க சபையில் இலங்கை பிரதிநிதிகளின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ளுதல், அவர்களின் அதிகாரங்களை மேம் படுத்திக் கொள்ளுதல், வாக்குரிமை மூலமாகப் பெரும்பாலான அங்கத்தவர்களைத் தெரிவுசெய்வதற்கான வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளுதல், தேசியத் தலைவர்கள் ஆட்சி நடவடிக்கைகளில் கூடுதலான பங்களிப்பினைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களைப் பெற்றுக்கொள்ளுதல் போன்றன இச்சங்கத்தின் நோக்கங்களுள் பிரதானமானவையாகும்.

மேற்குறிப்பிட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக இலங்கை தேசிய சங்கம் பின்பற்றிய நடைமுறைகள் போராட்டவாதமாக அன்றி அகிம்சைவாதப் பண்புகளை வெளிக்காட்டியனவாய் அமைந்தன. பிரித்தானிய அரசிடம் மனுக்களைச் சமர்ப்பித்தல், குடியேற்ற நாட்டு செயலாளரிடம் கோரிக்கைகளை முன்வைத்தல், கூட்டங்களை நடத்தி மக்களை அறிவூட்டுதல், சட்டவாக்க சபைக்குள் வாதப் பிரதிவாதங்களை நிகழ்த்துதல், ஆளுநரின் அபிமானத்தை வென்றுகொள்ளப் பிரயத்தனம் மேற்கொள் ளல், பத்திரிகைகளுக்கு ஆக்கங்கள் எழுதுவதன் மூலம் சீர்திருத்தங்களின் தேவைப்பாட்டை விளக்குதல் போன்ற நடைமுறைகள் பின்பற்றப்பட்டன.

## 5.5 மனிங் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் 1920


1910 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சீர்திருத்தத்தால் திருப்தி கொள்ளாத இலங்கையர் தொடர்ந்தும் போராட்டங்களை முன்னெடுத்ததன் விளைவாக 1920 ஆம் ஆண்டு மற்றுமொரு அரசியல் யாப்புச் சீர்திருத்தம் இந்நாட்டுக்குக் கிடைத்தது. அப்போதைய இலங்கை ஆளுநரான வில்லியம் மனிங் என்பவரின் ஆலோசனையின் பேரில் முன்வைக்கப்பட்ட இச்சீர்திருத்தம் மனிங் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் என அழைக்கப்பட்டது.

### சட்டவாக்க சபை

இச்சீர்திருத்தத்தின் ஊடாக சட்டவாக்க சபை அங்கத்தவர் தொகை 37 ஆக அதிகரிக்கப்பட்டது. அவர்களுள் 14 பேர் உத்தியோக சார்புள்ளோராகவும் 23 பேர் உத்தியோக சார்பற்றோராகவும் காணப்பட்டனர். உத்தியோக சார்பற்றோர் 23 பேரில் 7 பேர் ஆளுநரால் நியமனம் செய்யப்பட்டனர். எஞ்சிய 16 பேரும் வரையறுக்கப்பட்ட வாக்குரிமை மூலம் தெரிவுசெய்யப்பட்டமை இச்சீர்திருத்தத்தின் முக்கிய அம்சமாகும்.

1920 ஆம் ஆண்டு சட்டவாக்க சபைக்கு உறுப்பினர்கள் தெரிவான விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.

**அரசியல் யாப்புச் சீர்திருத்தம் 1920**




இச்சீர்திருத்தத்தின்படி சட்டவாக்க சபையில் உத்தியோக சார்புள்ளோரை விட உத்தியோக சார்பற்றோர் தொகை அதிகரித்துக் காணப்பட்டாலும் முக்கிய வாக்கெடுப் பொன்றின்போது உத்தியோக சார்புள்ள 14 பேருடன் நியமனம் மூலம் தெரிவான 7 பேரும் இணைவதால், வாக்குரிமை மூலம் தெரிவான 16 பேருக்கும் மேலான அதிக வாக்குகள் பெறக்கூடிய சந்தர்ப்பம் ஆளுநருக்கு இருந்தது.


## மனிங் - டெவன்சியர் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் 1924

1920 ஆம் ஆண்டு சீர்திருத்தத்தின் மூலம் இலங்கையரின் எதிர்பார்ப்புகள் நிறைவேறவில்லை. இதன் காரணமாக இலங்கை தேசிய சங்கம் இச்சீர்திருத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தது. இச்சங்கம் 1920 ஆம் ஆண்டு இச்சீர்திருத்தத்தின் கீழ் நடைபெற இருந்த தேர்தலையும் புறக்கணிக்க ஆயத்தமானது. இக்காலப்பகுதியில் இந்தியாவிலும் ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிரான பாரிய போராட்டமொன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. இலங்கையிலும் அவ்வாறானதொரு நிலைமை ஏற்படலாம் என ஆங்கிலேயர் அச்சமடைந்தனர். எனவே 1920 ஆம் ஆண்டு சீர்திருத்தத்தினை ஏற்றுக்கொள்வதானால் குறுகிய காலப்பகுதிக்குள் மற்றுமொரு சீர்திருத்தமொன்றை வழங்குவதாக ஆளுநர் இலங்கை தேசிய சங்கத்திற்கு உறுதியளித்தார். இதன் விளைவாகவே 1924 இல் மீண்டும் இன்னுமொரு அரசியல் யாப்புச் சீர்திருத்தமொன்று கிடைக்கப்பெற்றது. ஆளுநர் வில்லியம் மனிங்கின் சிபாரிசின் பேரில் குடியேற்ற நாட்டுச் செயலாளர் டெவன்சியரால் ஒழுங்கமைக்கப்பட்ட இச்சீர்திருத்தம் மனிங் - டெவன்சியர் சீர்திருத்தம் என அழைக்கப்பட்டது.

மனிங் - டெவன்சியர் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் கீழ் சட்டவாக்க சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை 49 ஆக அதிகரிக்கப்பட்டது. அதில் உத்தியோக சார்புள்ள 12 பேரும் உத்தியோக சார்பற்ற 37 பேரும் உள்ளடங்குவர். உத்தியோக

சார்பற்ற அங்கத்தவர்களுள் 29 பேர் வாக்குரிமை மூலம் தெரிவானதோடு எஞ்சிய 8 பேரும் ஆளுநரால் நியமனம் செய்யப்பட்டனர். வாக்குரிமை மூலம் தெரிவான 29 பேருள் 23 பேர் பிரதேசவாரித் தேர்தல் முறையின் மூலமும் 6 பேர் இனவாரிப் பிரதிநிதித்துவ அடிப்படையிலும் தெரிவுசெய்யப்பட்டனர்.

மனிங் - டெவன்சியர் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் 1924




இச்சீர்திருத்தத்தின்கீழ் உத்தியோகச் சார்புள்ள 12 பேருடன் நியமன மூலம் தெரிவான 8 பேரும் இணைந்தாலும் வாக்குரிமை மூலம் தெரிவான 29 பேரையும் விட இவர்கள் சிறுபான்மையாகவே காணப்பட்டனர். ஆகவே சட்டவாக்க சபையினுள் பெரும்பான்மை பலம் ஆளுநருக்கு இல்லாதிருந்தது. இதன் காரணமாக அரசியல் யாப்பை நடைமுறைப்படுத்துவதில் ஆளுநர் மிகவும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

1920 ஆம் ஆண்டு அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தினைப் போன்று 1924 ஆம் ஆண்டு சீர்திருத்தத்தின் கீழும் சட்டவாக்க சபைக்கான உறுப்பினர் தெரிவின்போது வாக்காளராவதற்குத் தேவையான தகுதி தொடர்பில் இலங்கையர் மத்தியில் அதிருப்தி நிலவியது. வாக்காளராவதற்கு யாதாயினும் ஒரு மொழியையேனும் எழுதவோ அல்லது வாசிக்கவோ முடியுமாயிருப்பதோடு சொத்து அல்லது வருமானம் பெறும் வழிமுறையொன்று காணப்படுதல் அவசியமாகும். இதனால் இந்நாட்டின் வாக்காளர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டே இருந்தது.


## 5.7 டொனமூர் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் 1931

மனிங் - டெவன்சியர் சீர்திருத்தத்தின் கீழான சட்டவாக்க சபையில் பெரும்பான்மை எண்ணிக்கையான ஆசனங்கள் இலங்கையருக்கு கிடைத்தமையால் ஆளுநருக்கு தந்திரோபாயமான முறையில் செயற்பட வேண்டி நேரிட்டது. இந்நிலைமையை இந்நாட்டு ஆளுநர்கள் குடியேற்ற நாட்டுச் செயலாளருக்கு அறிவித்ததன் விளைவாக இலங்கை வந்து இந்நிலைமை தொடர்பாக ஆராய்ந்து அவசியமான ஆலோசனைகளை சமர்ப்பிப்பதற்கு 1927 ஆம் ஆண்டு டொனமூர் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. டொனமூர் பிரபுவின் தலைமையில் நியமிக்கப்பட்ட இவ்வாணைக்குழு இலங்கைக்கு வந்து இலங்கையரின் கருத்துக்களைக் கேட்டறிந்து பரந்த விசாரணையொன்றினை மேற்கொண்டதன் பின் அதன் அறிக்கையைச் சமர்ப்பித்தது. அவ்வறிக்கையை அடிப்படையாகக் கொண்ட சீர்திருத்தம் 1931 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு அது டொனமூர் யாப்புச் சீர்திருத்தம் என அழைக்கப்பட்டது.

அடுத்ததாக நாம் டொனமூர் யாப்பு ஆலோசனைகள் சிலவற்றை வெவ்வேறாக ஆராய்ந்து பார்ப்போம்.

**அரசுக் கழகம் தோற்றுவிக்கப்பட்டமை**

டொனமூர் யாப்பின் கீழ் நடைமுறைக்கு வந்த சட்டவாக்க சபையானது அரசுக்கழகம் எனும் பெயரால் அழைக்கப்பட்டது. இதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை 61 ஆகும். இதில் 50 பேர் தேர்தல் தொகுதி அடிப்படையில் சர்வஜன வாக்குரிமை மூலமாகத் தெரிவானதோடு பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொள்ள முடியாத சிறுபான்மை இனத்தவருக்காக ஆளுநரின் நியமனம் மூலம் 8 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். அரச உத்தியோகத்தர்களாக அறிமுகப்படுத்தப்பட்ட எஞ்சிய மூவரும் பிரதம செயலாளர், நிதிச் செயலாளர், சட்டச் செயலாளர் எனும் அடிப்படையில் செயலாற்றியோர் ஆவர்.



அரசுக்கழகத்தில் பிரதான இடம் அதன் அங்கத்தவர்களின் வாக்குகளால் தெரிவான சபாநாயகருக்கே வழங்கப்பட்டது. அதன்படி டொனமூர் அரசுக் கழகத்தின் முதலாவது சபாநாயகராக A.F மொலமுரே நியமனம் பெற்றார். அரசுக் கழகத்தின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும்.

### சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டமை

1910 குறூ - மக்கலம் சீர்திருத்தத்தில் இருந்து சட்டவாக்க சபைக்கு உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும்போது வாக்குரிமை பயன்படுத்தப்பட்டிருந்தாலும் அதற்கான தகைமைகளைப் பெற்றவர்கள் மொத்த சனத்தொகையில் வரையறுக்கப்பட்ட சிலரே ஆவர். வாக்காளராவதற்கான தகுதியைப் பெறவேண்டுமாயின் குறிப்பிட்டளவு கல்வித் தகைமையும் சொத்தும் அவசியமானவையாக இருந்தன. இதன் காரணமாக சாதாரண மக்களுக்கு வாக்குரிமை கிடைக்கப்பெறாததோடு வாக்காளர்கள் மொத்தச் சனத்தொகையில் 4 % மான சிறு தொகையினராக வரையறுக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு சாதாரண மக்களை அரசியல் களத்திலிருந்து விலக்கி வைத்திருக்கின்றமையானது அரசியலதிகாரிகளின் கவனம் அவர்கள்மீது திரும்பாமைக்குக் காரணமாய் உள்ள தென்பதை டொனமூர் ஆணைக்குழுவினர் சுட்டிக்காட்டினர். இதன் காரணமாக சாதாரண மக்களை அரசியல் ரீதியில் ஊக்கப்படுத்தி அவர்களின் நலனிற்காக அரசியல் அதிகாரிகளின் கவனத்தை ஈர்க்க வேண்டுமாயின் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட வேண்டுமென ஆணைக்குழு தீர்மானித்தது. இதன்படி 21 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாருக்கும் வாக்குரிமை கிடைக்கப்பெற்றது. இதனை பொதுமக்கள் அடைந்த மாபெரும் வெற்றியாகக் கருத முடியும். இவ்விதமாக எவ்வித பேதங்களுமின்றி பிரித்தானியக் குடியேற்ற நாடுகளுள் வாக்குரிமையை பெற்ற முதலாவது ஆசிய நாடு என்ற பெருமை இலங்கைக்குக் கிடைத்தது.

### நிருவாகக்குழு முறைமை தோற்றுவிக்கப்பட்டமை

அரசுக்கழகம், சட்டவாக்கம், சட்ட நிருவாகம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனமாகச் செயலாற்றியது. இதற்குக் கையளிக்கப்பட்ட சட்டவாக்கக் கடமைகளை இந்நிறுவனம் கூட்டாக ஒன்றிணைந்து செயற்படுத்தியது. நிருவாக நடவடிக்கைகளுக்காக அரசுக் கழகம் ஏழு நிருவாகக் குழுக்களாக பிரிக்கப்பட்டது. இதற்கமைய தேர்தலின்பின் அரசுக் கழகத்திற்குத் தெரிவாகும் உறுப்பினர்கள் 61 பேருள் சபாநாயகர் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் மூவர் தவிர்ந்த ஏனைய 57 பேரும் 7 நிருவாகக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். அந்நிருவாகக் குழுக்கள் 7 கீழே தரப்பட்டுள்ளன.

- உள்நாட்டு அலுவல்கள்
- விவசாயமும் காணியும்
- உள்ளூராட்சி
- சுகாதாரம்
- கல்வி

- தொழில், கைத்தொழில், வர்த்தகம்
- போக்குவரத்தும் பொது வேலைகளும்

ஒவ்வொரு நிருவாகக் குழுவும் வெவ்வேறாக ஒன்றுகூடி அதற்கான தலைவரைத் தெரிவுசெய்யவேண்டியிருந்தது. அத்தலைவர்கள் அத்துறை சார்ந்த அமைச்சர்களாக நியமனம் பெற்றனர்.

இத்தலைவர்கள் 7 பேர் உட்பட அரச உத்தியோகத்தர்கள் மூவரும் அமைச்சர்களாகக் கருதப்பட்டனர்.

டொனமூர் யாப்பின்கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட நிருவாகக்குழு முறைமையின் காரணமாக இலங்கை பிரதிநிதிகளுக்கு நிருவாகம் தொடர்பான பயிற்சியொன்றினைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றதோடு பாராளுமன்ற ஆட்சி முறையை நோக்கிய பயணத்தில் அது ஒரு முக்கிய மைல்கல்லாகவும் அமைந்தது.

### ஆளுநரும் அரச உத்தியோகத்தர்கள் மூவரும்

இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட யாப்புகளுடன் ஒப்பிடும்போது டொனமூர் யாப்பின்கீழ் ஆளுநரின் அதிகாரங்கள் பெருமளவிற்குக் குறைக்கப்பட்டிருந்தன. அரசின் சகல பொறுப்புக்களையும் தொடர்ந்தும் ஆளுநரிடம் கையளிக்க விரும்பாத டொனமூர் ஆணைக்குழுவினர் அதில் ஒரு பகுதியை இலங்கையரிடம் கையளிக்க விரும்பினர். அதன்படி அரசுக்கழகம் பிறப்பிக்கும் சட்டங்களுக்கு இறுதி அனுமதி வழங்கல், அரச உத்தியோகத்தர்களை நியமித்தல், பிரித்தானியப் பேரரசைப் பாதிக்கும் செயற்பாடுகள் தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்ளல் போன்ற அதிகாரங்கள் ஆளுநரிடம் கையளிக்கப்பட்டிருந்தன.


இச்சீர்திருத்தத்தின்கீழ் பாதுகாப்பு, நிதிசார் நடவடிக்கைகள், சட்டம் போன்ற முக்கிய விடயங்கள் முறையே பிரதம செயலாளர், நிதிச் செயலாளர், சட்டச் செயலாளர் எனும் அரச அதிகாரிகள் மூவரிடத்தின்கீழ் இருந்தன.

### இனவாரிப் பிரதிநிதித்துவ முறைமை நீக்கப்பட்டமை

சட்டவாக்கச் சபைக்கு பிரதிநிதிகளைத் தெரிவுசெய்கையில் 1833 ஆம் ஆண்டு முதல் பிரித்தானியர் இனவாரிப் பிரதிநிதித்துவ முறையையே நடைமுறைப்படுத்தினர். இது இலங்கையில் வெவ்வேறு இனங்களுக்கு மத்தியில் பேதங்கள் ஏற்படுவதற்கு ஏதுவாய் அமைந்த பிரதிநிதித்துவ முறையொன்றாகும். இதன் காரணமாக இனவாரி பிரதிநிதித்துவ முறை நீக்கப்பட வேண்டுமென 1931 ஆம் ஆண்டு வரையும் இலங்கையர்கள் குரல் எழுப்பினர். டொனமூர் யாப்புச் சீர்திருத்தத்தினூடாக இனவாரி பிரதிநிதித்துவ முறை நீக்கப்பட்டு பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறை முழுமைப்படுத்தப்பட்டமை பாராட்டத்தக்க ஒரு விடயமாகும்.

## 5.8 சோல்பரி அரசியல் யாப்பு 1947

### சோல்பரி ஆணைக்குழு நியமிக்கப்பட்டமை



உரு 5.2 சோல்பரி பிரபு

டொனமூர் யாப்பின்கீழ் தோற்றுவிக்கப்பட்ட பத்து அமைச்சுக்களுள் ஏழு அமைச்சுக்களின் அதிகாரங்கள் இலங்கையருக்குக் கிடைத்ததெனினும் அரச அதிகாரிகள் மூவருக்கும் முக்கிய அமைச்சுப் பொறுப்புக்கள் மூன்றும் கையளிக்கப்பட்டிருந்தமை, ஆளுநருக்கு கையளிக்கப்பட்டிருந்த அதிகாரங்கள் போன்றன தொடர்பில் இந்நாட்டுப் பிரதிநிதிகள் மகிழ்ச்சி கொள்ளவில்லை. இதன் காரணமாக டொனமூர் அரசியல் யாப்பு நடைமுறையிலிருந்த காலப் பகுதியிலேயே அவ்வரசியல் யாப்பினை மீள்பரிசீலனை செய்து புதிய அரசியல் யாப்பொன்றை பெற்றுக்கொள்ளுவதற்கு போராட்டங்கள் எழுந்தன. அப்போராட்டங்களின் முக்கிய நோக்கங்கள் சில பின்வருமாறு,

- ❖ அரச அதிகாரிகளிடத்தில் கையளிக்கப்பட்டிருந்த அமைச்சுப் பொறுப்புக்களை இலங்கையருக்குப் பெற்றுக்கொடுத்தல்.
- ❖ இலங்கைப் பிரதிநிதிகளுக்குக் கையளிக்கப்பட்டிருந்த அதிகாரங்களைப் பரவலாக்குதல்.
- ❖ நிர்வாகக்குழு முறைமைக்குப் பதிலாக அமைச்சரவை (கெபினட்) முறையொன்றினைப் பெற்றுக்கொள்ளுதல்.

இப்போராட்டங்களின்போது அமைச்சரவையும் அரசுக்கழக மக்கள் பிரதிநிதிகளும் முன்னணியில் நின்று செயலாற்றினர். இலங்கை தேசிய சங்கம் போன்ற அமைப்புக்கள் அமைச்சரவைக்கு ஆதரவை வழங்கின.

1939 ஆம் ஆண்டில் இரண்டாம் உலகப்போர் ஆரம்பமாகியதால், உலகப் போரின்போது இலங்கையரின் உதவி பிரித்தானியருக்குத் தேவைப்பட்டது. இதன்போது ஜேர்மனிக்கு எதிராகப் போரிட்ட நாடுகளுள் பிரித்தானியா குறிப்பிடத்தக்க சேவையாற்றியுள்ளது. இந்த இக்கட்டான சூழ்நிலையில் இந்நாட்டு அமைச்சரவை பிரித்தானியருக்கு ஆதரவு வழங்க முன்வந்ததோடு யுத்தம் முடிவடைந்ததன் பின் இலங்கையருக்கு கூடிய அதிகாரங்களைப் பெற்றுத்தரக்கூடிய அரசியல் யாப்புச் சீர்திருத்தமொன்றினைப் பெற்றுக்கொள்வது அவர்களின் நோக்கமாக அமைந்தது. யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தவேளை இந்நாட்டு அமைச்சர்களுக்கு ஆளுநர் உள்ளிட்ட பிரித்தானிய அதிகாரிகளுடன் இணைந்து ஒத்துழைப்புடன் பணியாற்றுவதற்கான வாய்ப்புக் கிடைத்தது. இதன் காரணமாக இலங்கையரின்

அரசியல் கோரிக்கைகள் தொடர்பாகப் பிரித்தானிய அதிகாரிகளிடத்தில் நெகிழ்வு மனப்பாங்கொன்று ஏற்பட்டமை தெரிகின்றது.

இலங்கையில் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பில் பிரித்தானிய அரசின் கொள்கைகளைத் தெளிவுபடுத்தும் அறிக்கையொன்று 1943 ஆம் ஆண்டு மே மாதம் இந்நாட்டின் ஆளுநரால் வெளியிடப்பட்டது. அதன் பிரகாரம் நாட்டின் உள்நாட்டு அலுவல்கள் தொடர்பான பொறுப்புக்களை இலங்கையரிடம் கையளிக்கும் சீர்திருத்தமொன்றினை வழங்குவதற்குப் பிரித்தானியா நடவடிக்கை மேற்கொள்வதாக குறிப்பிடப்பட்டிருந்தது. இக்கூற்றின்படி பொருத்தமான அரசியல் யாப்புச் சட்டமூலமொன்றை உருவாக்குவதற்கான பொறுப்பு அரசுக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அரசியல் யாப்புச் சட்டமூலத்தை ஒழுங்கமைக்கும்போது அரசியல் யாப்புத் தொடர்பில் நிபுணத்துவம் பெற்றிருந்த பல்கலைக்கழக உபவேந்தரான ஐவர் ஜெனிங்ஸ் அவர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள அமைச்சர்கள் நடவடிக்கை மேற்கொண்டனர்.

அரசுக்கழகத்திடம் சட்டமூலம் 1944 ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் தயாரித்து முடிக்கப்பட்டது. அரசுக்கழகத்தின் அரசியல் யாப்புச் சட்ட மூலத்தை ஆராய்ந்து இந்நாட்டின் சிறுபான்மையினத்தவர் உட்பட வெவ்வேறு குழுக்களுடன் கலந்துரையாடி பிரித்தானிய அரசுக்கு அறிக்கையொன்றினைச் சமர்ப்பிப்பதற்காக 1944 ஆம் ஆண்டு ஜுலை மாதம் பிரித்தானிய அரசினால் விசேட ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. சோல்பரி பிரபுவின் தலைமையிலான அவ்வாணைக்குழு சோல்பரி ஆணைக்குழு என அழைக்கப்பட்டது.

1944 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் சோல்பரி ஆணைக்குழு இந்நாட்டுக்கு வந்து தகவல் தேடியறிந்து 1945 இல் ஆணைக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தது. அவ்வறிக்கையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அரசியல் யாப்பு 1947 முதல் இந்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இது சோல்பரி அரசியல் யாப்பு என அழைக்கப்பட்டது.

**சோல்பரி அரசியல் யாப்பின் விசேட பண்புகள்**

- ஆளுநர் எனும் பதவி நீக்கப்பட்டு ஆளுநர் நாயகம் எனும் பதவி தோற்றுவிக்கப்பட்டமை.
- இரு சபைகள் கொண்ட பாராளுமன்றம் தோற்றுவிக்கப்பட்டமை. (பிரதிநிதிகள் சபை, செனட் சபை)
- பிரதமரின் தலைமையிலான அமைச்சரவை ஒன்று உருவாக்கப்பட்டமை.
- அரசாங்க சேவை ஆணைக்குழுவும் நீதிச் சேவை ஆணைக்குழுவும் நியமிக்கப்பட்டமை.

## ஆளுநர் நாயகம்



உரு 5.3 ஹென்றி மென்க் மேசன் மூர்

இதுவரை நடைமுறையிலிருந்த ஆளுநர் பதவி சோல்பரி யாப்பின் கீழ் நீக்கப்பட்டது. இவ்வரசியல் யாப்பின் கீழும் பிரித்தானிய மகாராணியையே தொடர்ந்தும் இலங்கையின் தலைவியாக ஏற்றுக் கொள்ளப்பட்டமையால் அவரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக ஆளுநர் நாயகம் பதவி அறிமுகப் படுத்தப்பட்டது. பிரித்தானிய மகாராணியால் ஆளுநர் நாயகம் நியமிக்கப்பட்டார். அவருக்கு சட்டவாக்கம், சட்ட நிருவாகம், நீதிசார் துறைகளில் அதிகாரங்கள் பல கிடைக்கப் பெற்றாலும் பிரதமரின் ஆலோசனைப்படியே அவர் செயற்பட வேண்டி யிருந்தமையால் அப்பதவி பெயரளவு நிறைவேற்றுத்துறை சார்ந்த பதவியாகவே அமைந்தது. அவ்வேளை ஆளுநராகப் பதவி வகித்த சேர் ஹென்றி மென்க் மேசன் மூர் இந்நாட்டின் முதல் ஆளுநர் நாயகமாகவும் பணியாற்றினார்.

## பாராளுமன்றம்

சோல்பரி அரசியல் யாப்பிற்கமைய சட்டத்துறை சார் நடவடிக்கைகளை மேற்கொண்ட நிறுவனம் பாராளுமன்றம் என அழைக்கப்பட்டது. பாராளுமன்றம் பிரதிநிதிகள் சபை, செனட் சபை எனும் இரு சபைகளால் ஆனது. எனவே இது இரு சபை பாராளுமன்றம் என அழைக்கப்பட்டது.




உரு 5.4 பழைய பாராளுமன்றம்

பிரதிநிதிகள் சபை பாராளுமன்றத்தின் முதலாம் மன்றமாக அமைந்ததோடு பாராளுமன்ற உறுப்பினர்கள் 101 பேரை உள்ளடக்கியிருந்தது. அதில் 95 பேர் தேர்தல் தொகுதி அடிப்படையில் பொதுமக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்படுவதுடன் எஞ்சிய 6 பேரும் அங்கத்துவத்தை பெற்றுக் கொள்ள முடியாத சிறுபான்மையோருக்காக பிரதமரின் ஆலோசனைக்கு அமைய ஆளுநர் நாயகத்தால் நியமிக்கப்பட்டோராவர். பாராளுமன்றத்தின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும்.

பாராளுமன்றத்தின் இரண்டாம் மன்றமான செனட் சபை மூதவை எனவும் அழைக்கப் பட்டது. இது 30 அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது. 15 பேர் பிரதமரின் ஆலோச னைக்கு அமைய ஆளுநர் நாயகத்தால் நியமனம் செய்யப்பட்டனர். எஞ்சிய 15 பேரும் பிரதிநிதிகள் சபையின் வாக்குகளால் தெரிவுசெய்யப்படுவர். செனட் சபையின் பதவிக்காலம் 6 ஆண்டுகள் ஆகும்.

### பிரதமரின் தலைமையிலான அமைச்சரவை



உரு 5.5 முதலாவது அமைச்சரவை

சோல்பரி அரசியல் யாப்பின் கீழ் நிறைவேற்ற திகாரம் எனும் சட்டவாக்க அதிகாரம் பிரதமர் தலைமையிலான அமைச்சரவையிடம் காணப் பட்டது. அமைச்சரவையில் தலைமைத்துவம் பிரதமருக்குக் கிடைத்தது. பிரதிநிதிகள் சபையில் பெரும்பான்மையோரின் நம்பிக்கையைப் பெற்ற நபர் ஆளுநர் நாயகத்தால் பிரதமர் பதவிக்கு நியமனம் செய்யப்படுவார். பிரதமரின் ஆலோச னையின் பேரில் ஆளுநர் நாயகத்தால் அமைச்சர் கள் நியமனம் செய்யப்படுவர். பிரதிநிதிகள் சபையின் ஆளுங்கட்சி பிரதிநிதிகள் மற்றும் செனட் சபை பிரதிநிதிகளிலிருந்து அமைச்சரவைக்கான அமைச்சர்கள் தெரிவுசெய்யப்படுவர். செனட் சபையிலிருந்து குறைந்தபட்சம் இருவராவது அமைச்சரவையில் இடம்பெற வேண்டும்.



உரு 5.6 டி.எஸ். சேனாநாயக்க அவர்கள்

அதேவேளை அதில் ஒருவர் கட்டாயம் நீதியமைச்சராக நியமிக்கப்பட வேண்டும் என சோல்பரி யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. நீதித்துறையின் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டது. அமைச்சரவை கூட்டாகப் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூறவேண்டியிருந்தமை ஒரு சிறப்பம்சமாகும்.

**அரசாங்க சேவை ஆணைக்குழு**

சோல்பரி யாப்பின்கீழ் நீதிபதி,கணக்காய்வாளர், நிரந்தர செயலாளர் போன்ற உயர் அதிகாரிகள் பிரதமரின் ஆலோசனையின் பேரில் ஆளுநர் நாயகத்தால் நியமிக்கப் படுவர். இது தவிர கீழ்நிலை அரச உத்தியோகத்தர்களை நியமித்தல், நீக்குதல், ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. அரசாங்க சேவை ஆணைக்குழுவானது அங்கத்தவர்கள் மூவரை உள்ளடக்கியிருந்தது.

**நீதிச்சேவை ஆணைக்குழு**

சோல்பரி யாப்பின் கீழ் பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்ற நீதியரசர் கள் ஆகியோரை நியமித்தல் போன்றன பிரதமரின் ஆலோசனையின் பேரில் ஆளுநர் நாயகத்தால் மேற்கொள்ளப்படும். ஏனைய கீழ்நிலை நீதிமன்றங்களுக்கான நீதிபதிகளை நியமித்தல், நீக்குதல், ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பாக நீதிச் சேவை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. இது பிரதம நீதியரசர் உட்பட மேலும் இரு நீதியரசர்களை உள்ளடக்கியிருந்தது.




**செயற்பாடு**

கீழே தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் பிரித்தானியரின்கீழ் நடை முறைப்படுத்தப்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பான தகவல்களடங்கிய பக்கப்புரட்டியொன்றினைத் தயாரிக்க.

1. பிரித்தானியரின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள்.
2. அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களில் உள்ளடங்கியுள்ள முக்கிய ஆலோசனைகள்.
3. அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களின் நன்மை, தீமைகள்

# 6 சுதந்திரத்தின் பின் இலங்கை



## அறிமுகம்

1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்ததுடன் பாராளுமன்ற ஜனநாயக அரசியல் அமைப்பு முறையொன்று இந்நாட்டிற்குக் கிடைத்தது. அன்று வரை நடைமுறையில் இருந்த சோல்பரி அரசியல் யாப்பிற்குப் பதிலாக 1972 ஆம் ஆண்டு குடியரசு யாப்பு அறிமுகப்படுத்தப்பட்டதும், 1978 ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையுடன் கூடிய புதிய யாப்பு நடைமுறைக்கு வந்தமையும் இந்நாட்டின் வரலாற்றில் முக்கிய நிகழ்வுகளாகும். சுதந்திரத்தின் பின்னர் முப்பது ஆண்டு காலத்தில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள், அவற்றின் கொள்கைகள், நாட்டின் அபிவிருத்தித் துறையில் தெளிவாகத் தெரியும் சில அம்சங்கள் என்பன பற்றி இந்த அத்தியாயத்தில் கவனம் செலுத்தப்படுகிறது. அவ்வாறே 1972, 1978 ஆம் ஆண்டுகளில் அறிமுகம் செய்யப்பட்ட புதிய அரசியல் யாப்புகளின் அடிப்படை இயல்புகள் என்பனவற்றிலும் கவனம் செலுத்தப்படுகிறது.

## 6.1 1947 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலும் சுதந்திரம் கிடைக்கப்பெற்றமையும்

சோல்பரி அரசியல் யாப்பின் கீழ் அமைக்கப்பட்ட பாராளுமன்றத்திற்கு 95 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பொதுத் தேர்தல் நடைபெற்றது. அது இலங்கையில் நடைபெற்ற முதலாவது பாராளுமன்றத் தேர்தலாகும். இந்த தேர்தலுக்கு முகங்கொடுக்கும்பொருட்டு டீ.எஸ். சேனாநாயக்க அவர்களால் ஐக்கிய தேசியக் கட்சி தோற்றுவிக்கப்பட்டது. இந்தத் தேர்தலில் 42 ஆசனங்களை ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுக் கொண்டது. ஐக்கிய தேசியக் கட்சி தவிர கூடிய ஆசனங்களை இலங்கை சமசமாஜ கட்சி பெற்றுக் கொண்டது. அக்கட்சி பெற்ற ஆசனங்களின் எண்ணிக்கை 10 ஆகும். ஏனைய கட்சிகள் அனைத்தும் பெற்றுக் கொண்ட ஆசனங்களின் எண்ணிக்கை 22 ஆகும். சுயேச்சையாகத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களில் 21 பேர் தேர்தலில் வெற்றி பெற்றமை சிறப்பம்சமாகும். கூடுதலான ஆசனங்களைப் பெற்றுக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் திரு.டீ. எஸ் சேனாநாயக்க அவர்கள் சுயேச்சை அங்கத்தவர்கள் சிலரின் துணையுடன் அரசாங்கத்தை அமைத்தார். இதற்கமைய டீ. எஸ். சேனாநாயக்க அவர்கள் இந்நாட்டின் முதலாவது பிரதம மந்திரியானார்.

டீ. எஸ். சேனாநாயக்க அவர்கள் 1947 ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன்னரே இந்நாடு சுதந்திரம் பெறுவதற்காக பிரித்தானிய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருந்தார். இக்காலகட்டத்தில் ஆங்கிலேயர் இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கத் தயாராக இருந்தனர். இரண்டாம் உலக மகா யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த இக்கட்டான காலகட்டத்தில் பிரித்தானியருக்குத் தனது ஒத்துழைப்பை வழங்கிய நாடென்ற வகையில் இலங்கைக்குச் சுதந்திரம் பெறுவதற்கான உரிமை இருப்பதாக சேனாநாயக்க அவர்களின் பிரதிநிதிகள் பிரித்தானியருக்குத் தெளிவுபடுத்தினர். இலங்கையர் முன்வைத்த விடயத்தில் நியாயம் இருப்பதை உணர்ந்த பிரித்தானியர், 1947 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் பின்னர் இலங்கையின் சுதந்திரம் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாகத் தேர்தலுக்கு முன்னர் அறிவித்தனர். 1947 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற்று டீ. எஸ் சேனாநாயக்க அவர்கள் பிரதம மந்திரியாக வந்தமையால் பிரித்தானியர் மகிழ்ச்சி அடைந்தனர். புதிய பிரதமர் டீ. எஸ் சேனாநாயக்க அவர்கள் பிரித்தானியருடன் பாதுகாப்பு உடன்படிக்கை ஒன்றினைச் செய்தார். அந்த உடன்படிக்கைக்கு அமைய இலங்கையின் பாதுகாப்பிற்காக நடவடிக்கை மேற்கொள்ள பிரித்தானியர் உடன்பட்டதுடன், தேவையான சந்தர்ப்பங்களில் இலங்கையின் துறைமுகங்கள், விமான நிலையங்களை யுத்த நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தவும் பிரித்தானியருக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட பின்னர் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்குவது தொடர்பான விடயங்கள் அடங்கிய இலங்கையின் சுதந்திரச் சட்டம் 1947 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பிரித்தானியப் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது. மன்னனின் தீர்மானப்படி 1948 ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 4 ஆந் திகதி தொடக்கம் இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதற்கமைய இலங்கை சுதந்திரம் அடைந்தது.

## 6.2 சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களும் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களின் வேலைத் திட்டங்களும்

### 1952 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல்

சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதம மந்திரியான டீ. எஸ் சேனாநாயக்க அவர்கள் 1952 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மரணமடைந்தார். அவரது வெற்றிடத்திற்காக டீ. எஸ் சேனாநாயக்க அவர்களின் புதல்வரான டட்லி சேனாநாயக்க அவர்கள் மகா தேசாதிபதியால் நியமிக்கப்பட்டார். இக்காலகட்டத்தில் எஸ்.டபிள்யூ.ஆர்.டீ.பண்டாரநாயக்க அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி எனும் புதிய அரசியல் கட்சியை நிறுவியிருந்தார். டட்லி சேனாநாயக்க அவர்களின் ஆலோசனையின்படி மகா தேசாதிபதி குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் பாராளுமன்றத்தைக் கலைத்தமையானது 1952 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு வழி வகுத்தது.

### 1952 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் முடிவுகள்

- தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்படவேண்டிய ஆசனங்கள் - 95
- ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற்ற ஆசனங்கள் - 54
- ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி வெற்றி பெற்ற ஆசனங்கள் - 09
- ஏனைய கட்சிகளும் சுயேச்சை உறுப்பினர்களும் வெற்றி பெற்ற ஆசனங்கள் - 32

1952 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் அதிகப்படியான ஆசனங்களைப் பெற்று வெற்றியடைந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை அமைத்ததுடன், அதன் தலைவரான டட்லி சேனாநாயக்க அவர்கள் பிரதம மந்திரியானார்.




உரு 6.1 ஹர்த்தாலின்போது நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்று

1952 - 1956 காலப் பகுதியில் இந்நாட்டின் அரசியலில் துல்லியமாகத் தெரியும் பண்புகள் பின்வருமாறு.

- ❖ அரிசி உட்பட உணவுப் பொருள்களின் விலை அதிகரித்ததால் 1953 ஆம் ஆண்டு டட்லி சேனாநாயக்க அவர்களின் அரசுக்கு எதிராக ஹர்த்தால் ஆரம்பமானது.
- ❖ இடதுசாரிக் கட்சிகளினதும் தொழிற்சங்கங்களினதும் ஒத்துழைப்புடன் இந்த ஹர்த்தால் செயற்படுத்தப்பட்டது.
- ❖ ஹர்த்தாலின் விளைவாக டட்லி சேனாநாயக்க அவர்கள் பதவி விலகினார், அப்பதவிக்கு சிரேஷ்ட உறுப்பினரான சேர் ஜோன் கொத்தலாவல அவர்கள் நியமிக்கப்பட்டார்.
- ❖ சேர். ஜோன் கொத்தலாவல அவர்களின் ஆட்சிக் காலத்தில் அதாவது 1955 ஆம் ஆண்டு இலங்கை, ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெற்றது.
- ❖ குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் அரசாங்கம் கலைக்கப்பட்டது.
- ❖ இதற்கமைய 1956 ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்றது.

### 1956 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலும் புதிய அரசாங்கமும்



உரு 6.2 எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்க அவர்கள்

1956 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தனியாகப் போட்டியிட்டது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியானது, புரட்சி வாத சமசமாஜக்கட்சி, பாஷா பெரமுன போன்ற கட்சிகள் சிலவற்றுடனும், ஐ. எம். ஆர். ஏ. ஈரியகொல்ல அவர்களின் தலைமையிலான சுயேச்சை அபேட்சகர் குழுவினதும் ஒத்துழைப்பைப் பெற்று மக்கள் ஐக்கிய முன்னணி என்ற பெயரில் தேர்தலில் போட்டியிட்டமை சிறப்பம்சமாகும். பௌத்த பிக்குகள், சுதேச வைத்தியர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், தொழிலாளர் என்ற ஐம்பெரும் பிரிவினரது ஒத்துழைப்பும் இவர்களுக்குக் கிடைத்தது.

### 1956 ஆம் ஆண்டின் பொதுத் தேர்தல் முடிவுகள்

- ❖ தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்படவேண்டிய ஆசனங்களின் எண்ணிக்கை - 95
- ❖ மக்கள் ஐக்கிய முன்னணி வெற்றிபெற்ற ஆசனங்களின் எண்ணிக்கை - 51
- ❖ ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற்ற ஆசனங்களின் எண்ணிக்கை - 08
- ❖ ஏனைய கட்சிகளும் சுயேச்சைக் குழுவினரும் வெற்றி பெற்ற ஆசனங்கள் - 36

தேர்தலில் வெற்றி பெற்ற மக்கள் ஐக்கிய முன்னணி, அரசாங்கத்தை அமைத்ததுடன், அதன் தலைவராக விளங்கிய எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்க அவர்கள் பிரதம மந்திரியானார்.

### 1956 ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்ற அரசாங்கத்தின் செயற்பாடுகள்

- ❖ உள்நாட்டுக் கைத்தொழில், விவசாயம் என்பவற்றை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- ❖ துறைமுகம், போக்குவரத்து போன்ற தனியார் உடைமைகளைத் தேசியமயமாக்குதல்.
- ❖ சிங்கள மொழியை அரசகரும மொழியாக்குதல்.

1959 ஆம் ஆண்டு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் பிரதமர் பண்டாரநாயக்கா அவர்கள் உயிரிழந்தமையால் அப்பதவிக்கு விஜயானந்த தஹநாயக்கா அவர்கள் நியமிக்கப்பட்டார். எனினும் அரசாங்கத்தில் ஏற்பட்ட உட்பூசல்கள் காரணமாகப் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. அதன் விளைவாக 1960 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பொதுத் தேர்தல் நடைபெற்றது.

### 1960 ஆம் ஆண்டு மார்ச் மாதப் பொதுத் தேர்தல்

1960 ஆம் ஆண்டாகும்போது பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்கள் 151 ஆக இருக்க வேண்டுமெனத் தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்திருந்தது. 1956 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் மக்கள் ஐக்கிய முன்னணி என்ற பெயரில் இணைந்திருந்த கட்சிகள், இத்தேர்தலில் தனிக் கட்சிகளாகப் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்க அம்சமொன்றாகும்.

### 1960 ஆம் ஆண்டு மார்ச் மாதப் பொதுத் தேர்தல் முடிவுகள்

- ❖ தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்படவேண்டிய ஆசனங்கள் - 151
- ❖ ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற்ற ஆசனங்கள் - 50
- ❖ ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி வெற்றி பெற்ற ஆசனங்கள் - 46
- ❖ ஏனைய கட்சிகளும் சுயேச்சை குழுக்களும் - 55

மேற்படி குறிப்புகளுக்கு அமைய இத்தேர்தலில் எந்தவொரு கட்சியுமே பெரும்பான்மை ஆசனங்களைப் பெறவில்லை. எனினும் ஐக்கிய தேசியக் கட்சி சிறு கட்சிகள் சிலவற்றை இணைத்துக் கொண்டு அரசாங்கத்தை அமைத்தது. எனினும் பாராளுமன்றத்தில் முன் வைக்கப்பட்ட முதலாவது சிம்மாசனப் பிரசங்க உரை தோல்வியுற்றதால் பாராளுமன் றம் கலைக்கப்பட்டதுடன், 1960 ஆம் ஆண்டு ஜுலை மாதம் மீண்டுமொரு பொதுத் தேர்தல் நடைபெற்றது.

### 1960 ஆம் ஆண்டு ஜுலை மாதப் பொதுத் தேர்தலும் அரசாங்கமும்

1960 ஆம் ஆண்டு ஜுலை பொதுத் தேர்தலின்போது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியாக சிறிமாவோ பண்டாரநாயக்கா நியமிக்கப்பட்டிருந்தார். லங்கா சமசமாஜக் கட்சி, கொமியுனிஸ்ட் கட்சி என்பனவற்றுடன் போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தமொன்றை செய்து கொண்டதன்பின், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தேர்தலில் போட்டியிட்டமை சிறப்பம்சமாகும்.

### 1960 ஆம் ஆண்டு ஜுலை மாதப் பொதுத் தேர்தல் முடிவுகள்

- ❖ தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்படவேண்டிய ஆசனங்கள் - 151
- ❖ ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பெற்ற ஆசனங்களின் எண்ணிக்கை - 75
- ❖ ஐக்கிய தேசியக் கட்சி பெற்ற ஆசனங்களின் எண்ணிக்கை - 30
- ❖ சமஷ்டிக் கட்சி - 16
- ❖ இலங்கை சமசமாஜக் கட்சி பெற்ற ஆசனங்களின் எண்ணிக்கை - 12
- ❖ ஏனைய கட்சிகளும் சுயேச்சை குழுக்களும் பெற்ற ஆசனங்களின் எண்ணிக்கை - 18

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியானது, இலங்கை சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி என்பவற்றுடன் இணைந்து கூட்டு முன்னணி என்ற பெயருடன் அரசாங்கத்தை அமைத்தது. சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்கள் பிரதம மந்திரியானார். இதற்கமைய உலகின் முதலாவது பெண் பிரதமர் என்ற பெருமையை அவர் பெற்றுக் கொண்டார்.



உரு 6.3 ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அவர்கள்

## 1960 ஜுலை மாதம் நடைபெற்ற தேர்தலின் பின் அமைக்கப்பட்ட அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள்

- 1956 ஆம் ஆண்டு பண்டாரநாயக்க அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட தேசிய மயமாக்கல் கொள்கையை முன்னெடுத்துச் செல்லல். இதன் விளைவாக அனைத்துப் பாடசாலைகளையும் அரசாங்கம் சுவீகரித்தல்.
- தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான சீர்திருத்தங்களை பின்பற்றுதல்.

  இதன் கீழ் 1961 ஆம் ஆண்டு மக்கள் வங்கி நிறுவப்படல்.
- விவசாய நடவடிக்கைகளுக்கென கடன் வசதியைப் பெறும் சந்தர்ப்பம் இதன் மூலம் விவசாயிகளுக்குக் கிடைத்தது.

## 1965 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலும் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கமும்

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான சி.பீ.டீ. சில்வாவின் தலைமையில் 14 அங்கத்தவர்கள் அரசாங்கத்திலிருந்து இராஜினாமாச் செய்தமை மற்றும் கடுமையான பொருளாதாரச் சிக்கல் காரணமாக 1960 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தைக் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் கலைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதற்கமைய 1965 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மீண்டுமொரு பொதுத் தேர்தல் நடைபெற்றது.

1965 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் முடிவுகள்

- ❖ தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்படவேண்டிய ஆசனங்கள் - 151
- ❖ ஐக்கிய தேசியக் கட்சி பெற்ற ஆசனங்களின் எண்ணிக்கை - 66
- ❖ ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பெற்ற ஆசனங்களின் எண்ணிக்கை - 41
- ❖ சமஷ்டிக் கட்சி பெற்ற ஆசனங்களின் எண்ணிக்கை - 14
- ❖ இலங்கை சமசமாஜக் கட்சி பெற்ற ஆசனங்களின் எண்ணிக்கை - 10
- ❖ ஏனைய கட்சிகளும் சுயேச்சை குழுக்களும் பெற்ற ஆசனங்களின் எண்ணிக்கை - 20

இத்தேர்தலில் அரசாங்கத்தை அமைக்கக்கூடிய அளவிற்கு எந்தவொரு கட்சியும் பெரும்பான்மையைப் பெற்றிராத பொழுதிலும் சமஷ்டிக் கட்சி, மற்றும் சில சிறு கட்சிகளையும் இணைத்துக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி கூட்டரசாங்கம் ஒன்றினை அமைத்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான டட்லி சேனாநாயக்க அவர்கள் மூன்றாவது முறையாகப் பிரதம மந்திரியானார். இந்த அரசாங்கம் குறிப்பிட்ட காலம் வரை (ஐந்து ஆண்டுகள்) தனது ஆட்சியைத் தக்கவைத்துக் கொண்டமை சிறப்பம்சமாகும்.

## 6.3 1972 ஆம் ஆண்டு முதலாவது குடியரசு யாப்பினை அறிமுகம் செய்தலும் இலங்கை குடியரசாதலும்

1972 ஆம் ஆண்டு வரை பிரித்தானியரால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட சோல்பரி அரசியல் யாப்பு இந்நாட்டில் நடைமுறையில் இருந்து வந்தது. இந்த யாப்பின் கீழ் பிரித்தானிய அரசியை இலங்கையின் அரச தலைவியாக ஏற்றுக் கொண்டமை, சட்டங்கள் இயற்றும்போது பாராளுமன்றத்திற்குப் பல்வேறு கட்டுப்பாடுகள் இருந்தமை என்பவற்றால் இலங்கையர் பெற்ற சுதந்திரம் முழுமையற்றது என்ற கருத்து நிலவியது. இதனால் 1950 களிலிருந்து அரசியல்வாதிகள், புத்திஜீவிகள், எழுத்தாளர்கள், விமர்சகர்கள் போன்ற பல்வேறு பிரிவினரால் புதிய அரசியல் யாப்பினை வரைய வேண்டியதன் தேவை உணர்த்தப்பட்டது. எனினும் சோல்பரி யாப்பினை மாற்றியமைப்பதற்கு சட்ட வரையறை காணப்பட்டதால் 1972 ஆம் ஆண்டு வரை அதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

1970 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது ஐக்கிய முன்னணி முன்வைத்த கொள்கை வெளியீட்டின் மூலம் புதிய அரசியல் யாப்பைத் தயாரிக்க குழுவாகச் செயற்படுவதற்கு சந்தர்ப்பம் வழங்கும்படி மக்களிடம் கோரிக்கை விடுத்தனர். இதற்கமைய பொதுத் தேர்தலில் கூட்டு முன்னணி 2 / 3 பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றுக் கொண்டதுடன் அதன் மூலம் புதிய அரசியல் யாப்பினைத் தயாரிக்க வேண்டிய நடவடிக் கைகளை மேற்கொண்டது. அந்த அரசாங்கத்தின் பிரதம மந்திரியாக இருந்த திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்களின் கீழ் பாராளுமன்ற யாப்பு உருவாக்கக் குழு ஒன்று கூடி 1972 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதி புதிய யாப்பு சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டது. இது முதலாவது குடியரசு யாப்பு எனப்படும். இந்த யாப்பின் மூலம் இதுவரை இருந்த முழுமையான சுதந்திரத்திற் கான தடை நீக்கப்பட்டு இலங்கை குடியரசானது.

## 1972 ஆம் ஆண்டு வரை இலங்கையின் பிரதமர்கள்



டீ.எஸ் சேனாநாயக்க
1947 - 52



டட்லி சேனாநாயக்க
1952 - 53
1960 மார்ச் - ஜுலை
1965 - 1970



சேர் ஜோன் கொத்தலாவல
1953 - 1956



எஸ். டபிள்யு. ஆர். டீ பண்டாரநாயக்க
1956 - 1959



டபிள்யு - தஹநாயக்க
1959 - 60

சிறிமாவோ பண்டாரநாயக்க
1960 - 1965
1970 - 1972
1972 - 1977
1994 - 2000



## 1972 ஆம் ஆண்டு குடியரசு அரசியல் யாப்பின் பிரதான இயல்புகள்


### தேசிய அரசுப் பேரவை

1972 ஆம் ஆண்டு குடியரசு யாப்புக்கு அமைய பாராளுமன்றம் எனும் சட்டமியற்றும் நிறுவனம் தேசிய அரசுப் பேரவை எனப்பட்டது. இது பொதுத் தேர்தலில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளை மாத்திரம் கொண்ட நிறுவனமாகும். எனவே அது ஒற்றைச் சட்டசபை எனக் கூறலாம். தேசிய அரசுப் பேரவையில் 168 உறுப்பினர்கள் அடங்குவர். சட்டமியற்றும் முழு அதிகாரமும் அந்த சபைக்கு உண்டு. அதன் பதவிக்காலம் 6 வருடங்களாகும். தேசிய அரசுப் பேரவையின் செயற்பாடுகளில் சில பின்வருமாறு,

- சட்டமியற்றுதல்
- நிதி நிருவாகம்
- நிறைவேற்று நிருவாகம்

### ஜனாதிபதிப் பதவி

சோல்பரி யாப்பிற்கமைய செயற்படுத்தப்பட்ட ஆளுநர் நாயகம் பதவிக்குப் பதிலாக 1972 ஆம் ஆண்டு யாப்பின்படி ஜனாதிபதி பதவி அறிமுகம் செய்யப்பட்டது. இதுவரை காலமும் ஆளுநர் நாயகம் பிரித்தானிய முடியின் பிரதிநிதியாக செயற்பட்ட போதிலும் 1972 ஆம் ஆண்டு யாப்பின்படி ஜனாதிபதி இலங்கை மக்களின் தலைவராவார். பிரதம மந்திரியால் ஜனாதிபதி நியமிக்கப்படுவதுடன் அதற்கென அவர் இலங்கைப் பிரசை ஒருவரை நியமிக்கவும் வேண்டும். இதுவரை மகா தேசாதிபதிக்கு உரியதாக இருந்த அதிகாரங்கள் புதிய யாப்பின்படி ஜனாதிபதிக்கு உரியதாகின. ஜனாதிபதி பிரதம மந்திரியின் ஆலோசனைக்கு அமைய அந்த அதிகாரங்களை நடைமுறைப்படுத்த வேண்டியிருந்தது. இதன் காரணமாக 1972 யாப்பின்கீழ் ஜனாதிபதி பெயரளவு நிருவாகி எனும் நிலையைப் பெற்றார். அவரது பதவிக் காலம் 4 வருடங்களாகும். அக்காலப்பகுதியில் ஆளுநர் நாயகமாக இருந்த வில்லியம் கொபல்லாவ அவர்கள் இந்நாட்டின் முதலாவது ஜனாதிபதியானார்.



உரு 6.4 வில்லியம் கொபல்லாவ அவர்கள்

### பிரதமரின் தலைமையிலான அமைச்சரவை

1972 ஆம் ஆண்டு குடியரசு யாப்பின் கீழ் நிறைவேற்று அதிகாரம் என்னும் சட்டத்தை அமுலாக்கும் அதிகாரம் பிரதமரின் தலைமையிலான அமைச்சரவையைச் சார்ந்ததாக இருந்தது. இது உண்மையான நிறைவேற்று அதிகாரம் எனப்பட்டது. அமைச்சரவையின் தலைமைத்துவம் பிரதம மந்திரிக்கு உரித்தானது. தேசிய அரசுப் பேரவையின் நம்பிக்கைக்கு உரிய ஒருவர் ஜனாதிபதியால் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டார். ஜனாதிபதியால் பிரதம மந்திரியின் ஆலோசனைக்கு அமைய ஏனைய அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர். பிரதம மந்திரியின் தலைமையிலான அமைச்சரவை தேசிய அரசுப் பேரவைக்குக் கூட்டுப் பொறுப்புடன் செயற்பட வேண்டியது சிறப்பம்சமாகும்.

### நீதிமன்றம்



உரு 6.5 உச்ச நீதிமன்றம்

1972 ஆம் ஆண்டு முதலாவது அரசியல் யாப்பின்கீழ் நீதியை நிலைநாட்டுவதற்காக நீதிமன்றத் தொகுதி நிறுவப்பட்டது. அவை பின்வருமாறு,

உச்ச நீதிமன்றம்
உயர் நீதிமன்றம்
மாவட்ட நீதிமன்றம்
மஜிஸ்ரேட் நீதிமன்றம் (நீதவான் நீதிமன்றம்)
அரசியல் அமைப்பு நீதிமன்றம்

1972 ஆம் ஆண்டு குடியரசு யாப்பின்படி உயர் நீதிமன்ற நிறுவனங்களாக உச்ச நீதிமன்றமும் உயர் நீதிமன்றமும் விளங்கின. சோல்பரி அரசியல் யாப்பின்கீழ்

இந்நாட்டின் மேன்முறையீட்டு வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரம் கோமறைக் கழகத்திற்கு இருந்த போதிலும் 1972 ஆம் ஆண்டு யாப்பின்படி அந்த அதிகாரம் உச்ச நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டது.

மாவட்ட நீதிமன்றத்திற்கு அனைத்து விதமான சிவில் வழக்குகளையும் விசாரணை செய்யும் அதிகாரம் உரித்தானதுடன் அனைத்துக் குற்றவழக்குகளையும் விசாரிக்கும் அதிகாரம் மஜிஸ்ரேட் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டது.

❖ பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் சட்ட மூலங்கள் அரசியல் யாப்புக்கு ஏற்புடையனவா என்பதைப் பரிசீலிக்கும் பொருட்டு அரசியல் அமைப்பு நீதி மன்றம் நிறுவப்பட்டது.

## 6.4 1978 ஆம் ஆண்டு இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பு

1973 ஆம் ஆண்டு டட்லி சேனாநாயக்க அவர்கள் மரணமடைந்த பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக விளங்கியவர் ஜே. ஆர். ஜயவர்தன அவர்களாவார். அவரது தலைமையின் கீழ் ஐக்கிய தேசியக் கட்சி 1977 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலை எதிர்நோக்கியதுடன் தேசிய அரசப் பேரவையில் 5/6 பெரும்பான்மை ஆசனங்களை அக்கட்சி பெற்றுக்கொண்டது. அதில் தமிழர் விடுதலைக் கூட்டணி 18 ஆசனங்களைப் பெற்று பிரதான எதிர்க் கட்சியாகத் திகழ்ந்தது. அதன் தலைவரான திரு அ. அமிர்தலிங்கம் அவர்கள் அப்போதைய பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க் கட்சித் தலைவரானார். அதுவரை பிரபல கட்சியாக விளங்கிய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி எட்டு ஆசனங்களை மாத்திரமே பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சி பெற்ற அமோக வெற்றியை அடிப்படையாகக் கொண்டு புதிய அரசியல் யாப்பினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கையை மேற்கொண்டனர். 1978 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப் படுத்தப்பட்டு வந்த அது இரண்டாம் குடியரசு யாப்பு எனப்பட்டது.


உரு 6.6 திரு அ. அமிர்தலிங்கம் அவர்கள்


1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பிற்கு அமைய இலங்கை ஸ்ரீலங்கா ஜனநாயக சோசலிசக் குடியரசு என அழைக்கப்பட்டது. இதுவரை நடைமுறையில் இருந்த யாப்புக்களைப் போன்று சட்டவாக்க அதிகாரம் எனப்படும் சட்டமியற்றும் அதிகாரம் நடைமுறைப்படுத்தப்படும் ஒரே நிறுவனம் பாராளுமன்றம் மட்டுமன்றி மக்கள் தீர்ப்பின் அல்லது மக்கள் கருத்துக் கணிப்பின்போது மக்களுக்கும் அந்த அதிகாரம் உண்டெனக் குறிப்பிடப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும்.

## 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் பிரதான அம்சங்கள்

### நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிப் பதவி

இதுவரை இருந்த பெயரளவிலான அதிகாரமுடைய ஜனாதிபதி பதவிக்குப் பதிலாக நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறை அறிமுகம் செய்யப்பட்டமை 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் பிரதான அம்சமாகும்.

1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பிற்கு அமைய ஜனாதிபதி இலங்கை அரசின் தலைவராகவும் நிறைவேற்றுத் தலைவராகவும் அரசாங்கத்தின் தலைவராகவும் முப்படைகளின் தலைவராகவும் இருக்கிறார். இதற்கமைய ஜனாதிபதிப் பதவி நிறைவேற்று அதிகாரமுடைய அரசாங்கத்தின் உயர்ந்த நிறைவேற்றுப் பதவியாகும்.



உரு 6.7 இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தன அவர்கள்

ஜனாதிபதி பொதுமக்களின் வாக்குகளின் மூலம் தெரிவு செய்யப்படுவதோடு இதற்கெனத் தனியான ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும். ஆரம்பத்தில் ஜனாதிபதியின் பதவிக் காலம் ஆறு வருடங்களாக இருந்த போதிலும் அரசியல் யாப்பில் செய்யப்பட்ட 19 வது சீர்திருத்தத்தின் பின்னர் அது ஐந்து வருடங்களாகக் குறைக்கப் பட்டது.

ஜனாதிபதிக்கு சட்ட, நிருவாக, நீதித் துறைகளில் பரவலாக அதிகாரங்கள் உள்ளன. பாராளுமன்றத்தின் அங்கத்தவராக அவர் இல்லாத போதிலும் பாராளுமன்றம் தொடர்பான ஏராளமான அதிகாரங்கள் அவருக்கு உண்டு. அவற்றில் சில பின்வருமாறு,

- பாராளுமன்றத்தைக் கூட்டுதல், ஒத்தி வைத்தல், கலைத்தல்
- பாராளுமன்றத்தின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதல்.
- அரசாங்கத்தின் கொள்கைகளைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்.
- எச்சந்தர்ப்பத்திலும் பாராளுமன்றத்தின் கூட்டங்களில் பங்கேற்றலும் பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்துதலும்.

ஜனாதிபதிக்கு உரித்தான நிறைவேற்று அதிகாரங்கள் சில பின்வருமாறு

- பிரதம மந்திரியை நியமித்தல்.
- அமைச்சரவையை நியமித்தலும் அவர்களுக்குப் பொறுப்புக்களை அளித்தலும்
- அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளை நியமித்தல்.
- அமைச்சரவையின் தலைவராகச் செயற்படல்.
- பிரதம நீதிபதி உட்பட உச்ச நீதிமன்றத்தின் ஏனைய நீதிபதிகளை நியமித்தல்.
- மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரையும் ஏனைய நீதிபதிகளையும் நியமித்தல்.
- நீதிச்சேவை ஆணைக்குழுவை நியமித்தல்.
- குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்குதல்.

இவை தவிர அரச தலைவர் என்ற ரீதியில் ஜனாதிபதிக்குப் பல பொறுப்புக்கள் உள்ளன. அவற்றில் சில பின்வருமாறு :

- தேசிய விழாக்களுக்குத் தலைமை தாங்குதல்
- தேசிய இலச்சினையை வைத்திருத்தல், முத்திரையிட்டுக் கையெழுத்திட வேண்டிய ஆவணங்களில் கையெழுத்திடல்.
- சர்வதேச ரீதியாகக் குடியரசைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்
- வெளிநாட்டுத் தூதுவர்களை நியமித்தலும் இந்நாட்டுக்கு வரும் தூதுவர்களை வரவேற்றலும்.

### பிரதம மந்திரியும் அமைச்சரவையும்

1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் கீழ் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி தவிர நிறைவேற்று அதிகாரத்தின் ஒரு பிரிவாக அமைச்சரவையும் செயற்படுகிறது. ஜனாதிபதி அமைச்சரவையின் தலைவராக இருப்பதுடன், பிரதம மந்திரியையும் ஏனைய அமைச்சர்களையும் நியமிப்பது ஜனாதிபதியின் கடமையாகும். 1972 ஆம் ஆண்டு யாப்பில் பிரதம மந்திரிக்கு இருந்த அதிகாரங்கள் இந்த யாப்பில் ஜனாதிபதிக்கு உரித்தாக உள்ளமை சிறப்பம்சமாகும். பாராளுமன்றத்தால் பிறப்பிக்கப்படும் சட்டங்களை செயற்படுத்துவது அவ்வவ் அமைச்சர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுதல் அமைச்சர்களின் கடமைகளுக்கு உதாரணமாகும்.

### பாராளுமன்றம்

1978 ஆம் ஆண்டு 2 ஆம் குடியரசு அரசியல் யாப்பிற்கு அமைய நிறுவப்பட்ட சட்ட வாக்கம் எனும் சட்டமியற்றும் நிறுவனம் பாராளுமன்றம் எனும் பெயரைப் பெற்றது. மக்கள் பிரதிநிதிகளை மாத்திரம் கொண்ட ஒரு ஒற்றைமன்றமாக 225 அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது. அதில் 196 பேர் விகிதாசார முறையில் மக்கள் வாக்குகளின் மூலம்

தெரிவு செய்யப்படுவதோடு 29 பேர் தேசியப் பட்டியலிலிருந்து தெரிவுசெய்யப்படுவர். பொதுத் தேர்தலில் ஒவ்வொரு கட்சியும் பெற்ற மொத்த வாக்குகளின் விகிதாசா ரத்திற்கு ஏற்ப தேசியப் பட்டியிலில் இருந்து பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுவர். பாராளுமன்றத்தின் உத்தியோகபூர்வ காலம் ஆறு வருடங்களாகும். (19 ஆவது சட்டச் சீர்திருத்தத்தின் பின்னர் 5 வருடங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது)

- சட்டமியற்றுதல்
- நிதி நிருவாகம்
- ஜனாதிபதிக்கு எதிராகக் குற்றப் பிரேரணையை முன்வைத்தல்
- பொதுமக்களின் இன்னல்களை முன்வைத்தல் என்பன பாராளுமன்றத்தின் செயற்பாடுகளுக்கு உதாரணங்களாகும்.

**நீதிமன்றங்கள்**

1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் நீதியை நிலைநாட்டுவதற்காக நீதிமன்றத் தொகுதி அறிமுகப்படுத்தப்பட்டது. அது பின்வருமாறு :

உச்ச நீதிமன்றம்
மேன்முறையீட்டு நீதிமன்றம்
உயர் நீதிமன்றம் / மேல் நீதிமன்றம்
மாவட்ட நீதிமன்றம்
குடும்ப நீதிமன்றம்
மஜிஸ்ரேட் நீதிமன்றம் (நீதவான் நீதிமன்றம்)
ஆரம்ப நீதிமன்றம்

உச்ச நீதிமன்றமும் மேன்முறையீட்டு நீதிமன்றமும் தவிர ஏனையவை ஆரம்ப கட்ட நீதிமன்றங்களாகும். உச்ச நீதிமன்றத்திற்கோ மேன்முறையீட்டு நீதிமன்றங்களுக்கோ முன்வைக்கப்படாத வழக்குகள் ஆரம்பத்திலேயே விசாரிக்கப்படும் நீதிமன்றங்கள் ஆரம்ப நீதிமன்றங்கள் எனப்படும்.

இலங்கையில் உயர்ந்ததும் இறுதியானதுமான நீதிமன்றம் உச்ச நீதிமன்றமாகும். இது பிரதம நீதிபதியைத் தலைவராகக் கொண்டு, ஆறுக்குக் குறையாத, பத்திற்கு மேற்படாத வேறு நீதிபதிகளையும் கொண்டதாகும். பிரதம நீதிபதியும் ஏனைய நீதிபதிகளும் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவர்.

**உச்ச நீதிமன்றத்தின் செயற்பாடுகள் சில பின்வருமாறு :**

- அடிப்படை உரிமை பற்றிய வழக்குகளைத் தீர்த்தல்
- ஜனாதிபதிக்கு எதிராகப் பாராளுமன்றத்தால் கொண்டுவரப்படும் குற்றப் பிரேரணையை விசாரித்தல்.

❖ தேர்தல் முறையீடுகள் தொடர்பான வழக்குகளை விசாரித்தல்
❖ இறுதி மேன்முறையீட்டு நீதிமன்றமாகச் செயற்படுதல்.

கீழ்மட்ட நீதிமன்றங்களால் வழங்கப்படும் தீர்ப்புகளுக்கு எதிராக முன்வைக்கப்படும் முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தைச் சார்ந்ததாகும்.

**அடிப்படை மனித உரிமை**

1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் மூன்றாம் அத்தியாயத்தில் அடிப்படை உரிமை பற்றிக் கூறப்பட்டுள்ளதோடு 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பினைவிட அது விரிவாக தரப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். யாப்பில் கூறப்பட்டுள்ள உரிமைகளில் சில பின்வருமாறு :

❖ பேசுவதற்கும் சுதந்திரமாகக் கருத்து வெளியிடுவதற்குமான உரிமை
❖ விரும்பிய தொழிலைச் செய்வதற்கான உரிமை
❖ விரும்பிய மதத்தைப் பின்பற்றுவதற்கான உரிமை
❖ இம்சையிலிருந்து விடுபடுவதற்கான உரிமை
❖ சட்டத்தின் முன் சமமாக மதிக்கப்படக்கூடிய உரிமை

ஏதேனும் காரணத்தால் மனித உரிமை மீறப்படுமாயின் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி 1972 ஆம் ஆண்டு யாப்பில் குறிப்பிடப்படவில்லை. இக்குறையை நீக்குவதற்கு அவ்வாறான சந்தர்ப்பங்களில் உச்ச நீதிமன்றத்தினையோ, ஒம்புட்ஸ்மனின் (குறைகேள் அதிகாரி) உதவியையோ நாடலாமென 1978 ஆம் ஆண்டு யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 6.5 சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகள்

பிரித்தானியரது ஆட்சிக் காலத்தில் இலங்கையின் பொருளாதாரம் ஆங்கிலேயரது தேவைகளை நிறைவுசெய்யும் நோக்கில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. 1948 ஆம் ஆண்டு நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் ஆட்சிக்கு வந்த அரசியல்வாதிகளுக்கு நாட்டின் பொருளாதாரத்தை இந்நாட்டு மக்களின் தேவைகளை பூர்த்திசெய்யும் வகையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு ஏற்பட்டது. இதனால் 1948 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த அனைத்து அரசாங்கங்களும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டன. அதற்கமைய விவசாயம், கைத்தொழில் என்பவற்றை முன்னேற்றுதல், நாட்டின் கல்வித் தரத்தை உயர்த்துதல், சமூக நலனோம்பல் செயற்பாடுகளை மேற்கொள்ளல் போன்ற பல்வேறு துறைகளில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் சென்றுள்ளன.

## நெற்பயிர்ச் செய்கை

பிரித்தானியரது ஆட்சியில் 1931 ஆம் ஆண்டு வரை பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை ஏற்றுமதியில் அரசாங்கம் முக்கிய கவனம் செலுத்தியதால் நெற்பயிர்ச்செய்கை வீழ்ச்சியடைந்தது. இதனால் டொனமூர் சீர்திருத்தம் நிகழ்ந்த காலத்தில் நாட்டிற்குத் தேவையான அரிசி உட்பட ஏனைய உணவுப் பொருள்களில் குறிப்பிடத்தக்க அளவு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படவேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

1931 - 1947 ஆண்டு காலப்பகுதியில் விவசாய அமைச்சராக இருந்த டீ.எஸ். சேனா நாயக்க அவர்கள் நெற்பயிர்ச்செய்கையின் முக்கியத்துவத்தை அறிந்து அதன் வளர்ச் சிக்கான நடவடிக்கையை மேற்கொண்டார். 1948 ஆம் ஆண்டின் பின்னர் இந்நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்கும் பொறுப்பு இலங்கையருக்கே வழங்கப்பட்டமையால் ஆட்சிக்கு வந்த அனைத்து அரசாங்கங்களும் நெற்பயிர்ச் செய்கையின் வளர்ச்சிக் கான நடவடிக்கைகளை மேற்கொண்டன. விவசாய வளர்ச்சிக்கும் விவசாயிகளின் முன்னேற்றத்திற்கும் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறு :

- ❖ உலர் வலயத்தில் விவசாயக் குடியேற்றங்களை அமைத்தல்.
- ❖ மகாவலி அபிவிருத்தித் திட்டத்தை செயற்படுத்துதல்.
- ❖ நெல் ஆராய்ச்சி நிலையங்களை நிறுவி புதிய நெல்லினங்களை விவசாயிகளுக்கு அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுத்தல்.
- ❖ விவசாய சேவை மத்திய நிலையங்களை நிறுவுதல், உத்தரவாத விலை முறையை அறிமுகம் செய்தல்.
- ❖ அரசாங்க வங்கிகள் மூலம் விவசாயிகளுக்குக் கடன் வசதிகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளல.

டீ. எஸ். சேனாநாயக்கவால் சுதந்திரத்திற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட விவசாயக் குடியேற்றத் திட்டங்களை நிறுவும் செயற்றிட்டம் சுதந்திரத்தின் பின்னரும் முன் னெடுத்துச் செல்லப்பட்டது. ஈர வலயத்திலிருந்து மக்களைத் தெரிவுசெய்து உலர் வலயத்தில் அவர்களுக்கு நிலம் வழங்கி குடியேற்றியமை இத்திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்பட்டது. குடியேற்றத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்கள் சில பின்வருமாறு :

- ❖ நாட்டின் உணவு உற்பத்தியை அதிகரித்தல்
- ❖ உலர் வலயத்தின் பண்டைய குளங்கள், கால்வாய்கள் என்பனவற்றைப் புதுப்பித்து அவற்றைப் பொருளாதார அபிவிருத்திக்குப் பயன்படுத்துதல்
- ❖ ஈரவலயத்தில் அதிகரித்து வரும் சன நெருக்கடியையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் குறைத்தல்.
- ❖ சுதந்திரத்திற்கு முன்னரும் பின்னரும் இந்நாட்டில் பல விவசாயக் குடியேற்றங்கள் நிறுவப்பட்டுள்ளன. தேவஹுுவ, கல்லோயா, கந்தளாய், இரணைமடு, மின்னேரி, மினிப்பே, பதவியா, இராஜாங்கனை என்பன அவற்றில் சிலவாகும்.

விவசாயக் குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் பண்டைய குளங்கள், கால்வாய்கள் என்பனவற்றைப் புனரமைப்புச் செய்வதிலும் நீர்ப்பாசனத்தை மேற்கொள்வதிலும் நாட்டில் பெரும் ஆர்வம் ஏற்பட்டது. 1949 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கல்லோயா அபிவிருத்தித் திட்டம் அவ்வாறு புதிதாக மேற்கொள்ளப் பட்ட நீர்ப்பாசனத் திட்டத்திற்கு எடுத்துக்காட்டாகும். பல வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக நிறுவப்பட்ட முதலாவது பலநோக்குத் திட்டம் இதுவாகும்.

### மகாவலி அபிவிருத்தித் திட்டம்

சுதந்திரத்தின் பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் இந்நாட்டின் நெற்பயிர்ச்செய் கையை விருத்தி செய்யவும் விவசாயத்தை அபிவிருத்தி செய்யவும் ஆரம்பித்த அபிவிருத்தித் திட்டங்களில் மகாவலி அபிவிருத்தித் திட்டம் சிறப்பான இடத்தினைப் பெறுகின்றது. பல கிளை நதிகளைக் கொண்ட மகாவலி கங்கையின் நீரை நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குப் பயன்படுத்துவதே இந்த அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கமாகும். இதன் நோக்கங்களில் சில பின்வருமாறு,



உரு 6.8 விக்டோரியா நீர்த்தேக்கம்

- உலர் வலயத்தின் விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான நிரந்தர நீர் வசதியை வழங்குதல்.
- மின்சாரத்தை உற்பத்திசெய்தல்.
- புதிய குடியேற்றத் திட்டங்களை அமைப்பதன் மூலம் காணி அற்ற மக்களுக்கு காணிகளை வழங்குதலும் உணவுப் பயிர்ச்செய்கையை விரிவடையச் செய்தலும் திருப்திகரமான விவசாயப் பரம்பரையை உருவாக்குதலும்.

❖ நன்னீர் மீன்களின் உற்பத்தியை அதிகரித்தல்.

❖ வேலை வாய்ப்பை ஏற்படுத்துதல்.

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தை செயற்படுத்தும் முதல் நிலையாக 1970 ஆம் ஆண்டு மகாவலி கங்கைக்குக் குறுக்காக அணைகட்டி பொல்கொல்ல திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் மூலம் கலா ஓயா, நாச்சதுவ வாவி, நுவர வாவி போன்ற பல வாவிகளுக்கு நீரை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டது.

ஆரம்பத்தில் முப்பது வருடங்களில் முடிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டம் 1977 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜே. ஆர். ஜயவர்தன அவர்களின் அரசாங்கத்தின் ஆலோசனைப்படி ஆறு ஆண்டுகளில் முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. விக்டோரியா, ரந்தெனிகல, ரன்டெம்பே, கொத்மலை, உல்ஹிட்டிய, ரத்கிந்த, மாதுறுஓயா முதலான பாரிய திட்டங்கள் செயற்படுத்தப்பட்டதுடன் அதன்கீழ் பல விவசாய அபிவிருத்திப் பிரதேசங்கள் உருவாகின. மகாவலி கங்கையின் நீரைப் புதிய நீர்த்தேக்கங்களில் சேகரித்து மின்சாரத்தை உற்பத்திசெய்வதுடன், உலர் வலயத்தில் அதுவரை பயிர்செய்யப்பட்ட நிலங்களுக்கும் புதிய நிலங்களுக்கும் நீரை வழங்கக்கூடியதாக இருந்தது.

**கைத்தொழிலில் ஏற்பட்ட அபிவிருத்தி**

1931 ஆம் ஆண்டிற்கு முன்னர் இலங்கையின் கைத்தொழில்துறை தேயிலை, இறப்பர், தென்னை என்பவற்றின் உற்பத்திக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தது. தேயிலைக் கொழுந்தின் மூலம் தேயிலையும், இறப்பர் பாலின் மூலம் ஷீட், இறப்பர் பொருள்கள் என்பனவும், தென்னையின் மூலம் கொப்பரா, தேங்காய் எண்ணெய் போன்றவையும் உற்பத்தி செய்யப்பட்டமை இதற்கு உதாரணங்களாகும். துணி நெசவு, பெருந்தோட்டங்களுக்குத் தேவையான உபகரணங்கள் செய்தல் என்பவற்றிற்காக சிறு கைத்தொழில்களும் காணப்பட்டன. இவை தவிர மரபு ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வந்த மட்பாண்டங்கள் வனைதல், பிரம்பினால் பொருள்கள் தயாரித்தல் போன்ற குடிசைக் கைத்தொழில்களும் ஏனைய சிறு கைத்தொழில்கள் பலவும் காணப்பட்டன. கைத்தொழிலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படாமையால் நாட்டிற்குத் தேவையான பொருள்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன.

இரண்டாம் உலக மகா யுத்தம் நடைபெற்ற 1939 -1945 காலப்பகுதியில் பொருள்களை இறக்குமதி செய்தல் சிரமமாக இருந்தது. இதனால் இந்நாட்டு மக்களுக்குத் தேவையான பீங்கான் பொருள்கள், கடதாசி, சவர்க்காரம், வாசனைப் பொருள்கள் என்பனவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இங்கு ஆரம்பமாகின. எனினும் யுத்தம் முடிவுற்ற பின்னர் வெளிநாட்டு கப்பற் போக்குவரத்து சீரடைந்தமையால் மீண்டும் வெளிநாட்டு பொருள்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டன. நவீன தொழினுட்பங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட வெளிநாட்டுப் பொருள்களுடன் உள்நாட்டுப் பொருள்கள் போட்டியிட முடியாமையால் இந்நாட்டுக் கைத்தொழில் துறை படிப்படியாக வீழ்ச்சி அடைந்தது.

சுதந்திரத்தின் பின்னர் இந்நாட்டின் முதலாவது அரசாங்கத்தால் கைத்தொழில், மீன்பிடி நடவடிக்கைகளுக்காக அமைச்சொன்றும் திணைக்களமொன்றும் நிறுவப்பட்டன. இக்காலகட்டத்தில் அரசாங்கம் பின்பற்றிய கொள்கைகளுக்கு அமைய சீமெந்து, கடதாசி, இரசாயன உரம், சீனி, இரும்பு, உருக்கு போன்ற பாரிய கைத்தொழில்கள் அரசாங்கத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற நிலை இருந்ததால் பாரிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு தனியாருக்கு இருந்த வாய்ப்புக் குறைந்தது. பாரிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்திடம் தேவையான மூலதனம் இல்லாமையால் சுதந்திரம் அடைந்து ஐந்து வருடங்கள் செல்லும் வரை கைத்தொழில் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படவில்லை.

எனினும் இக்காலகட்டத்தில் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை நிறுவ அரசாங்கத்தால் இயலுமானதாக இருந்தது.

இலங்கைக்கு வந்த உலக வங்கியின் பிரதிநிதிகளின் குழுவொன்று இந்நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கை தொடர்பாக ஆராய்ந்து 1952 ஆம் ஆண்டு அறிக்கை ஒன்றினை முன்வைத்ததுடன் பாரிய அளவிலான கைத்தொழில்களை ஆரம்பிப்பதை விட சிறிய, நடுத்தர அளவிலான கைத்தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென விதந்துரைத்தது. அரசாங்கத்தின் வர்த்தக விவசாயம் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட மற்றுமொரு ஆணைக்குழுவின் அறிக்கை 1953 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. கைத்தொழில் அபிவிருத்தியில் அரசாங்கம் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகள் சில அதிலும் விரிந்துரைக்கப்பட்டிருந்தன. இதற்கமைய அரசாங்கத்தின் கைத்தொழில் கொள்கைகள் 1954 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டன. பாரிய கைத்தொழில்களுக்குப் பதிலாக சிறு கைத்தொழில்களை ஆரம்பிக்க அரசாங்கம் முன்வந்ததுடன் ஏனைய கைத்தொழில்களை ஆரம்பிக்கத் தனியாருக்கு ஊக்கமளிக்கும் கொள்கையும் அதில் இடம்பெற்றது. இவ்வாறு நிறுவப்படும் கைத்தொழில் துறைகளுக்கு வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக் கொள்ளும் அரசாங்கத்தின் கொள்கை 1955 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட வெள்ளை அறிக்கையின் மூலம் தெளிவுபடுத்தப்பட்டது. இதற்கமைய இந்நாட்டின் கைத்தொழில் துறையில் முதலீடு செய்யத் தனியார் துறைக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. 1956 ஆம் ஆண்டின் பின்னர் கைத்தொழிற் துறையில் வெளிப்படையாகத் தெரியும் சந்தர்ப்பங்கள் சில பின்வருமாறு :

- 1959 ஆம் ஆண்டு முதலாவது கைத்தொழில் பேட்டை ஏக்கலையில் நிறுவப்படல்.
- 1960 ஆம் ஆண்டு இரத்மலானையில் கைத்தொழில் பேட்டை நிறுவப்படல்.
- 1958 - 1968 வரையிலான பத்து வருடத் திட்டத்தின்கீழ் அரசாங்கத்தினால் இரும்பு, உருக்கு, ஒட்டுப்பலகை, சீனி முதலான கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன.
- 1970 - 1977 ஆண்டு காலப்பகுதியில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களுக்குப் பதிலாக அவற்றிற்கான பிரதியீட்டுப் பொருள்களை இலங்கையில் உற்பத்திசெய்தமையால் குடிசைக் கைத்தொழில்களும் சிறு கைத்தொழில்களும் வளர்ச்சியடைந்தன.

1977 ஆம் ஆண்டின் பின்னர் ஏற்றுமதி தொடர்பான கைத்தொழில் வளர்ச்சியின் பொருட்டு முதலீட்டாளர்களை வரவழைத்தமை, தனியார் துறையை ஊக்குவிப் பதற்குப் பின்பற்றப்பட்ட கொள்கைகள் என்பவற்றால் ஆடைக் கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி தொடர்பான கைத்தொழில்களும் விரைவாக முன்னேற்றம் கண்டன.

### கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகள்

சுதந்திரத்தின் பின்னரான நாற்பது ஆண்டுகளில் தெற்காசியாவில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் கல்வி நடவடிக்கையிலும் எழுத்தறிவிலும் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. இதற்கான முக்கிய காரணமாக இருப்பது பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வித் திட்டம் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டமையாகும். சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர அவர்களால் அறிமுகம் செய்துவைக்கப்பட்ட இலவசக் கல்விக் கொள்கையை, சுதந்திரத்திற்குப் பின் வந்த அனைத்து அரசாங்கங்களும் தொடர்ந்து செயற்படுத்தி வந்துள்ளன.



உரு 6.9 பேராதனைப் பல்கலைக்கழகம்

சுதந்திரத்தின் பின்னர் கல்வித்துறையின் முன்னேற்றத்திற்காக அரசாங்கங்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சில கீழே தரப்பட்டுள்ளன :

- ❖ அரசாங்கப் பாடசாலைகளை நிறுவுதலும் கல்வி விருத்திக்குப் பணம் செலவிடுதலும்.
- ❖ பாடத்திட்ட அபிவிருத்தியும் ஆசிரியர் பயிற்சி நடவடிக்கைகளை நவீனப் படுத்தலும்.

- ❖ பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளையும் நூலக வசதிகளையும் மேற்கொள்ளல்.
- ❖ மாணவர்களின் நலன்புரி வசதிகளை மேம்படுத்தல், இதன் பொருட்டு பகல் உணவு, பாடநூல்கள், சீருடை, வைத்திய, பல் வைத்திய வசதி என்பவற்றை மாணவர்களுக்கு இலவசமாக வழங்க நடவடிக்கை எடுத்தமை, நியாயமான முறையில் போக்குவரத்து வசதிகளையும் வழங்கியுள்ளமை.
- ❖ தொழிற்கல்வி நிறுவனங்களை நிறுவி, கல்வி நடவடிக்கைகளைப் பரவலாக்கியமை.
- ❖ 1942 இல் கொழும்பு பல்கலைக்கழகம் நிறுவப்பட்டமை.
- ❖ 1952 ஆம் ஆண்டு பல்கலைக்கழகம் பேராதனைக்குக் கொண்டு செல்லப்பட்டமை.
- ❖ 1972 ஆம் ஆண்டு மொரட்டுவ கட்டுபெத்த பல்கலைக்கழகம் நிறுவப்பட்டமை.
- ❖ 1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டமை.
- ❖ பல்கலைக்கழகக் கல்விக்காக மகாபொல புலமைப்பரிசிலும் ஏனைய நிதியுதவிகளும் வழங்கப்பட்டமை.
- ❖ பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்டோருக்கும் பல்கலைக்கழங்களுக்குச் செல்ல முடியாதோருக்கும் திறந்த பல்கலைக்கழகத்தை நிறுவியமை.

**சமூக நலனோம்பல்**

பிரித்தானியரது ஆட்சிக்காலத்தில் 1931 ஆம் ஆண்டு வரை இந்நாட்டின் நலனோம்பல் நடவடிக்கை தொடர்பாகக் குறைந்த கவனமே செலுத்தப்பட்டது. அக்காலகட்டத்தில் கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளின் முன்னேற்றத்துக்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. சில சந்தர்ப்பங்களில் எழுந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முகமாக நோய் நிவாரணம், மக்களின் போசாக்குத் தரத்தை உயர்த்துதல், நீர்ப்பாசனப் புனருத்தாரணம் போன்றவற்றில் அரசாங்கம் கவனம் செலுத்தியது. 1931 ஆம் ஆண்டு சர்வசன வாக்குரிமை கிடைக்கப்பெற்றமையால் நலனோம்பலுடன் தொடர்பான அமைச்சுக்கள் சிலவற்றிற்கு சுதேசிகள் அமைச்சர்களாக நியமனம் பெற்றமையால் 1931 - 1947 ஆம் ஆண்டு வரை மக்களது நலனோம்பல் தொடர்பாகக் கூடுதலான கவனம் செலுத்தப்பட்டது. 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்ததுடன் ஆட்சி அதிகாரம் சுதேசிகளின் கைகளுக்கு வந்தமையால் பொது மக்களின் நன்மை கருதி கொள்கைகள் வகுக்கவும் செயற்படுத்தவும் அரசியல்வாதிகளுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. சுதந்திரத்தின் பின்னர் அரசாங்கங்கள் மாற்றமடைந்தபோதிலும் ஆட்சிக்கு வந்த அனைத்து அரசாங்கங்களும் நலனோம்பல் கொள்கையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றுள்ளன. 1948 ஆம் ஆண்டின் பின்னர் சில துறைகளின் நலனோம்பல் செயற்பாடுகளில் காணப்படும் இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

### சுகாதார வசதிகளை மேம்படுத்துதல்

- ❖ நாட்டுக்குத் தேவையான வைத்தியர்களை உருவாக்குவதற்குப் புதிய மருத்துவ பீடங்களை ஆரம்பித்தல். வைத்திய நிபுணத்துவ சேவை, தாதிகள் சேவை என்பனவற்றை முன்னேற்றுதல்.
- ❖ வைத்தியசாலைகளை முன்னேற்றுதல், சத்திரசிகிச்சை வசதிகளை மேம்படுத்தல், புதிய வைத்தியசாலைகளை அமைத்தல், நோய்த்தடுப்பு மற்றும் நோய் நிவாரண வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துதல்.
- ❖ குடும்ப நலன் மற்றும் தாய் சேய் நலன் பேணும் சேவையை மேம்படுத்தல்
- ❖ பல் வைத்திய சேவையைப் பரவலாக்கல்
- ❖ அனைத்துப் பிரதேசங்களுக்கும் வைத்திய பரிசோதகர்களை நியமித்தல்.

### நிவாரணம் வழங்குதல்

குடியேற்ற காலம் முதற்கொண்டு வருமான ஏற்றத்தாழ்வுப் பிரச்சினை காணித் தட்டுப்பாடு, வேலைத்தட்டுப்பாடு, கிராமியக் கடன் போன்ற சிக்கல்கள் காரணமாக இந்நாட்டில் ஒரு பிரிவினர் குறைந்த வருமானம் பெறுவோராக இருந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது. இதனால் குறைந்த வருமானம் பெறும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு நிவாரணம் வழங்கும் தேவை ஏற்பட்டது. இதற்காகப் பின்பற்றப்பட்ட செயற்றிட்டங்கள் சில பின்வருமாறு :

- ❖ இலவச அரிசி வழங்குதல்
- ❖ உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கு உணவு முத்திரை முறை செயற்படுத்தப்படல்
- ❖ குறைந்த வருமானம் பெறுவோருக்கு வீட்டு உதவி வழங்கல், புதிய வீடுகளை அமைத்துக் கொடுத்தல்
- ❖ சிறு நிலங்களை உடையோருக்குத் தேயிலை, இறப்பர் பயிர்ச்செய்கைக்காக உதவிப் பணம் வழங்குதல்

### கிராமங்களின் வசதிகளை அதிகரித்தல்

சுதந்திரம் அடைந்த காலத்தில் நாட்டு மக்களில் பெரும்பான்மையானோர் கிராமப் புறங்களில் குடியிருந்ததுடன், நகரங்களுடன் ஒப்பிடுகையில் கிராம மக்களின் வசதிகள் குறைந்த நிலையிலேயே இருந்தன. இதனால் கிராம மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு அனைத்து அரசாங்கங்களும் நடவடிக்கைகள் எடுத்துள்ளன. அவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கான உதாரணங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- ❖ கிராமப் பிரதேசங்களில் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துதலும் புதிய பஸ் சேவைகளை ஆரம்பித்தலும்.
- ❖ கிராமங்களுக்கு மின்சார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- ❖ கிராம மக்களுக்குக் குடிநீர் வசதி அளிக்கும் பொருட்டுப் பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- ❖ தபால் மற்றும் தொலைபேசி சேவைகளைக் கிராம மட்டம் வரையில் விரிவுபடுத்துதல்.
- ❖ கூட்டுறவுச் சேவை, வங்கிச் சேவை என்பனவற்றைக் கிராம மட்டத்தில் அறிமுகம் செய்தல்.



1. இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து 1970 வரை இடம்பெற்ற தேர்தல்கள் பற்றிய தகவல்களைக் கொண்டு கீழேயுள்ள அட்டவணையைப் பூரணப் படுத்துக.

| பொதுத்தேர்தல் | வெற்றி பெற்ற கட்சி | பிரதமர் | அரசாங்கத்தால் நிறை வேற்றப்பட்ட விடயங்கள் |
|---|---|---|---|
| 1947<br>1952<br>1956<br>1960 மார்ச்<br>1960 ஜுலை<br>1965<br>1970 | | | |

2. 1972 ஆம் 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டவாக்கம் தொடர்பாகக் கீழே தரப்பட்டுள்ள விடயங்களுக்கிடையிலான வேறுபாடுகளைத் தெளிவுபடுத்துக.

- ⅄ ஜனாதிபதிப் பதவி
- ⅄ பிரதமர் தலைமையிலான அமைச்சரவைக்குழு
- ⅄ பாராளுமன்றம்